# THE SKANDA



Valedictory Number
Dr.Aru .Thirumurugan
Principal

*Skandavarodaya College*
*Chunnakam*
01.08.2012

உ

சிவமயம்

# THE SKANDA

## VALEDICTORY NUMBER


***Dr. Aru. Thirumurugan***

***Principal***



**J/ Skandavarodaya College**

**Kandarodai, Chunnakam.**

**2012**

| | | |
|---|---|---|
| கல்லூரிச் சஞ்சிகை | : | THE SKANDA - 2012 |
| பிரதிகள் | : | 500 |
| பக்கங்கள் | : | LII + 203 |
| அட்டைப்படம் | : | Andra Digital |
| அச்சுப்பதிப்பு | : | Andra Digital |
| வெளியீடு | : | **மலர்க்குழு** |

# சமர்ப்பணம்

எங்களது கல்லூரி
இந்தளவு அழகுபெற
உங்களது செயற்பாடே
அடிநாதம் ஆனதையா

கனவிலும் நினைவிலும்
கல்லூரி முன்னேற்றமென
நீங்கள் இருந்ததனால்
இப்போநாம் உயர்வடைந்தோம்!

ஸ்கந்தாத் தாய்பெற்ற
முதல் கலாநிதி அதிபர்
ஆறு. திருமுருகனுக்கு
இந் நூலைச் சமர்ப்பிக்கின்றோம்.

# யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி

## மகுடவாக்கியம்

"உண்மையே உயர் அறம்"

## தூர நோக்கு

"மாறிவரும் சூழலிற்கேற்பத் தம்மைத் தயார்படுத்தக்கூடிய ஆளுமையுள்ள மாணவரை உருவாக்குதல்"

## இலட்சிய நோக்கு

"கல்லூரி ஏற்றுள்ள மாணவரை நவீன உலகில் ஏற்பட்டுவரும் அறிவியல், சமூக, பண்பாட்டு, ஆன்மீக மாற்றங்களுக்குத் தம்மை இசைவாக்கிக் கொள்ளும்படி தயார் செய்தல்"

## Our Motto

Truth is the greatest virtue

## Vision

"To produce students with self-made personality to face the changing environment".

## Mission

"To make the students accustom themselves to the social, intellectual, cultural and spiritual changes"

# எமது கல்லூரி முதல்வர்



## கலாநிதி ஆறு. திருமுருகன்

## B.A, Dip. in Edu., Ph.D

# Tutorial Staff - 2012



**Seated from left to right**

Mr. M. Sivananthan, Mr. N. Rajakumaran, Mr. P. Mahalingasivam, Mr. J. Jeyamohan, Miss. N. Krishnaverny, Mrs. S. Jeyabalasingam, Mrs. S. Nagarajah (Vice Principal), Dr. Aru. Thirumurugan (Principal), Mr. T. Thavarajah (Deputy Principal, Mrs. N. Sivabalachandran, Mrs. J. Satkunanathan, Mrs. T. Thirulingam, Mrs. M. Subramaniam, Mr. T. Thavarajah

**Standing from left to right**

**1st Row** Mrs. T. Anrudgracian, Mrs. T. Jegathambigaiphahan, Mrs. M. Sriharan, Mrs. S. Pratheepan, Mrs. B. Sivananthan, Mrs. M. Umasuthan, Mrs. T. Jegatheeswaran, Mrs. T. Vijayakumaran, Mrs. N. Jeyaseelan, Mrs. N. Arudselvam, Mrs. K. Thanaseelan, Mrs. S. Thayananthan, Mrs. M. Panchadcharalingam, Mrs. Y. Vimalambikaiphakan, Mrs. M. Kirubaharan, Mrs. K. Jaseetharan, Mrs. M. Mariyamanoharan

**2nd Row** Mr. N. Ragulan, Mr. U. Nirubananthan, Mr. P. Kalaiarasan, Mr. K. Kajendran, Mr. K. Thevakanthan, Mr. T. Sivakumar Mr. S. Sathees, Mr. K. Nimalathas, Mr. S. Suthaharan.

# எமது கல்லூரியின்
# புதிய அதிபர்




## திரு. இராமநாதன் ஈஸ்வரதாசன்

B.Sc, Dip. in Edu, M.Ed, M.Phill, Dip. in Admin., SLPS

கல்லூரி அன்னையினைக்
கரம்பிடித்து வழிநடத்த
வல்ல புது அதிபரே
வருகவென வரவேற்கிறோம்!

உங்களது காலத்தும்
உயர்ச்சிகளே தொடரட்டும்!
திங்களைப் போல் ஸ்கந்தாவின்
ஒளி எங்கும் பெருகட்டும்!

- ஸ்கந்தா சமூகம் -



மலர்க்குழுவினர்






# ஸ்கந்தா மலர்க்குழு

| | | |
|---|---|---|
| கௌரவ ஆலோசகர் | : | கலாநிதி ஆறு. திருமுருகன் (முதல்வர்) |
| மலராசிரியர் | : | திருமதி சைலினி பிரதீபன் |
| மலர்க்குழு | : | திரு. த. தவராஜா (பிரதி முதல்வர்) |
| | | திருமதி சா. நாகராஜா (உப முதல்வர்) |
| | | திரு. பா. மகாலிங்கசிவம் |
| | | திரு. ப. கலையரசன் |
| | | திருமதி நி. சிவபாலச்சந்திரன் |
| | | திருமதி ஜெ. சற்குணநாதன் |
| | | திரு. மு. இராகுலன் |
| | | திரு. க. நிமலதாஸ் |

# மலராசிரியரின் உள்ளத்திலிருந்து...

'இலக்கியம் காணாத சமூகம்
இருளில் மூழ்கிக் கிடக்கின்றது'

என்ற கவிஞர் நாகாஸ்திரன் வாக்கிற்கிணங்க நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் 'The Skanda' என்ற மலரின் ஊடாகச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இறைவன் சித்தம் எதுவோ அதன்படி எல்லாம் நடக்கும். காலமும் இறையருளும் மலர்கிறது. காரியம் கைகூடிற்று, மிக்க மகிழ்ச்சி.

'வெறுங் கல்லும் சிற்பியால் சிலையாகும்
தமிழ்ச் சொல்லும் கவியால் பாஆகும்
வெறுங் காகிதம் எழுத்தினால் பெருமை பெறும்'

என அழகான சிறு மலர்களால் தொடுக்கப்பட்டு மாலையான இந்த 'ஸ்கந்தா' மலர் கருத்துமிக்க கட்டுரைகளாய், கவிதைகளாய், கதைகளாய், ஆராய்ச்சிகளாய், கனவுகளின் வெளிப்படையாய், அறிவு வழங்கும் துணுக்குகளாய் காகிதத்தில் கறுப்பு மையினால் வடிவமைக்கப்பட்டு காகிதப்பூவாக வெளிவருவது மிக்க மகிழ்ச்சிக்குரியதும் பெருமைக்குரியதுமான விடயமாகும். சிந்தனைச் சிறகுகளின் விரிப்பாய் வெளிவரும் 'ஸ்கந்தா' சஞ்சிகையின் ஆக்கங்கள் கனதியானவையாகத் தெரிகின்றன. இவ் உண்மையினை மலரைச் சுவைக்கும்போது உணர்ந்து கொள்வீர்கள்.

மேலும் இவ் 'ஸ்கந்தா' மலரானது இம்முறை எமது கல்லூரியின் முதல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் ஓய்வு பெறுவதையிட்டு சிறப்பு மலராக வெளிவருவது பெருமைக்குரிய விடயமாகும்.

இம்மலரை வெளியிட அனுமதி தந்த கல்லூரி முதல்வருக்கு மலரின் வலியினை எம்மோடு தாங்கிக் கொண்ட மலர்க்குழு ஆசிரியர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூலிற்கு கனதியையும் பெறுதியையும் அறிக்கும் முகமாக வாழ்த்துச் செய்திகளையும் ஆக்கங்களையும் தந்து உதவிய சமயப் பெரியோர்கள் கல்வி அதிகாரிகள், படைப்பாளிகள், மலரைச் சிறப்புற அச்சிட்டுத் தந்த 'அன்ரா' நிறுவனத்தினர் அனைவருக்கும் மலர்க்குழு சார்பில் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கூடவே படைப்புக்கள் புலப்படுத்துகின்ற கருத்துக்களுக்கு படைப்பாளிகளே பொறுப்பாளிகள் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

**திருமதி சைலினி பிரதீபன்**

# பொருளடக்கம்

ஆசி, வாழ்த்துச் செய்திகள்

பக்கம்

**ஆய்வியல்** 1 - 56

- எங்கள் அதிபர் கலாநிதி ஆறு. திருமுருகனின் வாழ்வும் பணிகளும்
- புவியில் தகவல் ஒழுங்கும் புவியியல் நிலைய ஒழுங்கும் (GIS)
- யோ. கர்ணனின் "சேகுவேரா இருந்த வீடு" – ஒரு சிறு அறிமுகம்
- செ. கணேசலிங்கனின் நாவல்கள் எழுந்த காலப்பின்னணி – ஒரு பார்வை
- கடிதம்.... இலக்கியப் பார்வையில்
- இந்திய வரலாற்றுக் காலமாகிய வேதகாலம் பற்றிய ஆய்வு
- கக்னேயின் கற்றல் வகைகள்
- விடை தேடுவோம்
- விழுமிய மேம்பாடும் கல்வியும்
- நுளம்பு மூலம் பரவும் நோய்கள்
- யாழ் குடாநாட்டுத் தரைக்கீழ் நீர்வளம் – ஒரு பார்வை
- மெல்லக் கொல்லும் நீரிழிவு நோய்
- உயர் புரதம் மிக்க காளான்

**ஆக்கவியல்** 57 - 118

**கவிதைத் தடாகம்** 57 – 70

- வீதிக்கு வா தோழா
- நட்பு
- பரீட்சை நெருங்கினால்...
- வீசுகின்ற அறிவுதந்த கல்விக்கூடம்
- பெண்ணே! துணிந்திடு
- எல்லாம் கடந்துபோகும்
- தோல்வியின்போது...
- தாயன்பு
- அன்னையே நீதான்
- ஊனத்தை வென்றிட கல்வியே வழி
- பள்ளி நாட்கள்
- பசுமை
- மலர்கள்

**கட்டுரைக் கலசம்** 71 – 102

- வாழ்க்கைக்கான கல்வி
- விசேட தேவைக்குட்பட்ட மாணவர்களைக் கல்வியினால் வலுவூட்டுவோம்
- வணிகத்திற்கு வணிகச் சூழலின் பங்களிப்பு
- மனித உரிமைகள் பற்றிய பிரகடனங்களின் வரலாறு
- ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான அடைவுகள்
- நிற்மும் அதன் பயன்பாடுகளும்
- யோகாசனமும் முக்கியத்துவமும்
- பல்லவர்காலக் கட்டிடக்கலை
- ஆறுமுகநாவலரின் சமயப்பணிகள்
- இலங்கையின் இயற்கைச் செல்வம் சிங்கராஜவனம்
- வீட்டுத்தோட்டம்
- நாணயப்பெறுமதி இறக்கமும் பொருளாதார தாக்கமும்
- பாடசாலை முத்தமிழ் விழா
- யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி நூலகமும் கற்றல் வளநிலையமும்

**சிறுகதைப் பரல்கள்** 103 – 118

- கானல்
- வாழ்க்கையின் வட்டம்
- நட்புக்காக
- கண்ணாடி
- வாயால் வந்த வம்பு
- கிடுகுவேலி

**அறிவியல்** 119 - 130

- வானியலின் வளர்ச்சிப்படிகள்
- கருங்குழி
- தினமும் மூளை வளர்கிறது
- நவீன உலகமும் மனித வாழ்க்கையும்
- பருவநிலை மாற்றத்திற்குக் காரணம் டைனோசர்களே!
- பச்சை வீட்டு விளைவு
- சூரிய மண்டலம் / ஞாயிற்றுத் தொகுதி எவ்வாறு தோன்றியது?
- உணவுச் சேர்மானங்கள்

**கலையியல்** **131 - 156**

- இந்திய சிற்பக்கலை வளர்ச்சியில் காந்தார மதுரா கலைக்கூடங்களின் செல்வாக்கு
- பண்ணிசையின் சிறப்பும் பெருமையும்
- நாடகாசிரியர் வில்லியம் சேக்ஸ்பியரது நாடக ஆக்க முறைமை
- ஆலயங்களில் பரதக்கலை
- ஆலயங்களும் இசையும்
- ஆடற்கலைகளில் அருங்கலை பரதம்
- பொலநறுவைக்கால கலை வளர்ச்சி
- குகை ஓவிய மரபில் அஜந்தா குகை ஓவியம்

**Englich Section** **157 - 188**

- English as a link Language - Issues & opportunities
- Environmental pollution
- All about me
- Do your best
- How I spend my leisure
- Who was the founder of the blood bank
- How do rocks form
- Energy sources other than fuel
- My favourite hobby
- A story I read and enjoyed
- A Great personality
- Benefits of a literary Association
- Sources of Knowledge
- A day in the like of a teacher
- A Job I like most
- Our school library
- News paper a great source of information
- An Educatioal Tour
- Visit to the museum
- Family Bonds
- Mother Teresa

❖ Nature of sounds
❖ The Mahapola scholarship
❖ Child protection
❖ Communication now & then
❖ True Friends
❖ We can't manage with our English in the world
❖ Facila Recognition system and how the systems work

**பதிவியல்** **189 - 203.**

❖ ஸ்கந்தாவின் வரலாற்றுப் பதிவுகள்
❖ Staff list
❖ கல்லூரியின் பதிவுகள்
திரு. இ. ஜோர்ஜ் (முன்னாள் பிரதி அதிபர்)
திரு. சிவகுரு மகேந்திரன் (முன்னாள் பிரதி அதிபர்)
செல்வி தே. சங்கரப்பிள்ளை (முன்னாள் பிரதி அதிபர்)
❖ அதிபர் அறிக்கை

# அருளாசிச் செய்தி




கல்விசார் பெருந்தகையீர்!

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி ஓய்வுநிலை காணும் ஆறு. திருமுருகனைக் கௌரவித்து "ஸ்கந்தா" சஞ்சிகையை வெளியிடுவது மனமகிழ்ச்சியைத் தருகிறது. சமுதாயத்தினுடைய தனிப்பெரும் சித்தியாக சமயம், சமூகம் சார்ந்த தொண்டின் செயற்பாடு அனைத்தையும் தனதாக்கி ஏழையின் கண்ணீரைத் துடைக்கும் தொண்டனாகி, இளைய தலைமுறையினருக்கு சமூகப் பணியாற்றும் பண்பினை ஏற்படுத்தி, சமூகத்தின் தேவைகளை அனைத்து நாடுகளுக்கும் கொண்டு சென்று அவர்களின் உதவியினூடாக நற்பணியாற்றி ஆசிரியராக, அதிபராக, ஆலோசகராக, வழிகாட்டியாக சீரான உடை, நேரான பார்வை, எடுத்த விடயத்தை செவ்வனே ஆற்றும் செயல்முறை அனைத்தையும் கொண்ட திருமுருகன் ஸ்கந்தாவினுடைய வளர்ச்சிக்காகப் பலவழிகளிலும் பணியாற்றியவர். இவர் ஓய்வுபெற்றாலும், சமுதாயப் பணியில் என்றும் செயலாற்றுவார். இவருடைய பணிகளைப் பாராட்டி கௌரவிக்கும் ஆசிரிய, மாணவ, நலன்விரும்பிகள் அனைவரையும் வாழ்த்துகின்றோம். கலாநிதி ஆறு. திருமுருகன் இன்றுபோல் என்றும் மகிழ்ச்சியாக வாழ இறைவன் ஆசீர்வதிப்பாராக.

– என்றும் வேண்டும் இன்ப அன்பு –

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர**
**ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**
ஆதீன குரு முதல்வர்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

# ஆசிச் செய்தி




கந்தரோடைக் கிராமத்தின் பெருமையையும் புகழையும் பரப்பி நிற்பது ஸ்கந்தவரோதயக் கல்லூரி. இக்கல்லூரி தன் வரலாற்றில் முதுபெரும் முதல்வர்களைக் கண்டது. அந்த வரிசையில் இப்பொழுது கல்லூரியின் புகழ்பூத்த அதிபராக இருபப்வர் அன்புக்குரிய ஆறு. திருமுருகன் அவர்கள். இக்கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட இவர், கல்லூரியின் வளர்ச்சிக்குப் பெரும் பாடுபட்டார்.

இவரது காலத்தில் இக்கல்லூரியின் பெயருக்கேற்ப கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் மலை போன்ற அமைப்பில் வேல் ஒன்று வைத்து வழிபாடு செய்து வந்தனர். இப்பொழுது கந்தனுக்கென்று தனியாக ஆலயம் அமைத்து கந்தன் கோயில் என்று அழைத்து மாணவர்களை அங்கே பிரார்த்தனை செய்து இன்பம் கண்டவர். இத்தோடு மட்டுமல்லாது "இசுறு" பாடசாலைத் திட்டத்தின்கீழ் மூன்று மாடிக் கட்டடத்தை அமைத்து கல்லூரிக்குப் பெருமை சேர்த்துக் கொண்டார். இவ்வண்ணம் தன் பதவிக் காலத்தில் இக் கல்லூரிக்குப் பெரும் சேவையாற்றிய அதிபர் அவர்கள் ஓய்வு பெறுவதையிட்டு அவருக்கு ஆசி கூறி அமைகிறேன்.

**பிரம்மஸ்ரீ இ. சோமேஸ்வரசர்மா**<br>
பிரதமகுரு,<br>
ஸ்கந்தன் ஆலயம்,<br>
யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

# ஆசிச் செய்தி



தெல்லிப்பழை துர்க்காபுரம் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவரும், சுன்னாகம் ஸ்கந்தவரோதய பாடசாலை ஆசிரியர், அதிபருமாகிய எமது அன்புச் சகோதரர் ஆறு. திருமுருகன் அவர்கள் பல ஆண்டுகளாக ஆசிரியப் பணியில் தன்னை ஈடுபடுத்தி பல சிறந்த மாணவர்களை உருவாக்கி வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் அரச பெரும் பதவிகளைப் பெறுவதற்கு நல்லாசானாகத் திகழ்ந்து தற்பொழுது 51வது வயதில் ஆலயப் பணி, சமயப்பணி, சமூகப் பணிகளுக்காகத் தன்னை முழுமையாகத் தன்னை அர்ப்பணிப்பதற்காகத் தனது ஆசிரியர், அதிபர் பதவியிலிருந்து ஓய்வுபெறுவது அம்பிகையின் பேரருளே ஆகும்.

அதிபர் அவர்கள் வருங் காலத்தில் தனது ஆன்மீகப்பணியைத் தொடர்வதற்கு ஸ்ரீ துர்க்காதேவியின் திருவருளும், எம்மை ஆற்றுப்படுத்திய அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரின் நல்லாசிகளும் துணைநிற்குமென நல்லாசி கூறி வாழ்த்துவோமாக.

லோகா சமஸ்தா சுகினோ பவந்து

**சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக் குருக்கள்**
துர்க்காபுரம்,
தெல்லிப்பழை.

# வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் வாழ்த்துச் செய்தி




கடந்த 24 ஆண்டுகளாக அர்ப்பணிப்புடனும் இதய சுத்தியுடனும் சேவை மனப்பாங்குடனும் கல்வித்துறைக்கு அரும்பணியாற்றி சேவையிலிருந்து ஓய்வு பெறும் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களின் சேவை நயப்பு விழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடை கின்றேன்.

கல்வியும் ஒழுக்கமும் எமது இரண்டு கண்களை போன்றன. அவற்றினை வளர்த்தெடுத்து உயரிய சமூக விழுமியங்களும் நற்பண்புகளும் உடைய சமூக சிற்பிகளை உருவாக்குவதில் கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்கள் ஆற்றியுள்ள அளப்பரிய பணி பாராட்டத்தக்கதாகும். எமது சமூகத்தின் உயர்ச்சியிலே கல்வியாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் பங்களிப்பு மிகவும் உன்னதமானது. மிகுந்த சமூகப் பொறுப்புடனும், சமூகப் பற்றுடனும் பணியாற்றி உயரிய சமூக உருவாக்கத்தின் அடித்தளமாகவும், சமய விழுமியங்களை மாணவர்களிற்கு வழங்குவதில் மிகுந்த பங்களிப்பினை வழங்கி ஆற்றலும், ஆளுமையும், மனித நேயமும் உள்ள மாணவ சமுதாயத்தின் தோற்றுவாயாகவும் செயற்பட்டுள்ளமை மக்கள் என்றென்றும் மனதில் நிலைத்திருக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

நல்லாசிரியராகவும், சிறந்த அதிபராகவும் சமூக நோக்கும், நேர் மனப்பான்மையும், உயரிய எண்ணக்கருவினையும் கொண்ட உயரிய மனிதனாகவும் எமது சமூகத்தின் ஒளிவிளக்காகவும் அவர் மதிக்கப்படுகின்றார். யாழ் இந்து அன்னை உருவாக்கியிருக்கும் தவப்புதல்வர்களுள் முன்னோடியாக இருந்து சமய பணிகளையும் சமூகப் பணிகளையும் வினைத்திறனுடனும், விளைதிறனுடனும் ஆற்றி வரும் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் இன்னும் பல ஆண்டுகள் இந்த மண்ணிலே வாழ்ந்து பல சமய, சமூகப் பணிகளை ஆற்ற எல்லாம் வல்ல அம்பிகை அருள் பாலிக்க வேண்டுமெனப் பிரார்த்திப்பதுடன் எனது வாழத்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

***சி. சத்தியசீலன்***
செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு,
வடமாகாணம்.

# வாழ்த்துச் செய்தி



யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் காலத்தின் தேவையறிந்து கல்லூரிக்கு ஆற்றிய சேவையை நினைவு கூர்ந்து பாடசாலைச் சமூகம் வெளியிடும் **"THE SKANDA"** என்ற மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மிகவும் பூரிப்படைகின்றேன்.

"உதவி வரைத்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து"


என்ற வள்ளுவன் வாக்கு, ஸ்கந்தா மைந்தர்களிடம் வேரூன்றியுள்ளமை, அதிபரின் சேவையைப் போற்றும் மனப்பாங்கிலிருந்து தெளிவாகின்றது. அதிபரின் சேவையின் பெறுமதியைப் பெற்று மகிழ்ந்தவர்கள். அதிபர் ஓய்வு பெறும் காலத்தில் அதனை வெளிப்படுத்தும் முகமாக சஞ்சிகையை வெளியிடுவது அவர்கள் உள்ளத்தில் அதிபர் நீங்கா இடம் பெற்றுள்ளமையைத் துல்லியமாகக் காட்டுகின்றது.

பார் போற்றும் செம்மல் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் ஓய்வு காலத்திலும், ஓய்வின்றிப் பயன்கருதா சேவையினைப் பாரில் உள்ள அனைவருக்கும் பகிர்ந்து வழங்க எல்லாம்வல்ல கந்தப்பெருமான் திருவருள் புரியவேண்டும் என்று பிரார்த்தித்து என் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்வடைகின்றேன்.

போற்றுவார் போற்றட்டும்
தூற்றுவார் தூற்றட்டும்
என் கடன் பணி செய்து கிடப்பதே.

**ப. விக்கினேஸ்வரன்**
பிரதிச் செயலாளர்,
மாகாணக் கல்வி அமைச்சு,
வடமாகாணம்.

# வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் கலாநிதி ஆறு. திருமுருகனின் பணிநயப்பு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். சமய்ப பேச்சாளராக, சமூகப் பணியாளராக அறியப்பட்ட அவர் அதிபராகவும் சிறந்த ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

அவரது காலத்தில் ஸ்கந்தாவின் பௌதீக வளங்களின் தேவை மிக இலகுவாகப் பூர்த்தி செய்யப்பட்டது. அவரது வெளிநாட்டுச் சுற்றுப் பயணங்களும், தனிப்பட்ட செல்வாக்கும் இத்தேவைகளை நிறைவேற்றுவதிற் பக்கபலங்களாக இருந்து உதவியமையை நான் நன்கு அறிவேன். ஓய்வுக்குப்பின்னரும் அவரது உதவிகள் ஸ்கந்தாவிற்குக் கிடைக்கவேண்டுமெனவும், அவரது சமூக சேவைகள் மூலம் தொடர்ந்தும் பலரும் பயன்பெற வேண்டுமெனவும் எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

**ஆ. ராஜேந்திரன்**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம் கல்வி வலயம்.

# வாழ்த்துச் செய்தி




சமயப் பணியுடன் கல்விப் பணியும் புரிந்து ஓய்வுபெறும் உயர்திரு. ஆறு.திருமுருகன் அவர்களை வாழ்த்தக் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். புகழ்பூத்த யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஆசிரியராகவும், உப அதிபராகவும், அதிபராகவும் இருந்து அரும்பணியாற்றிப் பல கல்விமான்களை உருவாக்கிய பெருமைக்குரியவர். சொல்லால் மட்டுமன்றி செயலாலும் செய்து காட்டும் செயல்வீரர். சைவசமய முறைப்படி தானும் வாழ்ந்து, தான் வாழும் சமூகத்திற்கும் உதாரணமாகத் திகழ்பவர்.

"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்ற முதியோர் வாக்கிற்கிணங்க கடல் கடந்த நாடுகள் தோறும் சென்று எமது உறவுகளுடன் தொடர்பு கொண்டு அவர்கள் வழங்கிய செல்வங்களை எல்லாம் எமது சமூகத்தின் முன்னேற்றத்திற்காகச் செலவு செய்யும் ஒரு அரிய பணியினைச் செய்பவர் ஆவர். இசுறு திட்டத்தின்கீழ் யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி பல வளங்களை எல்லாம் பெற்று இன்று அழகான கல்லூரியாகத் தலைநிமிர்ந்து நிற்கும் இக்காலத்தில் இக் கல்லூரியின் அதிபராக இன்னும் சில காலம் பணியாற்றக்கூடிய சந்தர்ப்பம் இருந்தும், தனது ஆன்மீகப் பணியினை மேலும் சிறப்பாக ஆற்றவேண்டும் என்ற நல்ல நோக்கத்திற்காக ஓய்வுபெறும் இவரது ஓய்வுகாலம் சிறக்க இறையருள் வேண்டி நிற்கின்றேன்.

**சி. கந்தசாமி**<br>
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,<br>
வலிகாமம் கல்வி வலயம்.<br>
பதில் கோட்டக் கல்விப் பணிப்பாளர்,<br>
உடுவில் கோட்டம்.

# பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி



"உண்மையெ உயர் அறம்" என்ற உயரிய சிந்தனையின்கீழ் ஒன்றுபட்டியங்கும் எமது கல்லூரிச் சமூகம், மதிப்புக்குரிய எங்கள் அதிபர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் ஓய்வுபெறும் இந்நாளில் "The Skanda" சிறப்புமலரை வெளியிடுவதையிட்டு பெருமகிழ்வடைகின்றோம்.

எங்கள் அதிபர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் 1993ஆம் ஆண்டிலிருந்து ஆசிரியராக, கலை–வர்த்தக மன்றப் பொறுப்பாசிரியராக, ஒழுக்காற்றுக்குழுப் பொறுப்பாசிரியராக, இல்லப் பொறுப்பாசிரியராக, பகுதித் தலைவராக, உப அதிபராக, பிரதி அதிபராக மூன்று அதிபர்களின் கீழ் உயரிய பணி செய்து 2008இல் அதிபராகி இன்று இக் கல்லூரியின் முக்கிய தேவைகள் யாவற்றையும் நிறைவு செய்த பெருநிறைவோடு ஓய்வு பெறுகின்றார்.

கல்லூரியினுள் காலடியெடுத்து வைக்கும்போது நுழைவாயில், ஸ்கந்தன் கோவில், அழகிய மூன்றுமாடிக் கட்டடம், ஸ்தாபகர் உருவச் சிலைகள், அழகிய நந்தவனம், அழகாகச் செப்பனிடப்பட்ட பாதைகள் என அனைத்துமே அவரது எண்ணத்தில் உருவானவை என்பதை எவரும் மறுக்கமுடியாது.

இன்றைய மாணவ சமூகம் நகர்ப்புற பாடசாலைகளை நாடிச் செல்லும்போது வசதியற்ற குடும்பத்தில் உள்ள பிள்ளைகளை கல்லூரியில் உள்வாங்கி அவர்களை கல்வியால் வளர்த்து சமூகத்தில் உயர்ந்த ஒருவனாக ஆக்கிவரும் பெருமை எங்கள் அதிபரையே சாரும். காலைப் பிரார்த்தனையில் கோவில் முன்றலில் அவர் கூறும் நற்சிந்தனைகளை மாணவர்கள், ஆசிரியர்கள் மட்டுமன்றி வீதியில் செல்பவர்களும் நின்று செவிமடுப்பர்.

இத்தகைய எங்கள் அதிபர் அவர்கள் ஓய்வுபெறும் வயதுக்கு முன்னரே இளைப்பாறுவதை எமது சமூகம் விரும்பாவிடினும் இன்றைய காலகட்டத்தில் சைவத்துக்கும் தமிழுக்கும் ஆற்றவேண்டிய பல பணிகள் எங்கள் அதிபர் அவர்களால் நிறைவேறும் என்ற திருப்தியுடன் கல்லூரிச் சமூகம் அவர் சேவையை வாழ்த்தி நிற்கின்றோம்.

**திரு. த. தவராஜா**
பிரதி அதிபர்,
யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

# வாழ்த்துச் செய்தி



எமது பாடசாலையின் 118 வருட கல்வி வரலாற்றில் சிறப்புமிகு சமூக சேவையாளரான கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களின் தலைமையில் “ஸ்கந்தா அன்னை சிறப்புப் பெற்ற காலப்பகுதியின் வரலாற்றுத் தகவல்களைத் தன்னகத்தே தாங்கி “THE SKANDA” என்ற அட்டைப் பெயருடன் சிறப்பு மலராக மலர்ந்து மணம் வீசும் இம்மலர் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

**திருமதி சாந்தினி நாகராஜா**
உப அதிபர்,
யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி

# வாழ்த்துச் செய்தி




யாழ்ப்பாணத்திலுள்ள மிகவும் புகழ்பூத்த பழைய கல்லூரிகளில் சுன்னாகம் யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் ஒன்றாகும். இக் கல்லூரி மிகப் பழமை வாய்ந்ததுடன் பெரும் அறிஞர்களையும் உருவாக்கியதொன்று எனும் சான்று களையுடைய ஒரு கல்லூரியாகும். போர்ச்சூழலினால் நலிவடைந்த இக்கல்லூரி இன்று மீள்கட்டியெழுப்பப்பட்டு வருவதைக் கண்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். இக் கல்லூரி மேலும் மேலும் வளர்ச்சியடைந்து மீண்டும் பொலிவு பெற்று யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டுமல்லாது முழு இலங்கையிலும் ஒரு தலைசிறந்த கல்லூரியாக வரவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**பேராசிரியர் வசந்தி அரசரத்தினம்**

துணைவேந்தர்,

யாழ். பல்கலைக்கழகம்.

# ஆசிரியர் கழகத் தலைவரின் வாழ்த்துச் செய்தி



ஆசிரியர் கழகத் தலைவர் என்ற வகையில் எமது கல்லூரிச் சஞ்சிகைக்கு இந்த வாழ்த்துரையை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆசிரியர் கழகத்தின் அனைத்துச் செயற்பாடுளிலும் அதிபர் எமக்கு உறுதுணையாக இருந்தார். இதற்கு அவர் முன்னர் ஆசிரியர் கழகத் தலைவராக இருந்து அரும்பணியாற்றிய நினைவுகள் காரணமாக இருக்கலாம்.

எந்த ஒரு ஆசிரியரும் இடமாற்றம் பெற்றால், அல்லது ஓய்வு பெற்றால் உடனுக்குடனேயே அவரின் பாராட்டு விழாவை நடத்தவேண்டுமென அவர் வலியுறுத்துவார். எந்த நிகழ்விலும் தவறாமற் கலந்துகொண்டு குறித்த ஆசிரியரின் சிறப்புக்களை நகைச்சுவையோடு எடுத்துக்கூறி மகிழ வைப்பார்.

அவரது சிறந்த சொற்பொழிவும், செயற்பாடுகளும் ஓய்வுக் காலத்திலும் தொடரவேண்டுமென எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

**திரு. ம. சிவானந்தன்**<br>
தலைவர்,<br>
ஆசிரியர் கழகம்,<br>
யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி

K. Sivaji B. A. Hons (Eng.), Dip. in Edu.
M. A. (English Lit.)
Principal Emeritus
Skandavarodaya College.

"Thelveekam"
Uduvil West,
Chunnakam.

T. Phone : 021 224 0798

# Message of Felicitation from the Former Principal of Skandavarodaya College



Skandavarodaya College has always been of foremost interest in my heart. I have spent twenty three golden years at Skanda and I remember those days with pride, love and gratitude.

It is my joy and privilege to convey this message of felicitation to the souvenir which is to be released by the teachers of Skandavarodaya College to honour the fruitful services rendered by the Principal Dr.Aru. Thirumurugan who is going to retire on 1st August 2012.

He is an illustrious principal who did yeomen service during his tenure of office at Skanda. He is able to steer the school with much distinction and authority, He occupies a significant place in the list of principals who served at Skandavarodaya College. He has a flamboyant personality to maintain good education and discipline like his predecessors.

He stood by me loyalty through trials and tribulations. When I assumed the principalship of Skandvarodaya college in 1997, I found it difficult to conduct various functions such as prizeday, athletic meet due to lack of funds either in the old student association or school development society. When he went to Canada to deliver religious discourses, he made an arrangement with the Canada O.S.A so that they agreed to meet the prizeday expenditures annually and they are keeping their promises upto now without any hesitation.

During my tenure of office, he took great initiative for the construction of Murugan temple and the parapet wall, the erection of statues of our founder Late

Mr. Kandiah Upathiyayar and the Manager Late P.S.Subramaniam. The newly built three storeyed building and the two storeyed Science laboratory are an ample proof of his capacity as an efficient principal.

During his tenure of office, he faced many challenges. Challenges did not deter him at any stage. He has the courage and fortitude to go through all such problems.

The University of Jaffna has conferred on the principal of Skanda Mr. Aru. Thirumurugan an Honorary Doctorate in recognition of his social service activities and educational publications. The Skanda society must be proud of having a doctor as a principal of Skanda in the history of Skandavarodaya College

I pray, Lord Murugan in the college premises will bless all of you and bring happiness and prosperity in all your endeavour. I thank you all for giving this opportunity to send this message of felicitation

**K.Sivaji**

# சேவைக்கே இலக்கணமான பெருந்தகை



செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களின் அதிபர் சேவை நிறைவு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். ஆன்மீக வாழ்வும், கல்விச் சேவையும் எவ்வாறு இணைந்திருக்கலாம் என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்கியவர் அவர். தனது வாழ்வினையே சமய வளர்ச்சிக்கும் சமூக சேவைக்கும் அர்ப்பணித்திருக்கும் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் இவற்றுடன் கல்விச் சேவை எவ்வாறு முன்னெடுக்கப்படலாம் என்பதனை நிரூபித்துக் காட்டியவர். கோயில் நிர்வாகத்துடன் பாடசாலை நிர்வாகம் எப்படி திறம்பட நடாத்தப்படலாம் என்பதனை நடைமுறையில் காட்டிய அவர், பாடசாலைத் தலைமைத்துவம், சமயத் தலைமைத்துவத்திலிருந்து வேறுபட்டதல்ல, என்பதனை வாழ்ந்து காட்டிய பெருமைக்குரியவர். வேலைப்பழுக்கள் அதிகரிக்கும் பொழுது ஒருவருடைய பணியின் தரம் வீழ்ச்சியடைவதில்லை என்பதனை உறுதிப்படுத்திய பெருமையும் அவரையே சாரும்.

கலாநிதி ஆறு. திருமுருகன் எனது உறவினர் மட்டுமல்லாது எனக்கு சேவையில் ஈடுபடவேண்டும் என்ற விருப்பத்தை ஏற்படுத்திய வழிகாட்டியுமாவார். சிறு வயதிலிருந்தே அவரது பேச்சாற்றலை அறிந்தவன் என்பதனால் அவர் என்றோ ஒரு நாள் பார்போற்றும் சொற்பொழிவாளனாகத் திகழ்வார் என்ற நம்பிக்கையைக் கொண்டிருந்தேன். மாணவப் பருவத்தில் அவர் காட்டிய திறமை ஆசிரியத் தொழிலில் மேலும் சுடர்விடத் தொடங்கி, அதிபர் பதவியில் பூரணமாகப் பிரகாசிக்கத் தொடங்கியது எனக் கூறினால் அதில் மிகையொன்றும் இல்லை. அவர் தேசிய ரீதியில் மட்டுமல்லாது சர்வதேச ரீதியிலும் பெற்றுக்கொண்டிருக்கும் பேரும் புகழும் அவர் பிறந்த இணுவையம்பதிக்கும் அவர் வாழும் ஈழத் திருநாட்டிற்கும் பெருமை சேர்த்திருப்பதனை எவராலும் மறந்துவிடமுடியாது. இது இமயம் வரை அவரது புகழை உயர்த்தியிருப்பது கண்டு நாமெல்லோரும் மட்டிலா மகிழ்ச்சியில் மூழ்கியிருக்கின்றோம் என்பதனை கூறிவைக்க விரும்புகின்றேன்.

கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் அமரர் சிவத்தமிழ்ச் செல்வி அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமாகியமை மேலும் ஒருபடி இவரது பெருமையை உயர்த்தியது என்றே கூறுதல்வேண்டும். அகில இலங்கை இந்துமா மன்றம் போன்ற நிறுவனங்களில் அவருக்கு வழங்கப்பட்ட பதவிகள், சமூக நிறுவனங்களான சிவபூமி, துர்க்கா மகளிர் இல்லம், சைவச் சிறுவர் இல்லம், புற்றுநோயாளர் சங்கம் போன்றவற்றை வழிநடாத்துவதில் அவருக்கிருக்கும்

ஆளுமை, ஸ்கந்தவரோதயக் கல்லூரியை கட்டியெழுப்பிய அவரின் ஆற்றல் என்பன அவரின் திறமைக்குச் சான்றுகளாகும். இவர் காலத்தில் ஸ்கந்தவரோதயக் கல்லூரிகண்ட பௌதீகவள வளர்ச்சி எல்லோரையும் பிரமிக்க வைப்பதாகும். இவரது எல்லாவகையான திறமைகளுக்கும் மகுடம் வைத்தாற்போல் அமைந்திருப்பதே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலாநிதிப் பட்டமாகும். மிகக் குறைந்த வயதில் கௌரவ கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொள்ளும் அளவுக்கு அவரது சமூக, சமயப் பணிகள் இருந்தன எனக் கூறினால் அதில் மிகையொன்றுமில்லை. இதன் காரணமாகவே இவருக்கு வழங்கிய கலாநிதிப் பட்டத்தினால் அவர் பெருமை பெற்றமையைவிட பல்கலைக்கழகமே நன்மதிப்பை உயர்த்திக் கொண்டதெனக் கூறுதல் வேண்டும்.

கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் வேலைப்பளு காரணமாக இளைப்பாறும் வயதுக்கு முன்பதாக அதிபர் பதவியில் ஓய்வுபெற்றுக் கொள்ளும் செயற்பாடு கல்விச் சமூகத்துக்கு ஒரு பின்னடைவென்றே குறிப்பிடுதல் வேண்டும். அவர் அதிபர் பதவியில் இருந்திருந்தால் கல்லூரிக்கு மேலும் பல அபிவிருத்திகளைப் பெற்றுக் கொடுத்திருப்பார். ஆயினும் எமது சமயம் செய்த நற்பயனாக அவரது முழுமையான வாழ்வை வையத்துக்கும் சமூக சேவைக்கும் அர்ப்பணிக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

"இதனை இதனால் இவன் முடிக்கும் என ஆய்ந்து
அதனை அவன் கண்விடல்"

என்ற பொய்யாமொழிப் புலவரின் கூற்றுக்கு இணங்கச் சமயத்துக்கும் சமூகத்துக்கும் வழிகாட்டும் ஒரு தலைவனாக கலாநிதி ஆறு. திருமுருகனை நாம் எல்லோரும் ஏற்று அவரது தலைமையில் புதுயுகம் படைக்க முன்வருவோம் எனக் கூறி அவர் பல்லாண்டுகாலம் நல்ல உடலாரோக்கியத்துடன் வாழ இறைவனை இறைஞ்சி எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பேராசிரியர் க. தேவராஜா**
முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

# பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி




இலங்கை கல்வி வரலாற்றில் முத்திரை பதித்த கல்லூரிகளின் வரிசையில் யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் ஒன்றாகும். இக்கல்லூரியானது பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்தின் கல்வி மறுமலர்ச்சியை மேம்படுத்தும் முகமாக உருவாக்கப்பட்ட உயர்நிலைக் கல்லூரிகளில் ஒன்றாகும். இக்கல்லூரியின் வரலாற்றுச் சிறப்பினைப் பலரும் பேசக் கேட்டுள்ளேன். கிராமப்புறப் பாடசாலையாக விளங்குகின்ற போதிலும் நகர்ப்புற பாடசாலைகளுக்கு இணையாகத் தன்னை நிலைப்படுத்தி புகழுடன் விளங்கும் இக் கல்லூரியானது அதிபர் திரு. ஆறு.திருமுருகனின் காலப்பகுதியில் "The Skanda" என்ற மலரை வெளியிடுவதை இட்டு மிக மகிழ்வடைகின்றேன். இக்கல்லூரி எமது பிரதேசத்தின் மாணவச் செல்வங்களின் ஆளுமையையும் அறிவையும் வளர்க்கும் உயர் அறிவாலயமாக என்றும் மிளிர வாழ்த்துகின்றேன்.

மேலும் இக்கல்லூரியை அலங்கரித்த சிறப்பான அதிபர்களில் ஒருவராகத் தற்போதைய அதிபர் காணப்படுகின்றார் என்றால் அது மிகையாகாது. அவரது பெயர் ஒரு அணிகலனாக அதாவது தமிழ் கடவுளான முருகனின் பெயரைத் தாங்கியுள்ளது. இது தமிழ் மீதான அவரது பற்றினைச் சிறப்பிக்கும் ஓர் அணிகலனாகக் காணப்படுகின்றது. இதே போல் அவரது நெற்றியில் உள்ள திருநீற்றுப் பட்டையானது அவருக்கு சைவத்தின் மீதான ஈடுபாட்டைக் காட்டுகின்ற மற்றுமொரு அணிகலனாக விளங்குகின்றது. திசைதெரியா கடலில் தத்தளிப்போர்க்கு கலங்கரை விளக்கம் எவ்வாறு உதவுகின்றதோ அதே போன்று அன்பிற்காக, ஆதரவிற்காக, சொந்தத்திற்காக ஏங்கித் தவிக்கின்ற சிறுவர், சிறுமியர், பெண்கள், முதியோர்கள், ஊனமுற்றோர், மனவளர்ச்சி குறைந்தோர் போன்றவர்களுக்கு ஆதாரமாக மதிப்பிற்குரிய அதிபர் திரு.ஆறு. திருமுருகன் காணப்படுகின்றார் என்பது சகலராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. அந்த வகையில் புகழ்மிக்க இக்கல்லூரியின் புகழ்மிக்க அதிபர்களில் ஒருவராக இருந்து ஓய்வுபெற இருப்பவர் அதிபர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள். இக்கல்லூரி எமது பிரதேசத்தில் மாணவச் செல்வங்களின் ஆளுமையையும் அறிவையும் வளர்க்கும் உயர் அறிவாலயமாக என்றும் மிளிர தனது பங்களிப்பைத் தொடர்ந்தும் வழங்கவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**திரு. மு. நந்தகோபாலன்**
பிரதேச செயலர்,
வலி தெற்கு, உடுவில்.

# வாழ்த்துச் செய்தி



ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பதுகளில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பொற்காலத்தை உருவாக்கியவர் என்ற பெருமைக்கும் புகழுக்குமுரியவர் அக்கால அதிபர் "ஒறேற்றர்" திரு. சி. சுப்பிரமணியம். அந்தப் பொற்காலத்துக்கு மேலும் மெருகூட்டி அதன் புகழொளியை நீடிக்கச் செய்த பெருமைக்குரியவர்கள் அவருக்குப் பின்னர் அதிபர் பதவியை அலங்கரித்த திரு.வி. சிவசுப்பிரமணியம் (வைசர்), திரு.க.சிவகுமாரன் ஆகியோர்.

எனினும் காலப்போக்கில் பல்வேறு காரணங்களால் கல்லூரியின் வளர்ச்சியில் ஏற்படத் தொடங்கிய தொய்வை, பிற்காலத்தில் நிலவிய அரசியற் சூழ்நிலை உள்நாட்டுப் போர் போன்றவை விரைவுபடுத்தின. குடாநாட்டில் நிகழ்ந்த பாரிய இடப்பெயர்வு, குறுகிய கால இடைவெளிகளில் பல்வேறு ஊர்களில் புகலிடம் தேடவேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியதுடன் திரு. ஆறு. திருமுருகன் போன்றவர்களின் சேவையும் செல்வாக்கும் ஸ்கந்தாவுக்கு இன்றியமையாதவை என்ற உண்மையை உணர்த்தவும் செய்தது.

குடாநாட்டில் ஓரளவு சுமுகமான நிலை ஏற்பட்டபோது, தன் சொந்த இடமான கந்தரோடைக்கு ஸ்கந்தா மீண்ட சில மாதங்களில் அப்போதைய அதிபர் திரு.கமலநாதன் ஓய்வுபெற, அந்தப் பதவியை ஏற்றுக்கொள்வதற்கு யாருமே தாமாக முன்வரவில்லை. ஆயினும் ஸ்கந்தாவை மீண்டும் ஒரு பொற்காலத்துக்கு இட்டுச் செல்லவேண்டும் என்ற இலட்சியத்தைக் தம் இதயத்திற் பதித்த சில ஆசிரியர்களும் அங்கே இருந்தனர் என்பது உவப்பான செய்தி. புகழ்பெற்ற வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்று தம் அந்தஸ்தை உயர்த்துவதைவிட, தாம் கற்பிக்கும் பாடசாலைக்குத் தம் சேவையால் புகழ் சேர்ப்பது சிறந்தது என நம்பியவர்கள் அவர்கள்.

அத்தகையவர்கள் அளித்த ஆதரவுப் பலத்துடன், அவர்களுடன் இணைந்து திரு.ஆறு. திருமுருகன் மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக அடக்கமும் பொறுமையும் ஆங்கிலப் புலமையும் நிறைந்த திரு.க. சிவாஜி அவர்கள் அதிபர் பதவியை ஏற்றுக்கொண்டார். கல்லூரி நிர்வாகத்திலும் கல்விப்புலச் செயற்பாடுகளிலும் அவர் தன் கவனத்தைச் செலுத்த, ஆசிரியருக்குரிய கடமைகளை நிறைவேற்றிக்கொண்டே ஸ்கந்தாவின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தியாக்கும் செயற்பாடுகளிலும் திரு. ஆறு. திருமுருகன் துடிப்புடன் ஈடுபட்டார்.

நன்மாணாக்கர் பலரை உருவாக்கி, "நல்லாசிரியர்" விருதை இரண்டு தடவைகள் பெற்றுக்கொண்ட திரு. திருமுருகன், தமிழ்கூறும் நல்லுலகிலே தனித்துவமான ஒரு பேச்சாளராகத் திகழ்கின்றார் என்பது அனைவரும் அறிந்ததே. அறப்பணிகளைப் பற்றி அடுக்கடுக்காகவும் அழகழகாகவும் இனிய தமிழிற் பேசுவதுடன் அமையாமல், அவற்றைத் தானே முன்னின்று செயற்படுத்துவதும் வசதியும் வாய்ப்பும் உள்ளவர்களை உற்சாகப்படுத்தி அத்தகைய பணிகளில் அவர்களை ஈடுபட வைப்பதும் அந்தத் தனித்தன்மையின் அடிப்படை. கல்லூரி வளாகத்திலுள்ள ஸ்கந்தன் கோயில், சரஸ்வதி சிலை, கல்லூரித் தாபகர் கந்தையா உபாத்தியாயர், முகாமையாளர் வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் ஆகியோரின் சிலைகள், கல்லூரியின் முகப்பிலுள்ள பெயர் வளைவு, பரிசளிப்பு விழா நிதியம், விளையாட்டுப் போட்டி நிதியம், வறிய மாணவர்களுக்கான நிரந்தர நிதியுதவி போன்றவை அவருடைய சொல்லாலும் செயலாலும் உந்தப்பட்டு அறப்பணியிலும் அறிவுப் பணியிலும் ஆர்வமுடன் ஈடுபடத் தொடங்கிய ஸ்கந்தா பழைய மாணவர் சிலரும், பழைய மாணவர் சங்கங்களும் அன்னைக்கு அளித்த நன்றிக் காணிக்கைகள்.

கல்லூரியின் தொடக்க வகுப்பான ஆறாம் வகுப்பில் ஆர்வமும் திறமையுமுடைய மாணவர்கள் சேர்வதை உறுதிப்படுத்துவதிலும் "இசுறு" பாடசாலைத் திட்டத்தில் ஸ்கந்தாவை இணைப்பதிலும் அவர் வகித்த பாகம் கல்லூரியின் உயிர்நாடியான கல்வியின் தரத்தை உயர்த்துவதையே நோக்கமாகக் கொண்டது.

ஸ்கந்தாவின் மீளெழுச்சிக்காக ஆசிரியர், பிரதி அதிபர், அதிபர் என்ற எல்லா நிலைகளிலும் தன் பங்களிப்பை முழுமையாக வழங்கிய திரு. ஆறு. திருமுருகன், உரிய காலத்துக்கு முன்னர், அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெறுவதற்கு எடுத்த முடிவால், வருத்தமும் அதிர்ச்சியும் அடைந்துள்ள ஸ்கந்தாச் சமூகம், தமிழ்ச் சமூகத்துக்கும் சைவ சமயத்துக்கும் இன்னும் அதிகமாகவும் அவசியமாகவும் சேவை செய்யவேண்டும் என்ற அடக்கமுடியாத ஆர்வமே அந்த முடிவை எடுப்பதற்கு அவரை உந்தியது என்பதை உணர்ந்து, அதைத் தடுக்கமுடியாத தர்மசங்கடமான நிலையில், மன ஆறுதலையும் திருப்தியையும் ஓரளவாவது பெற்றுக்கொள்ளும் நோக்கில் அவருடைய சேவைகளை நன்றியுணர்வுடன் ஆவணப்படுத்தும் வகையில் மலரொன்றை வெளியிடுவதைப் பாராட்டி வரவேற்கின்றேன்; ஓய்வுபெறும் அதிபர் திரு. ஆறு. திருமுருகன் நீண்ட காலம் ஆரோக்கியத்துடன் வாழவும், மேற்கொள்ளவிருக்கும் புதுப்பணிகளும் பொதுப்பணிகளும் இன்றுபோல் என்றும் சிறக்கவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

கந்தரோடை,
சுன்னாகம்.

**திரு. சி. சிவசரவணபவன்**
ஓய்வுநிலை அதிபர்,
யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி.

# Thirumurugan - Man of Principle and Dedicated to work

It gives me great pleasure to write a few lines about Dr. Aru. Thirumurugan on the eve of his retirement. He comes from a very respectable, educated, orthodox vegetarian family. Both the parents are teachers. He is very hard working, honest and loyal to his superiors. When Sivaji retired there was much competition for the prinpical post. Since then Thirumurugan was appointed as principal. We had to meet the higher authorities and that Thirumurugan was made permanent.

I remember at late father's memorial speeches at Skanda yearly by various academics, in my vote of thanks, I always said that Thirumurugan should stay at Skanka until his age of retirement. He and I were members of the University council of Jaffna. He has contributed a lot in the council meetings. The university administration always ready to follow his advice on religious matters and others. He never favoured anyone and always recommended the best ones.


He arranges every function very colourfully and methodically. His retirement is a personal loss to me. It is like when my father retired in 1969.

**Principals might come and go only some remain in the heart of people for ever and Thirumurugan is one of those.**

**I wish him long, happy and peaceful life.**

**Dr. S. Sivanandarajah**
Council member
University of Jaffna.

# வாழ்த்துச் செய்தி



ஸ்கந்தவரோதயா அன்னையின் மாணவர்களில் ஒருவனாக இச் செய்தியை எழுதுவது எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாக எண்ணி மட்டற்ற மகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்றேன். பல தசாப்தங்கள் பெருமைமிக்க வரலாறும் கல்விப் பாரம்பரியமும் உள்ள ஸ்கந்தவரோதயா அன்னை கந்தரோடைக் கிராமத்தில் கல்வி ஊற்றாக விளங்கி யாழ் பிராந்தியத்தை செழுமைப்படுத்தியுள்ளாள். மேலும் அர்ப்பணிப்புள்ள அதிபர்களினதும், ஆசிரியர்களினதும் தன்னலமற்ற சேவையால் உயர்ந்து, தன்னைத் தேடி வந்த மாணவர்களை ஆற்றல் மிக்கவர்களாகவும், சமூகமொன்றை வழிநடாத்தத் தேவையான திறன்களையும், நேர் மனப்பாங்கையும் உடைய புலமையாளர்களாகவும் உருவாக்கியுள்ளாள்.

யாழ் குடாநாட்டில் மூன்று தசாப்தங்கள் நிலவிய யுத்தச் சூழ்நிலையால் அதிகளவு பொலிவிழந்த கல்வி நிறுவனங்களில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் ஒன்றாகும். யுத்தத்துக்கு முற்பட்ட காலத்தில் இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து வந்த மாணவர்கள் கல்லூரித் தாயின் அரவணைப்பில் வளர்ந்து தமது குடும்பத்துக்கும் தமது பிரதேசத்துக்கும் பெருமை தேடித் தந்துள்ளனர். அக்காலப் பகுதியில் இக்கல்லூரிக்கு எல்லாவகைப் பொலிவுடனும் வீறுநடை போட்ட பெருமையான வரலாறும் உள்ளது. வரும் காலத்திலும் தற்போதைய நலிவு நீங்கி புதுப் பொலிவுடன் இக் கல்லூரி மீண்டும் விளங்க வேண்டும் என்று இறைவனை வேண்டுகின்றேன்.

இம்மலர் வெளிவருவதற்கு அயராது உழைக்கும் மலராசிரியருக்கும், கல்லூரிச் சமூகத்துக்கும் எனது பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். கல்லூரிச் சமூகத்தினது எதிர்கால முயற்சிகள் இனிது நிறைவடையவும் இக்கல்லூரி மாணவர்களின் எதிர்காலம் வெற்றியுடையதாக அமையவும் எனது மனப்பூர்வமான நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பேராசிரியர் க. கந்தசாமி**
பௌதிகவியல் பேராசிரியரும் விஞ்ஞான பீடாதிபதியும்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# வாழ்த்துரை

கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களின் சேவையை நயந்து கல்லூரிச் சமூகம் நூல் வெளியீடு செய்வது பெருமைக்குரிய விடயமாகும். அந்த வகையில் அந்நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் யான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

வயதில் இளையவரான செஞ்சொற் செல்வர் பல்வேறுபட்ட சமய, சமூகப் பணிகளுக்கிடையே இருபது வருட காலச் சேவையைக் கல்விப் பணிக்காகச் செலவிட்டுள்ளார். 1ஏB தரப் பாடசாலைகளில் ஒன்றாக விளங்கித் தற்போது இசுறு பாடசாலையைத் தெரிவு செய்யப்பட்டு பல பாரிய அபிவிருத்தித் திட்டங்களைக் கொண்டு வளர்ச்சி அடைந்துவரும் யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் புகழ்பூத்த அதிபர்களின் வரிசையில் அதிபராக விளங்கியுள்ளார்.

இவர் ஸ்கந்தவரோயக் கல்லூரியில் ஆசிரியராக, பகுதித்தலைவராக, பிரதியதிபாக, அதிபராக இருந்து தனது கல்விப்பணியை இருபது வருடகாலம் செய்துள்ளார். கல்லூரியில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் அதேவேளையில் கடமையாற்றிக் கொண்டு இருக்கும் அதேவேளையில் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, உலகின் பலபாகங்களிலும் சென்று ஆத்மீகப்பணி ஆற்றியுள்ளார். இவ்வாறு சைவ, சமூகப் பணிகளில் நின்று உழைத்தமையைக் கண்டு பூரிப்படைந்துள்ளவர்களில் உடன்பிறவாச் சகோதரி போல் இருந்து மகிழ்ந்தவர்களில் நானும் ஒருவர் என்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

யான் யா/ இராமநாதன் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றக் கிடைத்த அரிய சந்தர்ப்பத்தில், ஆறு. திருமுருகன், இராமநாதன் கல்லூரியின் பழைய மாணவன் என்பதை அறிந்து மேலும் பூரிப்படைகின்றேன். மேலும் இராமநாதன் கல்லூரியின் சகோதர பாடசாலையாக ஸ்கந்தவரோதயக் கல்லூரி அமைந்துள்ளமை இரட்டித்த மகிழ்ச்சியாகும். இது இராமநாதன் கல்லூரிக்குக் கிடைத்த பெருமையுமாகும்.

இந்த வகையில் இராமநாதன் கல்லூரியின் புகழ்பூத்த பழைய மாணவர்களில் ஒருவரான செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்கள் கல்விப் பணியினின்றும் ஓய்வு பெற்றுச் சமூகப்பணி சிறக்க செயலாற்ற உள்ளார். எனவே சமூகத்திற்குச் சேவையாற்றுவதன் மூலம் மிக உன்னதமான சமூகப் பணியாளனாக விளங்க எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிவாராக. மேலும் அவரது ஆன்மீகப் பணி சிறக்கவும், இவ்வுலகில் நீண்டகாலம் வாழ்ந்து, நிறைந்த ஆயுளும் சிறந்த உடல் நலமும், உளநலமும் இறையருளால் கிடைக்கவேண்டுமென்று பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

வளர்க அவரது பணிகள்

**திருமதி வேணுகா சண்முகரட்ணம்**
அதிபர்,
யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை.

# வாழ்த்துச் செய்தி

The Skantha சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெருமை யடைகின்றேன். 'ஸ்கந்தா' என் வாழ்வின் வழிகாட்டியாக விளங்கிய கல்லூரி. 36 வருடங்களாக – நான்கு வருடங்களைத் தவிர்த்து – நான் ஸ்கந்தா அன்னையின் மடியிலே தவழ்ந்து வாழ்வு பெற்றேன். 1953ம் ஆண்டு எனது இருபத்தோராவது வயதில் அதிபர் திலகம் ஒறேற்றர் சுப்பிரமணியம் அவர்களால் ஸ்கந்தாவுக்கு ஆசிரியப் பணியாற்ற அழைக்கப்பட்டேன். 1989ம் ஆண்டு வரைக்கும் ஸ்கந்தாவில் பணியாற்றினேன். வெளிமாவட்டங்களில் வேலை செய்யாத காரணத்தால் நான்கு வருடங்கள் வேலணை மத்திய கல்லூரியில் கடமையாற்றவேண்டிய நிலையிலிருந்தேன். வேலணையிலிருந்து மீண்டும் ஸ்கந்தாவுக்கு வந்து சேவையாற்றி ஓய்வுபெற்றேன். இராமபிரானுக்கு வனவாசம் கிடைத்தது போல் எனது வேலணை இடமாற்றம் இடம்பெற்றது.

ஸ்கந்தாவில் 36 வருடங்கள் ஆசிரியத்தொழில் ஆற்றிய எனக்கு 1953 தொடக்கம் 1962 வரை ஒறேற்றர் சுப்பிரமணியத்துடன் கடமையாற்றிய காலந்தான் என் தொழிலுக்கும் என் குணாதிசயங்களுக்கும் வழிகாட்டியாக அமைந்தது. பல அதிபர்களுடன் கடமையாற்றினாலும் என் மனதில் பதிந்தவை ஒறேற்றர் சுப்பிரமணியத்தின் காலமும் திரு.P. ஏகாம்பரத்தின் காலமுமாகும். இருவரின் ஆளுமையும் என் மனதில் பதிந்து என் தொழிலுக்கும் என் வாழ்வுக்கும் வழிகாட்டின.

கலாநிதி திருமுருகன் அதிபராகக் கடமையாற்ற முன்னரே அவருடன் எனக்குத் தொடர்பு ஏற்பட்டது. ஸ்கந்தாவில் ஒரு ஆசிரியரின் பிரியாவிடையின்போது, பாராட்டுரை வழங்குவதற்காக நான் அழைக்கப்பட்டிருந்தேன். அன்று திருமுருகனுடன் ஏற்பட்ட என் உறவு உலகு உள்ளவரைக்கும் நிலைத்து நிற்கக்கூடியதாக அமைந்துவிட்டது. எனது பழைய மாணவனும், ஸ்கந்தா ஆசிரியருமான ஒருவரின் பாராட்டுவிழாவில் பாராட்டுரை வழங்குவதற்கு அழைக்கப்பட்ட நான் முன்பின் அறிமுகமில்லாத திருமுருகனால் அன்போடு தேநீர் தந்து உபசரிக்கப்பட்டேன். எனது மனோநிலையை நன்கு உணர்ந்த திருமுருகன் என்னுடன் மிகுந்த கனிவுடன் உரையாடியது, என் வாழ்வில் மறக்கமுடியாது. நொந்த மனதுக்குச் சிறந்த ஔடதமாகி என்னைச் சந்தோஷப்படுத்திய அவரது மாண்பை நான் மறக்கமாட்டேன்.

திருமுருகன் கல்லூரியில் ஆற்றிய சேவையைப் பற்றிக் கூறுவதென்றால் "அவர் ஸ்கந்தா அன்னையை அலங்கரித்த விலைமதிப்பற்ற ஆபரணமாகத் திகழ்ந்தார்" ஆங்கிலத்தில் "THIRUMURUGAN was an ornament to Skantha, he brought fame and name to Skantha" ஸ்கந்தா என்றால் திருமுருகன் என்றும் திருமுருகன் என்றால் ஸ்கந்தா என்றும் மக்கள் மனங்களில் தனக்கென ஒரு தனியிடம் பெற்றுள்ளார்.

ஒரு கல்லூரியின் அதிபராக விளங்கி தாம் ஆற்றுகின்ற கடமை இந்தச் சமூகத்திற்குப் போதுமானதாக இல்லை எனக் கருதிய திருமுருகன் அவர்கள், தமிழ்ச் சமூகத்தின் உயர்ச்சிக்காக பல தொண்டு நிறுவனங்களை அமைத்து பல கோடி ரூபாவை முதலிட்டு நிர்வகித்து வருவது எமக்கெல்லாம் பெருமை தருகின்றது. முதியோரை அரவணைத்துக் காக்கும் முதியோர் இல்லம் தொடக்கம், வலுவிழந்தோர் வாழ்வகம் வரைக்கும் பல தொண்டு நிறுவனங்களை அமைத்து ஏழை எளியவர்களின் கண்கண்ட தெய்வமாக விளங்கும் திருமுருகன், சைவமும் தமிழும் தழைத்தோங்க வந்த ஆறுமுகநாவலரின் மறு அவதாரமே ஆவார்.

யாழ்ப்பாண சமூகத்தின் இன்னல்களை நீக்கிவிட வேண்டுமெனும் அவாவினால் இரவுபகல் எனப் பாராது 24 மணி நேரமும் அயராது உழைப்பது அவருக்கே உரித்தான தனித்துவமான செயலாகும்.

சில நாட்களுக்கு முன் ஸ்கந்தாவிற்கு நான் போனபோது August 01 Retire பண்ணுகின்றேன் என அவர் எனக்குக் கூற "உது கேட்கத்தானோ இங்கே வந்தேன்" என பெரும் கவலை அடைந்தேன். "அவர் என்ன தீர்மானம் எடுத்தாலும் ஆழ்ந்து சிந்தித்துத்தான் எடுப்பார்" என்ற அனுபவத்தில் "நான் கதையை மாற்றினேன். அதன் பின்னர் பாடசாலையின் பௌதிக வளங்களைக் காட்டி விளக்கங்கள் கொடுத்தார்.

மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் ஒருநிலைப்பட்ட திருமுருகன், தனது எண்ணம், சொல், செயல் மூன்றிலுமே மிகச் சிறந்த தமிழனாக, மிக உயரிய சைவப் பண்பாளனாக விளங்குவது அவர் சாதாரண மானுடன் அல்ல என்பதை எமக்கு உணர்த்துகின்றது.

திருமுருகன் நாமம் ஸ்கந்தா உள்ள வரைக்கும் நிலைத்திருக்கும் என்ற திட நம்பிக்கையுடன் விடை பெறுகின்றேன்.

**ஞானசந்திரமூர்த்தி**
ஓய்வுநிலை ஆசிரியர்

# சைவநெறித் தொண்டர் கலாநிதி ஆறு. திருமுருகன்



"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்ற பொன் மொழிக்கமைய கலாநிதி அவர்கள் கல்விச் சேவையூடாக ஆசிரியர் தொழிலை ஆரம்பித்தார். பதவி உயர்வுகள் பெற்று தற்பொழுது "ஸ்கந்தா"வின் அதிபராகக் கடமையாற்றுகின்றார். இக்காலப் பகுதியில் "இசுறு" திட்டத்தின் நிதியுதவியுடன் மூன்றுமாடி நிர்வாகக் கட்டடமும், விஞ்ஞான ஆய்வுக் கட்டடமும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

சகல வசதிகளுடன் ஆரம்ப பாடசாலை இயங்குவதற்கு புதிய கட்டடம் நிர்மாணிப்பதற்கு சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. "ஸ்கந்தாவின் உயர்கல்விப் பெறுபேறுகள் உச்சநிலை அடையவேண்டுமென்ற தொலைநோக்குடன் "ஆரம்ப பாடசாலை"யை ஆரம்பித்து நல்ல அத்திவாரமிட வேண்டுமென்ற கலாநிதி அவர்களின் மதிநுட்பம் நனவாகுமென நாம் எதிர்பார்க்கலாம். "ஸ்கந்தா" ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்கின்றமையால் "ஆரம்ப பாடசாலை" பிரத்தியேக நிர்வாகமாய் இயங்கிவரும். இப்பாடசாலைக்கு அடிப்படைத் தேவைகளான குடிதண்ணீர், சுற்றுமதில் போன்றவற்றை முதற்கட்டமாக ஆரம்பிப்பதற்கு கலாநிதி ஆறு. திருமுருகனின் தலைமைத்துவமும் பங்களிப்பும் அத்தியாவசியம். 01.08.2012ம் திகதி அவர் ஓய்வுநிலை பெற்றாலும் தான் தொடக்கிய ஆரம்ப பாடசாலையை சகல வசதிகளுடன் கட்டி முடிப்பதற்கு முன்னின்று உதவுவார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. "ஸ்கந்தா" நிறுவுநர் அமரர் கந்தையா உபாத்தியாரின் பெயர் பொன் எழுத்துக்களால் பதியப்பட்டிருப்பதைப் போன்று ஆரம்ப பாடசாலையை ஆரம்பித்த கலாநிதி ஆறு. திருமுருகனின் நாமமும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும்.

"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்தி லெல்லாம் உளன்"

எனும் வள்ளுவர் வாக்கு கலாநிதி ஆறு. திருமுருகனுக்கு சாலவும் பொருந்தும். அவரிடம் தனித்துவ ஆளுமையும், சிறப்புறு செயற்பாடுகளும், அணுகுமுறைகளும் முன்னிலை பெற்றிருக்கின்றன. நேர்மை, உண்மை, சேவைச் சிறப்புடன் விளங்கும் கலாநிதி அவர்கள் மக்கள் மத்தியில் மதிப்புப் பெற்றவராக விளங்குகின்றார்.

தளராத முயற்சி, மனவுறுதி காரணமாக அவர் முன்னெடுக்கும் கல்வி, சமூக சைவ சமய வளர்ச்சிப் பயணங்கள் வெற்றியடைகின்றன. தனது இனிய

நாவன்மையால் வேற்றுமையில் ஒற்றுமையைப் பெறக்கூடிய சக்தி வாய்ந்தவர். சுறுசுறுப்பாக இயங்கி தனது திட்டங்களை குறிப்பிட்ட கால எல்லைக்குள் செய்து முடிக்கும் திறன் வாய்ந்தவர்.

சைவமும், தமிழும் தழைத்தோங்க ஈழத்திலும் தமிழர்கள் வாழ்கின்ற பிற தமிழ் பேசும் மக்களினதும் இளைஞர்கள் மற்றும் யுவதிகளின் நன்மதிப்பையும் பாராட்டுக்களையும் பெற்று வருகின்றார். அவருக்குக்' கிடைக்கும் அன்பளிப்புக்கள் எல்லாம் சமூக முன்னேற்றத்திற்காகச் செலவிடப்படுகின்றது. தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானம், கோண்டாவில் மாற்று வலுவுள்ளோர் சிவபூமி இல்லம், தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லம், மருதனார்மடம் புற்றுநோயாளர் விடுதி, கீரிமலை சிவபூமி மடம், இந்துமாமன்ற நல்லூர் கிளை ஆகியவற்றைத் திறம்பட நிர்வகித்து வருகின்றார்.

“மக்கள் சேவையே மகேசன் சேவை” என வாழ்ந்துவரும் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் சுகதேகியாய் நீண்ட காலம் வாழ்ந்து மக்கள் நலன் பேண எல்லாம் வல்ல இறைவன் அருள வேண்டுமென நாம் பிரார்த்திப்போம்.

**சு. பரமநாதன்**
தலைவர்,
ஸ்கந்தவரோதயக் கல்லூரி
பழைய மாணவர் தாய்ச் சங்கம்.

# வாழ்த்துச் செய்தி

அகவை 50 என்ற அற்புதமான பொன்விழா லண்டன் "தமிழர் தகவல்" என்ற வெளியீட்டை, இல்லை! இல்லை, ஒரு பொக்கிஷத்தை 'ஆ' என்ற வாயுடனும், அகலவிரித்த கண்களுடனும் ஆர்ப்பரித்த மனதுடனும் பார்த்தபோது ஆச்சரியத்தில் அப்படியே உறைந்து போனேன். வாழும் காலத்தில் வாழ்ந்து காட்டும் ஒருவரைப் பார்க்கும் பாக்கியம் கிடைத்ததுபோல் ஒரு உன்னதமான உணர்வை அனுபவித்தேன் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

தமிழுக்கும், சமயத்திற்கும், மனிதாபிமானமிக்க, ஆதரவற்றவர்களுக்கு வழங்கிவரும் ஆதரவுக்கும் நீங்கள் செய்துவரும் தொண்டுகள் ஆராதிக்க வேண்டியவை, மனநிறைவைத் தரக்கூடியவை. கடந்துவந்த பாதைகளில் உங்கள் சாதனைகள், நல்லுணர்வு வெளிப்பாடுகள் அனைத்தும் முத்திரை பதிக்கும் உங்கள் வாழ்க்கைமுறை, ஒரு கலங்கரைத் தீபமாகத் தெரிவதற்குச் சமனான, எங்கள் ஸ்கந்தா அன்னையின் வாழும் கால அதிபர் என்ற ரீதியில் உலகெங்கும் உங்கள் பெயரின் பின்னால் யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் அதிபர் என்ற ரீதியில் அன்னையின் பெயரை நல்ல விதத்தில் மேலும் ஒளிவிடச் செய்வதும் பெருமையாக இருக்கிறது.

கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்புக்கிளைத் தலைவர் என்ற ரீதியில் மனம் திறக்கவேண்டிய கட்டாயமும் எனக்குண்டு. மனிதநேயமான அணுகுமுறையுடன் கூடிய உங்கள் பண்பு, பார்த்தவுடன் கவரும் பணிவான முகவசீகரம், சுயநலமற்ற வாழ்க்கையைத் தெரிவு செய்து, தொண்டு செய்து வரும் பண்பு யாருக்கு வரும்? எங்கள் கல்லூரி தங்களால் பிரகாசித்தது மிக மிக உண்மை. ஆசிரியராக, உப அதிபராக, அதிபராக, கடந்தகால சிரமங்களால், மாணவர் வரவு வசதிகள், பௌதீக நிலை சீரழிந்த காலத்தில் தூணாக நின்று தாங்கிய பெருமகன் வரிசையில் உங்கள் இடம் முக்கியம் வாய்ந்தது.

இலங்கையில் ஏன்! உலகின் பல பாகங்களில் வாழும் தமிழ் வாழ் மக்களின் மிக மிக அறிமுகமான, பெரிய மனம், இரக்க சுபாவம், சீரான வாழ்க்கை முறை கொண்ட நீங்கள் உங்களது காலத்திற்கு முன்பதாக ஓய்வு பெறுவது எம்மனதில் ஒரு வருடலை ஏற்படுத்துவது உண்மை. உங்கள் பணிகள் பரந்தளவிலானது. பலபேர் பலனடைகிறார்கள், அனைவரதும் உள்ளார்ந்த ஆசீர்வாதங்கள் உங்களை நிரூபித்து வாழ வைக்கும் என்பதில் ஐயமில்லை. கல்லூரி இருக்கும் வரை தங்கள் நாமம் நிலைக்கும் எனக் கூறி மகிழ்வதோடு எங்கள் பழைய மாணவர் சங்கத்திற்கு நீங்கள் நல்கிய ஒத்துழைப்புகளுக்கும் நன்றி கூறுகிறேன்.

**எஸ். பத்மநாதன்**

தலைவர்,

பழைய மாணவர் சங்கம் – கொழும்பு.

# Message of felicitation from the President Skandavarodaya College Welfare Association – Colombo

It is indeed a great pleasure and privilege for me to send this message of felicitation on behalf of our welfare association to the magazine "The Skanda " to be published by Skandavarodaya College to felicitate Dr. Aru Thirumurugan's farewell.

Skanda is an Institution located in a humble, rural background in a small village Kandarodai, which is historically popular. It provided the opportunity to display the hidden talents that were hitherto deprived due to economic factors. Undoubtedly Skanda brought not only fame to the village, but prosperity to families through professional achievements to their children in all spheres of life, who are now worthy Citizens round the globe including Sri Lanka. As old students we express our sincere gratitude to the great services of our eminent personality – the founder – Mr. Kandiah Upathiyayar, who ventured hard to establish an esteemed institution with others and also the manager, Dr. P. S. Subramaniam who guided financially for a long period.

Skanda started to escalate higher and higher academically, as well as in extracurricular activities from 1944 when Orator Subramaniam assumed duties as Principal, and Mr. V. Sivasubramaniam as Vice Principal. The period from 1952 – 1969 is crowned as the "Golden era " of Skanda and we old students proudly remember with gratitude our Orator, Mr. C. Subramaniam, Vicer Mr.V. Sivasubramaniam, Mr. S. Sivakumaran and all staff who sacrificed day and night to achieve the goal.

After successive principals, when Mr. Sivaji assumed as the Principal in 1997, Mr. Aruthirumurugan was appointed as Vice Principal. Situation in Sri Lanka was not normal and under crucial circumstances they struggled hard to run the college. After the retirement of Mr. Sivaji, Mr. Aruthirumurugan was made the Principal.

Mr. Aruthirumurugan joined Skanda as an Assistant teacher, and then Vice Principal and his carrier culminated as the Principal of Skanda. As a teacher, he won the admiration of the students and his collegues. He helped the students in various ways. Mr. Aruthirumurugan dedicated himself honestly

and sincerely, doing his level best to bring back Skanda to its past glory. He managed the college with the order of spirituality and culture. His involvements in so many leading organizations in the peninsula bears ample testimony to his versatile personality. His religious and spiritual and social activities are known throughout the world. During his tenure of office as principal our college was included in the " Isuru Scheme " and under the above scheme at present an attractive 3 storey building has been put up for a variety of purposes. This building will remain as a monument to mark Thirumurugan's useful services at Skanda. Now the Principal is retiring after giving a new outlook to the college for the changing demands in a challenging society. After retirement let him spend his time on social and humanitarian activities for which he is talented and capable.

As Skandavarodayans we wish him good luck in all his Endeavours and may he live long in good health and prosperity to continue his useful services to the benefit of mankind.

**M. Jeyapragash**

*President,*

*SkandaVarodaya College Welfare Association,*

*Colombo*

# சமூகப் பணிக்காக மலர்ந்த செம்மல்

அன்பும் பண்பும் நிறைந்த கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் அதிபர் பதவியை விட்டுப் பிரியும் இந்த வேளையில் அவரைப்பற்றி நான் அறிந்த சில முக்கிய விடயங்களை உங்களுடன் பகிர்ந்துகொள்ள ஆசைப்படுகிறேன். பல ஆண்டுகள் அவருடன் நெருங்கிப் பழகிய நண்பர்களுள் நானும் ஒருவன். அவருடைய பேச்சுத் திறமையில் மயங்கிய நான் அவர் ஸ்கந்தாவின் உப அதிபர் என்று கேள்விப் பட்டதும் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைந்தேன். அவரை எப்படியாவது சந்திக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் தோன்றியது. 2002ம் ஆண்டு ஆடி மாதம் அவரைச் சந்தித்தபொழுது அவருடைய அடக்கமும் அறிவும் நிறைந்த வார்த்தைகளால் மேலும் ஈர்க்கப்பட்டேன்.

அதிபராகக் கடமை புரிய வந்த சில ஆண்டுகளிலே பழைய கட்டடங்களைக் கொண்ட ஸ்கந்தாவை பல புதிய மேல்மாடி கட்டடங்களுடன் உயர்நிலைக்குக் கொண்டு வந்தமை அவருடைய திறமைக்கும் விடாமுயற்சிக்கும் ஒரு எடுத்துக்காட்டு. மாணவர்கள் பாடசாலையை விட்டு வெளியேறும் போது வெறும் புத்தகக் கல்வியுடன் வெளியேறாமல் பரிபூரண அறிவை அவர்கட்குக் கொடுக்கும் வண்ணம் விளையாட்டுத்துறை, இயல், இசை, நாடகங்கள் போன்ற விடயங்களை ஊக்குவித்து அவர்கள் முழு மனிதர்களாக வர அரும்பாடுபட்டு வெற்றியும் அடைந்தார். கல்லூரி அதிபர் பதவியை வகிப்பதற்குத் தகுதியானவர்கள் பலர் உள்ளனர். ஆனால் தன்னை சமூகத் தொண்டுக்கே அர்ப்பணித்த இவர் போன்ற மனிதரை இன்று காண்பது அரிது. ஆகவே சமூகப் பணியையே இலட்சியமாகக் கொண்ட ஆறு. திருமுருகனை மனப்பூர்வமாக வாழ்த்தி மன மகிழ்ச்சியுடன் விடை பெறுவோம்.

**கி. பாலசுப்பிரமணியம்**
தலைவர்,
அமெரிக்க ஸ்கந்தா பழைய மாணவர் சங்கம்,
புளோறிடா,
அமெரிக்கா.

# வாழ்த்துச் செய்தி

ஸ்கந்தா அன்னையின் பழைய மாணவனாகிய நான் எப்போதும் கல்லூரியுடன் தொடர்புகொண்டு ஒத்துழைத்து வந்துள்ளேன். கடந்த ஆண்டு நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பரிசளிப்புப் பேருரை ஆற்றிய சம்பவம் இப்போதும் பசுமையாக நினைவில் உள்ளது.

ஸ்கந்தாவின் முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் நேரில் கண்டு அறிந்து கொள்ள எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. அதிபர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் லண்டனுக்கு வரும்போதெல்லாம் என்னைச் சந்திப்பது, எனது கல்லூரியுடனான தொடர்பை வலுப்படுத்த உதவியது. புதிய அதிபருக்கும் என்னாலான ஒத்துழைப்பைத் தரத் தயாராக இருக்கிறேன்.

**பேராசிரியர் P. புவனராஜன்**

தலைவர்,

லண்டன் – ஸ்கந்தா பழைய மாணவர் சங்கம்.

# வாழ்த்துச் செய்தி



எமது ஸ்கந்தாவில் அதிபராயிருந்து இளைப்பாறும் எங்கள் அதிபர் திரு. ஆறு.திருமுருகனுக்கு கனடா பழைய மாணவர் சங்கம் மனமார்ந்த ஆசிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றது. அதிபர் கனடா விஜயம் செய்த போது எங்கள் சங்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு பாடசாலைக்குத் தேவையான அடிப்படை நிதி உதவியையும், வருடா வருடம் பரிசளிப்பு விழாவிற்குத் தேவையான செலவுகளையும் எங்கள் கனடா சங்கம் அனுப்பி வைக்கும் ஒழுங்குகளை ஆரம்பித்து வைத்தார்.

இவரது சேவைக்காலத்தில் கல்லூரியின் வளர்ச்சிக்குப் பெரும் பணியாற்றினார். இவரைத் தொடர்ந்து பணியாற்றவரும் அதிபரும் எங்கள் கல்லூரியின் பெயருக்கும், புகழுக்கும், வளர்ச்சிக்கும் பாத்திரமாக இருக்கவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்தித்து இருவருக்கும் நல்லாசி கூறுகிறோம்.

வணக்கம்.

**விமலா மகேந்திரன்**
தலைவர்,
ஸ்கந்தா பழைய மாணவர் சங்கம்,
கனடா.

# Message of Felicitation

It gives me great pleasure in extending this message of felicitation in the souvenir to be published to commemorate the services of Mr. Aru. Thirumurugan, the Principal of Skandavarodaya College on his retirement on August 01, 2012.

I have known Mr. Thirumurugan personally well. His dedication to Skanda was unquestionable. During turbulent times in the North he was instrumental in obtaining necessary financial support from old students living abroad for the day to day running of the school and providing scholarship to deserving poor students. He used to be in constant touch with me by way of letters or by telephone calls keeping me informed of requirements of the school regularly.

His services to the community extended beyond his duties as Principal of Skanda. As religious advocate he took over from late Ms. Thangamma Appakuddy and travelled widely abroad making religious lectures. He also heads orphanages helping the underprivileged.

It is indeed a great loss to Skanda as he retires from educational service. But we are sure his services to the community will continue unabated in the field of religion and helping poor.

On behalf of the Skanda community living in Canada and on my own behalf, I wish Mr. Aru. Thirumurugan a happy retired life, continued good health and success in all his endeavours.

**Nada G. Nadarajah**
Patron
Skandavarodaya College,
Old Students Association – Canada.

# சாதனையார் கலாநிதி வாழ்க! வளர்க!!

ஒரு பாடசாலையின் முன்னேற்றத்திற்கு மூல காரணமாக இருப்பவர் கல்லூரியின் தலைவராகத் திகழும் அதிபராவார். அந்த வகையில் எமது ஸ்கந்தா அன்னையின் வரலாற்றில் தடம்பதித்த அதிபர்கள் பலர். அவர்களுள் முக்கிய பங்களிப்பாற்றியவர்களாகக் கருதப்படுபவர்கள் திரு. ஒறேற்றர் சுப்பிரமணியம், வைசர் சிவசுப்பிரமணியம், திரு. சிவாஜி போன்றவர்கள். அந்த வரிசையில் தற்போது இந்தப் பாடசாலைக்கு அளப்பரிய சேவையாற்றியவராக கலாநிதி திரு. ஆறு திருமுருகன் விளங்குவதை மறுக்கவோ, மறக்கவோ முடியாது.

இவர் இப்பாடசாலையின் ஆசிரியராக, உப அதிபராக, அதிபராக கடந்த 19 வருடங்களாக பல துறையில் பாடசாலையின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டுள்ளார். அவற்றின் நினைவுச்சின்னமாக அவர் விட்டுச் செல்பவை பல. அவற்றுள் மிகச் சிறப்பானதாகத் திகழ்வது பாடசாலையின் புதிய மூன்று அடுக்கு நிர்வாகக் கட்டடமாகும். இனிவரும் சந்ததியினர்க்காக இதை உருவாக்கியமை ஓர் முக்கிய கைங்கரியமாகும்.

அதுமாத்திரமல்ல, இந்தப் பாடசாலையின் நூற்றாண்டு நிறைவில் ஓர் முத்திரை வெளியிடவேண்டும் என்ற எண்ணம், 1994ஆம் ஆண்டு அரங்கேற முடியாத நிலையில், பழைய மாணவர்களாகிய எங்களில் சிலர் 2012இல் இந்த நிகழ்வைச் செய்து முடிப்பதற்கு எண்ணியிருந்தபோது, எமது முத்திரை வெளியீட்டுக் குழுவின் போசகராகப் பொறுப்பேற்று வேண்டிய ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கியிருந்தார். இந்த முத்திரை வெளியீட்டு விழாவை நாம் கொழும்பில் அரங்கேற்றிய போது, அதிபர் என்ற முறையில் அவர் ஆசிரியர்கள், மாணவர்கள், நாட்டியக் குழுவினர் போன்றோரை அழைத்துவந்து உன்னதமான ஒரு விழாவினை நாம் கொழும்பில் நடாத்துவதற்கு மூல காரணமாய் இருந்தார் என்பதை இச் சந்தர்ப்பத்தில் தெரிவிப்பதோடு, இக் குழுவின் தலைவர் என்ற முறையில் நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். யாழ்ப்பாண பாடசாலை ஒன்று முன்னொருபோதும் நடத்தியிராத வகையில் பலரும் வியக்கும் வண்ணம், பத்திரிகைகள் பலவற்றில் முக்கிய நிகழ்ச்சியாக இடம்பிடித்தமைக்கு, இவர் காரணகர்த்தாவாக இருந்தார் என்பதனைப் பலரும் பாராட்டினார்கள்.

இப்படியான ஒரு பல்துறை செயல்வீரர், தனது பாடசாலைச் சேவையிலிருந்து விடைபெற்று, பரந்த சமுதாய சேவையில் முற்றுமுழுதாக ஈடுபட்ட தன்னை வளர்த்து, பல சாதனைகள் புரிய இறைவன் திருவருள் புரிவாராக என வாழ்த்துகிறேன்.

**ந. கருணை ஆனந்தன்**
தலைவர்,
ஸ்கந்தா முத்திரை வெளியீட்டுக் குழு.
கொழும்பு ஸ்கந்தா பழைய மாணவர் சங்க முன்னாள் தலைவர்

# வாழ்த்துச் செய்தி



எமது கல்லூரி வரலாற்றில் இரண்டு தசாப்தகாலம் சிறந்த பட்டதாரி ஆசிரியராகவும், உதவி அதிபராகவும், சிறந்த கல்லூரி முதல்வராகவும் சேவையாற்றிக் கொண்டிருக்கும் செஞ்சொற் செல்வர், ஸ்கந்தவரோதயன் கலாநிதி திரு. ஆறு. திருமுருகன் இனிவருங் காலங்களில் சமய, சமூக சேவைகளுக்காக தனது நேரத்தை முழுமையாக அர்ப்பணிக்கும் நோக்குடன் 31.07.2012இல் அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

ஸ்கந்தப் பெருமான் கோவிலும், வானளாவும் தோற்றத்துடன் நிமிர்ந்து நிற்கும் இசுறு மூன்று மாடிக் கட்டடமும் ஏனைய மாடிக் கட்டடங்களும் இவர் பாடசாலைக்கு ஆற்றிய ஆற்றல்மிகுந்த அளப்பரிய சேவைக்குச் சான்று பகர்கின்றன. இவரது இதய சுத்தியும், தூரதிருஷ்டியான சிந்தனையும், திட்டமிடல் உத்தியும் எமது பாடசாலை வளாகத்தின் தோற்றத்தை நாட்டிலுள்ள தரம் வாய்ந்த பாடசாலைகளின் மட்டத்திற்கு உயர்த்தியுள்ளன.

இன்று பெரு வளர்ச்சி கண்டு ஸ்கந்தாவிற்கு ஊட்டல் பாடசாலையாக விளங்கும் ஸ்கந்தா ஆரம்ப பிரிவின் ஸ்தாபகர்களில் ஒருவரான இவர் தனித்துவமான ஒரு வளாகமாக அதை உருவாக்கி, ஸ்கந்தா ஆரம்ப பிரிவு, ஸ்கந்தரோதயக் கல்லூரி என முழுமையான இரு வளாகங்கள் எதிர்காலத்தில் நிலைத்து நிற்பதற்கு வழிவகுத்துள்ளார். இவரது சேவைக்காலம் மிகவும் பெறுமதி மிக்க பொற்காலம் எனலாம். உரிய காலத்திற்கு முன்பு சேவையிலிருந்து ஓய்வுபெற்றாலும் எமது பாடசாலையிலிருந்தும் அதன் முன்னேற்றத்திலிருந்தும் அவரது மனம் விலகிச் செல்லா என்பது நிச்சயம் முழுமையான சமய, சமூக சேவைகளுக்காக ஓய்வு பெறும் கலாநிதி அவர்களுக்கு பழைய மாணவர் தாய்ச் சங்கத்தின் சார்பாக மனப்பூர்வமான நன்றியும் வாழ்த்துக்களும் பாராட்டும் உரித்தாகுக. புகழ்மிக்க சிறந்த சமூக, இலக்கிய, சமய சொற்பொழிவுகளால் உலகினைக் கவர்ந்து மேலும் சமூக, சமய, கல்விச் செயற்பாடுகளுக்கு வேண்டிய வளம் குவித்து தீர்க்க ஆயுளுடன் நீண்டகாலம் சேவையாற்றுவதற்கு எல்லாம்வல்ல ஸ்கந்தப் பெருமான் துணைவேண்டி வாழ்த்தி வணங்குகின்றோம்.

**த. தேவராஜன்**
செயலாளர்,
பழைய மாணவ தாய்ச் சங்கம்.

# கல்லூரியின் முன்னேற்றத்துக்கு தனது பணத்தை வாரி வழங்கிய அதிபர்



எமது ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் செயற்திறன்மிக்க அதிபர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் 01.08.2012 அன்று ஓய்வுபெறுவதையிட்டு அவரது சேவைக் காலத்தில் கல்லூரியின் பதிவுகளைத் தாங்கியதாக **THE SKANDA** என்னும் மலர் வெளிவருவதையிட்டு கல்லூரியின் மைந்தர்களாகிய நாம் பெருமகிழ்ச்சியடைகிறோம். இம்மலர் எதிர்காலச் சந்ததியினர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்கள் பற்றியும் அவர் கல்லூரிக்கும் சமூகத்திற்கும் ஆற்றிய அளப்பரிய சேவைகளைப் பற்றியும் அறிய வாய்ப்பாக அமையும் எனக் கருதுகிறேன்.

1993ம் ஆண்டு எங்கள் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றியவரும் இன்றைய வடமாகாண கல்விப் பணிப்பாளருமாகிய உயர்திரு. ப. விக்கினேஸ்வரன் அவர்கள் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களின் கற்பித்தல் திறமையையும் சேவை மனப்பான்மையையும் நன்கு அறிந்து தனது செல்வாக்கினால் வேறு பாடசாலையிலிருந்து எமது கல்லூரிக்கு ஆசிரியராகக் கொண்டுவந்து சேர்த்தார். அப்போது நான் கல்லூரி அபிவிருத்திச் சங்க செயலாளராக இருந்தபடியினாலும், பின்பு பழைய மாணவர் சங்கச் செயலாளராகக் கடமையாற்றியபடியினாலும் இவர் கல்லூரிக்குச் செய்த தொண்டுகளையும், கல்லூரியின் வளங்களைப் பேணிப் பாதுகாத்ததையும், கற்பித்தலில் சிறந்த பெறுபேறுகளைப் பெற உதவியதையும் நன்கு அறிவேன்.

ஸ்கந்தாவின் தெய்வம் முருகன். ஸ்தாபகர் கந்தையா வள்ளல், முன்னாள் முகாமையாளர் சுப்பிரமணியம் (P.S) மற்றும் புகழ்பூத்த அதிபர் ஒறேற்றர் சுப்பிரமணியம் மற்றும் அதிபர் வைசர் சுப்பிரமணியம் எல்லோரும் முருக நாமத்தைக் கொண்டவர்கள். அந்த வகையில் ஸ்கந்தாவைப் பலதுறைகளிலும் அபிவிருத்தி செய்ய முருகனால் எமது கல்லூரிக்குக் கிடைத்த "தெய்வப் பிறவி" கலாநிதி. ஆறு. திருமுருகன் எனப் பலரும் சொல்லக் கேள்விப்பட்டுள்ளேன். இவர் எமது கல்லூரிக்கு ஆசிரியராக வந்து முதன் முதலாக கல்லூரி முகப்பில் கல்வியின் தெய்வம் சரஸ்வதிக்கு சிலை அமைத்து அதனைத் தொடர்ந்து ஸ்தாபகர் கந்தையா உபாத்தியார் மற்றும் முன்னாள் முகாமையாளர் சுப்பிரமணியம் (P.S) ஆகியோருக்கு சிலை அமைத்து வருடா வருடம் நடைபெறும் பரிசளிப்பு விழாவின்போது இச்சிலைகளுக்கு மாலை அணிவித்து நினைவுகூர்ந்து மாணவர்கள் இவர்களைப்பற்றி அறிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியுள்ளார்.

கலாநிதி ஆறு. திருமுருகன் கல்லூரிக்கும் மாணவர்களுக்கும் ஆற்றிய சேவைகள் பற்றி விபரமாக எழுதுவதானால் ஒரு புத்தகமே எழுதலாம். எனினும் ஒரு சில முக்கிய விடயங்களை மாத்திரம் குறிப்பிட விரும்புகிறேன். எமது கல்லூரியின் பல அதிபர்கள், பழைய மாணவர் சங்கங்கள் ஸ்கந்தாவை மேல் நிலைக்குக் கொண்டு வர ஆரம்பப் பாடசாலை உருவாக்க வேண்டும் என பல வருடங்களாக முயன்றும் கைகூடவில்லை. எனினும் அதிபர் திரு.க. சிவாஜி அதிபராக இருந்தபொழுது கலாநிதி ஆறு. திருமுகன் கொழும்பு சென்று உரியவர்களுடன் கலந்துரையாடி மிகக் குறுகிய காலத்தில் அதற்கான அனுமதியைப் பெற்று ஆரம்பப் பாடசாலையை உருவாக்கி இன்று அப்பாடசாலை பலரைப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையச் செய்து வீறுநடை போடுகிறது. இப்பாடசாலையின் "ஸ்தாபகர்" என வர்ணிக்கக்கூடியவர் ஆறு. திருமுருகன் என்பது யாவரும் அறிந்ததே.

கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் தன் இன்முகத்தாலும் இன் சொல்லாலும் எவரையும் தன்வசப்படுத்தக்கூடியவர். இவர் சொல்வதை அல்லது கோருவதை எவரும் தட்டிக்கழிக்க மாட்டார்கள். ஆன்மீகச் சொற்பொழிவுகளுக்கு வெளிநாடுகள் செல்லும்போது ஸ்கந்தா பழைய மாணவர்களைச் சந்தித்ததன் பலனாக எமது கல்லூரிக்கு சுற்றுமதில் கட்டப்பட்டுள்ளது, தகவல் தொழில்நுட்பம் படிப்பதற்கு பல கம்பியூட்டர் வாங்கப்பட்டுள்ளது, நன்னீர் குடிதண்ணீர் வசதி, ஒலிபெருக்கி, போட்டோ பிரதி இயந்திரம் இன்னும் எத்தனையோ விடயங்கள் இவரின் முயற்சியினால் கிடைக்கப் பெற்றுள்ளன. "கோவில் இல்லாத இடத்தில் குடியிருக்கவேண்டாம்" என்பது முதுமொழி. எமது கல்லூரிக்கு ஒரு ஸ்கந்தன் திருக்கோவில் இவரின் முயற்சியினால் உருவாக்கப்பட்டு கல்லூரியில் நடக்கும் சகல முக்கிய நிகழ்வின்போதும் ஸ்கந்த முருகனை வணங்கியே நிகழ்வுகள் ஆரம்பிக்கப்படுகிறது. கல்லூரியின் பிரதான மண்டபம் சேதடைந்து விழும் நிலையில் இருந்தபடியினால் இதனை முற்றாக அகற்றி அதே இடத்தில் இன்று மூன்றுமாடிக் கட்டடம் அமைக்கப்பட்டது கல்லூரிக்கு மெருகூட்டுகிறது. இன்றைய காலகட்டத்தில் கல்லூரியை நிர்வகிப்பதும் தரம் குறையாது பாதுகாப்பதற்கும் நிதி தேவை. இதற்கு போதிய நிதிவசதி எமது கல்லூரியிலில்லை. அந்த வகையில் எத்தனையோ கல்லூரி விடயங்களுக்கு அதிபர் திருமுருகன் தனது சொந்தப் பணத்தை வாரிவழங்கி கல்லூரியின் கௌரவத்தை நிலைநாட்டியதை மறக்கமுடியாது.

கற்பித்தலில் இவரிற்கு நிகர் இவரே தான். க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு இவர் கற்பித்த பாடத்தில் சகல மாணவர்களும் அதிவிசேட சித்திபெற்றது இன்றும் பசுமையான நினைவிலுள்ளது. இவரின் ஆசிரிய திறமையைக் கௌரவித்து கல்வித் திணைக்களம் பலமுறை "நல்லாசிரியர்" விருது வழங்கியது குறிப்பிடத்தக்கதாகும்.

ஸ்தாபகர் கந்தையா உபாத்தியாயரின் கனவுகளை அவரின் கொள்கைகளைப் பின்பற்றி செயற்படுத்தியவர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களே. இன்று ஸ்தாபகர்

கந்தையா வள்ளல் இருப்பாரானால் கல்லூரியை வலம்வந்து பார்த்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்திருப்பார். இன்றைய காலத்தில் ஆசிரியருக்கும் மாணவருக்கும் வித்தியாசம் தெரியாது. ஆனால் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் முறையான தேசிய உட அணிந்து ஒரு ஆசிரியர் என்தைத் தெளிவுபடுத்தி ஆளுமைமிக்க அதிபராகத் திகழ்ந்தார்.

கலாநிதி ஆறு. திருமுருகன் எமது கல்லூரிக்கு ஆற்றிய சேவைகளை நாம் என்றும் மறக்கமாட்டோம். அவர் ஓய்வு பெறுவது எமது கல்லூரிக்கு ஈடு செய்யமுடியாததொன்றாகும். அவர் ஓய்வு பெற்றாலும் அவர் முயற்சியினால் உருவாகிய கட்டடங்கள் ஆலயம், ஆரம்பப் பாடசாலை மூலம் அவர் என்றும் எங்களோடு தான் இருப்பார். அவரின் சேவையைக் கௌரவிக்கும் முகமாக அவரின் முயற்சியினால் உருவாக்கப்பட்ட மண்டபங்களில் ஒன்று கலாநிதி ஆறு. திருமுருகன் மண்டபம் எனப் பெயர் சூட்ட கல்லூரிச் சமூகம் நடவடிக்கை எடுப்பது சாலச் சிறந்ததாகும்.

கலாநிதி ஆறு. திருமுருகன் ஓய்வுபெறும் வயது இன்னும் பல வருடங்கள் இருந்தும் அவர் ஒட்டுமொத்த மக்களுக்கு குறிப்பாகத் தமிழுக்கும் சைவத்திற்கும் மற்றும் வலுவிழந்தோர், முதியோர், விழிப்புலன் இழந்தோர் ஆகியோருக்கு முழுநேரமாக உழைப்பதற்குத் தன்னை அர்ப்பணித்துள்ளார். ஆகவே கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களே! சென்று வாருங்கள்! உங்கள் மனிதநேயப் பணி சிறக்கத் தங்களுக்கு ஸ்கந்தா முருகன் சுகதேக நீடித்த ஆயுள் வழங்க இருகரம் கூப்பி முருகனைப் பிரார்த்திக்கிறோம்.

வாழ்க கலாநிதி ஆறு. திருமுருகன்!
சிறக்க அவரின் பணி!!

**ஆ.சி. கணேசவேல்** J.P. (whole Island)
முன்னாள் செயலாளர்,
கல்லூரி அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
உறுப்பினர்,
பிரதேச சபை, மானிப்பாய்.
ஓய்வுபெற்ற உப தபால் அதிபர்,
கந்தரோடை.

# கல்லூரியின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்த உத்தமர்



எனது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் ஓய்வுபெறவிருக்கின்றார் என்ற விடயம் கேட்டு நான் ஒரு நிமிடம் அதிர்ந்துபோனேன். எமது பாடசாலையின் வளர்ச்சிக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து பல்வேறுபட்ட அபிவிருத்திப் பணிகளை அவர் முன்னெடுத்து வந்தார். பழைய மாணவர்களாகிய எம் எல்லோருடனும் அன்புரிமையுடன் நல்ல ஒரு நண்பராகப் பழகி எமது ஆலோசனைகளைப் பெற்றே பாடசாலை தொடர்பில் எந்த முடிவையும் எடுப்பார். மற்றவர்களை மதிக்கின்ற சுபாவம் பிறப்பிலிருந்தே கிடைக்கப் பெற்றவர். இவர்களது குடும்பத்தார் அனைவரையும் நான் சிறுவயது முதல் நன்கு அறிவேன். அவர்கள் அனைவரும் சைவ ஆசாரசீலர்களாக வாழ்ந்தவர்கள். அவர்களது இல்லத்துக்கு யார் சென்றாலும், அவர்களை இன்முகத்தோடு வரவேற்று அவர்களுக்கு விருந்தளித்து மகிழ்பவர்கள். நட்பும் தயையும் கொடையும் பிறவிக்குணம்" என்று ஔவை குறிப்பிட்டமை போன்று இவை இவர்களுக்கும் பிறப்பிலிருந்து குலஞ்சுரக்கும் ஒழுக்கங்களாக வந்துள்ளன.

மிகவும் நலிந்த நிலையிலுள்ள எமது பாடசாலையை முன்னாள் அதிபர் திருமிகு க.சிவாஜி அவர்களும் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களும் பெரும் சிரமங்களுக்கு முகம்கொடுத்து இவ்வளவுக்கு வளர்த்துள்ளார்கள். இன்று பாடசாலை அபிவிருத்தி என்ற வகையில் சகல வசதிகளும் பெற்றுப் புதுப்பொலிவுடன் காட்சியளிக்கின்றது. கல்வியில் பாடசாலையை முன்னேற்றுவதற்கென இவர்கள் இருவரும் மிகவும் சிரமப்பட்டு பல்வேறு இடைஞ்சல்களுக்கு மத்தியில் ஆரம்பப் பாடசாலையை உருவாக்கினார்கள். இன்று அந்தப் பாடசாலை உடுவில் கல்வி வலயத்தில் முன்னணிப் பாடசாலைகளுள் ஒன்றாகத் திகழ்கின்றது. இந்த மாணவர்கள் ஆரம்பக் கல்வி முடித்து உயர் கல்விக்கு எமது பாடசாலைக்கு வருகின்றபோது – அவர்கள் சாதாரணதர, உயர்தரங்களை அடைகின்றபோது எமது பாடசாலையும் வலிகாமம் கல்வி வலயத்திலே சிறந்த ஒரு பாடசாலையாகத் திகழும் என்பதே இவர்களது பெருநோக்காகும். அறுவடையை தான் செய்யாமல் அதன் பயனை – புகழை – தான் அடையாமல் விட்டுச் செல்கின்றார் என்பது எமக்கு மிக மனவருத்ததைத் தருகின்றது.


பல சமய நிறுவனங்களை நடத்துகின்ற – பல சமூகப் பணிகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்த ஒருவர் எமது பாடசாலைக்கு அதிபராகக் கிடைத்தமையால் ஸ்கந்தா பெருமையடைகின்றது. இவர் ஒரு சிறந்த ஆளுமை படைத்தவர். ஸ்கந்தாவின் அதிபர்களாகக் கடமையாற்றியவர்கள் மிகவும் புகழ்

பூத்தவர்களே! ஒறேற்றர் சுப்பிரமணியம், வைசர் சிவசுப்பிரமணியம், ஏகாம்பரம், நாகநாதன், சிவாஜி போன்றோர் குடாநாடு முழுவதும் புகழ்பரப்பிய ஸ்கந்தாவின் நல் அதிபர்கள். ஆனால் இவர்கள் எல்லோருக்கும் சற்று உயர்ந்தவராக உலகமெல்லாம் புகழ் பரப்பிய ஓர் ஆன்மீக வாதியாக, சமூக சேவகனாக, கலாநிதியாக ஆறு.திருமுருகன் திகழ்கின்றார். ஒரு பாடசாலையில் அதிபர் பதவி கிடைத்தால் அந்தப் பாடசாலை மூலம் அந்த அதிபருக்குப் பெருமை கிடைக்கின்றது. ஆனால், எமது பாடசாலையில் இவர் அதிபராகக் கடமையாற்றியமையால் ஸ்கந்தாவின் பெருமை மேலும் பன்மடங்காகின்றது.

இவர் "வாழும்போதே போற்றப்படவேண்டியவர்". தன்ககுச் சேவை செய்த பெருமகனை ஸ்கந்தா சமூகம் கௌரவிப்பதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த நூல் சிறப்புற அமைய எல்லாம்வல்ல இறைவனை வணங்கி வாழ்த்துகின்றேன்.

**லயன் செ. மகாதேவா** (J.P.)
பொருளாளர்,
ஸ்கந்தா பழைய மாணவர் தாய்ச் சங்கம்.

# பாராட்டி வாழ்த்துகிறேன்



கலாநிதி ஆறு. திருமுருகன் (அதிபர்) அவர்கள் ஆசிரியர் குழாம் மத்தியில் அன்புடனும், பாசத்துடனும், கண்ணியத்துடனும் பழகி பெருமதிப்பைப் பெற்றவர். மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு, ஆளுமை அனைத்திற்கும் களமமைத்துக் கொடுத்து மாணவர்கள் மத்தியிலும் பெருமதிப்பைப் பெற்றவர். கல்லூரியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர். பாடசாலையின் பண்புசார் விருத்தியிலே கூடிய அக்கறையுடன் நேரம், காலம் பாராது சேவை ஆற்றி மக்கள் மத்தியிலும், வெளிநாடுகளிலும் பெருமதிப்பைப் பெற்றவர். அவரின் சேவைகளை மனப்பூர்வமாகப் பாராட்டி வாழ்த்துகிறேன். அவர் தனது வாண்மையை உயர்த்திக் கொள்ளவும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இனிவரும் காலங்களிலும் பாடசாலையின் அபிவிருத்தியிலும் சகலவிதமான செயற்பாடுகளிலும் தமது பூரண ஒத்துழைப்பையும் வழங்குமாறு கேட்டுக்கொண்டு அபிவிருத்திச் சங்க சார்பிலும் மனமார பாராட்டி வாழ்த்துகின்றேன்.

**மா. ஜோதி மார்க்கண்டு**
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

# வளரிளமதியெனவே வாழிய!

அதிபர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களை ஓரளவே அறிவேன். ஆனால் ஆசிரியர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்களை நன்கு அறிவேன்.

"கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்"

எனும் வள்ளுவர் வாக்குக்கிணங்க அவர் செஞ்சொற் செல்வரே தாம்.

"பணிவுடையன் இன்சொலனாதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற".

எனும் பொய்யாமொழிக்கிணங்கப் பணிவையும் இன்சொல்லையும் அணியாகக் கொண்டவர். ஸ்கந்தாவில் முதன் முறையாகச் சிறுவர்களுக்கென உரையாற்றியபோது அவர் காக்காக் கதை கூற அதை வாய் பிளந்து நான் கேட்டுக் கொண்டிருந்ததை இன்னும் மறக்கவில்லை. அன்றிலிருந்து இயன்றபோதெல்லாம் அவருடைய சொற்பொழிவுகளைக் கோயில்களிலும், விழாக்களிலும், ஸ்கந்தாவிலும் கேட்டு மகிழ்ந்து வியந்திருக்கிறேன். அவரது அறிவின் பெருமைக்குக் கலாநிதிப் பட்டம் சாலவும் பொருந்துமென எண்ணி எண்ணி மகிழ்கிறேன். பலரையும் போல ஆசிரியராய்த் தொடங்கி இன்று பட்டங்கள் பல பெற்று கலாநிதியாய் ஏற்கப்பட்டு அதிபராய் வளர்ச்சி கண்ட நிலையிலும் அவருடைய பணிவில் இறக்கம் ஏற்பட்டதில்லை. இந்தப் பணிவும் அவருடைய பல நற்குணங்களும் அவருக்கு அன்பாலும் பண்பாலும் அறிவாலும் வயதாலும் முதிர்ந்த பல பெருமக்களின் ஆசியைப் பெற்றுத் தந்துள்ளன. அதுமட்டுமல்ல, அவரிடம் கற்று உயர்வு பெற்ற மாணவர்களின் நன்றி எனும் வாழ்த்துக்கும் அவர் உரியவராகிறார். அவரிடம் உதவி பெற்ற பலரின் மனம் கனிந்த வாழ்த்துக்களும் என்றும் இவருக்குரியவை.


அதிபர் ஆறு.திருமுருகன் அவர்கள் ஸ்கந்தாவை விட்டு ஓய்வுபெற்று விலகிச் செல்கின்ற போதும் பொது வாழ்வை விட்டு ஓய்வுபெறப் போவதில்லை. சமூகத்துக்கும் சமயத்துக்குமான அவருடைய சேவை இன்னும் வளர்ச்சியடையும் என்பதில் சந்தேகமில்லை. இன்று ஸ்கந்தா சமூகம் நன்றியறிதலுடன் அவர் பணியை நினைவு கூர்ந்து சஞ்சிகையொன்றை வெளியிடுகிறது. பாராட்டத்தக்க இப்பணியையும் இதில் ஈடுபடுவோரையும் வாழ்த்தி மகிழ்கிறேன்.

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களின் நினைவு வரும்போதெல்லாம் என்மனம் அவரை வாழ்த்துவது வழக்கம். என் வாழ்த்தை வார்த்தைகளில் வெளிப்படுத்த வாய்ப்புத் தந்த இம்மலருக்கும் அதற்குப் பொறுப்பானவர்களுக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

"உறவென்றும் நீயே" என்னும் கல்லூரிக் கீதத்தின் வரியை நினைந்து "வாழிய வாழிய ஸ்கந்தவரோதயம் வளமலிந்தோங்கியே என்றும்" என எல்லோருடனும் சேர்ந்து நானும் வாழ்த்துகிறேன்.

**திருமதி வி. இலட்சுமணன்**
முன்னாள் பிரதி அதிபர்.

# நான் கண்ட நல்லாசான்
# கலாநிதி ஆறு. திருமுருகன்



"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு இலக்கணமாக வாழ்ந்து கொண்டிருப்பவர் எமது மதிப்பிற்குரிய பேராசான் கலாநிதி ஆறு. திருமுருகன் ஐயா அவர்கள். என்னை எனக்கறியவைத்து அவனியிலே என்னை மனிதராக வாழ வைத்து அன்னை, பிதா, குருவாகி நின்று ஐயமெல்லாம் போக்கியவர் எமது பேராசான் கலாநிதி ஆறு. திருமுருகன் ஐயா. ஒருவனது வாழ்வில் நல்ல எதிர்காலத்தை – ஒளிமயம் மிக்க வாழ்வை ஏற்படுத்துபவர்கள் தாரமும் குருவும். இதனாற்றான் "தாரமும் குருவும் தலைவிதிப் பயனே" என்று ஆன்றோர்கள் கூறியுள்ளனர். அந்த வகையில், ஆன்றோரின் வாக்கிற்கமைய இவை யாவும் அமைந்த நற்பேற்றை நான் பெற்றுள்ளேன்.

1995ஆம் ஆண்டு முதல் 1997ஆம் ஆண்டு வரையிலான இரண்டு வருட காலப்பகுதியில் ஸ்கந்தா அன்னையின் நல்லாசியுடன் எமது மதிப்புக்குரிய குருநாதர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஐயா அவர்களிடம் கல்வி கற்கின்ற பெரும் பாக்கியம் – பேறு – எனக்குக் கிடைத்தது. அவர் எமக்குக் கற்பிக்கும்போது அங்கு அவரிடம் ஒரு நல்லாசிரியருக்குரிய பண்பு காணப்படும். அவரது கற்பித்தல் திறமை (Art of teaching), வகுப்பில் மாணவர் அனைவரையும் கட்டுக்கோப்புக்குள் வைத்திருக்கும் திறன் – தலைமைத்துவப் பண்பு (Leadership) என்பன வேறு அவர் தனித்திறன்கள். ஒழுக்கம், நற்பண்பு என்பவற்றைப் போதிக்கும்போது அங்கு ஒரு சிறந்த தந்தையாக எம் அனைவரிடமும் கரிசனையுடனும் உரிமை எடுத்து எம்மைத் தண்டிப்பார். எம்மோடு கற்ற பல மாணவர்களைத் தனது மருதனார்மடம் இல்லத்துக்கு அழைத்து அங்கு அவர்களுக்கு உணவு முதலானவற்றை வழங்கிக் கற்பிப்பார். தன்னிடம் கல்வி கற்ற – கற்கின்ற எத்தனையோ ஏழை மாணவர்களுக்கு தனியார் கல்வி நிறுவனங்களில் மேலதிக வகுப்புகளுக்குச் செல்வதற்கு பண உதவியளித்துள்ளார் – தற்போதும் அளித்து வருகின்றார்.

இப்படியான ஒருவரை ஸ்கந்தா அன்னை பெற்றமை ஸ்கந்தா சமூகம் செய்த நற்றவமே! அவர் அங்கு ஆசிரியராகக் கற்பிக்கின்ற காலத்திலும் சரி, பின் உப அதிபராக, பிரதி அதிபராக விளங்கிய காலங்களிலும் சரி ஏன் தற்போது அதிபராகக் கடமையாற்றிய காலங்களிலும் கல்லூரியின் சகல நிகழ்வுகளுக்கும், கல்லூரியின் வளர்ச்சிக்கும் அவர் தனது சொந்தப் பணத்தில் செலவழித்தமை ஏராளம். நான் 1995ஆம் ஆண்டு முதல் இன்று வரை ஸ்கந்தா அன்னையுடன் தொடர்பில் உள்ளேன். அங்கு நடக்கின்ற சகல நிகழ்வுகளிலும் பங்கெடுக்கின்ற அரிய வாய்ப்பு கல்லூரிக் காலம் முடிந்தமை முதல் தற்போது வரை எனக்குக் கிடைத்துள்ளது. அதனால் அவர் கல்லூரிக்காற்றிய தியாகங்கள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும்.

இவர் ஸ்கந்தா அன்னையுடன் மட்டும் நின்றுவிடாது, ஆசிரியப் பணியைவிட, பல்வேறுபட்ட சமய, சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு சொல்லிலடங்கா சேவைகளை சைவமும் தமிழும் தளைக்கும் வண்ணம் ஆற்றிவருகின்றார். தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவராகவும், பிள்ளைகளால் கவனிப்பின்றி விடப்பட்ட வயது முதிர்ந்த பெற்றோர்களுக்கு இல்லமமைத்தும், மாற்று வலுவுள்ளோருக்கு பாடசாலை அமைத்துக் கல்வியறிவூட்டியும், அதைவிட ஆதி சங்கராச்சாரியார் போன்று ஈழமணித் திருநாட்டின் பல இடங்களிலும் பல மடங்களையும் அன்னசத்திரங்களையும் நிறுவி அளப்பரிய சேவையாற்றுகின்றார். இவ்வாறான ஒரு சமூகசேவகனை – ஒரு நல்ல நிர்வாகியை – சிறந்த ஆளுமை படைத்தவரை – அதிபராகக் கிடைக்கப் பெற்றமை ஸ்கந்தா செய்த – ஸ்கந்தா சமூகம் செய்த நற்றவமே! 'காய்த்த மரம் அதுமிக்க கல்லெறிவிழும்' என்று சித்தர்கள் கூறியமை போன்று இவருக்கு பல சமூக விரோதிகளால் அவ்வப்போது சிக்கல்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆயினும், அவர் அவை எவற்றையும் பொருட்படுத்தவில்லை.

சமய, சமூகப் பணிகளில் தன்னை முழுமையாக இணைத்துக் கொள்வதற்காக அதிபர் பதவியில் இருந்து இவர் ஓய்வுபெறுகின்றார். இவரது ஓய்வு ஸ்கந்தா சமூகத்துக்கு மிகவும் பேரிழப்பாயினும், குறுகிய நோக்கில் – சுயநலத்துடன் நாம் நோக்காது, இவரது ஓய்வால் எமது சைவமும் தமிழும் காக்கப்படும் என்பதனால் நாம் அவரது ஓய்வுக்காலம் சிறப்புற அமைய வாழ்த்துகின்றோம். ஸ்கந்தாவின் வரலாற்றிலே ஒரு கலாநிதி அதிபராக அலங்கரித்தமையை ஸ்கந்தா அன்னை ஆறு.திருமுருகன் ஐயா அவர்களினூடு பெற்றுள்ளது. இவர் அதிபராகவிருந்த இந்த 5 வருடக் காலப்பகுதியில் ஸ்கந்தாவின் தோற்றப் பொலிவை முற்றாக மாற்றியமைத்து சிறந்த அடுக்குமாடிக் கட்டடங்களுடன் – புதுப்பொலிவுடன் – சிறந்த அபிவிருத்தியடைந்த ஒரு பாடசாலையாக ஸ்கந்தா தற்போது திகழ்கின்றது. அவரது இந்த அளப்பரிய சேவைகள் ஸ்கந்தா வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டு ஆண்டாண்டு காலமாக நீடித்து நின்று நிலைக்கும்.

எப்படியும் வாழலாம் என்று வாழுகின்ற சமூகத்துக்கு 'இப்படித்தான் வாழவேண்டும்' என்று வாழ்ந்து காட்டுகின்ற உதாரண புருஷராக (Role model) இவர் திகழ்கின்றார். இவரது வாழ்வையும் வளத்தையும் கொண்டு ஸ்கந்தவரோதய சமூகத்தினர் 'The Skanda' என்ற நூலை வெளியிடுகின்றமை மட்டற்ற மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது. இந்த நூல் சிறப்புற அமைய வாழ்த்துகின்றேன்.

பணிவுள்ள மாணவன்
**தெல்லியூர் லயன் சி. ஹரிகரன்**
உறுப்பினர்,
வலி வடக்கு பிரதேச சபை.

# மேருவே நீடு வாழ்க

சந்ததமும் புகழ்சுன்னைச் சம்பந்தர் கலைக்கூடத்து
எந்தையார் அதிபராய் நிகழ்போதில் ஆசானாய்ச்
சந்தித்துப் பின்னாளில் ஸ்கந்தாவிற் புகும்போதில்
வந்தென்னைப் பயில்கென்று வாழ்வித்த தனித்தெய்வம்;
புந்திக்கு வலுவூட்டிப் புராணப் பிரசங்கம்
முந்தியே செய்திட முகிழ்வித்த கதிர்த்தெய்வம்;
அந்தியும் சந்தியும் அகலாமல் அணுகாமல்
நின்றதாலல்லவோ நிற்கிறேன் சைவனாய்!
கந்தங் குறையாத சந்தனக் கட்டையாய்த்
தேய்ந்து கமழும் திருவினால் வாழ்கிறேன்!
பந்த பாசம் ஒருவிப் பலர்வாழ
நின்ற மேருவே நீடுவாழ்க நீர்!
எந்தைபோலெனை என்றும் அணைத்திடும்
சிந்தையாயுமை நின்று வழுத்துவேன்
இந்தப் பிறப்பினும் ஏனைப் பிறப்பினும்
நின்று வாழ்குவன் நீர்தரும் நேர்நெறி.

சிவ சிவ.

அன்பினடிமை
**ஏ. அனுசாந்தன்**
பழைய மாணவன்,
யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை, சுன்னாகம்.

# வாழ்த்துச் செய்தி



ஸ்கந்தவரோதயக் கல்வித் தாயின் புகழ்பூத்த அதிபர்கள் வரிசையில் விளங்கும் எனது நல் ஆசான் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களின் சேவைக்காலப் பதிவுகளைத் தாங்கிவரும் **"THE SKANDA"** மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வகுப்பறைகளில் அவரால் வளர்த்து எடுக்கப்பட்டு ஆளாக்கப்பட்ட பல நூறு மாணவர்களில் நானும் ஒருவன் என்ற வகையில் எனது நல்லாசான் தொடர்பான எனது எண்ண உணர்வினைப் பதிவு செய்து கொள்வதற்கு எனக்குக் கிடைத்த இவ்வாய்ப்பினை ஒரு பெரும் பேறாக எண்ணுகின்றேன்.

எனது உயர்தர வகுப்பின் வகுப்பாசிரியராக அவர் விளங்கிய காலத்தில் கண்டிப்பும், அன்பும் ஒருசேரக் கலந்த நிலையில் எம்மை நெறிப்படுத்தினார். ஒவ்வொரு மாணவர்களையும் மிக ஆழமாக அறிந்து வைத்திருந்தார். வெள்ளைநிற வேட்டியும், நஷனலும் அணிந்தவாறு தனக்கே உரித்தான ஒரு புன்முறுவலோடு நெற்றியிலே வெண்ணீறோடும் கல்லூரி வளாகத்தில் வலம் வருகின்ற காட்சியானது ஆங்கிலேயர் காலத்தில் இந்துக் கல்லூரிகளை நிறுவி வழிநடாத்திய அதிபர்களை நினைவிற்குக் கொண்டுவருவதாக இருக்கும்.

கற்பித்தலில் கண்டிப்பிற்கும் நகைச் சுவைக்கும் பஞ்சமிருக்காது. வகுப்பில் தவறு இழைப்போர்க்கு அடியும் கிடைக்கும், நகைச்சுவையான அறுவையும் கிடைக்கும்.

எனது நல்லாசானின் நெறிப்படுத்தலில் பல மாணவர்கள் வருடாவருடம் பல்கலைக்கழக அனுமதி வாய்ப்பினைப் பெற்றுக்கொண்டமை அவரின் அர்ப்பணிப்பான கற்பித்தலின் வெளிப்பாடாக அமைந்தது.

சிவாஜி சேர் அவர்கள் அதிபராகவும் எமது நல்லாசான் உப அதிபராகவும் விளங்கிய காலத்தில் கல்லூரியின் உட்கட்டுமான அபிவிருத்தி நடவடிக்கைகள், ஸ்கந்தவரோதய ஆரம்ப பாடசாலையின் தோற்றம், மாணவ, ஆசிரிய விரிவாக்கம் என்பவற்றினூடாகத் தொடக்கி வைக்கப்பட்ட ஸ்கந்தாவின் மறுமலர்ச்சி எனது நல்லாசான் அதிபராக விளங்கிய காலத்தில் உச்சநிலையை எய்தியது. ஆன்மீகம், பண்பாடு, அறப்பணி போன்ற பல்துறை பரிமாணங்களினூடாக சமூகத்திலும் உயர்

அரச நிர்வாக கட்டமைப்புக்களிலும் அவர் ஈட்டியிருந்த நன்மதிப்பினை எமது ஸ்கந்தவரோதயக் கல்லூரித் தாய்க்கு வளங்களைத் திரட்டுவதற்காகப் பெரிதும் பயன்படுத்தினார்.

எமது கல்லூரியின் அதிபராகத் தனது பொது வாழ்வில் சிரமங்களையும் நெருக்குவாரங்களையும் எதிர்கொண்டபோதிலும் அவற்றையெல்லாம் தனக்கே உரித்தான பக்குவம், எதையும் இலாவகமாகக் கையாளும் ஆளுமை, சொல்மாட்சி என்பவற்றினூடாக வெற்றிகொண்டு கல்லூரியின் மேன்மைக்கு மேலும் மெருகூட்டினார். அதற்கு இறையாசியும் பக்கபலமாக இருந்தது கண்கூடு. அவர் இன்று கல்லூரியின் முதல்வர் நிலையில் இருந்து ஓய்வுபெற்றுச் சென்றாலும் பல்வேறு வழிகளில் அவரின் பங்களிப்பு தொடர்ந்தும் அவசியமானது. மாற்றங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படாதுவிட்டால் அம் மாற்றங்கள் தம் பழைய நிலைகளுக்குத் திரும்பிவிடும் என்ற மறுமலர்ச்சி தொடர்பான சிந்தனை அடிப்படையில் எனது நல்லாசானின் ஆசியும், வழிகாட்டலும் எமது கல்லூரித் தாய்க்குத் தொடர்ந்து கிடைக்குமென நம்புவோமாக.

**திரு. பொன்னுத்துரை சந்திரசேகரம்**
விரிவுரையாளர்,
இந்து தத்துவத் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

# “வாழ்வாங்கு வாழ்”

அன்புடையீர்!

இம் மடலினைத் தம் சிந்தைக்காய்த் தெரிந்து கொண்டதற்கு எம் சிரம் தாழ்ந்த நன்றிகள் உரித்தாகுக. இம்மடலின்பாற் தம் சிந்தையை ஆழச் செலுத்தும் முன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்தின் பாற் கரிசனை கொள்வீராக.

யதார்த்த உலகியல் வாழ்வின் நடைமுறைகளில் ஒரு மனிதனிற்குப் பாராட்டு, பிரிவுபசாரம் எனும்போது குறித்த அந் நபர் தொடர்பாகப் புகழ்ந்தும், போற்றியும் பேசுதல் அல்லது எழுதுதல் என்பது அவைக் கௌரவமாகக் கருதப்பட்டுக் பலராற் செயற்படுத்தப்பட்டுவரும் அதேசமயம், அவைக்குப் புறம்பாக அனைத்தையும் புறந்தள்ளி தமது உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்தி செயற்படல் பல சந்தர்ப்பங்களில் இடம்பெறுகின்றது. ஆனால் இம் மடலோ அத்தகு தன்மை கொண்டதன்று. எம் குருவிற்கான நிகழ்வு, எனவே எம் ஆசானைப் புகழ்ந்து வரைதலே சிறந்தது என்ற அவை நியதிக்கு அப்பாற்பட்டு எம் ஆசான் வார்த்தைகளால் வடிக்க முடியாதவர் என்பதை எம் அனுபவ வாழ்வின் வாயிலாகப் பெற்ற உண்மைகளின் நிழலாக, கற்பனைகட்கு அப்பாற்பட்டு ஓர் மடலாக்கி விரிக்கின்றோம். இங்கு எமது ஆசான் தொடர்பாகக் குறிப்பிடப்படும் ஒவ்வொரு சொற்களிற்குமான ஆதாரங்கள் அனுபவ ஆதாரங்களாக எம்மிடம் நிறைந்துள்ளன. எனவே இம்மடல் அவைக்காக வரையப்பட்டதோ அல்லது எமது ஆசானிற்காகவோ வரையப்பட்டதோ அன்று. மாறாக நாம் உணர்வுபூர்வமாகவும், உளநிறைவோடும் உங்கள் முன் சமர்ப்பிக்கின்ற அனுபவப் பாடமாகும் என்பதைக் குறிப்பிட்டு எம் மடலை உமக்காய் விரிக்கின்றோம்.

தாய் என்பவள் ஓர் குழந்தையைப் பத்துமாதம் சுமந்து பிரசவிக்கின்றாள். அது மட்டுமன்றி குடும்ப உறவுகளுள் அன்பு, அரவணைப்பு என்பவற்றிற்கு உரித்தானவள் தாய் மட்டுமே. இத்தகு தாய்மைப் பண்பை நாம் எம் ஆசானிடம் உணர்கிறோம். எம்மை இன்று ஓர் சிறிய கல்வியியலாளனாகவேனும் மிளிரச் செய்த பெருமை என் ஆசான்களையே சாரும். அவ் ஆசான்களுள் முதன்மையானவராகக் காணப்படுவதனால் எம் ஆசானை நாம் தாயாகப் பார்க்கின்றேன். அதற்கும் அப்பால் எமது கல்வியாண்டிற் கல்விகற்ற சக மாணவர்கள் பல தவறுகளை இழைத்தபோதும் கூட அன்பினால் அவர்களைக் கட்டுப்படுத்திய தன்மை எம்மைத் தாயாக உணரச் செய்கிறது. குறிப்பாக ஓர் விடயத்தை நோக்கின், ஸ்கந்தாவின் 110ம் ஆண்டு விழாவும், பரிசளிப்பு வைபவமும் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் இடம்பெற மிகப் பிரமாண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பல பழைய மாணவர்கள் கூட இந் நிகழ்விற்காய் வருகை தந்திருந்தனர். இவ்வாறான நிலையில் வெள்ளி இரவு அலங்கார வேலைகள் முடிவுற்ற பின்னர் எமது சக மாணவர்கள் தூங்கச் சென்ற வேளை சிலர் விளையாட்டுத் தனமாக குடிநீர்த் தாங்கியின் கீழ் செல்லும் குழாயினை அடித்து உடைத்துவிட்ட வேளை ஒட்டுமொத்த பாடசாலைக்கான நீர் விநியோகம் முற்றாகத்

தடைப்பட்டுவிட்டது. காலையில் விழா இடம்பெற நீர் இன்றியமையாதது. உடனே காலை வேளை எமது அதிபர் திரு.க. சிவாஜி அவர்களும், எமது ஆசானும் இணைந்து உடனடியாக நீர் விநியோக சீர்ப்படுத்தலை மேற்கொண்டனர். விழாக்கள் முடிந்த பின்னர் விசாரணைகள் பல தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டு எம் சக மாணவர்களிற்கு மிகப் பாரிய தண்டனை சிலரால் விதிக்கப்பட்டு க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றமுடியாது எனவும், நஷ்ட ஈடு செலுத்தவேண்டும் எனவும் கோரப்பட்டவேளை, அதிபருடன் இணைந்து எமது சக மாணவர்களை தண்டனையில் இருந்து விடுவித்து பரீட்சை எழுத அனுமதித்த அந்த உணர்வை எப்படி மறக்கமுடியும். அப்பேர்ப்பட்ட தாயுள்ளம் கொண்டவர் எம் ஆசான்.

தந்தை என்பவர் குடும்ப உறவுகளில் அறிவினை ஊட்டுபவனாகவும், குடும்பத்தைக் காப்பவனாகவும் உள்ளான். இந்நிலையில் எமக்கு அறிவு புகட்டி இன்று நாம் இந்நிலையில் காணப்பட வழிசமைத்தவர் எம் ஆசானே. எமது ஆசானது கற்பித்தல் முறைமை தனித்தன்மை வாய்ந்தது. ஏட்டுக்கல்வி என்பதற்கு அப்பால் சமயத்தை உலகியல் வாழ்வின் ஓட்டத்துடன் ஒன்றிணைத்துக் கற்பிப்பதில் அவரிற்கு நிகர் அவரே. நாம் இந்து நாகரிகம் கற்றதில்லை. ஆனாலும் ஆசானது பாடவேளைகளில் வகுப்பறைகளில் அமரத் தவறியதில்லை. ஏனெனில் கம்பராமாயணம், மகாபாரதம், இதிகாச, புராணக் கதைகளை செவிவழி கேட்கும் வாய்ப்பு வேறு எங்கு சாத்தியம்? அக்கதைகட்கு அப்பால் அவற்றை இன்றைய உலகியல் வாழ்வு நிகழ்வுகளோடு இணைத்து ஆராயும் திறன் அவரிற்கே உரியது. இதன் வாயிலாக ஆன்மீக, உலகியல் அறிவை நாம் கற்றுக்கொண்டோம்.

அது மட்டுமன்றி எமது சக மாணவர்களின் குடும்பச் சுமைகளைப் போக்க தந்தை போன்று பல உதவிகளை மேற்கொண்டுள்ளார். தமது துர்க்காதேவி தேவஸ்தானத்தினூடாகவும், சில அரச சார்ப்பற்ற நிறுவனங்களின் ஊடாகவும் பல குடும்பங்களின் கல்விச் செயற்பாட்டுக்கு உதவியுள்ளார். குறிப்பாக எமது தந்தை அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றில் பணியாற்றியவேளை தானே வேண்டுகோள் கடிதம் வரைந்து அனுப்பி பல மாணவர்களிற்கான சப்பாத்துக்களைப் பெற்றுக்கொடுத்ததோடு, பல மாணவர்களிற்கு உதவு தொகை தருவித்தார். அதனைவிட எம் சக மாணவர்களிற் சிலரை ஸ்கந்தாவிலேயே சேவை செய்ய அனுமதித்து சிறுதொகை வேதனம் வழங்கினார். நாம் கூட பல்கலைக்கழக கல்வி பூர்த்தியாகி வேலையின்றி இருந்தவேளை எனது பாடசாலையிலேயே சிறிது காலம் கற்பிக்க வழிசமைத்தார்.

இவை மட்டுமல்ல, நாம் இன்று உயிருடன் வாழ்ந்துகொண்டு இருக்கின்றோமென்றால் அதற்கு எம் ஆசான் ஆற்றிய உதவி மிக மிகப் பெரியது. நாம் பாடசாலைக் கல்வியைப் பூரணப்படுத்தி பல்கலைக்கழகம் சென்று கல்வி பயில ஆரம்பித்த ஆறாவது மாதமே தீராத நோயினாற் பீடிக்கப்பட்டோம். சில மாதங்களாக தீவிர சிகிச்சைப்பகுதியில் அனுமதிக்கப்பட்டு இறுதியில் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டோம். இதனை அறிந்த எமது ஆசான் சத்திரசிகிச்சை புரிந்த மருத்துவருடன் தொடர்புகொண்டு எம்மை தம் மாணவன்

என அறிமுகம் செய்து, என்மீது மருத்துவர்களின் கரிசனையை மேலும் அதிகப்படுத்தியது மட்டுமல்லாது இடையிடையே எமது உடல்நிலை தொடர்பாகத் தந்தையிடம் கேட்டறிவார். இங்கு எம் ஆசான் மட்டுமன்றி எமது அதிபர் க.சிவாஜி அவர்களும் மறக்கமுடியாதவர். ஆனாலும் சத்திரசிகிச்சை முடிவுற்ற பின்னரும் கூடப் பல காலம் குறித்த நோயினால் அவதிப்பட்டு மிகவும் இக்கட்டான சூழலிலேயே கல்வி பயின்றேன். இதனை அறிந்த ஆசான் எனை அழைத்து தனது வீட்டில் வைத்து கடிதம் ஒன்றினை வரைந்து தந்தார்.

இக் கடிதம் கொழும்பிலுள்ள ஓர் வைத்திய நிபுணரிற்காக வரையப்பட்டு என்னிடம் ஒப்படைக்கப்பட்டு, நீ கொழும்பு சென்று சிகிச்சை பெற்றுவா எனக் கூறியவர், தனது சட்டைப்பையில் இருந்து ஒரு தொகைப் பணத்தையும் எடுத்து என்னிடம் தரவே, நாம் மறுத்தவேளை, இல்லை எனக் கூறி அதனையும் தந்து ஆசி வழங்கி அனுப்புவித்தார். இக்கடிதத்துடன் கொழும்பில் குறித்த வைத்தியரைச் சந்தித்தவேளை அவர் குறித்த நோய்க்குரிய மருத்துவர் தான் அல்ல எனக் கூறினார். ஆனாலும் எம் ஆசானது கடிதத்திற்கு மதிப்பளித்து இந்நோய்க்குரிய மருத்துவர் யாரென ஆராய்ந்து அவரிற்குத் தன் கைபட கடிதம் எழுதினார். இவ் இரு கடிதங்களுடனும் குறித்த வைத்தியரை நாடினோம். தனியார் வைத்தியசாலையிலேயே அந்த மருத்துவர் சேவை புரிந்தபோதும் கூட பரிசோதனைகள் செய்தபின் எம்மை கொழும்பு அரச வைத்தியசாலைக்கு அனுமதித்தார். அங்கு நாம் பெற்றுக்கொண்ட தொடர்ச்சியான சிகிச்சையினால் இன்று அத் தீராதெனக் கருதிய நோயிலிருந்தும் மீண்டுள்ளேன். இந்நிலையில் எம் உயிர் காக்க ஓர் கருவியாக அமைந்த என் ஆசானை நாம் தெய்வமாக உணர்வதில் என்ன தவறு?

எனவே தான் ஆரம்பத்திற் கூறியதைத் தற்போது மீள வலியுறுத்துகிறேன். எம் ஆசானின் உருவில் நாம் தாய், தந்தை, குரு, தெய்வம் ஆகிய நான்கு பாத்திரப் பண்புகளையும் உணர்கின்றேன். இன்னமும் எவ்வளவோ விடயங்களைப் பகிர என் கைகள் துடிக்கின்றன. ஆனாலும் எம் போன்ற பலரின் மடல்களிற்கும் இடம் தந்து என் மடலை குறுக்குகின்றேன்.

"பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்
நன்மை கடலிற் பெரிது"
"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

தங்கள் புகழால் வாழும்

**திரு. சுந்தரமூர்த்தி கபிலன்**
விரிவுரையாளர்,
திட்டமிடல்,
புவியியல் துறை, கலைப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

# Aru. Thirumurugan – A Dreamer

Aru. Thirumurugan is a 'dreamer' in a Abdul Kalamian sense. He goes to sleep very late and germination for his social projects starts after he gets on to the bed and he starts dreaming of every detail of the projects in mind. He is the only person, I have ever seen, who fixes the date for the opening of a building even before the foundation stone is to be laid. He used to tell in his classes 'if you don't imagine and dream of the completion of a project in the present, you will never finish it".

He was born to Mr.K. Arumugam and Mrs. Saraswathy Arumugam, a teacher couple, in 1961 and he was bred in such a way to love all. He obtained his primary education at Ramanathan College, Chunnakam and secondary education at Jaffna Hindu College which moulded him. Several famous teachers like Sivaramalingam and Thevan master were his architects. Later he joined University of Peradeniya as an external student and secured a Bachelor of Arts degree. He joined Thirugnanasampanthar Vidyalayam, Chunnakam as a teacher in 1989 and he was transferred to Skandavarodaya College, Chunnakam in 1993, His services as a teacher, sectional head, Deputy Principal and the Principal have been highly commended. He is the real orator, in Tamil, who serves at Skandavarodaya College after Orator C.Subramaniam who was an English Orator.

He is well known among the Tamils and scholars in Sri Lanka, India and other countries all over the world for his service to Hinduism and social welfare. His is the President of the Board of Trustee of Thellipalai Thurkai Amman temple. He established several charities like Sivapoomi Trust that operators a school for the mentally retarded children and an elders' home. He has been serving as the Vice President of all Ceylon Hindu Congress and as an advisor to Jaffna College of Education, Nallur Thirugnanasampanthar Aadheenam, Nallur Young Artist's Association etc. He is a member of the governing body of Jaffna Cancer Hospice and Hindu Board of Education. Listing his achievements and the honorary titles given to him would make this appreciation note too big.

His classes, at Skandavarodaya College, were like attending "Kamban vizha" sessions held by Kamban Kazhakam, which was like a carnival of literature.

I was one of the fortunate students of him who got the opportunity of listening to his lectures on several issues of the society that was nicely made into a nexus with the curriculum, when the situation in Jaffna, between the years 1995 to 2001, was not conducive to listen to his famous temple orations with subtle comedies and his sincere pleas or urges to help people in need. Almost all of us in the classroom were indoctrinated to follow ideals of life, in one way or another to an extent possible for us to practice. None of his classes would end without a story or an anecdote that entreats not to go against virtues even if we are unable to do good. Such an inspiring personally made us commit ourselves to the people around us and institutions we serve.

He is the teacher who dragged me by my earlobe to his class in the Arts stream when I was about to enter Biology class room at the beginning of the A/Ls. He was such a caring and concerned teacher for all of his students. His capacity to remember each and everyone is well known among his students and others as well. He has been a person who punishes and compassionately cares simultaneously. He uses all means to make students appear on stage at least for a minute and this made many of them realise later in life that their confidence was built by him.

He is a fatherly figure for several students who would go near him and tell their personal problems to get them solved. If the need of a student is based on monetary issues, he would give away money in his pocket immediately and I have seen him borrowing money several times from his friends for his own needs soon after. The mental support he gives to the people who are in trouble is immense.

Measuring his worth is very difficult. Martin Luther King Jr. provided us with a tool; "the ultimate measure of a man is not where he stands in moment of comfort, but where he stands at times of challenge and controversy". 'Our Thirumurugan Sir', as we used to refer to him, is the one who not only stands with the people, when they face challenges and controversies. His words to the class, way back in 1997, do still reverberate in the minds of us, at least in my ears, 'stretch your hands first to help others as much as possible'. He is not the one who preaches things and forgets everything. He is an exemplary teacher and a role model, by being a practioner of what he preaches, for the students to see, critically evaluate and understand the values of our culture and life in general.

The verbal dexterity, with which he is gifted by God, is not something given to him to make money but to serve people. Though his vocation is teaching, he is a cultural ambassador for the Tamil people in expatriation, mentor for many people, a religious leader born and bred, living in our midst and loving our society. He travelled all over the world where Tamils live and spread the message of helping people in need. This was done by his famous orations at several temples and other places in the U.S.A, the U.K, Canada, Australia, Singapore, Thailand, Malaysia and India. He gave the money donated by people after his orations to institutions like General Hospital, Jaffna General Hospital, Kilinochchi and University of Jaffna and for the scholarships to the poor students who were selected to the universities of Jaffna, Sabaragamuwa, Peradeniya and Rajarata.

It is customary to conclude appreciation notes like this with the lines that would say 'The University should be proud to honour so and so with an honorary Ph.D." But I wish to end my note here like this. Aru. Thirumurugan deserves more than an honorary Ph.D, a grand farewel and a souvenir magazine from the society he serves. What are they?

**K.L. Ramanan**
Lecturer (Prob.)
ELTC
University of Jaffna.

# எங்கள் அதிபர்
# கலாநிதி ஆறு. திருமுருகனின் வாழ்வும் பணிகளும்

சமூகப் பணியால் மிக இளம் வய திலேயே கலாநிதிப்பட்டம் பெற்ற ஒருவர்; சமயத்தைப் போதனை நெறியாக மட்டும் கொள்ளாது சாதனை நெறியாகவும் மாற்றிய அறிஞர். முதியோர், விசேட தேவை உடையோர் அனைவர்க்கும் காப்பகங்கள் அமைத்துப் பாதுகாக்கும் தருமசீலர்; இலங்கைக்குள் மட்டுமல்ல அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, பிரித்தானியா எனப் பற்பல தேசங்களிலும் செஞ்சொற் செவியின்பம் வழங்கிப் பேர் புகழ் பெற்ற பேச்சாளர், ஸ்கந்தா அன்னை யைச் செல்வச் செழிப்போடு வாழவைத்த அதிபர்; அவர் வேறு யாருமல்லர். அவர் தான் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்.

ஆறுமுகம் – சரஸ்வதி தம்பதிகளின் புதல்வராக 1961 மே 28ஆம் திகதி பிறந்தவர் திருமுருகன். இவர் தனது ஆரம்பக் கல்வியை யா/ இராமநாதன் கல்லூரியிலும், இடைநிலைக் கல்வியை யாழ் இந்துக் கல்லூரியிலும் கற்றார்.

1989ஆம் கலைமாணிப் பட்டத்தை பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்தும், பட்டப் பின் கல்வி டிப்ளோமா, கலாநிதி ஆகிய பட்டங்களை யாழ் பல்கலைக்கழ கத்திலிருந்தும் பெற்றுக் கொண்டார்.

### ஆசிரியப்பணி

1989ம் ஆண்டில் சுன்னாகம் திரு ஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் தனது ஆசிரியத் தொழிலுக்கான முதல் நிய மனத்தை இவர் பெற்றுக்கொண்டார். 1993ஆம் ஆண்டில் ஸ்கந்தா அன்னை செய்த அதிஷ்டத்தால் சுன்னாகம் ஸ்கந்த வரோதயக் கல்லூரிக்கு இவர் ஆசிரியராக இடமாற்றம் பெற்றார். அன்று தொடக்கம் இன்று ஓய்வு பெறும் வரை 18 ஆண்டு களுக்கும் மேலாக இவரது பணி ஸ்கந்தா வில் தொடர்ச்சியாகக் கிடைத்து வந்தது.

இந்துநாகரிகத்தையும் இந்து சம யத்தையும் க.பொ.த உயர்தர மாணவர் களுக்கு எளிமையாகவும் கலகலப்பாக வும் கற்பிப்பதில் இவருக்கு நிகர் வேறு எவருமில்லை. இவரிடம் இப்பாடங் களைக் கற்ற மாணவர்கள் இப்பாடங்களில் அதியுயர் சித்திகளைப் பெற்றுப் பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவு பெற்றமை மட்டுமல்ல, வாழ்விலும் அறஒழுக்கங் களைக் கடைப்பிடிக்கும் ஆத்மீக நாட்ட முடைய மாணவர்களாக விளங்கி வரு கின்றமை அனைவரும் அறிந்ததே.

இன்று ஈழத்தில் பேச்சுத் துறையில் முன்னணியில் இருக்கும் மாணவர்களிற் பலர் இவரிடம் கற்றவர்கள் என்பது மட்டுமல்ல, இவர் பயிற்சியளித்த விவாத அணி தமிழ்த்தினப் போட்டியில் முதலிடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

வறிய மாணவர்களுக்குத் தனது சம்பளத்திலிருந்து பெருந்தொகை நிதியைக் கொடுத்ததோடு நின்றுவிடாது, வெளிநாடுகளிலிருந்தும் நிதி உதவி களைப் பெற்றுக் கொடுத்தார்.

இவரது சிறந்த கற்பித்தற் செயற்பாடுகள் காரணமாக இவர் வலிகாமம் கல்வி வலயத்தால் சிறந்த ஆசிரியர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

ஆசிரியராகவும் பகுதித்தலைவராகவும், உப அதிபராகவும், பிரதி அதிபராகவும் ஸ்கந்தாவில் இவரது பணி வளர்ச்சியடைந்தது.

### அதிபராக....

ஸ்கந்தாவின் அதிபரான சிவாஜி ஓய்வுபெற்றறைத் தொடர்ந்து 16.3.2008 முதல் இக் கல்லூரியின் புதிய அதிபராகப் பதவியேற்றார். சிறந்த தலைமைத்துவம் வாய்ந்த, அன்பான, அறிவுரை கூறி வழி நடத்தும் சிறந்த அதிபராக இவர் விளங்கினார்.

கல்லூரியின் முன்னேற்றம் கருதி இசுரு திட்டத்தினுட் பாடசாலையை இணைத்துக் கொண்டார். இசுரு திட்ட அதிகாரிகளிடமும் கல்வியமைச்சு அதிகாரிகளிடமும் தனக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி புதிய மூன்று மாடிக் கட்டடம், இருமாடி மனையியல், விவசாய ஆய்வு கூடம், அவற்றுக்கான நவீன உபகரணங்கள் என்பவற்றோடு பௌதிகவளத்துறையில் ஒரு பல்கலைக்கழகம் போன்ற நிலைக்கு ஸ்கந்தாவை மாற்றியமைத்தார். இவரது காலத்தில் கௌரவ சுசில் பிரேமஜெயந்த, கௌரவ பந்துல குணவர்த்தன ஆகிய இரு கல்வியமைச்சர்கள் ஸகந்தாவிற்கு வருகை தந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

அண்மையில் வருகை தந்த தற்போதைய கல்வியமைச்சர் கௌரவ பந்துல குணவர்த்தன அவர்கள் மாடிக் கட்டிடங்கள் இரண்டையும் திறந்து வைத்ததோடு புதிய தகவல் தொழில்நுட்ப ஆய்வு கூடத்துக்கான அடிக்கல்லையும் நாட்டிச் சென்றுள்ளார்.

ஆறு. திருமுருகன் அவர்கள் பகுதித் தலைவராக பிரதி அதிபராக இருந்த காலங்களில் அமைக்கப்பட்ட ஸ்கந்தன் ஆலயம், பாடசாலைச் சுற்றுமதில், ஸ்தாபகர் கந்தையா உபாத்தியாயர், முன்னாள் முகாமையாளர் P.S. சுப்பிரமணியம் ஆகியோருக்கான சிலையமைப்பு என்பவற்றில் இவரது முயற்சிகளும் செல்வாக்குமே பின்னிருந்து செயற்பட்டன என்றால் அதில் மிகை ஒன்றும் இல்லை.

### சமய சமூகப் பணிகள்

இன்றைய ஆறு. திருமுருகனின் மகோன்னதமான வளர்ச்சிகளுக்கெல்லாம் காரணமாக அமைந்தது அவரது சமயம் சார்ந்த சொற்பொழிவுத்திறனே ஆகும். அவரது சொற்பொழிவு கண்டு அதிசயித்த இணுவில் காரைக்கால் சிவன் தேவஸ் தானத்தினர் செஞ்சொற் செல்வர் என்னும் பட்டத்தை அவருக்கு அளித்துக் கௌரவித்தனர். அவர் பின்னர் 'செந்தமிழ் ஞாயிறு' (டில்லி தமிழ்ச்சங்கத்தில் இடம் பெற்ற அனைத்துலக வளர்தமிழ் ஆய்வு மாநாட்டில் வழங்கப்பட்டது) முதலிய பட்டங்களைப் பெற்றுக்கொண்டபோதும் செஞ்சொற் செல்வர் என்பதே அவருடன் எப்போதும் சேர்ந்திருந்தது.

அவரது சமய சொற்பொழிவுகள் இலங்கையில் இடம்பெறாத தலங்களே இல்லை என்னுமளவிற்கு எல்லாப் பிரதேச ஆலயங்களிலும் இடம்பெற்றுள்ளன. அது மட்டுமன்றி இங்கிலாந்து, அமெரிக்கா, அவுஸ்ரேலியா, கனடா, இந்தியா முதலிய பல நாடுகளில் அவரது சொற்பொழிவுகள் இடம் பெற்றுள்ளன.

சமயத்துறை சார்ந்த அவரது வளர்ச்சி யின் மணிமகுடமாகத் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் பதவி அமைந்தது. அமரர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் வழிகாட்டலில் வளர்ந்த திருமுருகனுக்கு தங்கம்மா அப்பாக்குட்டியின் மறை வின்பின் தலைமைப் பதவி வழங்கப் பட்டது.

சமயப்பணிகள் மூலம் தான் பெற்றுக் கொண்ட அன்பளிப்புக்களையும், அன்பர்கள் தாமாக முன்வந்து வழங்கிய நிதியை யும் அவர் ஏழை எளியவர்களுக்கும், ஆதரவற்றோருக்கும் வாழ்வளிக்கும் சமூகப் பணிகளுக்குப் பயன்படுத்தினார். அவரது சமூகப் பணிகளுள் முக்கிய மானவை.

- ❖ ஆதரிக்க யாருமற்ற முதியோர்களுக்கான சிவபூமி முதியோர் இல்லம்.
- ❖ சிவபூமி மனவளர்ச்சிப் பாடசாலை.
- ❖ சிவயோகம் அன்னையர் குடியிருப்பு.
- ❖ கேன் புற்றுநோயாளர் காப்பகம் அமைக்க உதவியமை.
- ❖ காலத்திற்கு காலம் யாழ் வைத்திய சாலைக்கு மருத்துவ உபகரணங்களைப் பெற்றுக்கொடுத்தல்.
- ❖ யாழ்ப்பாணத்தில் இந்துக்கள் கண்தான சபையை உருவாக்கியமை.

இவரது சமூக சேவைகளிற்கான யாழ்ப்பாணச் சமூகத்தின் நன்றிக்கடனாக யாழ் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் கொடுத்துக் கௌரவித்துள்ளது, தானும் கௌரவம் பெற்றுள்ளது.

சமயம், சமூகம், கல்வி என்னும் மூன்று தளங்களில் வெற்றிகரமான தனது பயணத்தைத் தொடர்ந்து வந்த ஆறு. திருமுருகன் அவர்கள் தனது அதிபர் பணியிலிருந்து ஓய்வு பெற்றுக்கொள்வது எமக்குத் துன்பத்தைத் தந்தாலும் அவரது பணிகளால் தமிழ்ச் சமூகம் பெறப் போகின்ற நன்மைகளை எண்ணி வாழ்த்தி மகிழ்வோடு விடை கொடுப்போம்!

♣ ♣ ♣

# புவியியல் தகவல் ஒழுங்கும் (GIS) புவியியல் நிலைய ஒழுங்கும் (GPS) ஒரு அறிமுகம் (Introduction to Geographical Information system & Geographical Position system)

**திருமதி தாரணி ஜெகதீஸ்வரன்**
B.A. (Hons in Geography), P.G.D.E

**முகவுரை**

இன்று புவியில் அதிகரித்த சனத் தொகை, சூழல் மாசடைவு, காடழிப்பு, இயற்கை அனர்த்தங்கள், காலநிலை மாற்றங்கள் போன்ற பல்வேறு சவால் களை எதிர்கொள்வதற்கான திட்டமிடலை மேற் கொள்ள நாட்டின் அரசியல் பொருளாதார, அபிவிருத்தி வளங்களை அடையாளம் செய்ய இராணுவத் தேவைகள் போன்ற பல்வேறு தேவைகளுக்கு பெறுமதியான தகவல்களைப் பெறவேண்டியது அவசியமாக உள்ளது.

இத் தகவல்களைப் பெறுவதில் வளர்ச்சியடைந்த ஒரு தொழில்நுட்ப முறையாக புவியியல் தகவல் ஒழுங்கு, நிலைய ஒழுங்கு ஆகியன விளங்கு கின்றன. இவற்றின் பயன்பாடு பரந்தளவில் பொதுவானதும் தனிப்பட்ட முயற்சி களினையும் விளக்குவதாகவும் உள்ளது. இத் தொழில்நுட்பங்கள் பற்றிய அறி முகமும் அவை எவ்வெவ் வழிகளில் பயன்மிக்கதாக உள்ளது என்பன பற்றியும் விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.


புவியியல் ஆய்வுகளில் தேசப்படம் தயாரித்தல் முக்கியமானது. ஆரம்பத்தில் தயாரித்தல், தீர்மானங்களை எடுத்தல் போன்றவற்றை ஒரு சிறிய மக்கள் தொகுதியினரே திறன்களை கிரமமாகப் பயன்படுத்தி மேற்கொண்டனர். இதில் அதிக நேரவிரயம், துல்லியக்குறைவு, புதுமைப்படுத்தமுடியாமை போன்ற சிக்கல்கள் காணப்பட்டன. இவற்றை நிவர்த்தி செய்வதாக இன்று உலகளாவிய ரீதியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஈடுபடும் ஒரு துறைசார்ந்த தொழிநுட்ப மாகவும், பல பில்லியன் டொலர் பெறுமதி யான தொழிற்சாலைகளாகவும், தொழிலை வழங்கும் நிறுவனங்களாகவும் புவியியல் தகவல் ஒழுங்கு இடம் சார்ந்த தகவல் களைத் தர அளவு ரீதியாகவும், பண்பு ரீதியாகவும் மாற்றமடைந்துள்ளன.

**புவியியல் தகவல் ஒழுங்கு வரை யறையும் உள்ளடக்கமும்**

புவியியல் தகவல் ஒழுங்கு பற்றி Nickchrisman, Burough, Star and Estes போன்ற அறிஞர்கள் வரைவிலக்கணங் கள் வழங்கியுள்ளார்கள். இவர்களது கருத்திலிருந்து பொதுவாக "குறித்த ஒரு நோக்கத்துக் காகத் தரவுகளைச் சேகரித் தல், சேமித்தல், முகாமை செய்தல், சீர் செய் தல், மாற்றங்களை ஏற்படுத்தல், பகுப்பாய்வு செய்தல், மீளப்பெறல், காட்சிப்படுத்தல் போன்றவற்றுக்கு கணனியை அடிப்படைக் கருவியாகக் கொண்டு பயன்படுத்தும் ஒரு சக்தி வாய்ந்த தொழிநுட்பம் புவியியல் தகவல் ஒழுங்கு" என்று வரையறுக்கலாம்.

ஒரு புவியியல் தகவல் ஒழுங்கானது வன்பொருள், மென்பொருள், தரவு, மனி தர்கள், முறைகள் ஆகிய ஐந்து உறுப்புக்

களை ஒன்றிணைப்பதன் மூலம் செயற் படுத்தப்படுகிறது.




**வன்பொருள்** (Hardware)– புவியியல் தகவல் ஒழுங்கினை செயற்படுத்தும் கணனி வன்பொருளாகும். இதில் உள்ளீடு செய்தல், தரவு முகாமை, வெளியீடு செய்தல் ஆகிய 3 வகை உள்ளது. உள்ளீடு செய்தலில் எண்ணியல் பதிவு நாடாக்கருவி (digital tape reader) எண் வடிவ தரவாக்கி (digitizer), தட்டச்சு செய்தல் (Key board) உள்ளடங்கும் வன்பொருள் வெளியீட்டுக் கருவிகளாக இலத்திரனியல் வட்டு (Compact disk), அச்சுப் பிரதியாக்கி (Printer) என்பன உள்ளன. தரவு முகாமையினுள் தனியார் கணனி, கணனி வலைப்பின்னல் உள்ளடங்குகின்றன.

**மென்பொருள்** : (Software) – புவியியல் தகவல் ஒழுங்கில் இது புவிசார் தகவல் களை காட்சிப்படுத்தவும் ஆராய்வு செய்ய வும் சேமிக்கவும் ஒரு கருவியாக உள்ளது.

**மனிதர் :** புவியியல் தகவல் ஒழுங்கு முழுமையான பெறுமதியைப் பெறுவது மனிதர்களாலேயே ஆகும். ஒழுங்குபடுத் தப்பட்ட முகாமை பெற மனிதனின் நுட்பமான அறிவு அவசியம்.

**தரவு :** எல்லா அடிப்படை விடயங்களும் (Facts), வடிவங்களும் (features) வேறுபட்ட நடவடிக்கையை மேற்கொள் கின்றன. விடயங்கள், விவகாரங்கள், நிகழ்வுகள் தரவுகளாகவுள்ளன.

**முறைகள் :** வெற்றிகரமான தகவல் ஒழுங்கு செயற்படுத்துகையானது வர்த்தகச் சட்டங்கள் (Business rules) நன்கு வடிவமைக்கப்பட்ட திட்டங்கள் (Wel – disinged plan) என்பவற்றுக்கேற்பவே செயற்படுத்துகின்றது. இவற்றின் மாதிரி களும் செயற்பாட்டு செய்முறைகள் ஒவ்வொரு ஒழுங்கமைப்புக்கும் தனித்து வமானதாகவுள்ளது.

- **தகவல் ஒழுங்கின் அவசியம்**
  - தரவுகளைப் பெற்றுக் களஞ்சியப் படுத்தல்.
  - நிபந்தனைகளை ஒப்பிட்டுப் பார்த்தல்.
  - கொடுக்கப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி பல்வேறுபட்ட தொடர்பாடல்களை ஏற்படுத்தல்.
  - ஒரு குறிப்பிட்ட இடத்தில் நடை பெறும் நிகழ்வுகள் வேறு ஒரு இடத்தில் நடைபெறுமாயின் ஏற்படக்கூடிய மாற்றங்களைப் பரிசோதித்தல்.
  - பகுப்பாய்வு முடிவின் அடிப்படை யில் படங்களை வரைதலும் திட்ட மிடல்களை மேற்கொள்ளலும்.
- **புவியியல் தகவல் ஒழுங்கின் பயன்பாடுகள்**

  **புவியியல்துறையில்...**
  - நில ஆய்வு – புவி மேற்பரப்பில் நிலங்களை வலயமாக்கல், நில மீட் சிக்கு உட்படுத்தல், நில உடமை பரா மரிப்புக்களை மேற்கொள்ளல், தரைக் கீழ் நீரைப் பாதுகாத்தல், கழிவு நீர் செல்ல வேண்டிய பகுதியைத் தீர்மானித்தல் போன்றன.

- காலநிலை ஆய்வு – முகில்கள் பற்றியவை. காலநிலை மாற்றங்கள் போன்ற ஆய்வுகள்.
- புவிச்சரிதவியல் – புவிச்சரிதவியல் மாற்றங்கள் தொடர்பான ஆய்வுகள்.
- சுற்றாடல் முகாமைத்துவம் – வனம், ஈரநிலங்கள், விவசாய நிலங்கள் போன்றவற்றினை மதிப்பிடல், வனவாழ் உயிரினங்களைப் பாதுகாத்தல், கழிவுப் பொருட்களுக்கான இட வமைவைத் தீர்மானித்தல்.
- அனர்த்த முகாமைத்துவம் – எரிமலைக் கக்குகை, சூறாவளித்தாக்கம், சுனாமி, நிலச்சரிவு போன்றவற்றின் உருவாக்கம், பாதிப்புக்கள், பாதுகாப்பு நடவடிக்கை போன்ற பல செயற்பாடுகள்.

**கல்வித்துறையில்...**

- பாடசாலையில் மாணவர்களைச் சேர்த்தல், போக்குவரத்து முறைமைகளை ஒழுங்கமைத்தல்.

**சுகாதாரத்துறையில்...**

- மக்களிடத்தே நோய் பரவும் தன்மை, பரவல் வேகம், அதற்கான சேவைகள், பகுப்பாய்வுகள் மேற்கொள்ளல்.

**அரச துறையில்**

- கருத்துக் கணிப்பீடுகள், தேர்தல் அரச நிர்வாகம், அரச திணைக்களங்கள் ஆகியவற்றில் வேலைகளை சுலபமாக்கல்.

**புவியியல் நிலைய ஒழுங்கு (GPS) வரையறையும் உள்ளடக்கமும்**

தகவல் தொழில்நுட்பத்தின் மேம்பாட்டுடன் படவரைகலையின் புவியியல் தகவல் ஒழுங்குடன் (GIS) தொடர்புபட்டு அண்மைக் காலத்தில் வளர்ச்சியடைந்த முறையாக புவியியல் நிலைய ஒழுங்கு காணப்படுகிறது.

"புவியியல் தோற்றப்பாடுகளின் ஆள்கூறுகளை இனங்காட்ட செய்மதியை அடிப்படையாகக் கொண்ட வானொலி சமிக்ஞை பிரயாண ஒழுங்கு, புவியியல் நிலைய ஒழுங்கு ஆகும்". அதாவது புவியியல் நிலைய ஒழுங்கு (GPS) ஆனது செய்மதிகளை அடிப்படையாகக் கொண்டு தகவல்களைப் பெற்று அகல நெடுங்கோடுகள் மூலம் ஒரு பிரதேசத்தின் அமைவிடத்தைக் காட்டுகிறது. இது ஐக்கிய அமெரிக்காவின் பாதுகாப்புத் திணைக்களத்தால் உருவாக்கப்பட்டது.

**புவியியல் நிலைய ஒழுங்கானது**

1) விண்வெளித் தொகுதி (செய்மதி) (Space segment)
2) கட்டுப்பாட்டுத் தொகுதி (தலைமை நிலையம்) (Control segment)
3) பயன்படுத்துவோர் தொகுதி (பெறு கருவிகள்) (User segment)

ஆகிய மூன்று தொகுதிகளைக் கொண்டது. இவை ஒன்றுடன் ஒன்று தொடர்புடையனவாகவும் ஒன்றிலொன்று தங்கியும் உள்ளன.

விண்வெளித் தொகுதியில் 24 செய்மதிகள் 6 நீள்வட்டப் பாதையில் சுற்றுகின்றன. குறைந்தது 4 செய்மதிகள் உலகின் எப்பாகத்திலும் எந்த நேரத்திலும் காணப்படும். உலகின் எப்பகுதியில் இருப்பவராயினும் குறைந்தது 4 செய்மதியின் சமிக்ஞையுடன் ஆள்கூற்றை அறியமுடியும். அதாவது தான் இருக்கும் இடத்தின் அகலநெடுங்கோட்டை அறியலாம். மீற்றரிலிருந்து சென்ரி மீற்றர்

வரையான; நுட்பமாக இடவமைவைக் காட்டும். ஒரு இடவமைவைக் காட்டுவதற்கு சென்ரி மீற்றர் நுட்பம் தேவையில்லையெனினும் புவியியல் நகர ஆய்வுகள் மேற்கொள்ள சென்ரிமீற்றர் நுட்பம் (Accuracy) மிக அவசியம். இது ஒவ்வொரு நகரத்தின் ஒவ்வொரு துண்டுக்குமான அமைவிடத்தைத் தரும். இதனால் மிகச் சரியான தீர்மானங்கள், திட்டமிடல்களை மேற்கொள்ள இலகுவாக இருக்கும்.

தரைநிலையங்கள் புவியில் 5 உள்ளன. இவை எல்லா செய்மதிகளையும் அவதானித்து செயற்பாட்டைச் சோதித்து தகவல்களை பிரதான நிலையத்திற்கு அனுப்பும் தொழிற்பாட்டைச் செய்யும்.

பயன்படுத்துவோர் தொகுதி என்பது புவியியல் தகவல் ஒழுங்கின் சமிக்ஞைகளைப் பெறுகின்ற உபகரணங்களை Receivers, Processors, Antennas ஆகியவற்றைக் குறிக்கிறது.

GPS ஆனது ஒரு வானொனலி சமிக்ஞை பெறும் கருவியைச் சென்றடைய எவ்வளவு காலம் எடுக்கும் என்பதனூடாக செய்மதியிலிருந்து பெறும் கருவி வரையான தூரத்தைக் கணிக்கிறது.

இவ்வாறாக விளங்கும் GPS ஆனது இன்றைய உலகில், சமூகத்தில் மனித விரல் நுனியில் பல தகவல்களையும் அதனூடாகத் தீர்மானங்களையும் எடுப்பதற்கு பலருக்கு உதவி புரிகிறது.

**புவியியல் நிலைய ஒழுங்கின் பயன்பாடுகள்**

**பிரயாணங்களுக்கு உதவுகிறது –** தரை, கடல், வான்வழி பிரயாணங்களின் போது சென்றடைய வேண்டிய இடத்தைக் காட்டுவதற்கு உதவுகிறது.

- வழிகாட்டி ஒழுங்குகள் – இயந்திர மனிதன், காடுகள், மலைகளில் பயணம் செய்தலுக்கு உதவுகிறது.

- தேடல் மற்றும் காப்பாற்றல் செயற்பாடுகள் – சுனாமி, புவி நடுக்கங்கள் போன்ற அனர்த்தங்களின்போது காணாமற் போனவர்களுள்ள இடவமைவினைக் கண்டுபிடிக்க உதவுகிறது.

- கண்ட நகர்வுகளை கண்டுபிடிக்க உதவுகிறது.

- முனைவு நகர்வுகளை அறிய உதவுகிறது.

- புவியியல் தகவல் ஒழுங்கிற்கான தரவுத்தளத்தை வழங்குகிறது.
  ***உதாரணமாக***
  வதிவிடக் கூறுகள், சமூக பொது நிறுவன இடவமைவு, வீதி அமைப்பு, மின்சார வசதிகள், தொலைத் தொடர்பு வழங்கலை ஒழுங்கமைத்தல் போன்றவற்றுக்கு உதவுகிறது.

- ஒலியுடனான சமிக்ஞை நிகழ்ச்சித் திட்டமாக (Voice programme) பார்வையற்றோருக்கு வழிகாட்டுகிறது.

- நடமாடும் பொருள் விநியோகங்களுக்கு உதவுகிறது – அதாவது ஒருவர் வீட்டிலிருந்தபடியே பொருட்களைக் கொள்வனவு செய்ய பொருளை விநியோகிப்பவர்கள்

குறித்த இடத்தைக் கண்டறிந்து விநியோகிப்பதற்கு உதவுகிறது.

எவ்வாறெனினும் புதியதொழில் உரு வாக்கல் சிறந்த மண்வகையைத் தெரிவு செய்தல், குடியிருப்புக்களை திட்டமிடல், வாகனங்களுக்கான சிறந்த பாதையைத் தெரிவு செய்தல் போன்ற சகல ஆய்வு களுக்கும் இடம்சார் தகவல்களைப் பெற்று புவியியல் தகவல் ஒழுங்கும், புவியியல் நிலைய ஒழுங்கும் முடிவுகளைத் தருவது இன்றைய நவீன உலகில் மிகப் பயனுடையது என்பதில் ஐயமில்லை.

**உசாத்துணை நூல்கள் :**


1) Dr. P.H. Aanand, V. Rajeskumar 2003, "Principls of Remotesensing & GIS.
2) A.Antonyrajan, 2006, Introduction to Geographical Information System (GIS), Pub : Faculty of Graduate Studies.
3) Margaret J.Kemp. 2002, Introduction to Geographical Information System.


♣ ♣ ♣

# யோ. கர்ணனின் சேகுவேரா இருந்த வீடு : ஒரு சிறு அறிமுகம்

ம.பா. மகாலிங்கசிவம்
B.A. (Hons), Dip. in Edu., M.A (Tamil)

1983 இனக் கலவரத்தின் பின்னரான ஈழத்துத் தமிழ் இலக்கியம் என்பது பெரும்பாலும் ஒரு பக்கச் சார்பானதாவே உருவாகியிருந்தது. அல்லது வன்முறை வழியில் உருவாக்கப்பட்டிருந்தது. அனை வருக்கும் பொதுவானதென நிர்ணயிக்கப் பட்ட எழுத்தாக்க முறையிலிருந்து திமிறி வெளிக்கிளம்ப முயன்றவர்கள் பல்வேறு நுட்பங்கள் மூலம் மௌனிக்கச் செய்யப் பட்டனர். சிவரமணி உயிர் துறந்தார். சேரன் புலம்பெயர்ந்தார். சுமதி காணாமற் போனார்.

ஈழத்தில் ஒரு சார்பு இலக்கியங்கள் பெருகிக் கொண்டிருக்கப் புலம்பெயர் தேசங்கள் இதற்கு எதிர்ச்சார்பு இலக்கி யங்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்தன. ஈழத்தில் எந்தவகையான எழுத்துக்கள் அச்சுறுத்தல்களுக்கும் உயிராபத்துக் களுக்கும் உரியனவாக இருந்தனவோ அந்தவகையான எழுத்துக்களிலேயே புலம்பெயர் தமிழர்களிற் பெரும்பாலான வர்கள் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

எல்லாமே கனவுமயமாகி, மேய்ப்பர் கள் காணாமற் போய்விட்ட இன்றைய சூழ்நிலையில் தடுக்கப்பட்டிருந்த எதிர்ப் பிலக்கியங்கள் புதுவீறுடன் எழுச்சி பெற்று வருவதை அவதானிக்கமுடிகின்றது. அத்தகைய இலக்கியப் படைப்பாளி களுள் முதன்மைப்படுத்தி ஆராயப்பட வேண்டிய ஒருவராக யோ.கர்ணன் விளங்குகின்றார். நாலாங்கட்ட இறுதிப் போருக்குள் மூழ்கிப் போயிருந்தும் மூச்சடங்காமல் தெய்வாதீனமாக வெளி வந்தவர். யுத்தக் கொடூரத்தின் சாட்சியாக ஒரு காலை இழந்தவர். எனினும் தன்னம் பிக்கையையும், கலைத்துவத்தையும் இழக்காமல் சேகுவேரா இருந்த வீடு, தேவதைகளின் தீட்டுத்துணி ஆகிய இரு சிறுகதைத் தொகுப்புக்களைத் தந்துள்ளார்.

இவற்றுள் சேகுவேரா இருந்த வீடு தொகுதியில் திரும்பி வந்தவன் தொடக்கம் இரண்டாவது தலைவர் வரை 13 சிறு கதைகள் உள்ளன. இவற்றுட் பெரும்பா லானவை வன்னிப்போரின் இறுதிக் கட்டத்தில்இரு பகுதியினராலும் நிகழ்த் தப்பட்ட பாதகச் செயல்களையும், சீர்கேடு களையும் பதிவு செய்பவையாக உள்ளன. நூலின் தலைப்பாகவும் அமையும் 'சேகு வேரா இருந்த வீடு' என்னும் சிறுகதை ஒரு கிராமப்புற வீடு எவ்வாறு ரெலோ, விடுதலைப்புலிகள், இந்திய ராணுவம், இலங்கை ராணுவம் ஆகியோரின் இருப்பிட மாக மட்டுமன்றி சித்திரைவதைக் கூட மாகவும் விளங்கியது என்பதைச் சித்தி ரிக்கிறது. இங்கு வீட்டாரின் உரிமையின்றி வீட்டை அபகரித்தல், தமக்கு எதிரான வர்கள் மீது மேற்கொள்ளும் சித்திரவதை என்பவற்றில் மேற்கூறப்பட்ட நான்கு தரப்பினருமே ஒரே தட்டில் வைத்து நோக்கப்படுகின்றனர்.

'அரிசி' என்ற சிறுகதை முள்ளிவாய்க் கால் சார்ந்த சூழலில் தாயின் மரணம் கூட அடுத்த கணம் சாதாரண சம்பவமாகும் அவலநிலையைச் சித்திரிக்கிறது. கஞ்சி

யையே நாளாந்த உணவாகக் கொள்ளும் தனது சகோதரிகளின் வலுவிழந்து போயிருக்கும் உடலைப் பார்க்கும் ஒருவன் அவர்களுக்குக் கோழி இறைச்சி சமைப்பதற்காகப் பக்கத்துத் தறப்பாளி லிருந்த இரண்டு கோழிகளில் ஒன்றைத் திருடி வருகின்றான். 'அப்போது புலிகளிட மிருந்த விமானங்களின் எண்ணிக்கையை விட முள்ளிவாய்க்காலில் இருந்த கோழி களின் எண்ணிக்கை குறைவு' என்கிறார் கதை சொல்லி. ஆனால் சமைக்க அரிசி இல்லை. ஒரு சங்கிலி கொடுத்து ஒரு கிலோ அரிசி வாங்கும் சூழல். உமி கொட்டப்பட்டிருந்த இடத்தி லிருந்து இரு நாட்களாக அரிசியைப் பொறுக்கு கின்றனர். அரிசி பொறுக்குமிடத்தில் தமக்கை மேல் உரசும் இளைஞன், ஷெல்லடி, புலிகளின் ஆள்பிடி எனப் பல சோத னைகள். இறுதியில் சேர்த்த அரிசியைக் கொண்டு உணவு சமைக்க முற்படும் போது ஷெல் விழுந்து அரிசி கிளைந்து கொண்டிருந்த தாய் இறந்து போகிறார். மாமனும் அவனுமாகச் சாரத்தின் மூலம் தூக்கிச் சென்று புதைத்துவிட்டு வருகின்ற னர். கதை இவ்வாறு நிறைவடைகிறது.

"சரி நடக்கிறது நடக்கட்டுமென்று திரும்பி தரப்பாளுக்கு நடக்கத் தொடங்கி னான். ஆர் ஆரோ எல்லாம் என்னென் னவோ கேட்டினம். இவன் ஒரு பதிலும் சொல்லயில்லை. தரப்பாளுக்க உள்ளட அங்கை இளைய தமக்கை அரிசியைக் கழுவிக் கொண்டிருந்தாள்".

இங்கே,

ஊரெல்லாம் கூடி ஒருங்கு திரண்டழுது
போரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரியங் காட்டிடைக் கொண்டுபோய்ச்
சுட்டபின்
நீரினில் மூழ்கி நினைப்பொழிந்
தார்களே" என்ற சித்தர் பாடல் நினைவுக்கு வருகிறது.

தினந்தோறும் பிணத்தைப் பார்த்து மரத்துப்போன முள்ளிவாய்க்காலில் இதைவிட வேகமான மாற்றம். பக்கத்தில் அந்த வெயிலில் தாயைப் புதைத்துவிட்டுத் தம்பி வரும்போது தாய்விட்டுச் சென்ற அரிசி கழுவும் தொழிலைத் தான் தொடர்ந்து அடுத்தவேளை உணவுக்குத் தயாராகும் மகளை கதாசிரியர் யதார்த்தபூர்வமாகச் சித்திரிக்கிறார்.

கதாசிரியர் புலி எதிர்ப்பு நிலைப்பாட்டை மட்டும் கொண்டவரல்லர். அநியாயங் களை யார் செய்தாலும் தட்டிக் கேட்கின்ற நடுநிலையான விமர்சகர் என்பதை ஐயனின் எஸ்.எல்.ஆர், இரண்டாவது தலைவர் ஆகிய கதைகளும் வெளிப்படுத்து கின்றன. ஜனநாயக வழிக்குத் திரும்பி யவராகவும் தூய்மையானவராகவும் காட்டிக்கொள்கின்றார்.

"நாங்கள் ஜனநாயக வழிக்குத் திரும்பினதே உங்களுக்காகத்தான். எங்கட தலைவரைப் பாருங்கோ அவர் கலி யாணமே கட்டயில்லை. தனக்கொரு வாரிசையே உருவாக்காமல் இருக்கிறார்" என்று சீடர்களால் நம்பப்படும் ஒரு தலைவரின் பாலியல் இச்சைகளை எடுத்துக் காட்டுவது ஐயனின் எஸ்.எல்.ஆர். கதை.

கர்ணன் கதை சொல்லும் முறையிற் பல சிறப்புக்கள் காணப்படுகின்றன. கதை ஒவ்வொன்றும் வெவ்வேறு உத்திகளைக் கையாண்டு சொல்லப்படுகின்றமை முதலாவது சிறப்பாகும்.

திரும்பி வந்தவன், திரும்பி வந்தவள் சொல்லிய கதைகள் மாத்திரமே கதை சொல்லி சொல்வதாக அமைக்கப்பட்டுள்ளன. கதை கதையாம் காரணமாம். பாத்திரங்களின் வாக்கு மூலங்கள், புலம்பல்கள் என்பவற்றைக் கொண்டு பின்னப்பட்டுள்ளது. வேதாளத்திற்குச் சென்ன கதை, "தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத வேதாளம் மீண்டும் அந்த விசாரணைக் குறிப்பைப் புரட்டியபடி இருந்தது" என விக்கிரமாதியன் கதைப் பாணியில் ஆரம்பித்து.

"வேதாளம் விசாரணைக் குறிப்பை மூடி வைத்தது. விக்கிரமாதித்தன் ஒரு நிரபராதி என எழுதியது.... வேதாளம் தன் மூக்குக் கண்ணாடியைக் கழற்றி மேசையில் வைத்துவிட்டு பெருமூச்சு விட்டது. பின்னர் மெதுவாகக் கேள்வி யைக் கேட்டது.

"அந்தப் புதையல் இருக்குமிடத்தை எனக்கு இரகசியமாக அடையாளங் காட்ட உன்னால் முடியுமா? புதையலை இருவரும் பாதிபாதியாகப் பகிர்ந்து கொள்ளலாம் சம்மதமா?

விக்கிரமாதித்தன் கண்களையும் வாயையும் இறுக மூடிக்கொண்டு காத்திருக்க ஆரம்பித்தான். தலை சுக்குநூறாக வெடித்து இறந்துபோகும் கணத்துக்காக" என முடிகிறது.

பாவமன்னிப்பு சிறுகதை கிறிஸ்தவ பாதிரியார் முன் பாவமன்னிப்புப் பெற நிற்கும் ஒருவனின் அறிக்கையிடலாக அமைகிறது.

கர்னனின் இன்னொரு சிறம்பம்சம் கொடுப்புக்குள் சிரிக்க வைக்கின்ற நாசூக்கான கிண்டல் ஆகும். கதை முழுவதும் இப்பண்பு ஆங்காங்கே பரவி வியாபித்திருக்கும்.

"அப்புக்காத்துவின் அனேக கதைகளில் வரும் பெரிய பாத்திரமான பாமா இந்தக் கதையிலும் நாயகியாவாள். பாமாவை ஒரு தனிப் பொம்பிளையாக விட அப்புக்காத்துவின் மனம் ஒப்பவில்லை. இப்ப காலம் கெட்டுக் கிடக்குது. கலியாணம் செய்யாத பெட்டையென்றால் போறவாற பொடியள் நொட்டை சொல்லுவினம். ஒரு நொட்டைக்குப் பெட்டை சிரிச்சால் கதையே சரி. ஒரு பொடியனைப் பிடித்துக் கொடுத்துவிட்டால் சோலியில்லை என நினைத்து ஒரு பொடியனையும் கொண்டு வந்தார். பெயர் அகத்தியன். ஏதாவது தொழில்துறை வேணுமே...

மே மாதம் சம்பந்தமான கதைகளில் வரும் பாத்திரங்கள் சிங்கள இனவாத அரசில் சம்பளம் வாங்குபவையாகப் படைக்கப்படுவதையும் விரும்பவில்லை. பலதையும் யோசித்துவிட்டு ஆளைப் பிடித்து இயக்கத்தில் சேர்த்துவிட்டார்".

(தமிழ்க்கதை)

"வீட்டுக்கு வாற வழியெல்லாம் மனிசி சோசலிசத்தைப் பற்றித்தான் யோசிச்சுக்கொண்டு வந்தது. தன்ரை (இயக்கத்துக்குப் போன) பெட்டைக்கும் சோசலிசத்துக்கும் என்ன தொடுப்பென்பது விளங்கவில்லை. சில நேரம் சோசலிசம் ஒரு பெடியனாயிருந்து தன்ரை பெட்டையை கூட்டிக்கொண்டு ஓடிடுவானோ என்றும் பயம் வந்தது

(சோசலிசம்)

நல்ல சிறுகதை, கதை முடிந்ததன் பின்னர் தான் தொடங்கும் என்பார்கள்.

கதையின் முடிவுப் பகுதியில் திடீர்த் திருப்பம் ஒன்றை ஏற்படுத்துவதன் மூலமும் சிலர் இத்தகைய பண்பை ஏற்படுத்த முயன்றிருக்கின்றனர். ஓ ஹென்றி, மாப்ப ஸான் ஆகியோரின் சிறுகதைகளில் இத்தகைய திடீர்த் திருப்பப் பண்பை அதிகம் காணலாம். கர்ணனின் சிறுகதை முடிவுப் பகுதிகளும் திடீர்த் திருப்பத்தை ஏற்படுத்தி வாசகருக்கு அதிர்ச்சி அளிப்பன வாக உள்ளன. 'சீட்டாட்டம்' சிறுகதை இதற்குச் சிறந்த உதாரணமாக உள்ளது. விசுவமடுச் சந்தியில் கதை சொல்லியும் மாஸ்ரரும் இறங்கும்போது இருவரும் மதுபோதையில் இருக்கின்றனர். அப்போது மாஸ்ரர் நடுறோட்டில் நின்று கொண்டு —

"என்னயிருந்தாலும் மகிந்த ஒரு நரியன்தான். இஞ்ச விட்டான் துரும்பை... அங்கை அடிச்சான் கம்மாரிஸ்" என்று கூறுகிறார். இதைப் போதை ஏறியதால் ஏற்பட்ட உளறல் என்றே கதை சொல்லி கருதுகிறார். இதை மாஸ்ரர் அடிக்கடி கூறிக்கொண்டே இருக்கிறார். எவரும் கருத்தில் எடுக்கவில்லை. சீட்டாட்டத்தின் நுட்பங்கள் பற்றியும், கதை சொல்லியின் ஒன்றுவிட்ட சகோதரி பற்றியும் கதை சொல்லப்பட்டுக்கொண்டு இருக்கிறது. கதையின் இறுதிப் பகுதியில்.

"தம்பி துரும்படிச்சு கம்மாரிஸ் அடிச்சான் மகிந்த... இஞ்ச துரும்படிச் சான்... அங்க முள்ளிவாய்க்காலில கம்மாரிஸ் அடிச்சான்" பொடியன் வெருண்டுபோய் நிக்கிறான். எனக்கு ஏறிட்டுது.

"என்ன மாஸ்ரர் திரும்பத் திரும்ப புசத்திறியள்... என்ன பிரச்சினை யெண்டதைச் சொல்லுங்கோ..."

மாஸ்ரர் ஒரு நிமிசம் வடிவாச் சிரிச்சார். அப்பிடியே அலகைப் பொத்திப் போடவேணும் மாதிரிக் கிடக்குது. பிறகு சொன்னார், "எடேய்... ஜனாதிபதி எலெக்சன் நேரம் இஞ்ச வைச்சுத்தான்ரா மகிந்த இயக்கத்துக்கு இருபதுகோடி காசு கொடுத்தவன். தனக்கு வோட் போடச் சொல்லி" என்றார்"

என எமது இனத்தின் ஏமாளித் தனத்தையும், எதிரியின் புத்திசாலித் தனத்தையும் காட்டி அதிர்ச்சியை ஏற்படுத்துவதாகக் கதை முடிகிறது. கதை முடிக்கும் இத்தகைய உத்தியை அவரது ஏனைய சிறுகதைகளிலும் காணமுடியும்.

தொகுத்து நோக்கின் பொருள், வடிவம் ஆகிய இரண்டிலுமே சிறந்து விளங்கும் யோ.கர்ணனின் சிறுகதைகள் ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியின் முக்கிய கட்டத்தை எடுத்துக் காட்டுகின்றன.

"இவரையும், இவரைப் போன்றவர் களையும் இணைத்து உருவாக்கப்படும் ஒரு முழுமையான யுத்த சாட்சியமே விஞ்ஞான பூர்வமானதாகவும் அனைத்து லகக் கவர்ச்சி மிக்கதாகவும் அமையும். அதுதான் தமிழ்த் தேசியத்தின் ஜனநாயக மற்றும் தார்மீக அடித்தளத்தைப் பலப் படுத்தும்"

எனக் கர்ணன் பற்றிய நூலின் பின் அட்டையில் இடம்பெற்ற நிலாந்தனின் மதிப்பீடு மிகைப்படுத்தப்பட்டது ஒன்றல்ல.

# செ.கணேசலிங்கனின் நாவல்கள் எழுந்த காலப்பின்னணி — ஒரு பார்வை

திருமதி. ச. ஜெகதீஸ்வரி
B.A. (Hons), Dip. in Edu., M.Phil

கி.பி. 19ஆம் நூற்றாண்டில் நாவல் இலக்கிய வடிவம் தமிழுக்கு அறிமுகமான போதும் 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி யின் பின்பே ஈழத்தில் பிரக்ஞை பூர்வ மான ஒரு வடிவமாகின்றது. இவ்வகையில் 1950களின் பிற்பகுதியிலிருந்து ஈழத்து நாவல்களில் புதியதொரு சகாப்தம் அரும்புகிறது எனலாம். நாவல் இலக்கி யத்தில் ஏற்பட்ட இம்மாற்றத்திற்கு நாட்டு நிலைமையில் ஏற்பட்ட மாற்றம் முக்கிய காரணமாக அமைந்தது.

1956ம் ஆண்டு பண்டாரநாயக்கவின் தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியமை தேசிய முதலாளித்துவம் அதிகார முதன்மை பெற்றதைக் குறிப்பதாகும். இக்காலத்தி லேயே தேசியம் என்ற கோட்பாடும் வலுப்பெற்றது. தேசிய மரபுகளும் பண்பாட்டம்சங்களும் பேணப்படத் தொடங்கின.

ஈழத்துத் தமிழரைப் பொறுத்தவரை யிலும் கூட இது ஒரு முக்கியமான காலகட்டமாக அமைந்தது. நாட்டின் பொதுவான தேசிய எழுச்சியால் அவர்கள் பாதிக்கப்பட்டது மட்டுமன்றி, இக்காலத்தில் தோன்றிய தமிழ் சிங்கள இனப்பிரச்சினை யாலும் பாதிக்கப்பட்டனர். இக்காலத்தில் ஈழத்துத் தமிழிலக்கியம் வளரவேண்டும் என்ற கோஷம் முன்வைக்கப்பட்டது. தமிழர் இலங்கையின் தேசிய இனம் என்ற கருத்தும் ஈழத்தவரென்ற முறையில் அவர்களுக் கெனத் தனிப் பிரச்சினைகள் உண்டென்ற உணர்வும் ஏற்பட்டன. இவை மட்டுமன்றி இக்காலப்பகுதியை அடுத்து ஈழத்துத் தமிழிலக்கிய உலகில் முதன்மை பெற்ற ஸ்தாபனமாக இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் செயற்பட்டது. இடது சாரி அரசியற் சித்தாந்தத்தைப் பொது வாகச் சார்ந்திருந்த இச்சங்கம் இலக்கி யத்தில் தேசியப் பிரச்சினைகள் இடம்பெற வேண்டுமென்பதை வற்புறுத்தியது. அறுபது களில் எமது இலக்கிய உலகில் முக்கியம் பெறும் எழுத்தாளர்களுள் பெரும்பாலோர் இச்சங்கத்தைச் சார்ந்திருந்தோரேயாவர். இவர்களுள் ஒருவரே செ.கணேசலிங்கன்.

தேசியம் என்ற கோட்பாட்டின் வளர்ச்சி, இடதுசாரி அரசியல் சித்தாந்தச் செல்வாக்கு ஆகியவை ஐம்பதுகளின் பிற்பகுதியில் ஈழத்து நாவல் உலகில் ஏற்பட்ட பொருள் மாற்றத்திற்குரிய பிரதான காரணிகளாகின. சாதாரண மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளும் அன்றாட அனுபவங்களும் இலக்கியத் தில் தயக்கமன்றி இடம்பெற்றன. "தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்குமுள்ள பாரம் பரியமான உறவு பிறழும் நிலையிலேயே புனைகதை தோன்றும்" என இதனையே கா.சிவத்தம்பி அவர்களும் குறிப்பிடுவார். ஆரம்பத்தில் அறவியல் நோக்குடன் சமூகப் பிரச்சினைகளை நோக்கிய நாவல்களைப் போல் அல்லாது அப்பிரச் சினைகளை சமூகவியல் நோக்கில் இக்கால நாவல்கள் அணுகின. இலக்கி யத்தில் யதார்த்தம் பற்றிய உணர்வு இக்கால நாவல்களில் தலைகாட்டத்

தொடங்கியது. யதார்த்த வாதத்தை எழுத்தாளர்கள் சிந்தாந்த ரீதியாக ஏற்றுக்கொண்டது மட்டுமன்றி, பரி சீலிக்கத் தொடங்கியிருந்த இக்காலத்தி லேயே நாவல் நவீன இலக்கிய வடிவம் என்பதன் அர்த்தம் தெளிவாகத் தொடங் கியது. அவ்வகையில் தோன்றிய முற் போக்கு இலக்கியப் போக்கில் இளங்கீரன், செ.கணேசலிங்கன், டானியல், அகஸ்தியர் போன்றோர் எழுதத் தொடங்கினர். இளங்கீரன் ஆரம்பித்த இம் முற்போக்கு இலக்கியச் செல்நெறியில் அடுத்துவரும் ஒருவராக செ.கணேசலிங்கன் காணப்படு கிறார். இவர் எழுதியவையாக நாற்பத் தெட்டு நாவல்களும், ஏழு சிறுகதைத் தொகுதிகளும், எட்டுச் சிறுவர் நூல்களும் பதினெட்டுக் கட்டுரைகளும் ஒரு தொகுப்பு நூலும் வெளிவந்துள்ளன.

இவர் முற்போக்கு இலக்கிய காரனாக மட்டுமன்றி, இடதுசாரி அரசியற் கொள்கை களைச் சார்ந்தவராகவும் காணப்படுகிறார். சமுதாயப் போராட்டங்களுடன் இலக்கியம் பிரிக்கமுடியாததென்ற நிலையில் எழுதிய வர்களுள் இவரும் ஒருவர். இவ்வகையில் நிலவுகின்ற சமுதாய அமைப்பை மாற்றி புதிய சமுதாய அமைப்பைக் காண் பதையே நோக்கமாகக் கொண்டவர். யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வாழ்ந்த அடிநிலைமக்கள் எதிர்நோக்குகின்ற சமூகப் பிரச்சினைகள், போராட்டங்கள் போன்றவை இலக்கியத்திற்கும் உந்துதலை அளித்தன. இப்பின்னணியிலேயே இவரது நாவல்களும் எழுந்தன. நல்லனவற்றையே எழுதவேண்டும் என்ற அடிப்படையை மாற்றி உள்ளனவற்றையே எழுதுகிறார். இவரது நாவல்கள் யாழ்ப்பாணத்துச் சாதியமைப்புப் பற்றிய ஒரு சமூக ஆவண மாக அமைகின்றன.

ஒரு புரட்சிகரக் கோட்பாட்டின் அடிப்படையில் முன்னெடுக்கப்படும் நீண்ட போராட்டப்பயணம் இறுதியில் சமுதாய மாற்றம் என்ற வரலாற்றுத் தேவையை நிறைவு செய்கிறது. அடக்கி ஒடுக்கப்படும் உழைக்கும் மக்கள் இப் புதிய சமுதாயத்தில் வளமான வாழ்வைப் பெறமுடியும்.

“இது வெறும் கற்பனை அல்ல, நடைமுறை யதார்த்தமான வரலாற்று நியதியாகும். இதற்கான மனித முயற்சி என்பது மிகக் கடினமானதும் தவிர்க்க முடியாததுமாகும். அக்கடினமான பணிக்கு மனித வரலாற்றில் ஒவ்வொரு கால கட்டத்திலும் தம்மை அர்ப்பணித்த மகத்தான மனிதர்கள் இருந்தே வந்தி ருக்கிறார்கள். இந்த வகையில் நமது சகாப்தத்தில் அக்கடுமையான பணிக்குத் தம்மை அர்ப்பணித்தவர் களில் கம்யூ னிஸ்டுகள் முதன்மையானவர்கள் என்ப தைத் துணிவுடன் கூற முடியும்.[2] “இக் கருத்துக்களை ஏற்றுக் கொண்டவர்களில் செ.கணேசலிங்கனும் ஒருவர். இவர் இலக்கியம் மூலம் இம் மகத்தான பணியை மேற்கொண்டார். “சமுதாயத்தின் புரட்சி கரத் தேவைகளை இலக்கியங்கள் நிறை வேற்றுகின்றன என்பதற்கு இதுவே சான்றாகும்”[3] என ‘மார்க்ஸியமும் தமி ழிலக்கியமும்’ என்ற நூலில் குறிப்பிடு வதற்கேற்ற ஒரு சூழலில் பிறந்தவையே செ.கணேசலிங்கனின் நாவல்கள்.

செ.கணேசலிங்கன் தமது நாவல் களில் தாம் சார்ந்த அரசியற் கருத்துக் களைக் கூறுகின்றார் என்ற கருத்தை ‘ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம்’ என்ற நூல் முன்வைக்கிறது. “செ.கணேசலிங்க னும் கே.டானியலும் சாதி ஏற்றத்தாழ்வை பல்வேறு வகைப்பட்ட சுரண்டல்களுக்கும் கொடுமை களுக்கும் காரணமானதும்

வர்க்கச் சார்பு உடையதுமான ஒரு பிரச்சினை என்றே கருதினர். இதன் காரணமாக இவர்களின் அணுகுமுறை யிலே மார்க்சிய அடிப்படை யிலான வர்க்கக் கண்ணோட்டமும் சமூ கத்தின் உள்முரண்பாடுகளையும் ஊழல் களையும் விரிவாகச் சித்திரிக்கும் ஆர்வமும் இயக்க ரீதியான போராட்டம் மூலம் தீர்வு காணும் உறுதியும் அமைந்தன".[4]

யாழ்ப்பாணத்தில் அறுபதுகளில் நடை பெற்ற தீண்டாமை ஒழிப்புப் போராட்டம், ஆலயப் பிரவேச இயக்கங்கள் ஆகியவை இலக்கியத்திற்கு உந்துசக்திகளாக அமைந்தன. இவ்வகையில் எழுதிய வர்களுள் செ.கணேசலிங்கனும் ஒருவர். இவர் தமது நாவல்களில் அரசியற் கருத் துக்களுக்கே முதன்மை கொடுப்பவர் என்ற கருத்தும் நிலவுகின்றது. இதனால் இவரது கதாபாத்திரங்கள் அனுபவச் செழுமை குறைந்த கருத்துக்களின் பிரதிநிதி களாகவே காட்சியளிக்கின்றன. 'கார்க்கி' இதழாசிரியர் இளவேனில் கூறும் கருத்து இதனை அரண் செய்கிறது. "பொதுவாக மார்க்சியக் கொள்கைகளின் வழியில் இலக்கியம் படைக்கிறோம் என்று சிலர் அப்படியே தமது கட்சியின் கோட்பாடுகளை நேரடியாகப் புகுத்திப் பிரசாரக் கட்டுரை யாக்கிவிடுகின்றனர் இலக்கியத்தை. உதா ரணமாகக் கணேசலிங்கன் போன்றோரைக் குறிப்பிடலாம். அவரது நாவல் ஒன்றில் "மணிமேகலை 'அரசு' பற்றி எழுதியிருந் தாயே அதை படி" என ஒரு பாத்திரம் சொல் லும். உடனே மணிமேகலை லெனின் எழு திய 'அரசும் புரட்சியும்' என்ற புத்தகத்தி லிருந்து மூன்று பக்கங்களை ஒப்பிக்கும்"[5].

இதே கருத்தை 'இருபதாம் நூற் றாண்டுத் தமிழிலக்கியம்' என்ற நூலும் குறிப்பிடும். "தத்துவத் தெளிவு இருக்கும் அளவு அதனை வாழ்க்கை அனுபவமாக வெளிப்படுத்துவதற்குரிய அனுபவ வளம் இல்லாதிருப்பது இதற்குக் காரணமாகலாம். இவரது படைப்பான 'மண்ணும் மக்களும்' நாவலாக அன்றி கருத்துப் பிரசாரமாகவே அமைந்துவிட்டதற்கும் இதுவே காரணம் எனலாம். ஆயினும் அவரது சடங்கு, தரையும் தாரகையும் ஆகியவை இக்குறை பாட்டுக்குள் அடங்காத நல்ல நாவல்கள் ஆகும்"[6] எனக் கூறுகின்றது. இவரது நீண்ட பயணம்' என்ற நாவலும் குறைபாடுகள் அற்ற ஒரு நல்ல நாவலாகும். இதில் நாவலின் முடிவு வரை வாசகர் மனதில் செல்லத்துரையன் என்னும் கதாபாத்திரம் நிற்பதை உணரலாம். இங்கு மாதவன் என்ற பாத்திரமே ஆசிரியரின் குரலாக ஒலிக் கிறது. தனது சமூகத்தின் விடுதலைக்காகப் போராட விழையும் உணர்ச்சிமிக்கவனாக செல்லத்துரையனை வழிப்படுத்தும் ஒரு கதாபாத்திரமாக கருத்துக்களைக் கூறும் ஒரு பிரசாரகனாக மாதவன் அமைகிறான்.

செ.கணேசலிங்கனின் நாவல்கள் பற்றி 'தமிழ் நாவல் நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும்' என்ற நூலும் கருத்துரைக் கிறது. "அவர் கதைகளில் யாழ்ப்பாணத்தில் பரம்பரை பரம்பரையாக வழிவந்த ஜாதி வித்தியாசத்தையே அடிப்படையாக வைத்து எழுதினார். ஆரம்பத்தில் மார்ச்சி யத்தில் ஈடுபாடு கொண்ட இலக்கிய விமர்சகர்களால் கொள்கைக்காகப் பாராட் டப்பெற்ற கணேசலிங்கனின் நாவல்கள் பின்னர் பெரும்பாலும் ஈழத்து வாசகர் களால் மறக்கப்பட்டுவிட்டன"[7] எனக் குறிப்பிடுகின்றது. அதற்கு இரு காரணங் களையும் தமது நூலிலே தருகிறார். "ஒன்று கணேசலிங்கனின் பிரசாரம் செய்யும் எழுத்திலே அவருடைய

கொள்கைப் பற்று தோன்றவில்லை. சுகமான நல்ல அரசாங்க உத்தியோகத்தில் இருந்துகொண்டு குடும்பத்துக்கும் நல்ல வசதிகளைப் பெற்றிருந்த ஆசிரியரின் வாழ்க்கை முறையில் பாட்டாளிகளின் துன்பம் பிரதிபலிக்கவில்லை"[8] எனக் குறிப்பிடுவார். இவரது நீண்ட பயணம், சடங்கு, தரையும் தாரகையும் போன்ற நாவல்கள் இவ்வாறானவை அல்ல. இவரது ஏனைய நாவல்கள் பற்றியும் இவ்விடத்திற் குறிப்பிட்டுச் செல்லலாம். ஆனால் கட்டுரை மிக நீண்டதாகிவிடும்.

இவரது நாவல்களில் ஒரு சிலவற்றைத் தவிர ஏனைய நாவல்கள் யதார்த்தமான வாழ்க்கைச் சித்திரிப்பு, பாத்திர வார்ப்பு, உயிரோட்டமான உரையாடல் என நாவலுக்குரிய பண்புகளுடனேயே காணப்படுகின்றன. முழுமையாக நோக்கும்போது இவரது கால அரசியல், சமூகச் சூழ்நிலையே இவரது நாவல்களுக்கான அடிநாதமாக அமைந்தது எனலாம்.

**உசாத்துணை நூல்கள்**


1. கா.சிவத்தம்பி. தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும். 1967, பக்.11
2. ஒரு அரசியல் தலைவரின் இலக்கிய உணர்வுகள், சி.கா.செ. தாயகம், ஜனவரி–பெப்ரவரி, 1990.
3. ஞானி, மார்ச்சியமும் தமிழ் இலக்கியமும் 1988, முன்னுரை.
4. நா.சுப்பிரமணியம், ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம், 1978, பக்.88.
5. கே.டானியல் இலங்கையிலிருந்து ஓர் இலக்கியக் குரல், 1983, பக்.28
6. சி.மௌனகுரு, மௌ.சித்திரலேகா, எம்.ஏ.நுஃமான், இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம், 1979, பக்.49.
7. பெ.கோ.சுந்தரராஜன் (சிட்டி) சிவபாத சுந்தரம், தமிழ் நாவல் நூறாண்டு வரலாறும் வளர்ச்சியும், 1977, பக்.264
8. பெ.கோ.சுந்தரராஜன் (சிட்டி) சிவபாத சுந்தரம், தமிழ் நாவல் நூறாண்டு வரலாறும் வளர்ச்சியும், 1977, பக்.264


♣ ❖ ♣

# கடிதம்... இலக்கியப் பார்வையில்

**திருமதி சைலினி பிரதீபன்**
B.A. (Hons), PGDE, MA (Tamil)

**1) முகவுரை**

எட்ட இருக்கும் இதய எண்ணங்களை எழுத்தில் அமைத்து அனுப்புவதே கடிதம். கடிதம் எழுதுவது ஒரு அருங்கலை. தனிமனித உறவுக்கும் நினைவுக்கும் தொடர்பாக அமைவது கடிதம். தான் செல்லமுடியாத இடத்திற்கு தன்னுடைய எண்ணங்களையோ கருத்துக்களையோ தானே நேர் நின்று உரைப்பதுபோல புலப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது மடல். கடிதம், திருமுகம், ஓலைத் தூக்கு, சீட்டுக்கவி, முடங்கல் என்பன ஒரே பொருட் சொற்கள்.

செய்திகளை வரட்சியாக வரட்டுத்தன மாக கோழி சிதைப்பது போல சிறுக்கித் தள்ளுவது கடிதமல்ல. எண்ணங்களை வண்ணமுற்று வடித்தெடுத்துத் தருவதே கடிதம். நெருங்கிய உறவினர் நீளப் பிரிந்தாலும் அவர்கள் நினைவுகள் உறவு கொள்ள வழிவகுப்பது கடிதங்களே —

"ஓர் இதயத் துறை முகத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட விடயங்களை இன்னொரு இதயத் துறைமுகத்தில் இறக்குமதி செய்யும் காகிதக் கப்பல் பேனாவைப் பிடித்திருக்கும் விரல்விடு தூது"

என்றார் கவிஞர் மேத்தா. கடிதங்கள் சுயசரிதைத் துணுக்குகள், சத்தியத்தின் சாட்சி, அற்புத தொலைத் தொடர்புச் சாதனம், வாழ்க்கைச் சுகங்களில் தபால் கடிதமும் ஒன்று என்றார் பிரெஞ்சு அறிஞர் வெல்கோ. எவ்வளவு சிறப்பான உண்மை இது.

**2) கடிதம் இலக்கியத் தகுதி பெறல்**

இலக்கியங்களில் ஓர் உறுப்பாக இடம்பெற்று வந்த கடிதம் பிற்காலத்தில் ஓர் இலக்கிய வகையாக உருப்பெறத் தொடங்கியது.

"கடிதங்கள் இலக்கியத் தகுதிபெறக் காரணம் அவற்றில் காணப்படும் கருத்துக் களின் பரந்துபட்ட வீச்சும், அவை சமுதா யத்திற்கு பயன்படும் சிறப்பும், அவை சொல்லப்பட்டிருக்கும் நடைச் சிறப்புமே..."

இவ்வகையில் கடிதம் இலக்கியத்தகுதி பெறலாயிற்று. தற்சார்பில்லாத கடிதங்கள் நாடு, இனம், மொழி, கல்வி, பிறபொருள் பற்றியன. இவை யாவருக்கும் பயனாகும். பொதுநலம் சார்ந்தன. கட்டுரையாக கருத்துக்கள் தருவதைவிட கடித முறையில் எழுதுவதால் கவர்ச்சி, சுவை ஏற்படுகிறது. இலக்கியக் கடிதங்கள் இன்பம் தருவன, பயன் தருவன.

"கட்டுரைக் கலையும் கடிதப் பாங்கும் இணைந்து கடித இலக்கியங்களாக உரு வெடுத்தன".

இவ்வகையில் வரலாற்றில் நிற்கக் கூடிய மடல் இலக்கியங்களை எழுதி யவர்கள் பின்வருமாறு. நேரு மகள் பிரிய தரிசினிக்கு எழுதியது. வ.வே.சு. ஐயர் எழு திய ராஜகோபாலன் கடிதங்கள், மு.வரத ராசன் கடிதங்கள், அறிஞர் அண்ணா, மு.கருணாநிதி, கி.ராஜநாராயணன், ரசிகமணி, புதுமைப்பித்தன், பாரதியார், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனார், ஈழத்தில் பேராசிரியர் நந்தியின் கடிதங்கள், கணேசலிங்கன் கடிதங்கள், போராளி களது மடல் எனக் குறிப்பிடத்தக்கவை பல.

**3) தமிழ் இலக்கியங்களில் கடிதங்கள்**

சங்ககால தூது இலக்கியப் பொருண்மைக் கூறுகள், சீட்டுக்கவி என்பன ஆரம்பத்தில் கடித அம்சத்தைக் காட்டி நிற்கின்றன. அடுத்து கோவலனைப் பிரிந்த வேளையில் மாதவி எழுதிய இரு கடிதங்கள், சீவகன் குணாமலைக்கு வரைந்த ஓவியக்கடிதம், மதுரை சொக்கநாதரின் பாடல் வடிவில் அமைந்த பரிவுரைக் கடிதம், அந்தகக் கவி வீரராக முதலியார் செழியதரையனுக்கு வரைந்த கடிதம், சீர்காழி அருணாசலக் கவிராஜர் கடிதம். 20ஆம் நூற்றாண்டில் பாரதியின் கடிதம் என்பன கடித இலக்கியத்தின் சாயலை எடுத்துக் காட்டுகின்றன. இவை இலக்கிய விருந்தை அளிப்பன.

**4) தமிழில் கடித இலக்கியம் உள்வாங்கப்பட்ட முறைமை**

ஆரம்பத்தில் தூதுப் பொருண்ம உள்ளடக்கியதாக விளங்கி கவிதை வடிவில் கடிதமாகி, இலக்கிய உத்தியாக விளங்கி பின் அதுவே ஓர் இலக்கிய வடிவமாக தமிழில் மலர்ந்துள்ளது.

“தமிழ் இலக்கியத்தில் கடித இலக்கியத்திற்கு கால்கோள் செய்தவர் மு.வரதராசன். கட்டிடம் எழுப்பியவர் அறிஞர் அண்ணா. கைவண்ணம் காட்டுபவர் கலைஞர்”.

என்ற கூற்று கடித இலக்கியப் போக்கை காட்டி நிற்கிறது.

**5) வெளிவந்த கடித இலக்கியங்கள்**

மறைமலை அடிகளது ‘கோகிலாம்பாள் கடிதங்கள்’, மு.வரதராசனது தம்பிக்கு, தங்கைக்கு, அன்னைக்கு, நண்பர்க்கு போன்றவை, அறிஞர் அண்ணாவின் கடிதங்கள், கலைஞரின் கடிதங்கள், நேருவின் கடிதங்கள், புதுமைப்பித்தன் மனைவிக்கு எழுதிய கடிதங்கள் புதுமைப் பெண்ணுக்கு ஜீவாவின் கடிதங்கள், டி.கே.சி. கடிதங்கள், கணேசலிங்கனின் குந்தவிக்கு, மான் விழிக்கு கடிதங்கள், அன்பு மகனுக்கு அறிவுக் கடிதங்கள், குமரனுக்கு கடிதங்கள் போன்றவையும் ஈழத்தில் பேராசிரியர் நந்தியின் அன்புள்ள நந்தினிக்கு, தங்கைக்கு போன்றவையும் ஈழத்து போராளிகளது மடல், பேராசிரியர் கைலாசபதி நண்பன் சிங்காரவேலுக்கு எழுதிய கடிதங்கள் மற்றும் பேராசிரியர் சிவத்தம்பியின் கடிதங்கள் என்பன இலக்கியக் காத்தி ரத்தினை வெளிப் படுத்தி நிற்கின்றன எனலாம்.

**கடித இலக்கிய வகைப்பாடு**

கடிதம் எழுதப்பெற்ற காலத்தின் சமூக, பொருளாதார, அரசியல் நிலைமை, பழக்க வழக்கம், நம்பிக்கை போன்றவற்றை அறிய உதவும் இக்கடித இலக்கியம்

1) சமூக வாழ்வியல் பற்றியவை
2) அறிவியல் பற்றியவை
3) சமயம் பற்றியவை
4) காதல் பற்றியவை
5) பொதுப்பொருள் பற்றியவை

என்ற வகைப்பாட்டில் நோக்கலாம். இவற்றில் காதல் கடிதங்கள் கவிதைச் சொற்களின் கடித ஊர்வலம் காகித தேரேறிக் கலை உலா வருவனவாக உள்ளன. சொக்க வைக்கும் சொற்கள் வசீகரிக்கும் வரிகள், வாலிப வார்த்தைகள், கனவில் மிதக்க வைக்கும் கற்பனைகள், கிளர்ச்சியூட்டிக் கவரும் வர்ணனைகள் என்பன இக்கடிதங்களின் தன்மைகளாக உள்ளன.

**கடிதத்தின் தற்காலப் போக்கு**

எட்ட இருக்கும்போது இதய எண்ணங் களைத் தொகுத்து அனுப்பிய கடிதங்கள் பொதுமை பெறும் போது இலக்கியமாக திசைமாற்றம் பெற்றன. இவை இன்று நாடு, சமயம், மொழி, இனம், அரசியல் எனப் பல விடயங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றன.

சிறப்பாக பத்திரிகை, சஞ்சிகை என்பனவற்றுக்கு வரும் விமர்சனக் கடிதங்கள் தனி இலக்கியமாகப் போற்றத் தக்கவை. உதாரணமாக காலச்சுவடு, இளங்கதிர், மல்லிகை, மற்றும் பத்திரிகை களில் இடையே வரும் அறிவூட்டும் கடிதங்கள் குறிப்பிடத்தக்கன. 'The health' சஞ்சிகையில் வரும் தங்கைக்கு என்ற தொடர் ஆரோக்கிய வாழ்வுக்கு ஏற்ற விடயங்களைச் செப்புகின்றது. மற்றும் சஞ்சிகை ஆசிரியர் வாசகர் களுக்கு எழுதும் கடிதங்கள், அரசியல் குளறு படிகளை மறைமுகமாக வெளிப்படுத்தும் கடிதங்கள் குறிப்பிடத்தக்கன.

மற்றும் மருத்துவத்துறையின் அறி வியல் சார் விடயங்களை வெளிப்படுத் தும் நந்தியின் கடிதங்கள் இலக்கியத் துறையில் முக்கிய அங்கம் வகிக்கின்றன.

தற்காலப் போக்கில் முக்கிய அங்கம் வகிப்பது போராளிகளது மடல். இவை "உயிரைப் பிழியும் உண்மைகள்" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டன. மேலும் புனர்வாழ்வு முகாம்களில் தங்கியிருந்து உறவுக்கு பாலம் அமைக்கும் வகையில் வானொலி மூலமாக வெளிவரும் கடி தங்களும் முக்கிய அம்சங்களே. எனவே சொல்லக் கருதிய கருத்தை கடிதமாக இலக்கிய உலகில் உலாவவிடுதல் சாலச் சிறந்தது.

**உசாத்துணை**


1) செந்துறை முத்து, கணக்காயர்புலவர், இலக்கியத்தில் கடிதங்கள்.
2) தண்டாயுகம்.இரா, மு.வ.வின் இலக்கி யங்கள்
3) அறிவுமதி, உயிரைப் பிழியும் உண்மைகள், ஒலிக்கசிவுநாடா
4) நந்தி.பேரா, அருமைத் தங்கைக்கு, யாழ்ப்பாணம்.
5) புதுமைப்பித்தன் கடிதம், படைப்பாளி யும் ஆய்வாளர்களும்.


❖ ❖ ❖

# இந்திய வரலாற்றுக் காலமாகிய வேதகாலம் பற்றிய ஆய்வு

வேதங்களும் ஆகமங்களும் இறைவனால் அருளிச் செய்யப்பட்ட நூல்களாகும். இவை இந்து சமயத்தின் நூல்கள் என்றும் பிரமாண நூல்கள் என்றும் போற்றப்படுகின்றன. "வேதம் வித்தென்ற வினையடியில் இருந்து தோன்றியது". அது அறிவு என்னும் பொருள் தருகின்றது. ஆதலால் வேதங்களை அறிவு நூல்கள் எனக் கொள்வர்.

வேதங்களை வேதவியாசர் நான்காகத் தொகுத்துள்ளார் (இருக்கு, யசுர், சாமம், அதர்வம்) வேத இலக்கியங்கள் கி.மு. 1500 – 600 வரையிலான காலப் பகுதியில் தோற்றம் பெற்றன. வேதங்களைக் குறிக்க முதலில் திரயீ வித்யா என்னும் பதம் பயன்படுத்தப் பட்டது. திரயீ என்பதில் முதல் மூன்று வேதங்களும் உள்ளடக்கப்படு கின்றது. பிற்பட்ட காலப்பகுதியிலே நான்காவது வேதமாக அதர்வணம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. "நால் வேதங்களும் நான்மறை சதுர்மறை" என அழைக்கப்பட வேதங்கள் சுருதி, எழுதா மறை, எழுதாக் கிழவி என அழைக்கப்பட்டது.

**வேதகால சமுதாய நிலை**

வேதகாலத்தில் ஆரிய மக்கள் வாழ்ந்தமையினை நால்வேதங்களின் ஊடாக அறியமுடிகின்றது. ஆரிய மக்களுடைய வாழ்க்கை முறையே சமுதாய நிலை ஆகும். ஆரிய மக்கள் சமுதாய நிலையில் அரசியல், கல்வி, வர்ணப்பிரிவு, பொருளாதாரம், தொழில், திருமணமுறை, பொழுதுபோக்கு போன்றன பற்றி நோக்குவோம்.

ஆரிய மக்கள் உடைய அரசியல் பற்றி நோக்குமிடத்து "முடியாட்சி" நிலவியமை புலனாகின்றது. குடிமக்களுடைய நலன் கருதி முடியாட்சிப் பாங்கிலே ஆட்சி செய்யப்பட்டது. அதற்குச் சான்று ஆதாரமாக "சபா சமிதி" என்கின்ற இரு சபைகள் காணப்படுகின்றன. மக்களுடைய பிணக்குகள் தீர்க்கப்படும் இடம் சபா எனவும் அதில் தீர்க்கப்படாத பிணக்குகளை மன்னன் வருகை தந்து தீர்க்கும் இடம் சமீதி எனவும் அழைக்கப்படும். மக்கள் மன்னனுடைய ஆட்சியினை விரும்பியமையால் தமது ஊதியத்தில் 1/6 பங்கினை நன்கொடையாகச் செலுத்தினர். இக்காலத்திலே நாட்டின் உடைய தலைவன் தேசானி எனவும், கிராமத்தினுடைய தலைவன் கிராமானி எனவும் அழைக்கப்பட்டான்.

வேதகாலத்தில் இடம்பெற்ற கல்விப் பாரம்பரியம் "குருகுலக்கல்வி" பாரம்பரியமாகும். அதாவது சீடன் 5–18 வயது வரையிலான காலப்பகுதியில் குருவினுடைய இல்லத்தினை நாடிச் சென்று கல்வி பயில்வது ஆகும். இக்காலத்திலே சீடன் குருவிற்கும் குருபத்தினிக்கும் பணிவிடைகளை மேற்கொண்டு அறிவு நெறி ஆன்மீகநெறி, சமயநெறி ஆகிய மூன்றினையும் கற்றுத்தேர்வான். இவர்களுடைய கல்விப்பாவனை தவளைகத்தும் பாவனையில் அமைவு பெற்றுள்ளது. குருவினால் கூறப்பட்ட விடயங்களை சீடன் மீண்டும் மீண்டும் மனனம் செய்வதனால் அவ்வாறு அழைக்கப்படலாயிற்று. குருகுலக்கல்விப் பாரம்பரியம் முடிவுற்றதும் குருவானவர் சீடனை நோக்கி உண்மை பேசு, அறம் செய், ஓதுவது ஒழியேல் எனக் கூறி இறுதியாகச் சிறந்த இல்லாளைத்

தெரிவு செய்து இல்வாழ்க்கையினை மேற்கொள்வாயாக என ஆசீர்வதிப்பார்.

வேதகாலத்தில் நிலவிய வர்ணப் பிரிவு அல்லது சாதிப்பாகுபாட்டினை "புருசசூக்தம்" எனும் பகுதி விளக்கு கின்றது. இதன் ஊடாக அறிகின்றபோது பிரம்மனுடைய முகத்திலிருந்து பிரா மணர்களும் புயத்திலிருந்து சத்திரியர் களும் தொடையிலிருந்து வைசிகர்களும் பாதத்திலிருந்து சூத்திரர்களும் தோற்றம் பெற்றதாகக் கூறப்படுகின்றது. வர்ணம் ஆரம்பத்தில் நிறத்தின் அடிப்படையிலும் பின்னர் சிக்கலை உண்டுபண்ணவே தொழிலின் அடிப்படையிலும் வகுக்கப் பட்டது. அவ் வகையிலே நால்வகை வர்ணங்களும் அவர்களுக்குரிய கடமை களும் பின்வருமாறு. பிராமணர் – வேட்டல், வேட்பித்தல், ஓதல், ஓதுவித்தல், ஈதல், பெறல் போன்ற கடமைகளைச் செய்யத் தகுதியுடையவர்கள். இவர்களே தெய் வத்திடமிருந்து மக்களைப் பாதுகாப்பவர் ஆகும். சத்திரியர் எதிரியிடமிருந்து மக்களைப் பாதுகாப்பவர். கண்ணினை இமை காப்பது போல நாட்டினையும் நாட்டு மக்களையும் எதிரியிடமிருந்து பாதுகாப்பவர் இவர்களே. வைசியர் வறுமை யிலிருந்து மக்களைப் பாதுகாப்பவர்கள். விவசாயம், வியாபாரம் போன்றவற்றை மேற்கொண்டு நாட்டினையும், நாட்டு மக்களையும் பாதுகாப்பவர்கள். மேற் கூறப்பட்ட மூன்று வர்ணத்தவர் களுக்கும் கடமைகளைச் செய்யக் கடப் பாடு உடையவர்களே சூத்திரர்கள்.

ஆரிய மக்களிடையே காணப்பெற்ற பொருளாதாரமானது அவர்களிடையே காணப்படுகின்ற "பசுக்களைக்" கொண்டு தீர்மானிக்கப்பட்டது.

இக்காலத்திலே ஆரிய மக்களிடையே எண்வகை திருமண முறை காணப்பட்டது. அவற்றுள் "காந்தர்வ திருமண முறை" செல்வாக்கைச் செலுத்தியிருந்தது.இது ஒருவரை ஒருவர் விரும்பிச் செய்யும் திருமணம் ஆகும். இக்கால திருமணத்தின் போது மணமகன் இல்லாத்தாரே பொருட் களைக் கொடுத்து திருமணம் செய்து கொண்டனர். மாறாக பெண் ஊனமுற்றவ ளாக இருப்பின் மணமகள் இல்லத்தாரே பொருட்களைக் கொடுத்து மணமகனைத் தேர்ந்தெடுத்துக் கொள்வர்.

ஆரிய மக்களுடைய தொழில் விவசாயம், வியாபாரம் போன்றன ஆகும். இவர்கள் தங்களுடைய பொழுதுபோக் குக்காக கோழி, தாரா போன்றவற்றை வளர்த்து சண்டையிலே ஈடுபடுத்திக் கொண்டனர். பொழுது போக்குக்காக மந்தை வளர்ப்பில் ஈடுபட்டனர். இதுவே காலப்போக்கில் பொருளாதார வளர்ச்சி யில் முக்கியத்துவம் பெற்றது.

## வேதகால சமயநிலை

### 1) இருக்குவேதகால சமயநிலை

வேதங்களில் முற்பட்ட வேதமாக இருக்குவேதம் குறிப்பிடப்படுகின்றது. ஆரிய மக்கள் இயற்கைச் சக்திகளுக்குப் பயந்து அவற்றிற்குத் தெய்வாம்சம் கொடுத்து வழிபட்டமையினால் "இயற்கை வழிபாடு" எனப்பட்டது. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் போன்ற இயற்கைச் சக்தி களுக்குப் பயந்து அவற்றிற்கு கற்பனை யில் உருவ நாமம் கற்பித்து வழிபாட்டினை மேற்கொண்டிருந்தனர். ஒவ்வொரு இயற்கைச் சக்திகளுக்கும் தெய்வாம்சம் கொடுத்து வழிபாடு இடம்பெற்றது. இவ் வழிபாட்டிலே கூவி அழைத்தல், வேண்டல்,

பயன் பெறல் என்னும் அம்சங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தது. எச் சக்தியினால் தீங்கு ஏற்படுகின்றதோ அச் சக்தியினை கூவி அழைத்தனர். கூவி அழைத்த தெய்வத்திடம் வேண்டுதலை விடுத்தனர். அதனால் பயன் பெற்றனர்.

வழிபாட்டினை இலகுவாக்கும் பொருட்டு அத்தெய்வங்களை 3 வகைப் படுத்தினர். அவற்றுள் "மண் சார்ந்த தெய்வங்கள், விண் உலகைச் சார்ந்த தெய்வங்கள், இடை உலகைச் சார்ந்த தெய்வங்கள்" என "யக்சர்" எனும் அறிஞர் வகைப்படுத்தினார். அம் மூன்று கால தெய்வங்களுள்ளும் முக்கியத்துவம் வாய்ந்த தெய்வங்களாக இந்திரன், வர்ணன், வாயு, அக்கினி, உருத்திரன், பூசன், உஷை போன்றவர்கள் குறிப்பிடப்படுகின்றன.

இந்திரனை இடி மின்னலுக்குக் காரண மாகவும், 250 பாசுரங்களினால் போற்றியிருந்தனர். வருணனை மழைக்கு காரண மாகவும், வாயுவை காற்றிற்கு காரண மாகவும், அக்கினியை நெருப்பிற்கு காரண மாகவும், இக்காலத்தில் அழித்தல் தொழிலை மேற்கொள்பவனாக உருத்திரனையும் வழிபாடு ஆற்றியிருந்தனர். அதிகாலைத் தெய்வமாக உஷையினையும் வழி காக்கும் தெய்வமாக பூசனையும் வழிபட்டனர்.

மூன்று கால தெய்வங்களுள்ளும் முக்கியத்துவம் வாய்ந்த தெய்வமாக அக்கினியை வழிபட்டனர். அக்கினி "தேவதூதன் அல்லது புரோகிதன்" எனப்பட்டான். இவன் செந்நிற மேனியை உடையவனாகவும், கூரிய பற்களைக் கொண்டவனாகவும், நீண்ட தாடியினை உடையவனாகவும் குறிப்பிடப்படுகின்றான். அவன் விரும்பி உண்பது நெய் ஆகும். ஆரிய மக்கள் அக்கினி இடத்தே பால், தயிர், நெய், சோமரசம் என்பவற்றை இட்டு நீண்ட ஆயுள், போரில் வெற்றி, புத்திரப்பேறு, நிறைவான மழை, நிறைவான பசு, நோயற்ற வாழ்வு போன்றவற்றை வேண்டிக் கொண்டனர். ஒன்றைக் கொடுத்து இன்னொன்றைப் பெறுவதாக இவ்வழிபாடு இடம்பெற்றமையால் அது "பண்டமாற்று" வழிபாட்டு முறை என அழைக்கப்பட்டது.

ஆரிய மக்கள் பல தெய்வவழி பாட்டிலே காலப்போக்கில் அப்பல தெய்வங்களுக்கு மேலாகவும் ஓர் சக்தி இருந்திருந்தல் வேண்டும் என எண்ணினர். அச் சிந்தனையின் வெளிப்பாடாக தங்களுடைய ஆகுதிப் பொருட்கள் அல்லது அவிப்பாகங்களை தேவதூதுவனாக அக்கினியிடத்தே 9 முறை இட்டு எக்கடவுள் முதன்மை வாய்ந்தது என்கின்ற வினாவை எழுப்பினர். அதற்கு விடையாக "பிரஜா பதியே" சிறந்தது "அவனுக்கே உங்கள் அவிப்பாகங்களை செலுத்துங்கள்" என விடை கூறப்பட்டது. இக்கூற்றில் கூறப் பட்டதும் இதிலிருந்து தோற்றம் பெற்றதே "ஒரு தெய்வ வணக்கமாகும். பிரஜை மக்களையும் பதி தலைவனையும் குறித்து நிற்க மேலான பரம்பொருளாக பிரஜாபதியினைப் போற்றினர். இது இருக்குவேதம் 10ஆம் மண்டலம், 169ஆவது பாடலில் "ஏகம் ஸத்" எனும் தத்துவ மகாவாக்கியத்தின் ஊடாக "மாக்ஸ் முல்லர்" என்பவரினால் ஒரு கடவுள் கோட்பாடாக நிறுவப்பட்டது.

**இருக்குவேதம் கூறும் தத்துவக்கருத்து**

இருக்கு வேதத்தில் ஆரிய மக்களிடையே இயற்கை வழிபாடு இடம்பெற்றது. அதில் பல தெய்வ வணக்கத்தில் இருந்து ஒரு தெய்வ வணக்கம் இடம்பெற்றது.

அதில் இருக்கு வேதம் 10ஆம் மண்டலம், 169ஆவது பாடலில் உள்ள ஏகம்ஸத் இன் ஊடாக நிறுவப்படுகின்றது.

ஏகம் ஸத் என்பதற்கு "உள்பொருள் ஒன்று" என்பது பொருளாகும். உள் பொருள் ஒன்று என்பதனை ஏகம் ஸத்தின் ஊடாக மாக்ஸ் முல்லர் என்பவர் ஒரு கடவுள் கோட்பாடாக நிறுவியுள்ளார். இவ் ஒரு கடவுள் கோட்பாடு பிற்கால பல தத்துவங்கள் தோற்றம் பெறுவதற்கு வழிசமைத்தது எனலாம்.

ஏகம் ஸத் எனும் தத்துவ வாக்கியம் ஏற்படுத்திய புரட்சியானது இந்த தத்துவ சிந்தனை மரபிலே உபநிடதம் தோற்றம் பெறுவதற்கு வழிவகுத்தது எனலாம். உபநிடத தத்துவ மகாவாக்கியங்கள் தத்துவவாதிகளிடையே தத்துவ சிந்தனையினை ஏற்படுத்தியது.

உபநிடத தத்துவ மகாவாக்கியம் ஏற்படுத்திய புரட்சியானது மூவகை வேதாந்தம் தோற்றம்பெறுவதற்கு வழி வகுத்தது. சங்கரர் 8ஆம் நூற்றாண்டிலே அத்வைதக் கோட்பாட்டினை முன்வைத்தார். 11ஆம் நூற்றாண்டிலே இராமானுஜர் விசிட்டாத்துவைதக் கோட்பாட்டினை முன்வைத்தார். இவ் இரு கோட்பாடு களிலும் காணப்பட்ட குறைபாடுகளை நீக்கும் பொருட்டு 13ஆம் நூற்றாண்டில் துவைதக் கோட்பாடு மத்துவரால் முன் வைக்கப்பட்டது. மூவகை வேதாந்தங்களி லும் காணப்பெற்ற முரண்பாடுகளைப் போக்கும் முகமாக முடிவானதும் தெளி வானதுமான தத்துவமாக "சைவசித்தாந்தம்" தோற்றம் பெற்றது. அதனையே சிவப்பிர காசம் "வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்" என்கின்றது.

**2) யசுர் வேதம்**

ஆரம்பத்தில் வேதங்களைக் குறிக்க திரயீவித்யா எனும் பதம் பயன்படுத்தப் பட்டது. திரயீவித்யா என்பதனுள் யசுர் வேதம் உள்ளடக்கப்படுகின்றது. "யசுர் வேதம் கிருஷ்ணயசுர், சுக்கில யசுர்" எனும் இரு பிரிவுகளையும் 101 சாகை களையும் கொண்டுள்ளது. யாக வேதிகை அமைக்கும் முறை யாகங்கள் கிரியை களின் நோக்கம், அவற்றினுடைய பயன் பாடு, யசுர் வேதத்தில் குறிப்பிடப்படு கின்றது. இங்கு அசுவமேய யாகம், இராஜசூய யாகம் பற்றிக் குறிப்பிடப்படு கின்றது.

யசுர் வேதத்தின் சிறப்பு வாய்ந்த பகுதி சதருத்திரியம் ஆகும். ஒரு தெய்வத்திற்கு பல நாமம் கூறி வழிபடும் வழிபாட்டின் முறையினைத் தோற்றுவிப்பது யசுர் வேதம் எனலாம். சதருத்திரியத்தில் உருத்திரனுக்கு 100 நாமங்கள் குறிப்பிடப் படுகின்றன. இதுவே பிற்பட்ட காலப்பகுதி யில் இந்துக்கள் மத்தியில் "அர்ச்சனை" முறை தோற்றம் பெறுவதற்கு வழி சமைத்தது எனலாம்.

**3) சாமவேதம்**

சாமவேதம் திரயீவித்யா என்பதனுள் உள்ளடக்கப்படுகின்றது. சாமம் என்பதற்கு இசை என்பது பொருளாகும். இறைவன் இசைப்பிரியன் என்பதும் இசைக்கு மயங்குவான் என்பதும் வரலாறில் கண்ட உண்மை ஆகும். இந்துக்களிடையே தோற்றம் பெற்ற இசைக்கலை வளர்ச்சி யிலே சாமவேதம் முக்கியத்துவம் பெறு வதனைக் காணமுடிகிறது. இறைவன் இசையில் கொண்டுள்ள ஈடுபாடு காரண மாக இசைப்பிரியன், சாமகானப் பிரியன் என பலவாறு அழைக்கப்படுகிறான். "சாம

வேதம் 1549 பாடல்களைக் கொண்டுள்ளது பூர்வ ஆர்சிகம், உத்தர ஆர்சிகம் எனும் இருபிரிவுகளைக் கொண்டுள்ளது".

நால் வேதங்களில் தேவர்களுக்கு இசையில் கொண்டுள்ள ஈடுபாடு காரண மாக சாமவேதமே தமக்குப் பிரியமானது எனக் குறிப்பிட்டுள்ளனர். அதனை "வேதா னாம் சாமவேதோஸ்மி" எனும் சுலோகம் வலியுறுத்துகின்றது. ஆரிய மக்கள் இறை வனை இசையினால் ஏற்றி வழிபடுவதற்குச் சாமவேதத்தினைச் சிறந்த சாதனமாகப் பயன்படுத்தினர். சாமவேதம் இசைக்குக் கொடுத்த முக்கியத்துவத்தினாலேயே பிற் பட்ட காலப் பரப்புக்களில் இந்து ஆலயங் களில் இடம்பெறுகின்ற 16 வகையான சோடச உபசாரங்களில் ஒன்றாக இசைக் கலை குறிப்பிடப்படுகின்றது எனலாம்.

**4) அதர்வவேதம்**

வேதங்களில் பிற்பட்ட வேதமாக அதர்வவேதம் குறிப்பிடப்படுகிறது.இது "பிரம்மவேதம் / அதர்வாங்கிஷம்" என அழைக்கப்படுகின்றது. அதர்வவேதம் மந் திரம், மருந்து, மாந்திரீகம் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கின்றது. அவை அறிமுகப்படுத்தப்பட்ட நோக்கம் யாது எனின், "அரக்கர்களை" அழிப்பதற்கு ஆகும். ஆனால் அவை அறிமுகப்படுத்தப்பட்டதன் நோக்கம் மாறி, சமுதாயத்திலே மக்களுக் குள்ளே தீய செயல்களுக்குப் பயன்படுத்தப் பட்டது. இதனால் சமுதாயச் சீர்கேட்டுக்கு உள்ளாகியது. அதனாலேயே அதர்வவேதம் முன்னர் ஓர் வேதமாக ஏற்றுக்கொள்ளப்பட வில்லை.

அதர்வ வேதத்தில் சமுதாயத்தவர் களுக்கு நன்மை விளைவிக்கக்கூடிய மந்திரங்களும் தீமை விளைவிக்கக்கூடிய மந்திரங்களும் காணப்படுகின்றன. நன்மை விளைவிக்கக்கூடிய மந்திரங்களினால் பிரிந்திருக்கின்ற தலைவன், தலைவியர் களை இணைத்தல், நோயுள்ளவரை நோயற்றவராக மாற்றுதல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். தீமை விளைவிக்கக்கூடிய மந்திரங்களினால் ஒன்றாக இருக்கின்ற தலைவன் தலைவிகளைப் பிரித்தல், நோயற்றவரை நோய்க்கு ஆளாக்குதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

ஆரிய மக்கள் போற்றுகின்ற அதர்வ வேதத்தில் சில வழிபாட்டு முறைகளும் சிறப்பிக்கப்படுவதனைக் காணக்கூடியதாக உள்ளது. அவற்றுள் "பேஷஜானி, பௌஷ்டி கானி, அபிசாருனி" ஆகிய வழிபாட்டு முறைகள் உள்ளடக்கப்படுகின்றன. அதர்வ வேதமானது இறைவனை ஏற்றிப் பாடும் பாசுரங்களைத் தன்னகத்தே கொண்டி ருப்பதோடு மக்கள் நன்மை பெறக்கூடிய வழிபாட்டு முறைகளையும் உள்ளடக்கி இருப்பதனால் நான்காவது வேதமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

**உசாத்துணை நூல்கள்**


1) இந்திய தத்துவ ஞானம், சி. இலட்சுமண ஐயர்.
2) இந்திய சமய தத்துவம், ரி.எம்.பி. மகாதேவன்
3) இந்திய தத்துவக் களஞ்சியம், சோ.ந.கந்தசாமி
4) இந்து தத்துவ சிந்தனைகள், டாக்டர் கிரியண்ணா.



**கு. துஷ்யந்தன்**
க.பொ.த (உ/த) 2012

# கக்னேயின் கற்றல் வகைகள் (Gagne's Types of Learning)

**திருமதி ம. கிருபாகரன்** B.Sc. (Hons), Dip. in Edu.

ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த றெபெட் எம். கக்னே (Bebert M. Gagne's – 1916) அறிகை உளவியலாளர் (Cognitivist) போதனா உளவியலாளர் (Insturctional phychologist) என அழைக்கப்படுகின்றார்.

கக்னே, கற்றல் என்பதற்கு பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்துகின்றார். ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிவரை நீடித்திருக்கக்கூடியதும், வளர்ச்சிச் செயன்முறைக்கு எளிதாகக் காரணம் காட்டமுடியாததுமான மனித மன நிலையில் அல்லது ஆற்றலில் ஏற்படுகின்ற மாற்றம் கற்றல் எனப்படும். இவ்வாறாக கற்றுக்கொள்ளப்படும் இயல்புகள், ஆற்றலுடைமைகள் எனப்படும். இங்கு மாற்றம் என்பது கற்றலுக்கூடாக வெளிக்கொண்டுவரப்படும் நடத்தையில் ஏற்படும் மாற்றத்தைக் குறிப்பிடுகின்றது. மனநிலையில் மாற்றம் என்பது மனப்பாங்கு (Attitute) அல்லது ஆர்வம் (Interest) அல்லது மதிப்பு (Value) என்றவாறாக அமையலாம்.

கக்னேயின் கற்றல் வகைகள் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பல வழிகாட்டுதல்களை வழங்குகின்றது. கக்னே கற்றல் அடுக்கமைவுக் கோட்பாட்டை (Hierarchical theory) விருத்தி செய்துள்ளார். இவருடைய கருத்துப்படி உயர்மட்ட இலக்குகளை அடைவதற்கு முன் தாழ்மட்ட இலக்குகளில் தேர்ச்சி நிலையை அடைந்திருத்தல் வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார். எனவே ஒவ்வொரு புதிய திறன்களும் முன்னராகப் பெற்றுக்கொள்ளப்பட்ட திறன்களை அடிப்படையாகக் கொண்டே கட்டியெழுப்பப்பட முடியும்.

மாணவர்கள் பாடத்தின் ஓர் தேர்ச்சியில் காணப்படும் பல தேர்ச்சி மட்டங்களில் தேர்ச்சி பெறுவதன் மூலமாகவே முழுப் பாடப் பரப்பையும் கற்றுக்கொண்டதாகக் கருதப்படமுடியும்.

புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கமைவாகத் தயாரிக்கப்படும் பொதுப்பரீட்சை வினாத்தாள்கள் மாணவர்களின் சாதாரண இடைத்தர, உயர்மட்ட அறிவைச் சோதிக்கும் வினாக்கட்டமைப்புக்களைக் கொண்டிருக்கின்றன. இது கக்னேயின் அடுக்கமைவுக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டதாகும்.

கக்னே மனிதர்கள் கற்றுக்கொள்ளும் அறிவாற்றல் திறன்களை எட்டு வெவ்வேறு வகைகளாக வேறுபடுத்தி இனங்கண்டுள்ளார். இவ் அறிவாற்றல் திறன்கள் அவற்றின் சிக்கல்தன்மையின், பரிமாணங்களின் அடிப்படையிலேயே வகைப்படுத்தப்பட்டுள்ளன. மிகவும் சிக்கலான வகையான அறிவாற்றல் முறையாக்கம் எளிமையான வகைகளை அடிப்படையாகக் கொண்டது. அவை பின்வருமாறு –

- **சமிக்ஞைக் கற்றல்** (Signal Learning)

  சமிக்ஞை ஒன்றுக்குத் தனியாள் ஒருவர் பொதுவான பரவலான துலங்கல் ஒன்றைக் காட்டுவதற்கு கற்றுக்கொள்ளல் ஆகும். நாம் எம்மை

அறியாமலே கற்றுக்கொள்ளும் அதிகளவிலான கற்றல் இவ்வகை யைச் சேர்ந்தது. முன்பிள்ளைப் பருவத்தின் ஆரம்பக்கற்றல் செயற் பாடுகள் இவ்வகையிலேயே இடம் பெறுகின்றன.

- **தூண்டல் துலங்கற் கற்றல்** (Stimulus – Response Learning) மிகவும் குறிப்பான அல்லது வேறுபாடுடைய தூண்டல் ஒன்றுக்குத் தெளிவான துலங்கல் ஒன்றை உரு வாக்குதலாகும். கக்னேயின் கருத்துப் படி இங்கு கற்றல் என்பது உண்மையில் சரியான தூண்டலையும் பிழையான தூண்டலையும் வேறாக்கம் செய்யும் விடயமாக உள்ளது.
- **சங்கிலியாக்கற் கற்றல்** (Chaining Learing) குறித்த குறிக்கோளை அடை வதை நோக்கமாகக் கொண்டு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தூண்டி துலங்கல் சோடிகளை ஒரு தொடரொழுங்காக இணைத்தல் மூலம் செயன்முறை ஒன்றை மேற் கொள்ளல் சங்கிலியாக்கற் கற்றல் ஆகும்.
- **சொல்சார் இணைவுக்கற்றல்** (Berbal Association Learning) மனிதர்கள் பரிபாஷையாக்கம் (Encode) செய்யவும், ஒலிவடிவங்கள் ஊடாக அறிவை வெளிக்காட்டவும் கூடிய ஆற்றல் உடையவர்கள். சொல்சார் இணைவு இங்கு மிகவும் மூலாதார மான வகையான சொல்சார் நடத்தை யாக உள்ளது.
- **வேறாக்கம் செய்யக்கற்றல்** பௌதீக ரீதியில் வேறுபாடு இல்லாத (Diserimination Learing) ஆனால் பௌதீகப் பரிமாணங்கள் அல்லது சிறப்பியல்புகளில் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுகின்ற தூண்டி களுக்கு வெவ்வேறான துலங்கல் களைக் காட்டுவதாகக் கற்றுக்கொள் ளல் வேறாக்கும் செய்யும் கற்றல் ஆகும்.
- **எண்ணக்கருக் கற்றல்** (Concept Learning) கற்போர் முழுத்தூண்டல் தொகுதிக் கும் தனியான பொதுவான துலங்கலை உருவாக்கக்கூடிய திறனைப் பெறுதல். ஒரு தொகுதிப் பொருட்களில் இருந்து அவற்றிடையேயான வேறுபாடு களைக் கண்டறிவதன் மூலம் ஒரு பொதுவான துலங்கலைக் காட்டுதல் ஆகும். இங்கு பல்வேறு தூண்டிகளி டையே வேறாக்கம் செய்தல் ஆகும்.
- **விதிகளைக் கற்றல்** (Rules Learing) சில எண்ணக்கருக்கள் தூய வடிவ மாக இருப்பதில்லை. இவை ஏனைய எண்ணக்கருக்களை உள்ளடக்கிய விதிகளை அடிப்படையாகக் கொண் டவை. எனவே விதிகளைக் கற்றல் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணக்கருக்களுக்கிடை யிலான தொடர்புகளைக் கற்றல் எனப் பொருள்படும்.
- **பிரச்சினை தீர்த்தல்** (Promlem solving) உள்ளார்ந்த நிகழ்வுகளை ஆழ மான சிந்தனைகளை அடிப்படை யாகக் கொண்ட கற்றல் முறையாகும். உயர்மட்ட சிந்தனை இக்கற்றலின் போது ஏற்படுகிறது. இங்கு உயர் நிலை விதிகள் கற்கப்படுகின்றன. இம்முறையின் போது கற்போர் சிந்தனை செயன்முறையை மேற் கொண்டே தீர்வைக் காணமுடியும்.

எனவே கக்னேயின் கருத்துப்படி கற்றலானது ஒருவரது அறிவாற்றல் விருத்தியில் ஒரு படிமுறையாக நடைபெறுகின்றது. ஒருவன் பிரச்சினையை விடுவித்தலை மேற்கொள்ள உயர்மட்ட விதிகளை அறிந்திருத்தல் வேண்டும். இதற்கு சாதாரண விதிகளையும் வரையறுக்கப்பட்ட எண்ணக்கருக்களையும் அறிந்திருத்தல் வேண்டும். இதன் மூலம் அடிப்படைக் கற்றல் வடிவங்களை மாணவர்களும் ஆசிரியர்களும் அறிந்து கொள்வதன் மூலம் மாணவர்களின் அறிவாற்றல் விருத்தியை ஏற்படுத்த முடியும்.

**உசாத்துணைகள்**


1. Websites 1) w.w.w.clese.org
2. Stebhen.N, Elliott, Educational Psychology effective teaching, Effective Learning (2000)


♣ ❖ ♣

# விடை தேடுவோம்

**திருமதி சாந்தினி நாகராஜா** B.A., Dip in Edu.
(வழிகாட்டலும் ஆலோசனையும்
பொறுப்பாசிரியர்)
உப அதிபர்

சமூகம் என்ற பெரியதோர் வட்டத்தினுள் வாழும் ஒவ்வொரு மனிதனும் எவ்வாறு வாழவேண்டும் என்பதனை அவனது கலாசாரம், பாரம்பரியங்கள் எடுத்துக்கூறிய வண்ணமேயுள்ளன. அந்த வகையில் சமூகங்களுக்கு எது சாதாரண நடைமுறை, எது அசாதாரண நடைமுறை? நல்லது எது? தீயது எனது? என்பது பற்றிய நியமங்களைக் கூறிக்கொண்டேயிருக்கின்றன. இந் நியமங்கள் சமயப் பெரியார்கள், வயதில் மூத்தோர்கள், ஆசிரியர்கள் போன்றவர்களால் பேணப்பட்டுத் தொடர்ந்துவரும் சந்ததிகளுக்கு கடத்தப்பட்டு வருகின்ற செயற்பாடுகள். இவை வழக்காக இருந்து வந்துள்ளன. ஆனால் தற்கால வழக்கில் இவ்வாறான செயற்பாடுகள் வலுவிழந்த செயலாக நடபெற்றுக்கொண்டிருப்பதால் எமது தமிழ்ச் சமூகம் பல துன்பங்களுக்கு உள்ளாகித் தவிக்கின்ற நிலைமையில் இன்று காணப்படுகிறது.

ஒரு சமூகம் பிரச்சினைகள் எதுவுமின்றி நலமானதாக இருப்பதை உணர்வதற்கு சமூகத்தில் வாழும் ஒவ்வொரு தனிமனிதனும் தான் நலமாகவும் சுகமாகவும், நிம்மதியாகவும் வாழ்வதாக அவனால் உணரப்படவேண்டும். அவ்வாறு ஓர் மனிதன் உணரவேண்டுமாயின் வாழ்க்கைக்கு குறிக்கோள், அர்த்தம் என்பன நிச்சயமாகத் தேவைப்படும். அர்த்தமற்ற வாழ்க்கையினை வாழமுற்படும்போது மனிதன் தனது சுயகௌரவம், தன்னம்பிக்கை என்பவற்றை இழந்து விடுகின்றான். இந்நிலைமையில் குடும்பம், சமூகம் என்பவற்றில் அவனுக்கு இருந்த மதிப்பு, மரியாதை என்பன அவனையும் அறியாமல் தவறிப்போய் விடுகின்றன.

ஒரு மனிதன் தான் சமூகத்தின் உறுப்பினர், குடும்ப அங்கத்தவர், ஊரிலுள்ள நற்பிரஜை என்ற உணர்வுடன் சமூகத்தின் கடப்பாடுகள், குடும்ப கௌரவம் போன்றவற்றைப் பேணிக் காக்க வேண்டிய தேவையுள்ளவர் என்ற உணர்வை உண்மையாக ஏற்று நடப்பாராயின் மனித வாழ்வு செழிப்பானதாகவும் அர்த்தமுள்ளதாகவும், சென்ற இடமெங்கும் சிறப்புப்பெறுவதாகவும் விளங்கும்.

**ஆனால் ...**

ஆண்கள், பெண்கள், குழந்தைகள் முதியோர் எனப் பலதரப்பட்ட மக்கள் தொகுதியைக் கொண்ட சமூகங்களில் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தலையெடுக்கத்தான் செய்கிறது. அதற்கு சமூகங்கள் முகம் கொடுத்தே ஆகவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கும் தள்ளப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. இந்நிலை தொடருமாயின் ஆரோக்கியமற்ற சமூகங்கள் உருவாகி ஆரோக்கியமான சமூகங்கள் இருந்த சுவடு தெரியாது மறைந்து போய்விடும். இந்நிலைமை ஏற்படாதிருக்க மேற்கூறிய சகல தரப்பு தொகுதியினரும் தமது சிறப்பான ஒத்துழைப்புக்களை நல்கி ஆரோக்கியமான

சமூகக் கட்டமைப்பை உருவாக்க வழி செய்யவேண்டும்.

நாம் என்ன செய்கிறோம் என்ன செய்யவேண்டும் என்று சற்று நிதானமாக சிந்தித்துப் பார்த்தால் நிச்சயமாக ஆரோக்கியமான சமூகம் ஒன்று கண்ணெதிரில் காட்சியளிக்கும்.

**வேண்டாத பாத்திரம்**

இன்றைய சூழலில் போதைதரும் பொருட்களுக்கு அதிகமானவர்கள் அடிமையாகிக் கொண்டு செல்லுகின்ற நிலைமை தொடருமாயின் அபாயகரமான நிலைக்குத் தள்ளப்பட்டு ஆரோக்கியமற்ற சமூகங்களை எதிர்காலத்தில் உருவாக்கி அதில் சிக்கிச் சீரழியும் நிலைமை ஏற்படும். அந்த வகையில் இது தொடர்பான விழிப்புணர்வு சகல தரப்பினருக்கும் தேவையானதாகும்.

போதை தரும் பொருட்களைப் பயன்படுத்தும் மக்கள் தொடர்பாகச் சிந்திக்கும் போது பாவனையாளர்கள் உடல் சார்ந்த பிரச்சினைகள், உளம் சார்ந்த பிரச்சினைகள், குடும்பம் சார்ந்த, சமூகம் சார்ந்த பிரச்சினைகள் எனப் பலதரப்பட்ட பிரச்சினைகளைத் தோற்றுவிப்பவர்களாகவும் பின்னர் இப்பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கமுடியாத சூழ்நிலையில் தம்மைத் தாமே அழித்துக் கொள்ளும் நிலையுடன் சமூக அமைப்பைச் சீரழிக்கின்ற செயற்பாட்டில் ஈடுபடுபவர்களாகவும் தோற்றமளிக்கத் தொடங்குவார்கள்.

போதைப் பொருட்கள் பாவனை தொடர்பான அதிகரிப்புக்குக் காரணம் என்ன என்று பார்ப்போமாயின் உளம் பாதிக்கப்பட்ட சமூகங்கள் தமது மன வேதனையை மறப்பதற்காகப் போதையை நாடியிருக்கலாம். போதையின் போது மறக்கப்படும் வேதனை மீண்டும் தலைகாட்டும் போது மீண்டும் மீண்டும் போதைக்கு அடிமையாவதால் யாது பயன் என்று சிறிது சிந்தித்துத் தான் பார்க்கமுடியாதா? சிதறடிக்கப்பட்ட சமூக வலையில் போதைப் பொருட்கள் ஊடுருவல் அதிகம் தேவையில்லை என்பது புரிந்துகொள்ளவேண்டியதாகும்.

எமது சமுதாயத்திற்கென காணப்பட்ட கலாசாரம், பண்பாடு என்பவற்றைத் தள்ளி வைத்துவிட்டு புதிய கலாசார மாற்றங்களை உள்வாங்க எமது சமூகங்கள் இன்று போட்டி போட்டுக்கொண்டிருப்பதும் புதிய வகையிலான விருந்து வைபவங்கள் என்பனவெல்லாம் எமது சமூக கட்டமைப்பை உடைத்துவிட்டமையால் சிதறடிக்கப்பட்ட கலாசாரம், பண்பாடு எவ்வாறு மீண்டும் புத்துயிர் பெற முடியும் என்பதையும் ஆழமாக நோக்கத் தான் வேண்டும்.

சிக்கிச் சீரழிந்து சிதறுண்டுபோயுள்ள சமூகங்களில் போதை தரும் பொருட்களுக்கான விற்பனையாளரும் விற்பனையை அதிகரித்து தமது லாபத்தை சுருட்டிக்கொண்டு செல்வதற்கே முயற்சி எடுப்பார்கள். இந்நிலையில் போதை தரும் பொருட்களுக்கு அடிமையாகியவர்கள் அதிலிருந்து விடுபட்டாலும் விடுபடவிடமாட்டேன் என்ற வகையில் விற்பனையாளரின் செயற்பாடுகள் அமையுமிடத்து ஆரோக்கியமற்ற சமூகங்களே எதிர்காலத்தில் முளைத்தெழுந்து நிற்கும் நிலைமைதான் தோன்றும்.

எதிர்கால சமூகம் ஆரோக்கியமான தாக இருக்கவேண்டுமாயின் இன்றைய சமூகம் சிறப்பாக விளங்கவேண்டும். அந்த வகையில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் ஒவ்வொருவரும் சமூகத்திற்கு பயனுள்ள மனிதனாக வாழவேண்டிய தேவையுள்ளவர் என்பதை நிச்சயமாக உணரவேண்டும். வாழும் வரை வாழ்க்கை சிறப்பானதாக இருப்பதுடன் எதிர்கால சந்ததியும் சிறப்பாக வாழவேண்டும் என்ற வகையில் நாம் சிந்திக்கவேண்டும்; செயற்படவேண்டும்.

உளம் சார்ந்த பிரச்சினையில் சிக்கித் தவிப்போர் மட்டுமன்றி உண்மையான ஒரு பிரச்சினைக்கு முகம் கொடுத்து அதற்குத் தீர்வு காணமுடியாத சூழ்நிலை களில் அப்பிரச்சினையிலிருந்து விடுபடும் முயற்சியாக போதைக்கு அடிமையாகி விடுவதும் உண்டு. மேலும் வேலை எதுவு மின்றி பயனுள்ள எதையும் என்னால் செய்யமுடியாது. சாதாரண நடைமுறை வாழ்வில் என்னால் இணையமுடியாது, உதவ முடியாது என்ற எண்ணத்துடன் ஊர் சுற்றும் வாலிபனாக மாறும் போதும் போதைக்குப் பழக்கப்படும் சந்தர்ப்பங்கள் உருவாகத்தான் செய்யும். இந்நிலைமை தடுக்கவேண்டியதொன்றாகும்.

போதை தரும் பொருட்களுக்கு அடிமையாவதைத் தடுப்பதற்கு தனி மனிதன் ஒருவன் தான் நலமாக இருப்ப தாக உணரவேண்டும். அவ்வாறு உணர் வதற்கு அவனுள் பல்வேறுபட்ட விட யங்கள் பூர்த்தியாகியிருக்கவேண்டும். குறிப்பாக வாழ்க்கைக்கு ஒரு குறிக்கோள், அர்த்தம், திருப்தி, மனநிறைவு என்பன நிறைவு செய்யப்படவேண்டும். இவை ஒருவனுக்குக் கிடைக்கவேண்டுமாயின் உரிய காலத்தில் தொழில்வளம், செய்யும் தொழிலே தெய்வம் என்ற வகையில் ஏற்றத்தாழ்வுகள் பார்க்காது தொழில் செய்யும் மனப்பாங்கு, தனிமனிதன் ஒருவனுக்கு சமூகம் வழங்கும் கௌரவம், சுயமதிப்பு என்பன வாழ்க்கையில் தன் னம்பிக்கையை ஏற்படுத்தும். இவ்வகை யில் தனக்கும் சமூகத்தில் அர்த்தமுள்ள பங்குண்டு என்ற உணர்வை மனிதன் பெற்று ஒரு சமூகத்திற்குரியவனாகவும் குடும்பத்திற்குரியவனாகவும் வளமான வாழ்வை நோக்கிப் பயணம் செய்யும் போது ஆரோக்கியமான சமூகம் ஒன்று கட்டியெழுப்பப்படும். இல்லையேல் போதைக்கு அடிமையாகுபவர் தொகை அதிகரித்து உலக நாடக மேடையில் வேண்டாத பாத்திரங்களின் தொகை அதி கரிக்கும் அபாயத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலையொன்று உருவாகிவிடும்.

**வேண்டாத பொழுதினில்**

பெற்றோருடன் இருந்து கல்வி கற்று வண்ணச்சிட்டுக்களாகப் பறந்து திரியும் பருவத்தில் குழந்தைகளைச் சுமக்கும் நிலைமை தவிர்க்கப்படவேண்டியதொன் றாகும். வேண்டாத பொழுதினில் உரு வாகும் வேண்டாத கர்ப்பம் பற்றிக் கட்டி ளமைப் பருவத்துப் பெண் குழந்தைகள் மிக அவதானமாக இருக்கவேண்டியது அவசியமாகும். மதிமயங்கும் பருவத்தில் மனம் போன போக்கில் பருவத்தின் ஊர் வலங்கள் சமூக வேலிகளைக் கடந்தும், சமயச் சடங்குகளைக் காற்றோடு பறக்க விட்டும் செல்லுகின்ற வேளையில் வேண்டாத கர்ப்பம் ஒன்று உருவாகிவிட வழியேற்படுகிறது.

தனித்தனி வீடுகளில் தமது குடும் பங்களைக் கொண்டு நடாத்திய சமூகங்

கள் அகதிகளாக்கப்பட்டு பலதரப்பட்ட மக்கள் சூழலில் நெருக்கமாகவும் சிறுசிறு கூட்டு வீட்டுக்குள் வாழும் நிலைமை காணப்படுவதாலும் இவ்வாறான சூழ் நிலை ஏற்பட வாய்ப்புக்கள் அதிகமுண்டு.

உலக அனுபவங்கள் ஏற்பட்டு குடும் பத்தைக் காப்பாற்றும் நிலை இல்லாது போய் உலக அனுபவங்கள் ஏற்பட முன்னரே குடும்பத்தைக் காப்பாற்றவும் பொருளா தாரத்தைக் கட்டியெழுப்பவும் வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படும் சமூக அமைப்புகளில் ஏமாற்று நட வடிக்கைகள், பாலியல் வல்லுறவு என்ப வற்றை எதிர்கொள்ளும் போதும் இவ் வாறான சூழ்நிலை தோன்றச் சந்தர்ப்பங்கள் உண்டு.

வேற்று நாட்டுக் கலாசாரங்களை விரும்பியே உள்வாங்கும் இப்பரு வத்தினர் காதல் என்ற வலையில் தவிக்கின்ற வேளையில் பாலியல் கல்வி தொடர்பான எதுவித அறிவும் அற்றவர் களாக இவ் உறவின் மூலம் ஏற்படக்கூடிய எதிர்கால அபாயத்தை உணராத போது வேண்டாத கர்ப்பம் ஏற்படவே செய் கின்றது.

வேண்டாத கர்ப்பத்தின் மூலம் எதிர்கொள்ளவேண்டிய பாதிப்புகள் மிக அதிகம் என்றே கூறமுடியும். குறிப்பாக சமூகத்தின் பார்வையிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ள சட்டவிரோத கருச்சிதைவு முயற்சியில் ஈடுபட்டு குருதிப் பெருக்கு தொற்றுநோய்களுக்கு ஆளாகி உயிர் பறிபோகும் நிலைமை காணப்படுகிறது. கருச்சிதைவு தவறும் போது பிறக்கும் சிசுவைத் தூக்கி எறிந்து விட்டுச் செல்லும் அவலமும், பிறந்தவு டனேயே புதைகுழிக்கு அனுப்பிவிடும் தர்மமும் தினம் தினம் செய்திகளாகக் காணப்படுவது வேண்டாத கர்ப்பத்தின் மூலமான வேண்டாத செயற்பாடு.

பிரசவம் ஒன்றினை எதிர்கொள்ள வேண்டிய பருவத்தினை இப்பருவத்தினர் பெற்றிருக்காத தன்மை காரணமாக (எலும்புகள், பிறப்புக் கால்வாய்) பிரச வத்தின்போது இறப்பைச் சந்திக்கமுடியும். மேலும் வேண்டாத பொழுதினில் ஏற்பட்ட இச் சம்பவத்தினால் குடும்பம், சமூகம் சார்ந்த எதிர்ப்புகளைச் சந்திக்கவேண்டிய சூழ்நிலை உருவாகுவதால் ஆரோக்கிய மற்ற சிசுவையே சமூகத்திற்கு வழங்கு பவர்களாகக் காணப்படுவார்கள். இச் செயற்பாட்டில் ஈடுபடுபவர்களின் பொறுப் புணர்வு அற்ற தன்மை காரணமாக மீண்டும் மீண்டும் இச் செயற்பாட்டில் ஈடுபடுவார்களாயின் சமூகங்களின் நிலைமை கேள்விக்குறியாகிவிடும்.

வேண்டாத கர்ப்பத்தினைச் சுமப்ப வர்கள் குடும்பத்தின் தண்டனை, சமூ கத்தின் தண்டனை என்பவற்றுக்கு உள்ளாகும்போது தன் மேல் பொறுப்பும் மனவிரக்தி, மனச்சோர்வு, ஆதரவின்மை போன்றவற்றை எதிர்கொள்ளும் போது தற்கொலை முயற்சிக்குச் சென்றுவிடும் அபாயக்கியசாலியாகி விடுகிறார்கள்.

கட்டிளமைப் பருவத்தில் ஏற்படும் துன்பத்தை தடுக்கவேண்டிய கடப்பாடு பெற்றோருக்கும், சமூகப்பெரியோ ருக்கும், ஆசிரியர்களுக்கும் உண்டு. அந்த வகையில் இப்பருவத்தினரின் பிரச்சி னைகள் செவிமடுக்கப்படவேண்டும். உயரிய சிந்தனைகள் வழங்கப்படவேண்டும். சுய கௌரவத்துடன் வாழ வழிகாட்ட

வேண்டும். சமூகக் கடப்பாடுகள் தகர்க் கப்பட்டு கலாசாரங்கள் சீரழிக்கப்பட்ட சமூகங்களில் பாலியல் கல்வியூடாக "பருவத்தே பயிர்" செய்யவேண்டிய தத்துவமும் மற்றும் ஏற்படக்கூடிய தீய விளைவுகள் சுட்டிக்காட்டப்படவேண்டிய தேவை ஒன்றினை நோக்கிச் செல்லு கின்றோம்.

**ஆடும் தூண்கள்**

ஒரு மனிதனின் உடற்கலங்களிலும் தொகுதிகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டு அவற்றின் தொழிற்பாடுகள் படிப்படி யாகக் குறைந்து செல்லும் நிலையே முதுமையாகும். முதுமை என்பதை எதிர் கொள்ள எவருக்குமே விருப்பம் இல்லாத போதிலும் இயற்கையின் நியதிப்படி அந் நிலைக்குச் சென்றுதான் ஆகவேண்டிய தொரு நிலைமை யாவரும் சந்தித்துக் கொள்ளவே வேண்டும். அவ்வாறான நிலையில் வயதில் மூத்தோர் பல பிரச்சி னைக்கு முகம் கொடுத்து தம்மை சரி செய்யவேண்டிய நிலைமையும் காணப் படுகிறது.

மருத்துவ வசதிகள் பெருக்கிக் கொண்டு செல்லுகின்ற வேகத்தின் காரண மாக முதியோர் தொகையும் அதிகரித்துக் கொண்டு செல்லுகிறது. எனவே இது தொடர்பாக எழும் பிரச்சினைகளும் அதி கரித்துக்கொண்டு செல்லுகிறது. குறிப்பாக முதுமையில் ஏற்படும் முக்கிய பிரச்சினை உளநலம் தொடர்பானதாகக் காணப்படு கிறது. முதுமையின் போது ஏற்படும் சிறு பிரச்சினை கூட அவர்கள் நிலையில் பெரும் பிரச்சினையாக மாற்றம் பெற்று பெரிய மனத்தாக்கங்களை ஏற்படுத்தி விடுகின்றது. இம் மனத்தாக்கம் பல பிரச்சினைகளின் தோற்றுவாயாகக் காணப்படுகிறது.

முதுமையில் உளத்தாக்கத்தை ஏற் படுத்தும் காரணிகள் என்று பார்க்கும் போது பிள்ளைகளின் திருமணம், இட மாற்றங்கள், ஓய்வு பெறுதல், சக நண்பர் களின் மரணச்செய்திகள், வாழ்க்கைத் துணையின் மரணம், பொருளாதாரச் சிக்கல், உடல்சார்ந்த நோய்கள், தேவை களை நிறைவு செய்ய இன்னொருவரில் தங்கியிருத்தல் என்பனவாகக் காணப்படு வதுடன் இளைய தலைமுறையின் தரக் குறைவான பார்வை, முதியோர் என்போர் வேண்டாத பொருள், நோய்களின் உறைவிடம், நவீன உலக மாற்றத்துக்கு ஏற்புடையவர்கள் அல்ல என்ற வகை யிலான உதாசீனமும் காணப்படுகிறது.

**இந் நிலை மாற...**

முதியோர் என்போர் முதியோர் இல்லங்களுக்கு அனுப்பவேண்டியவர்கள் என்ற மனநிலை மாற்றப்படவேண்டும். எங்களைப் பராமரித்து பாதுகாத்து அன்பு செலுத்தியவர்கள் எங்களுடன் வாழ வேண்டும் என்ற மனநிலை இளையவர் களுக்கு ஏற்படாத வரையில் முதியோர் தொடர்பான உளப்பிரச்சினையும் அதி கரித்தே செல்லும்.

"பழசுகள்" என்ற அடைமொழி வழங்கி அவர்களை ஒதுக்கிவிடாது முதியோர் என்போர் அனுபவங்கள் நிறைந்த சிறந்த பிரஜை என்ற பார்வையினை அவர்கள் மேலும் செலுத்தப்படவேண்டும். அவ்வாறான செயற்பாட்டினை மேற்கொள்ள வேண்டு மாயின் முதியோர் கருத்துக்கள் செவி மடுக்கப்படவேண்டும். அவர்கள் தம் தேவைகள் நிறைவு செய்யப்படவேண்டும். அவர்களுடன் பேசுவதற்கு குறிப்பிட்ட நேரத்தை நாம் ஒதுக்கிக் கொள்ள வேண்டும். அன்பும் ஆதரவும் நிறைந்த

பார்வையினைச் செலுத்தி நாம் உங்களின் ஊன்றுகோல் என இளைய தலைமுறை செயற்படுமாயின் முதியோர் பிரச்சினையை வெற்றிகொள்ள முடியும்.

முதியோர் எதிர்நோக்கும் மிக முக்கியமானதொரு பிரச்சினை எதிர் கொள்ளப்போகும் இறப்பு. இப் பிரச்சினை யால் இறப்பை எண்ணி, எண்ணிப் பயப் படுவதுண்டு. அது பற்றிய சிந்தனைகள் அவர்களின் மனச்சோர்வுக்கு வழிசெய்து விடுகின்றது. அந்தவேளையில் இறப்பு என்பது இயற்கை என்பதை அவர்களுக்குப் புரியவைக்க வேண்டும். கூடவே முது மையை எதிர்கொள்ள முன்னமே இயற்கை யின் நியதிகள் தொடர்பான அறிவைப் பெற்று இறப்புக்கான தயார்நிலையை உருவாக்கிவிட்டால் இறப்பு என்பதை முதுமையின் போது வேதனையின்றி ஏற்றுக்கொள்ள முடியும்.

ஆரோக்கியமான முதியோரைக் கொண்ட சமூகம் ஒன்றை உருவாக்கி அவர்களின் அறிவு, அனுபவம் என்பவற்றை இளைய தலைமுறையினர் பெற்று அதனை வருங்கால சந்ததிக்கு கடத்தவேண்டிய பணியைச் செய்து சிறப்புப் பெறுவோம்.

**முடிவுரை :**

நதி எங்கே போகின்றது என்றால் கடலைத்தேடியென்று விடை பகரும் மனித வர்க்கம் நாம் எங்கே போகின்றோம் என்ற வினாவிற்கு விடை தெரியாது தடு மாறுகின்றது. விடை தெரியாத வாழ்க்கைப் பயணம் வழிதெரியாத வாழ்க்கைப் பயணமாகச் சென்று முடிவில்லாத துன் பத்தையே சந்தித்துக்கொள்ளும்போது தான் சிந்தித்துக் கொள்கிறார்கள். அப் போது வாழ்க்கைப் பயணம் அஸ்தமித்துப் போகின்றது. எனவே மனம்போன போக் கில் வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள் ளாது அறிவு ரீதியாகச் சிந்தித்து எதிர் கொள்ளும் பிரச்சினைகளை நல்ல முறை யில் தீர்த்துக் கொள்வோமாயின் வாழ்க்கையென்பது வாழும்வரை நன்றாகவே வாழ்வதற்கு என்பது விடையாகிவிடும்.

**உசாத்துணை நூல் :**

தமிழ்ச் சமுதாயத்தில் உளநலம்

**இலக்கியம்**
**மொழியை வளப்படுத்துவது**
**மொழியை நிலைநிறுத்துவது**
**வாழ்வை பிரதிபலிப்பது**
**வாழ வழிகாட்டுவது**
**இலக்கியம் காணாத சமூகம்**
**இருளில் கிடக்கின்றது.**

**- கவிஞர் நாகாஸ்திரன்**

# விழுமிய மேம்பாடும் கல்வியும்

**திருமதி மீனலோஜினி சுப்பிரமணியம்**
B.A., Dip. in Edu. (Gold medal), M.Ed
SLTS 1

அறநெறி விழுமியங்களின் வலியுறுத்தற் பரிமாணங்கள் சமூகப் பதிகையுடன் (Social formation) இணைந்த வெளித்துலங்கல் செயல்முறையாக இருந்து வரு கின்றன. விழுமியங்களுடன் இணைந்த அறநெறிப் பண்புகள் (moras responsibility) நடைமுறை வாழ்வின் கட்டுமானப் பணிக்கு உதவுகின்றன. அறநெறிப் பயில்வின் விளைவுகள் வாழ்வின் அகநிலையிலும் புறநிலையிலும் அவசியமாகத் தேவைப்படுகின்றன. இதனை மாணவரின் பொறுப்புக்களாக மாற்றியமைப்பதன் மூலம் விழுமிய மேம்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளலாம். இது வாழ்வின் நிலைத்த மேம்பாட்டிற்கு அவசியமாகிறது.

அறநெறி விழுமியங்கள் செயல்முறை வழியாகவும் (Consequences of Action) தர்க்க நிலை வழியாகவும் ஆராயப்படுகின்றன. அறநெறியானது தனியே கோட்பாட்டு வடிவில் மட்டுமல்லாது வாழ்க்கைச் செயல்முறை வழியாகவும் (Living process) இருப்பதால் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு கல்வி முறையுடன் ஒன்றிணைக்க வேண்டும் என்னும் கல்வியியலாளரின் கருத்துக்கள் சிந்திக்கப்படவேண்டியதொன்றாகும். அறநெறிக் கருத்துக்களைச் சில நாடுகள் சமயக் கல்வியினூடாகவும் சில நாடுகள் விழுமியக் கல்வி, ஒழுக்கநெறிக் கல்வி மூலமும் புகட்டுகின்றன. இதனூடு அகத்திலிருந்தே மனித மேம்பாட்டுக்கான உணர்வுகளை வளர்க்க முடியும்.

ஐக்கிய அமெரிக்காவின் ஜார்ஜியா மாநிலத்தில் உள்ள 6500 பள்ளிகளிலும் 2000–2001 இல் அனைத்து நிலை மாணவருக்கும் நன்னடத்தைக் கல்வி அளிக்க வேண்டும் எனச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் மூலம் சிறார்களிடம் தைரியம், நாட்டுப்பற்று, நேர்மை, சுயமரியாதை, சுய கட்டுப்பாடு, இங்கிதம், கருணை, சகிப்புத் தன்மை, தளரா உழைப்பு, நேர ஒழுங்கு, தூய்மை, சூழலுக்கு மதிப்பளித்தல் ஆகிய உயர் விழுமியங்களான அடிப்படைப் பண்புகளைக் கட்டியெழுப்ப முடியும் எனக் கருதி முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஜப்பானில் கல்வி அமைச்சகம் கொணர்ந்த கருணைக் கல்வித்திட்டம் (கோகோரோ றோ இயோரிக்யூ) குடியியல் சிறப்பும் பொறுப்புணர்ச்சியையும் ஜப்பானியச் சிறார்களிடையே ஏற்படுத்த உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் கல்வியின் ஆன்மீக ஒழுக்கநெறி அம்சங்களைப் புகுத்துவதன் மூலம் மனிதவளம் மேம்பாடடையும் எனக் கருதப்பட்டு செயற்படுகிறது.

எனவே விழுமியத்தின் ஊற்று மனச்சான்றாகும். மனித நடத்தை சரியானதா அல்லது தவறானதா என்பது மனச்சான்றின் மூலமாகவே நிர்ணயிக்கப்படுகின்றது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர். இத்தகைய மனச்சான்றினைப் பொருத்தமான கல்வி மூலம் கட்டி யெழுப்ப முடியும்.

எந்தவொரு சமூகமும் தனக்கென சிறப்பார்ந்த விழுமியக் கலாசாரத்தைக் கொண்டிருக்கும். அந்தப் பண்புகள் நீடித்து நிலைத்து இருந்தாலே அச்சமூகத்தின் இருப்பைத் தீர்மானிக்கும். தன் இருப்பை

உறுதிப்படுத்த விழுமியக் கலாசாரங்கள் குறித்த தலைமுறையிடத்திலிருந்து அடுத்த தலைமுறைக்கு கையளிக்கப்படவேண்டும். இளைய தலைமுறையும் விழுமியங்களைக் கையேற்க வேண்டும். கையளித்தல், கையேற்பு என்பன வெளித்தெரியாது காணப்படினும் உள்ளார்ந்தமாக நடை பெறும் ஓர் உன்னத செயற்பாடும் ஆகும். இச் செயற்பாட்டினை ஊக்குவிப்பதும் வளர்த் தெடுப்பதும் கல்வியாலே முடியும்.

கையேற்கப்பட்ட விழுமியங்களைப் பேணிக்காக்கவும், நெறிப்படுத்தவும் கல்வியாலே முடியும். மேலும் சில விழு மியங்களை உள்வாங்கி நெறிப்படுத்த வும் முடியும். உயர்ந்த விழுமியங்களை அறியாதோருக்கும் அறிய வைத்துப் பயன் பெற வைப்பதும் கல்வியாகும்.

விழுமிய மாற்றம் என்பதும் மனித வளமேம்பாட்டுக்கு அவசியமானதொன் றாகும். ஆனால் சமுதாயத்தில் ஏற்படுகின்ற விழுமிய மாற்றம் வாழ்வின் வளர்ச்சியைச் சுட்டி நிற்கின்றதாகிய மாற்றத்தை அடைய வேண்டும். இத்தகைய ஒரு பொருத்தமான விழுமிய மாற்றம் பெற கல்வி அத்தியா வசியமானதாகும்.

ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட சமுதா யத்தில் பல்வேறுபட்ட காரணங்களால் விழுமிய முரண்பாடுகள் ஏற்படுவதுண்டு, வலிந்து ஏற்படுத்தப்படுவதுமுண்டு. பேணிப் பாதுகாக்கப்பட்ட விழுமியங்களைக் குலைப் பதன் மூலம் எதிரி நாடு தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்த வேண்டி வலிந்து விழுமிய முரண்பாட்டை ஏற்படுத்துவதுண்டு. இந் நிலையில் கல்வியறிவுடைய ஒரு சமூகம் அதையுணர்ந்து செயற்படும், விழுமிய முரண்பாட்டை எதிர்க்கும், அதனை ஏற்காது போராடத் தொடங்கும், அல்லது சீர்திருத்த முற்படும். சீர்திருத்த வழிமுறை யாகக் கல்வியையே தேர்ந்தெடுக்கும். இதிலிருந்து கல்விக்கும் மனித வள மேம் பாட்டிற்குமான தொடர்பு புலப்படுகிறது.

எனவே, விழுமியம் என்பது ஒரு சமுதாயத்தின் சொத்து ஆகும். அதனைப் பேணிக்காப்பதும், மாற்றத்தை ஏற்படுத்து வதும் நெறிப்படுத்துவதும், சீரமைத்துக் கொள்வதும் கல்வியிலே முடியும். அத்த கைய கல்வியை வழங்குவதில் வெற்றி கண்ட நாடு தன் தனித்துவத்தைப் பேணிக் காக்கும். இத்தகைய விழுமிய மேம்பாட் டுக்கும் சமூக மேம்பாட்டிற்கும் நெருங்கிய தொடர்புண்டு.

இன்னோர் கருத்தினையும் நாம் நோக்குதல் வேண்டும். விழுமிய முரண் பாடுகளின் விளைவுகள் பின் நவீன காலத்தின் (Post modern) சமுதாய அசை வியகத்தின் மீது கணிசமான செல்வாக்கைச் செலுத்தி வருகின்றது. எனவே பாலர் கல்வி முதல் பல்கலைக்கழகம் வரை விழுமியக் கல்விப் பயில்கையின் பல் துறை கல்விப் புலத்துடன் மருவியமைக்கப் பட்டு வருகிறது. இதிலிருந்து கல்விக்கும் மனித வள மேம்பாட்டிற்குமான தொடர்பு நன்கு எடுத்தாளப்படுகிறது.

♣ ❖ ♣

# நுளம்பு மூலம் பரவும் நோய்கள்

**திருமதி யோ. விமலாம்பிகைபாகன்**
Special Trained (Sci.), B.Ed

நுளம்பு ஒரு பூச்சியாகும். இதற்கு ஆறு கால்களும் இரண்டு இறகுகளும் உள்ளன. நுளம்புகளில் பல இனங்கள் உள்ளன. நுளம்பின் உற்பத்தி நீர்நிலை களில் ஆரம்பமாகிறது. நுளம்பின் வாழ்க்கை வட்டத்தில் முட்டை, குடம்பி, கூட்டுப்புழு, நிறைவுடலி என நான்கு பருவங்கள் காணப்படும். முதன் மூன்று நிலைகளும் நீரிலும் நிறைவுடலி நிலத் திலும் வாழும். இதன் வாழ்க்கை வட்டத்தில் முட்டை 1–2 நாட்களும், குடம்பி 6–10 நாட்களும், கூட்டுப்புழு 4–7 நாட்களும் எடுக்கின்றன. பெண் நுளம்பு சராசரியாக 3–4 கிழமைக்குச் சீவிக்கிறது. ஆண் நுளம்பு தாவரச் சாற்றையும், பெண் நுளம்பு விலங்குகளின் குருதியையும் உணவாகக் கொள்ளும். சில நுளம்புகள் மனிதக் குருதியை விரும்புகின்றன. நுளம்புகள் மிக அதிகமாகக் கடிக்கும் நேரம் இனத்துக்கு இனம் வேறுபடும்.

நுளம்பு இரத்தம் குடித்தபின் அதன் முட்டை விருத்தியாகுமட்டும் ஒரு தகுதி யான இடத்தில் இளைப்பாறும். சில நுளம்புகள் வீட்டினுள்ளும், சில வெளியில் மரங்களிலும், கான்களிலும், மரப்பொந்து களிலும், ஏனைய இடங்களிலும் இளைப் பாறும். ஒரு பெண் நுளம்பு பொதுவாக ஒரு தடவையில் 100–200 முட்டைகளை இடும். அதன் வாழ்க்கையில் 4–6 தடவைகள் இவ்வாறாக முட்டையிடும்.

நுளம்புகள் பல நோய்களுக்குக் காவிகளாகச் செயற்படுகின்றன. இலங்கை யில் மலேரியா, யானைக்கால் நோய், டெங்கு, ஜப்பானிய மூளைக்காய்ச்சல் ஆகியன முக்கிய இடத்தைப் பெறுகின்றன. தற்போது இலங்கையில் 16 இனத்தைக் கொண்ட 140 வர்க்க நுளம்புகள் காணப் பட்டபோதும் சில வர்க்கங்களே நோயினைப் பரப்பும் சாதனங்களாக இயங்குகின்றன.

அனோபிலிஸ் கியூலிசிபேசிஸ் எனும் நுளம்பு மலேரியாவையும் கியூ லெக்ஸ் குவிங்கிபச்யேற்றஸ் ஆனது யானைக்கால் நோயினையும் (பைலே ரியா), ஏடிஸ் இஜிப்ரை ஏடிஸ் அல்போ பிக்ரஸ் என்பன டெங்கு காய்ச்சலையும், கியூலெக்ஸ் ரைடேனியோறிங்கஸ், கியூலெக்ஸ் புஸ்கோகெபலா ஜப்பானிஸ் மூளைக் காய்ச்சலையும் பரப்புகின்றன.

மலேரியாவைக் காயும் அனோ பிலிஸ் கியுலிசிபேசிஸ் ஆனது சுத்தமான சூரிய வெப்பம்படும் நீர் நிலைகளில் இனம் பெருகும். உ–ம் : நீர் நிரம்பிய களிமண் கிடங்குகள், விவசாய வாய்க் கால்கள். இந் நுளம்பானது ஏனைய விலங்குகளை விட மனிதனையே விரும்பிக் கடிக்கும். மாலை 6.00 – 10.00 மணி வரையும் காலை 4.00 – 6.00 மணி வரை கடிக்கும் உச்சக் கட்ட நேரமாகக் காணப்படும். இந்நுளம்புகள் வீட்டினுள் கூரையில், சுவர்களில், தளபாடங் களிற்குக் கீழ் தங்கும்.

யானைக்கால் நோயைக் காவும் கியூலெக்ஸ் குயிங்கிபசியேட்டஸ் என்னும்

நுளம்பினமானது அசுத்தமான நீர் நிலைகள், சாக்கடை நீர்த்தேக்கம், மலசலகூடக் கிடங்குகள், அடைத்த கான், ஊரிமட்டை புதைக்கும் கிடங்குகள் ஆகிய இடங்களின் இனம் பெருகும். மனித இரத்தத்தை விரும்பிச் செயற்படும் உச்சக்கட்ட நேரம் மாலை 10.00 – காலை 2.00 மணிவரை இந்நுளம்புகள் வீட்டினுள் தொங்கும் படங்கள், துணிகள், திரைகள் முதலிய வற்றில் தங்கும்.

டெங்கு, இரத்தப் போக்குக் காய்ச்சலைப் பரப்பும் காவியான ஏடீஸ் இஜிப்ரை, ஏடீஸ் அல்போபிக்டஸ் என்பன இனம் பெருகும் இடங்களாக சிறு நீர்த் தேக்கங்கள், தேங் காய்ச்சிரட்டை, வெற்றுப்பேணி, சட்டி, டயர், பூச்சாடி என்பன காணப்படும். இந்நுளம்புகள் மனித இரத்தத்தையே விரும்பும். இந் நுளம்புகள் பகல் வேளைகளிலேயே மனிதரைக் கடிக்கும் பழக்கம் உடையவை. பெரும்பாலும் காலை 6.00 மணி – 9.00 மணி, மாலை 3.00 மணி – 6.00 மணி வரை கடிக்கும். இவை வீட்டுக்கு வெளியில் செடி கொடிகளுக்கு மத்தியில் கானுக்குள் தங்கும்.

ஜப்பான் மூளைக் காய்ச்சலைப் பரப்பும் காவியான கியுலெக்ஸ் ரையிற் ரேனியோறிங்கஸ் ஆகும். இவை வேளாண்மை வயல்கள், சதுப்பு நிலங்கள், நீர்த்தேக்கம் ஆகிய இடங்களில் இனம் பெருகும். இவ்வகை நுளம்புகள் மிருக இரத்தத்தை விரும்பி உட்கொள்ளும். ஆனால் நுளம்பின் எ்ணிக்கை கூடும்போது மனிதரைக் கடிக்கும். மாலை 6.00 – 10.00 மணி வரையும் காலை 4.00 – 6.00 இவ்வகை நுளம்புகள் கடிக்கும். இவை வீட்டுக்கு வெளியே, செடிகொடிகளின் மத்தியில் கான்களுள் தங்கும்.

நுளம்பைக் கட்டுப்படுத்துவற்கு பயன் படுத்தக்கூடிய முறைகளாவன. குடம்பிப் பருவத்தைக் கட்டுப்படுத்தல், நீரை வடிய விடுதல் மூலம் நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை அகற்றல், தேவையற்ற தகரங்கள், டயர்கள், வெற்றுப் பேணிகளில் மழைநீர் தேங்குமிடத்து நுளம்பின் உற்பத்தியைக் கூட்டும். ஆகையால் இவைகளை அகற்றல், மலகூட உடைவுகளைத் திருத்தல். மழைநீர் வடிவதற்குச் சிறந்த கால்வாய்களை அமைத்தலும், அதைப் பராமரித்தலும். அடைத்த வீட்டுப் பீலிகளைச் சுத்தம் செய்தல். கிழமைக்கு இரண்டு தடவை பூச்சாடியைச் சுத்தம் செய்து நீரை மாற்றுதல், எறும்பு ஏறா வண்ணம் பாத்திரத்தில் வைக்கப்பட்டிருக்கும். நீரை நுளம்பு உற்பத்தியாகா வண்ணம் உப்பு அல்லது காரமான சவர்க் காரக் கரைசலைப் போட்டு வைத்தல், கிணறுகளில், குளங்களில் தொட்டிகளில் குடம்பிகளைச் சாப்பிடும் மீனினங்களை இடல் என்பனவாகும்.

முதிர்ந்த நுளம்பைக் கட்டுப்படுத்தும் முறைகளாவன. மனிதனுக்கும் நுளம்புக்கும் உள்ள தொடர்பைத் தவிர்த்துக் கொள்வதும் குறைத்துக் கொள்வதும். நுளம்பைத் துரத்தும் பொருட்களைப் பாவித்தல். உள்ளூர் மூலிகை வகைகளைப் பாவித்தல், நுளம்பு வலை பாவித்தல், நுளம்பு கொல்லி மருந்து தெளிக்கப்பட்ட நுளம்பு வலையைப் பாவித்தல். ஆடு, மாடுகளை வீட்டிற்கு அருகாமையில் கட்டிவைப்பதால் மனிதனிலிருந்து நுளம்பின் திசையை மாற்றலாம்.

### டெங்கு நோய் (Dengue)

"டெங்கு என்ற ஆபிரிக்கச் சொல்லின் அர்த்தம் "எலும்பு முறிதல்" என்பதாகும். டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட

வரின் எலும்பு முறியாவிட்டாலும், நோய் வாய்ப்பட்ட ஒருவருக்கு உடலில் ஏற்படும் வலியையே இது வர்ணிக்கிறது.

டெங்குக் காய்ச்சல் இனங்காணப் பட்டு நூறு வருடங்கட்கு மேல் ஆகின்றன. ஆனால் அத்ன இரத்தப் போக்குடன் சம்பந்தப்பட்ட நிலைமை ஒரு புதிய நோயென இனங்காணப்பட்டது. 1956இல் பிலிப்பைன் தேசத்திலேயாகும். "ஆபோ – வைரஸ்" குடும்பத்தைச் சேர்ந்த ஒரு ("Flavi - virus") "பிளேவி – வைரஸ்" கிருமியே நோய்க் காரணி ஆகும். நான்கு விதமான வைரஸ்கள் டெங்குக் காய்ச்சலை உண்டாக்கும். இவை டெங்கு 1, டெங்கு2, டெங்கு 3, டெங்கு 4 என அழைக்கப்படும். ஒரு வைரஸ் நோயினால் ஒரு முறை பீடிக்கப்பட்டவர்களுக்கு அதே வைரஸ் நோய் மறுபடியும் தொற்றமுடி யாது. ஆனால் டெங்கு வைரஸ் 4 வகை களில் இருப்பதால் டெங்கு நான்குமுறை ஒருவரைத் தாக்கலாம்.

ஒருமுறை டெங்குக் காய்ச்சல் ஏற்பட்டு குணமாகிய பின் மறுபடியும் டெங்கு வைரஸ். தாக்கத்திற்கு உள்ளாகும் ஒரு வருக்கே இரத்தப் போக்குடன் காணப்படும் டெங்கு ஏற்படுகிறது. சாதாரணமாக ஒருவருக்கு ஒரு வைரஸ் நோய் ஏற்பட் டால் அவருக்கு அந்நோய்க்கு எதிராகத் தடுப்புச் சக்தி ஏற்படுகிறது. ஆனால் ஒரு டெங்கு வைரஸ் தொற்றினால் ஏற்படும் பிறபொருள் எதிரி மறுமுறை வேறொரு வர்க்க டெங்கு வைரஸ் கிருமியைச் சந்தித்தால், கூடிய தாக்கம் உள்ள நோய் நிலைமை தோன்றுகிறது.

ஈடிஸ் இனத்தைச் சேர்ந்த இருவகை நுளம்புகள் நோயின் வைரசைப் பரப்பு கின்றன. ஈடிஸ் நுளம்பானது சாடையாக கறுப்பு அல்லது மண்ணிறமாகக் காணப் படும். அளவில் வேறு நுளம்புகளிலிருந்து வித்தியாசமில்லை. அதன் முதுகுப் பகுதியில் நீள் வடிவிலான இரு வெள்ளைக் கோடுகள் காணப்படும். அதன் கால்களில் காப்பு வடிவத்தில் வெள்ளை அடையாளங் கள் காணப்படும். நுளம்பின் உடல் அது நிற்கும் இடத்திற்கு சமாந்தரமாக இருக்கும்.

டெங்கு நோயின் நோயரும்பு காலத்தை எடுத்துக் கொண்டால் நுளம்பு நோயாளியின் குருதியைத் தனது உடலினுள் உறிஞ்சி பின் 8–14 நாட்களின் பின் ஒரு சுகதேசிக்கு வைரசைக் கடத்தக் கூடிய நிலையை அடைகிறது. அதன் பின் இந்த நுளம்பு தனது வாழ்நாள் முழுவதும் வைரவைப் பரப்பக்கூடியதாயிருக்கும். இந்த நுளம்பு ஒரு சுகதேகியைக் கடித்தால் வைரஸ் அவரின் உடலினுள் புகுத்தப்படுகிறது. வைரஸ் புகுத்தப்பட்டு 5–6 நாட்களில் டெங்குக் காய்ச்சலின் அறிகுறிகள் தோன்றலாம்.

டெங்கு நோயின் அறிகுறிகளான, கூடிய காய்ச்சல், தலைவலி, வாந்தி, மூட்டு நோவு, மூட்டுவீக்கம், தசைநோவு, தோலின் கீழ் சிறப்புநிறத் தடங்கள்.

அபாய அறிகுறிகளாவன – கண், காது, மூக்கு, வாய், முரசு ஆகியவற்றிலிருந்து குருதி வெளியேறுதல், வாந்தியுடன் இரத்தம் கலந்திருத்தல், மலத்துடன் இரத்தம் வெளியேறல், மலம் கறுப்பு நிறமாயி ருக்கும். சலத்துடன் இரத்தம் வெளியேறல்.

நோயினால் ஏற்படக்கூடிய வேறு சிக்கல்கள்களாவன. ஈரல் தாக்கப்படு

வதனால் வயிற்றுவலியும், ஈரல் பெருத்தும், செயற்பாடு குறைந்தும் காணப்படும். சிலருக்கு மூளையில் வீக்கம் உண்டாகி வலிப்பு அல்லது நினைவிழந்த நிலை ஏற்படலாம். சடுதியாகக் குறைந்தால் அது நோயாளி மயக்கநிலையை அடைகின்றார் என அர்த்தமாயிருக்கலாம். எனவே இந் நோயாளியை உடனடியாக வைத்திய சாலையில் அனுமதிக்க வேண்டும். அதி களவு பானங்களை உட்கொள்வதன் மூலம் நோயின் தாக்கத்தைக் குறைக்கலாம்.

## யப்பானிய மூளைக்காய்ச்சல் (Japanese Encephalitis)

இந்த நோயின் காரணியான Je Virus மிருகங்களிலும் பறவைகளிலும் வாழும். இலங்கையில் பன்றிகளிலேயே இக் கிருமி தீவிரமாகப் பரவுகிறது. மிருகங்களுக்கு இக் கிருமிகளால் ஒரு பாரதூரமான விளைவும் ஏற்படாது. பன்றிகளிலிருந்து கிருமி நுளம்புகள் மூலம் மனிதனுக்குக் கடத்தப்படுகிறது. மனிதனின் குருதியில் சிறிது காலத்துக்கு அதுவும் சிறிதளவிலேயே வைரஸ் காணப்படும். எனவே மனிதனிலிருந்து மனிதனுக்கு இந்த வைரஸ் கடத்தப்படமாட்டாது.

கியூலெக்ஸ் வர்க்கத்தைச் சேர்ந்த Culex tritaenior-hyncus, Culex gelidas ஆகிய நுளம்பு இனங்களே இலங்கையில் நோயைப் பரப்பும் இனங்களாக உள்ளன. இந் நுளம்புகள் நெல்வயல்களில் தேங்கி நிற்கும் நீரிலே முட்டையிடுகிறது. பெண் நுளம்புகள் பன்றிகள், கால்நடைகள் போன்ற மிருகங்களின் இரத்தத்தை பெரும்பாலும் விரும்பிக் குடிக்கின்றன. இந்த வைரஸ் பன்றிகளில் அதிகளவு பெருகுகிறது. பன்றியைக் கடித்த நுளம்பு 9–12 நாட்களின் பின் வைரசைப் பரப்பக் கூடிய நிலையை அடைகிறது. நுளம்புகள் அதிகளவு பெருகினால் நுளம்புகள் மனிதரைக் கடிக்கநேரிடும். இதனால் வைரஸ் மனிதனுக்குக் கடத்தப்படலாம்.

Je Virus நரம்புக் கலன்களையே தாக்குகிறது. மூளையில் பெரும்பாக மாகிய Cerebral Cortex, சிறியபாகமாகிய Cerebelium மூளையின் கீழ்ப்பாகமாகிய Mid brain ஆகியவையே முக்கியமாகத் தாக்கப்படுகின்றன. அத்துடன் மூளையின் உறையிலும் அழற்சி ஏற்படலாம்.

இந் நோயின் ஆரம்ப அறிகுறிகளாக 1–5 நாட்களுக்குக் காய்ச்சல், தலைவலி, சோர்வு, வாந்தி ஆகியன இருக்கலாம். காய்ச்சலுடன் நடுக்கம் இருக்கலாம். பலரின் நோய் இதன் பின் குணமாகிவிடும். மிகச் சிலரில் நோய் அடுத்த கட்டத்தை அடையலாம். இக்கட்டத்தில் காய்ச்சல் தொடர்ந்து காயும். ஆனால் நாடித் துடிப்பின் வேகம் அதிகமாக இராது. முகபாவனையில் மாற்றம் ஏற்பட்டு, ஒரே பக்கத்தைப் பார்ப்பது போலவும் முகத்தில் சிரிப்பையோ வேறு உணர்ச்சிகளையோ வெளிக்காட்ட முடியாதவராயும், முகம் ஒரு சிலையின் முகம் போல் காட்சியளிக்கலாம். கழுத்திலுள்ள தசைநார்கள் இறுகி கழுத்தில் வலியும் கழுத்தை அசைக்க முடியாமலும் இருக்கலாம். பேசுவதில் கஷ்ரமும் தாமதமும் இருக்கலாம்.

மனோநிலையை எடுத்துக் கொண்டால் அமைதி அற்றதாயும் அங்கலாய்ப்பு, குழப்பம், மயக்கம், சுயஉணர்வை இழந்த நிலை ஆகியன தோன்றலாம். கைகளில் நடுக்கம், தன்னையறியாமல் கை, கால்களில் அசைவுகள், சாதாரண செயல்களைச் செய்யமுடியாமை ஆகியனவும் காணப்படலாம். முக்கியமாகப் பிள்ளைகளில்

வலிப்பு (fits) இருக்கலாம். கை, கால், கழுத்துத் தசைகள் ஊனமுற்று செய லிழந்து (Paralysis) காணப்படலாம். சிலவேளை இருதயமும் தாக்கப்படலாம். மூளையழற்சி நிலையை அடைந்தோரில் 20% - 40% இறக்கலாம். இறப்பு நோயின் ஆரம்ப நாளிலிருந்து 10 நாட்களினுள் ஏற்படலாம்.

நோயின் நீண்டகால விளைவுகளை எடுத்துக் கொண்டால், மூளையழற்சி நிலையை அடைவோரில் 50% பூரண மாக்க குணமடைவார்கள். ஏனைய 50% நோயாளரில் ஓரளவு வலது குறைந்த நிலைமைகள் இருக்கலாம். இவை படிப் படியாகக் குறைந்து ஓரிரு வருடங்களில் அற்றுப்போகலாம். அல்லது வாழ்நாள் முழுவதும் இருக்கலாம். சிலருக்கு ஓரளவு உளப் பாதிப்பு அல்லது புத்தி குறைதல் ஏற்படலாம். சிலரில் கால், கை செயலிழந்த நிலை அல்லது மனநோய் வாழ்நாள் வரை நீடிக்கலாம். இந் நோயானது மனிதனிலிருந்து வேறொரு மனிதருக்குப் பரவாது. எனவே நோயாளி யைத் தனிமைப்படுத்த தேவையில்லை.

மேலும் பன்றியை வளர்க்காது ஆடு, மாடு, கோழி வளர்த்தல் நன்று. இதனால் நுளம்பு மனிதனைக் கடியாது. இந்த மிருகங்களிலிருந்து குருதியை உறிஞ்ச லாம்.

### மலேரியா (Malaria)

இது அனோபிலிசு நுளம்பினால் பரப் பப்படுகின்ற ஒரு நோய். மலேரியாவை உண்டாக்கும் நுண்ணங்கி பிளாஸ்மோடியம் ஆகும். மலேரியா நோயாளிகளின் செங் குருதிச் சிறுதுணிக்கைகளிலே இந்த நுண்ணங்கிகளைக் காணலாம். நுளம்பு குருதியை உறிஞ்சிக் குடிக்கும்போது இந் நுண்ணங்கிகள் நுளம்புகளினுள் செல் கின்றன. அங்கு இந் நுண்ணங்கிகள் (கிருமி) மேலும் வளர்ந்து எண்ணிக்கையிற் பெருகி இறுதியிலே நுளம்பின் உமிழ்நீர்ச் சுரப்பி யினுள்ளே ஒன்றுகூடுகின்றன. இந்த நுளம்பு சுகதேசி ஒருவருக்குக் கடிக்கும்போது பிளாஸ்மோடியத்தைக் கொண்ட உமிழ்நீர் சிறிது தோலுக்குள்ளே புகுந்துவிடுகிறது. அதன்பின் நுளம்பு கடிக்கப்பட்டவரின் செங்குருதிச் சிறுதுணிக்கைகளினுள்ளே இக் கிருமிகள் புகுந்து மேலும் வளர்ந்து எண்ணிக்கையிலும் பெருககின்றன. அதன் பின் இக் கிருமிகள் காலத்துக்குக் காலம் ஈரலின் குருதிக் கால்வாய்க்கு அனுப்பி வைக்கப்படும். இது சாதாரணமாக ஒன்றை விட்ட ஒருநாள் நடைபெறும். ஆகையால் கிருமிகள் குருதிக் கால்வாயினுள் விடப் படும் நாட்களில் கடுமையான காய்ச்சல் உண்டாகும். அத்துடன் உடம்பு குளிர்ந்து நடுங்கும். இப்படியாகக் காலத்துக்குக் காலம் காய்ச்சல் இல்லாத இடை நாட்களில் நோயாளிக்குச் சிறிது சுகம் காணப்படும். காலம் செல்லச் செல்ல நோயாளி பல வீனமடைவார். அத்துடன் அவருடைய செங்குருதிச் சிறுதுணிக்கைகள் மேன் மேலும் அழிக்கப்பட்டுவிடும். அதன் பின்னர் அவருக்குக் குருதிச் சோகை உண்டாகும்.

### யானைக்கால் நோய் (Filariasis)

இது நூல் போன்ற புழுக்கள் மூலம் பரவுகின்ற ஒரு தொற்றுநோய். முதிர்ந்த புழு நிணநீர்த் தொகுதியில் வசித்துக் கொண்டு மைக்கிரோ பைலேரியா எனப்படும் மிகவும் சிறிய மூலவுருக்களை உற்பத்தி செய்கின்றது. இந்த மைக்கிறோ பைலேரியாக் கிருமிகள் நிணநீர்த் தொகுதி யிலிந்து குருதிக் கால்வாய்க்குள்ளே பிரவேசித்து அங்கே கியூலெக்ஸ் வகை

நுளம்புகளால் உறிஞ்சப்படுகின்றன. நுளம்பினுள்ளே இவை மேலும் வளர்ச்சி யடைகின்றன. இறுதியில் நுளம்பின் வாய்ப்பகுதியிலே ஒன்றுகூடி இருக் கின்றன. பின்னர் நுளம்பு உணவு உண்ணும் போது இந்தக் குடம்பிகள் இன்னொரு வருடைய குருதிக் கால்வாயினுள்ளே புகுத்தப்படுகின்றன. இக்குடம்பிகள் இப்போது மீண்டும் நிணநீர்ச் சுரப்பிகளை அடைந்து அங்கே முதிர்ந்த புழுக்களாக வளருகின்றன.

யானைக்கால் நோய்க்குரிய குணங் கள் முதிர்ந்த புழுக்களினாலேயே உண்டாக்கப்படுகின்றன. நிணநீர் சுற்று வீங்குதல், நிணநீர்த் தொற்று, நிணநீர் தடைப்படுதல் ஆகியன இப்புழுக் காரண மாக உண்டாகக்கூடும். நிணநீர் பெரிதும் தடைப்பட்டால், வெளியே நிணநீர் செல்ல முடியாமையினால் அசாதாரண வீக்கங்கள் உறுப்புக்களிலே காணப்படும். இளம் மைக்கிறோ பைலேரியா, சூரியன் மறைந்து இருள் சூழ்ந்த பின்னரே அதாவது நுளம்பு கள் குருதியை உறிஞ்சிக் குடிக்கும் காலத்தில் கட்டவிழ்த்து விடப்படு கின்றமையால் அவை இருக்கின்றனவா என்று அறிந்துகொள்வதற்கு மனிதர் களின் குருதியை இரவில் எடுத்தே பரிசோதனை செய்தல் வேண்டும்.

**உசாத்துணை நூல்**

சுகாதாரக் கல்வி (பாடநூல்கள்)
துண்டுப் பிரசுரங்கள்.

♣ ❖ ♣

# யாழ் குடாநாட்டு தரைக்கீழ் நீர்வளம் : ஒரு பார்வை

உயிர் வாழ இன்றியமையாதவற்றுள் நீரும் ஒன்றாகும். இதனால் தான் உலக நாகரீகம் தண்ணீர் வழிந்தோடும் நதிக் கரையில் இருந்தே தோன்றியதாகக் கூறப்படுகிறது. நைல் நதிக்கரை, சிந்துநதிச் சமவெளி, கங்கைக்கரை, காவிரி ஆற்றோரம் எனப் பல உதாரணங்கள் கூறலாம். காலச் சுழற்சியின் விளைவான நவீனமய மாதலில் சிக்குண்டிருக்கும் இன்றைய உலகமானது நீர்ப் பற்றாக்குறையை முக்கிய பிரச்சினையாக மையப்படுத்தி அதற்கான பிரச்சினைகள், தீர்வுகள் என்பவற்றைக் காண மும்முரமாக இறங்கியுள்ளது.

உலகின் மொத்தப் பரப்பில் 2/3 பங்கு நீராலானது என்பது நாம் அனைவரும் அறிந்ததே. அந்நீரில் பெரும் பகுதி உவர் நீராகவும், உறை பனியாகவும் உள்ளது. மனித பயன்பாட்டிற்கு உகந்த நன்னீர் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளது. உலகின் பிரதான நன்னீர் மூலம் மழையே. மழையின் விளைவாக உருவாகும் ஆறுகள், நீர்த்தேக்கங்கள், நிலத்தடி நீர் என்பன மனித தேவைக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இலங்கையை எடுத்துக் கொண்டால் மேற்கூறிய கட்டமைப்புக்கள் அனைத்துமே காணப்படுகின்றன. ஆனால் யாழ் குடாநாடு நிலத்தடி நீரை மட்டுமே கொண்ட பகுதி ஆகும்.

நிலக்கீழ் நீர் எனும் போது மழை வீழ்ச்சியானது தரையினூடே ஊடு கடத்தப்பட்டு நிலத்தின் கீழ் உள்ள ஊடு புகாத படையின் மீது தேக்கமடைவதால் தோற்றம் பெறுவதாகும். யாழ் குடாநாட்டைப் பொறுத்தவரை வடகீழ்ப் பருவப் பெயர்ச்சி மழை மூலமே அதாவது ஒக்டோபர் – பெப்ரவரி வரை கிடைக்கும் மழை மூலமே உருவாகிறது. யாழ் குடாநாட்டில் நிலத்தடி நீர் நன்னீரின் கீழ் இருக்கும் உவர் நீரில் மிதக்கிறது. யாழ் குடாநாடானது உலர் வலயப் பகுதிக்குள் அடங்கும் மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்டதும் தன்னகத்தே பல கடல்நீரேரிகளைக் கொண்டதுமான சிறிய நிரப்பரப்பு ஆகும். இதன் அடித்தளம் சுண்ணக்கற் பாறையாலானது. மழையைத் தவிர்த்து யாழ் குடாநாட்டில் பிரதான நீர் மூலம் நிலத்தடி நீர் மட்டுமே. குடாநாட்டின் நீர் வளங்களாகப் பருவ கால மழைவீழ்ச்சியும், பருவகால நீரோட்டமும் கொண்ட சிற்றாறுகளும், ஏரிகள், குளங்கள், கடல் நீரேரிகளும், வற்றாத கிணறுகளும் ஆகும்.

1952ம் ஆண்டு ஆய்வு செய்த இஸ்ரேலிய ஆய்வாளர்கள் யாழ் குடாநாட்டில் உள்ள கிணறுகளின் நீரானது உவர் நீராக மாறும் அபாயம் உள்ளதென எச்சரித்துள்ளனர். 1985ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் வரையப்பட்ட நிலத்தடி நீரின் தன்மைகள் பற்றிய வரைபடத்தில் அதி கூடிய நைத்திரேற்றுக் கொண்டது யாழ்ப்பாணமே எனச் சுட்டிக் காட்டியுள்ளனர். உலக வங்கியின் ஆதரவுடன் 2006ம் ஆண்டு செய்யப்பட்ட ஆய்வின் குடாநாட்டு நீர்வளமானது நன்னீர்த் தட்டுப்பாட்டை எதிர்கொள்ளும் எனக் கூறப்பட்டுள்ளது.

உலகத் தரப்படுத்தல் சுட்டியானது வருடம் ஒன்றுக்கு மனிதன் ஒருவனுக்கு 1700 கன மீற்றர் என்ற அடைவை குடாநாடு எட்டா மையே நன்னீர்த் தட்டுப்பாட்டுக்கு காரணம் என குறிப்பிடப்பட்டுள்ளது. வருடம் ஒன்றுக்கு மனிதன் ஒருவனுக்கு 650 கன மீற்றர் என்ற அடைவையே குடாநாடு கொண்டுள்ளது. அத்துடன் உலக நீர் வளங்கல் முகாமைத் துவ நிறுவனத்தினால் 2025ஆம் ஆண்டு தனது நீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத இடங்களுள் இலங்கையின் தலைப் பகுதி யான நாம் வசிக்கும் இடமும் சிவப்பு குறியால் காட்டப்பட்டுள்ளது. இதில் இருந்து நமது மண்ணுக்குரிய ஆபத்துப் புலப்படுகிறது அல்லவா?

யாழ் குடாநாட்டு நிலக்கீழ் நீர்வளம் உவர்நீராக மாறுவதற்குத் திட்டமிட்ட முறை அற்ற நிலத்தடி நீர் வெளியேற்றம் மூலமும் இயந்திரம் மூலமும் அதிகளவு நீர் வெளியேற்றப்படும் போதும் நிலத்தடி நீரானது உவர்நீராக மாறுகிறது. அதாவது ஆதிகால மக்கள் நீர் இறைக்க துலாவையும் கப்பியையும் பயன்படுத்தினர். இதன் போது இறைப்பதைக் காட்டிலும் கூடிய வேகத்தில் நீரானது சுரந்துவிடுகிறது. ஆனால் தற்போதைய இயந்திரப் பொறிகள் மூலம் இறைக்கும்போது, நன்னீர் கிணற் றினுள் சுரக்க முன்னமே அதிகளவு நீர் வெளி யேற்றப்படுகிறது. நன்னீர் சுரக்கும் வேகத்தைக் காட்டிலும், கூடிய வேகத்தில் நீரை அகற்றுவோமாயின் அந்த இடத்தில் கீழ் மட்டத்தில் உள்ள உவர்நீரானது (கடல் நீரானது) நன்னீருடன் கலக்கும் அபாயம் காணப்படுகிறது.

குடாநாட்டில் அதிகரித்துள்ள விவ சாயச் செய்கையினால் மிதமிஞ்சிய அசேதன இரசாயன பசளைப் பிரயோகம் தவிர்க்கமுடியாதுள்ளது. பயிர்களால் உறிஞ்சப்பட்ட போஷணை மூலகங்கள் தவிர, ஏனையவை மேலதிக நீர்ப்பாசனம் / மழை நீருடன் சேர்ந்து கழுவி அகற்றப் பட்டுச் செல்லுகிறது. இதில் நைத்திரைற்று மிக முக்கியமானது ஆகும். ஆகவே அதி கரித்துவரும் நீர் வெளியேற்றுகை உவர் நீர் ஊடுருவல், கைத்தொழிற்சாலை களின் கழிவு கடல் நீருடன் கலத்தல், நைத்தி ரைற் சேர்க்கை போன்ற குடாநாட்டின் நிலநீர் மாசடைவதற்கு முக்கிய காரணங் களாகின்றன. இவற்றுடன் மேலும் அதி கரித்த நீருக்காக கிணற்றினுள் குழாய் இறுக்குதல், துளையிடுதல் ஆகியன கிணற்று நீர் உவர் நீராகும் வாய்ப்பை மேலும் அதிகரிக்கச்செய்கின்றன.

நிலத்தடி நீரானது தொடர்ந்தும் கட்டுப்பாடு இன்றி அகற்றப்படுமாயின் குடாநாடு விரைவில் தரிசாக்கப்படும் என்பதில் ஐயமில்லை. தற்போது உவர்நீர் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ள சில இடங் களைப் பற்றி நோக்குவோம். தீவகப் பிரதேசம், யாழ் நகர சபையின் அரியாலை, குருநகர், இருபாலை, மைய நகர்ப்பகுதி கள், வலிகாமத்தின் சுழிபுரம், மூளாய், வட்டுக்கோட்டை போன்ற பகுதிகளையும் வடமராட்சியின் மண்டான் வெளியை அண்டிய பிரதேசங்கள், கரவெட்டிப் பிரதேசம் போன்றவற்றையும் தென்மராட்சி யில் கல்வயல், நுணாவில், மட்டுவில், சரசாலை போன்ற பகுதிளையும் கூறலாம்.

இத்தகைய அபாய நிலையை இழிவள வாக்குவதற்கு சில நடைமுறைகள் பின் பற்றுவது இன்றியமையாதது ஆகும். நீரைச் சிக்கனமாகப் பாவித்தல், அதாவது கழுவு நீரை வீணாக வழிந்துஓட விடாது குழிகளை அமைத்து நிலத்தினுள் ஊடு

புகவிடல், விவசாயத்திற்கு மிகையாக நீர்ப்பாசனம் செய்யாது பயிர்களின் தேவை 50 வீதத்தை அடையும்போது மண்ணீர்க் கொள்ளளவு அடையும் காலம் என்பவற்றைப் பற்றி அறிந்து அதற்கேற்ப நீர்ப்பாசனம் செய்தல், உவர்நீரத் தடுப்பு அணைகள் அமைத்தல்.

உ-ம் : செம்மணி, தனங்களப்பு, வல்லை.

மழைநீரைச் சேகரிக்கும் சிறு தொட்டி களை தனியார் வீடுகளிலும் பொது இடங்களில் உள்ள கட்டடங்களிலும் அமைத்து மழைநீரைச் சேகரித்து பய னுள்ள விதத்தில் பயன்படுத்த வழிகாட்டு தல், மேலதிகமானதை நிலத்திற்குக் கீழே வழிந்தோடச் செய்தல், கிணற்றில் இருந்து நீர் இறைக்கும்போது ஒரே தடவையாக அனைத்து நீரையும் வெளியேற்றாது கிணற்றுக்கு ஓய்வு கொடுத்து இறைத்தல், விவசாயிகளிற்கும் மக்களுக்கும் அசே தனப் பசளைப் பாவனையினால் நன்னீ ரானது உவர் நீராக மாறுவதையும், சேதனப் பசளைப் பாவனையின் நன்மை களையும் நன்கு விளக்குதல். நீரை வினைத்திறனாகப் பயன்படுத்தக்கூடிய துளி, தூறல், பொசிவு நீர்ப்பாசனம் பற்றி மக்களிடையே அறிமுகப்படுத்தல், உவர் நீரைச் சகித்துவாழக்கூடிய களைகள், பயிர்களை நடுதல் மூலம் நிலத்தடி நன்னீரை உவர்நீராக மாறுவதிலிருந்து பாதுகாக்கலாம்.

எனவே குடாநாட்டு மக்களாகிய நாம் எதிர்காலச் சந்ததியை கருத்தி லெடுத்து நிலக்கீழ் நீர் வளத்தைப் பாது காக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து செயற்படுவோம்.

## உசாத்துணை நூல்கள்


1) இரா.சிவச்சந்திரன், யாழ் புவியிய லாளன், இதழ் 06, 07, 08, தமிழ் பாரம்பரிய பிரதேசம், விவசாயமும், நீர்ப்பாசனமும்.
2) திருமதி த.மிகுந்தன், பசுந்தோகை, தோகை 09, யாழ் குடாநாட்டின் தரைக்கீழ் நீர்வளமும் அதன் தன்மை யும்.
3) P.G. Cooray, The Geography of Sri Lanka, 1984, Ground water condi tion in Jaffna Peninsula.
4) செல்வி செ.அருந்ததி, பசுந்தோகை, தோகை 04, குடாநாட்டு நீர்வளம்.



**சக்திதர்ஷினி சந்தானகுமாரன்**
*2013 கலைப்பிரிவு.*


♣ ❖ ♣

# யாழ் குடாநாட்டு தரைக்கீழ் நீர்வளம் : ஒரு பார்வை

உயிர் வாழ இன்றியமையாதவற்றுள் நீரும் ஒன்றாகும். இதனால் தான் உலக நாகரீகம் தண்ணீர் வழிந்தோடும் நதிக் கரையில் இருந்தே தோன்றியதாகக் கூறப்படுகிறது. நைல் நதிக்கரை, சிந்துநதிச் சமவெளி, கங்கைக்கரை, காவிரி ஆற்றோரம் எனப் பல உதாரணங்கள் கூறலாம். காலச் சுழற்சியின் விளைவான நவீனமயமாதலில் சிக்குண்டிருக்கும் இன்றைய உலகமானது நீர்ப் பற்றாக்குறையை முக்கிய பிரச்சினையாக மையப்படுத்தி அதற்கான பிரச்சினைகள், தீர்வுகள் என்பவற்றைக் காண மும்முரமாக இறங்கியுள்ளது.

உலகின் மொத்தப் பரப்பில் 2/3 பங்கு நீராலானது என்பது நாம் அனைவரும் அறிந்ததே. அந்நீரில் பெரும் பகுதி உவர் நீராகவும், உறை பனியாகவும் உள்ளது. மனிதப் பயன்பாட்டிற்கு உகந்த நன்னீர் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளது. உலகின் பிரதான நன்னீர் மூலம் மழையே. மழையின் விளைவாக உருவாகும் ஆறுகள், நீர்த்தேக்கங்கள், நிலத்தடி நீர் என்பன மனித தேவைக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இலங்கையை எடுத்துக் கொண்டால் மேற்கூறிய கட்டமைப்புக்கள் அனைத்துமே காணப்படுகின்றன. ஆனால் யாழ் குடாநாடு நிலத்தடி நீரை மட்டுமே கொண்ட பகுதி ஆகும்.

நிலக்கீழ் நீர் எனும் போது மழை வீழ்ச்சியானது தரையினூடே ஊடு கடத்தப்பட்டு நிலத்தின் கீழ் உள்ள ஊடுபுகாத படையின் மீது தேக்கமடைவதால் தோற்றம் பெறுவதாகும். யாழ் குடாநாட்டைப் பொறுத்தவரை வடகீழ்ப் பருவப் பெயர்ச்சி மழை மூலமே அதாவது ஒக்டோபர் – பெப்ரவரி வரை கிடைக்கும் மழை மூலமே உருவாகிறது. யாழ் குடாநாட்டில் நிலத்தடி நீர் நன்னீரின் கீழ் இருக்கும் உவர் நீரில் மிதக்கிறது. யாழ் குடாநாடானது உலர் வலயப் பகுதிக்குள் அடங்கும் மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்டதும் தன்னகத்தே பல கடல்நீரேரிகளைக் கொண்டதுமான சிறிய நிரப்பரப்பு ஆகும். இதன் அடித்தளம் சுண்ணக்கற் பாறையாலானது. மழையைத் தவிர்த்து யாழ் குடாநாட்டில் பிரதான நீர் மூலம் நிலத்தடி நீர் மட்டுமே. குடாநாட்டின் நீர் வளங்களாகப் பருவ கால மழைவீழ்ச்சியும், பருவகால நீரோட்டமும் கொண்ட சிற்றாறுகளும், ஏரிகள், குளங்கள், கடல் நீரேரிகளும், வற்றாத கிணறுகளும் ஆகும்.

1952ம் ஆண்டு ஆய்வு செய்த இஸ்ரேலிய ஆய்வாளர்கள் யாழ் குடாநாட்டில் உள்ள கிணறுகளின் நீரானது உவர் நீராக மாறும் அபாயம் உள்ளதென எச்சரித்துள்ளனர். 1985ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் வரையப்பட்ட நிலத்தடி நீரின் தன்மைகள் பற்றிய வரைபடத்தில் அதி கூடிய நைத்திரேற்றுக் கொண்டது யாழ்ப்பாணமே எனச் சுட்டிக் காட்டியுள்ளனர். உலக வங்கியின் ஆதரவுடன் 2006ம் ஆண்டு செய்யப்பட்ட ஆய்வின் குடாநாட்டு நீர்வளமானது நன்னீர்த் தட்டுப்பாட்டை எதிர்கொள்ளும் எனக் கூறப்பட்டுள்ளது. உலகத் தரப்படுத்தல் சுட்டியானது வருடம் ஒன்றுக்கு மனிதன் ஒருவனுக்கு 1700 கன

மீற்றர் என்ற அடைவை குடாநாடு எட்டா மையே நன்னீர்த் தட்டுப்பாட்டுக்கு காரணம் என குறிப்பிடப்பட்டுள்ளது. வருடம் ஒன்றுக்கு மனிதன் ஒருவனுக்கு 650 கன மீற்றர் என்ற அடைவையே குடாநாடு கொண்டுள்ளது. அத்துடன் உலக நீர் வளங்கல் முகாமைத் துவ நிறுவனத்தினால் 2025ஆம் ஆண்டு தனது நீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத இடங்களுள் இலங்கையின் தலைப் பகுதி யான நாம் வசிக்கும் இடமும் சிவப்பு குறியால் காட்டப்பட்டுள்ளது. இதில் இருந்து நமது மண்ணுக்குரிய ஆபத்துப் புலப்படுகிறது அல்லவா?

யாழ் குடாநாட்டு நிலக்கீழ் நீர்வளம் உவர்நீராக மாறுவதற்குத் திட்டமிட்ட முறை அற்ற நிலத்தடி நீர் வெளியேற்றம் மூலமும் இயந்திரம் மூலமும் அதிகளவு நீர் வெளியேற்றப்படும் போதும் நிலத்தடி நீரானது உவர்நீராக மாறுகிறது. அதாவது ஆதிகால மக்கள் நீர் இறைக்க துலாவையும் கப்பியையும் பயன்படுத்தினர். இதன் போது இறைப்பதைக் காட்டிலும் கூடிய வேகத்தில் நீரானது சுரந்துவிடுகிறது. ஆனால் தற்போதைய இயந்திரப் பொறிகள் மூலம் இறைக்கும்போது, நன்னீர் கிணற் றினுள் சுரக்க முன்னமே அதிகளவு நீர் வெளி யேற்றப்படுகிறது. நன்னீர் சுரக்கும் வேகத்தைக் காட்டிலும், கூடிய வேகத்தில் நீரை அகற்றுவோமாயின் அந்த இடத்தில் கீழ் மட்டத்தில் உள்ள உவர்நீரானது (கடல் நீரானது) நன்னீருடன் கலக்கும் அபாயம் காணப்படுகிறது.

குடாநாட்டில் அதிகரித்துள்ள விவ சாயச் செய்கையினால் மிதமிஞ்சிய அசேதன இரசாயன பசளைப் பிரயோகம் தவிர்க்கமுடியாதுள்ளது. பயிர்களால் உறிஞ்சப்பட்ட போஷணை மூலகங்கள் தவிர, ஏனையவை மேலதிக நீர்ப்பாசனம் / மழை நீருடன் சேர்ந்து கழுவி அகற்றப் பட்டுச் செல்லுகிறது. இதில் நைத்திரைற்று மிக முக்கியமானது ஆகும். ஆகவே அதி கரித்துவரும் நீர் வெளியேற்றுகை உவர் நீர் ஊடுருவல், கைத்தொழிற்சாலை களின் கழிவு கடல் நீருடன் கலத்தல், நைத்தி ரைற் சேர்க்கை போன்ற குடாநாட்டின் நிலநீர் மாசடைவதற்கு முக்கிய காரணங் களாகின்றன. இவற்றுடன் மேலும் அதி கரித்த நீருக்காக கிணற்றினுள் குழாய் இறுக்குதல், துளையிடுதல் ஆகியன கிணற்று நீர் உவர் நீராகும் வாய்ப்பை மேலும் அதிகரிக்கச்செய்கின்றன.

நிலத்தடி நீரானது தொடர்ந்தும் கட்டுப்பாடு இன்றி அகற்றப்படுமாயின் குடாநாடு விரைவில் தரிசாக்கப்படும் என்பதில் ஐயமில்லை. தற்போது உவர்நீர் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ள சில இடங் களைப் பற்றி நோக்குவோம். தீவகப் பிரதேசம், யாழ் நகர சபையின் அரியாலை, குருநகர், இருபாலை, மைய நகர்ப்பகுதி கள், வலிகாமத்தின் சுழிபுரம், மூளாய், வட்டுக்கோட்டை போன்ற பகுதிகளையும் வடமராட்சியின் மண்டான் வெளியை அண்டிய பிரதேசங்கள், கரவெட்டிப் பிரதேசம் போன்றவற்றையும் தென்மராட்சி யில் கல்வயல், நுணாவில், மட்டுவில், சரசாலை போன்ற பகுதிளையும் கூறலாம்.

இத்தகைய அபாய நிலையை இழிவள வாக்குவதற்கு சில நடைமுறைகள் பின் பற்றுவது இன்றியமையாதது ஆகும். நீரைச் சிக்கனமாகப் பாவித்தல், அதாவது கழுவு நீரை வீணாக வழிந்தோட விடாது குழிகளை அமைத்து நிலத்தினுள் ஊடு புகவிடல், விவசாயத்திற்கு மிகையாக நீர்ப்பாசனம் செய்யாது பயிர்களின்

தேவை 50 வீதத்தை அடையும்போது மண்ணீர்க் கொள்ளளவு அடையும் காலம் என்பவற்றைப் பற்றி அறிந்து அதற்கேற்ப நீர்ப்பாசனம் செய்தல், உவர்நீரத் தடுப்பு அணைகள் அமைத்தல்.

உ-ம் : செம்மணி, தனங்களப்பு, வல்லை.

மழைநீரைச் சேகரிக்கும் சிறு தொட்டி களை தனியார் வீடுகளிலும் பொது இடங்களில் உள்ள கட்டடங்களிலும் அமைத்து மழைநீரைச் சேகரித்து பய னுள்ள விதத்தில் பயன்படுத்த வழிகாட்டு தல், மேலதிகமானதை நிலத்திற்குக் கீழே வழிந்தோடச் செய்தல், கிணற்றில் இருந்து நீர் இறைக்கும்போது ஒரே தடவையாக அனைத்து நீரையும் வெளியேற்றாது கிணற்றுக்கு ஓய்வு கொடுத்து இறைத்தல், விவசாயிகளிற்கும் மக்களுக்கும் அசே தனப் பசளைப் பாவனையினால் நன்னீ ரானது உவர் நீராக மாறுவதையும், சேதனப் பசளைப் பாவனையின் நன்மை களையும் நன்கு விளக்குதல். நீரை வினைத்திறனாகப் பயன்படுத்தக்கூடிய துளி, தூறல், பொசிவு நீர்ப்பாசனம் பற்றி மக்களிடையே அறிமுகப்படுத்தல், உவர் நீரைச் சகித்துவாழக்கூடிய களைகள், பயிர்களை நடுதல் மூலம் நிலத்தடி நன்னீரை உவர்நீராக மாறுவதிலிருந்து பாதுகாக்கலாம்.

எனவே குடாநாட்டு மக்களாகிய நாம் எதிர்காலச் சந்ததியை கருத்தி லெடுத்து நிலக்கீழ் நீர் வளத்தைப் பாது காக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து செயற்படுவோம்.

## உசாத்துணை நூல்கள்


1) இரா.சிவச்சந்திரன், யாழ் புவியிய லாளன், இதழ் 06, 07, 08, தமிழ் பாரம்பரிய பிரதேசம், விவசாயமும், நீர்ப்பாசனமும்.
2) திருமதி த.மிகுந்தன், பசுந்தோகை, தோகை 09, யாழ் குடாநாட்டின் தரைக்கீழ் நீர்வளமும் அதன் தன்மை யும்.
3) P.G. Cooray, The Geography of Sri Lanka, 1984, Ground water condi tion in Jaffna Peninsula.
4) செல்வி செ.அருந்ததி, பசுந்தோகை, தோகை 04, குடாநாட்டு நீர்வளம்.


**சக்திதர்ஷினி சந்தானகுமாரன்**
*2013 கலைப்பிரிவு.*

♣ ❖ ♣



> விருப்பத்தோடு கற்கும் மனம் ஈரமனம்
> விருப்பமின்றிக் கற்கும் மனம் உலர்ந்த மனம்
> ஈரமனம் படிப்பதெல்லாம் நினைவிருக்கும்
> உலர்ந்த மனம் படித்ததெல்லாம் மறந்துவிடும்.

# மெல்லக் கொல்லும் நீரிழிவு நோய்

**செல்வி நா. கிருஷ்ணவேணி**
பயிற்றப்பட்ட (விசேட) மனைப்பொருளியல்

நீரிழிவு ஓர் அனுசேபக் கோளாறாகும். அதாவது உடலின் அக உயிர் இரசாயனத் தொழிற்பாட்டுடன் தொடர்பான சிக்கலாகும். சதையியின் இலங்கரான் தீவுகளினுள் காணப்படும் பீற்றா கலன்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் இன்சுலின் எனும் ஓமோன் குருதி குளுக்கோஸ் மட்டத்தைக் கட்டுப்படுத்தும். அதாவது இன்சுலின் குருதியிலுள்ள குளுக்கோஸ் கலங்களுக்குள் பயணம் செய்ய வழிப்படுத்தலாகும். இன்சுலின் குறைபாடு அல்லது இன்சுலின் தொழிற்பாட்டின் குறைபாடு காரணமாக ஏற்படும் நிலை நீரிழிவாகும். இங்கு குருதியில் குளுக்கோசு தங்கியிருப்பதால் குருதி குளுக்கோஸ் மட்டம் உயரும். இதன் விளைவாக சிறுநீர் மூலம் குளுக்கோஸ் வெளியேற்றப்படும்.

நீரிழிவு பல்வேறு முறைகளில் வகைப் படுத்தப்பட்டுள்ளது. அதாவது முதன் நிலை நீரிழிவு, துணைநிலை நீரிழிவு. இதில் முதன் நிலை நீரிழிவு அதிகளவில் காணக் கூடியதாக உள்ளது. இதற்கான காரணங்கள் திட்டவட்டமாகக் காட்டப்படமுடியாதெனினும் பின்வரும் காரணங்கள் நீரிழிவு ஏற்படுதிவல் தாக்கம் செலுத்துவதாக இனம் காணப்பட்டுள்ளது.

**பரம்பரை :**

பரம்பரை அலகு நீரிழிவு ஏற்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்துமென இனங் காணப்பட்டுள்ளது. பெற்றோர் இருவரும் நீரிழிவினால் பாதிக்கப்பட்டவர்களாயின் பிள்ளைகள் இந்நோயினால் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்பு அதிகம்.

**பால் வேறுபாடு**

கட்டிளமைப் பருவத்தில் பெண் பிள்ளைகளைவிட ஆண் பிள்ளைகளில் நீரிழிவு நோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகமாகும். என்றாலும் நடுவயதுப் பெண்களில் இதன் போக்கு அதிகமாகும்.

**வயது**

எந்த வயதிலும் ஏற்படலாம் என்றாலும் 80 வீதமளவில் 50 வயதுக்கு மேற்பட்டோரிலேயே ஏற்படுகிறது. இது 60-70 வயதாகும் வரையும் மேலும் அதிகரிக்கும்.

**அதிக உடற்பருமன்**

நீரிவுக்கும் உடற்பருமனுக்கும் இடையே நேர்க்கணியத் தொடர்பு காணப்படுகிறது. மத்திய வயது நீரிழிவு நோயாளிகளில் பெரும்பாலானோர் அதிக உடற்பருமனால் பாதிக்கப்படு கிறார்கள்.

**உணவுகள்**

சிறந்த உணவுப் பழக்கமொன்றை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் நீரிழிவு நோய் ஏற்படுவதைக் கட்டுப்படுத்தலாம் எனக் குறிப்பிடப்படுகின்றது.

**தொற்றுக்கள்**

விசேடமாக ஸ்டபைலோகொகஸ் தொற்று நீரிழிவு ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்துவதாக ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது.

துணைநிலை நீரிழிவு பரவலாகக் காணப்படவில்லை. சதையியிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் சதையி அழற்சி சதையிப் புற்று நோய், சத்திர சிகிச்சையின் மூலம் சதையி

அகற்றுதல் போன்ற நிலைமைகளுக்கு ஆளாவதால் இன்சுலின் சுரப்பு பாதிப்பு ஏற்படுவதால் இந்நிலைமை ஏற்படலாம்.

நீரிழிவை வகைப்படுத்தும் மற்றொரு முறையும் காணப்படுகிறது. இளம் பருவத்தில் ஏற்படும் நீரிழிவு, வளர்ந்தோரில் ஏற்படும் நீரிழிவு, என்பன அவையாகும். இளம் வயதில் ஏற்படும் நீரிழிவானது இன்சுலினில் தங்கியுள்ளது. எனினும் வளர்ந்தோரில் ஏற்படும் நோய் நிலைமை இன்சிலினுள் தங்கியுள்ளதன்று. இளம் வயதில் ஏற்படும் நீரிழிவாகக் காணப்படுவது 21 வயதுக்குக் குறைந்தவர்களுக்கு ஏற்படும் இந்நோய் நிலைமையாகும். இந்நோயாளிகளுக்கு இன்சுலின் பரிகாரம் அவசியமற்றது. என்றாலும் வளர்ந்தோரில் ஏற்படும் நீரிழிவாக 30 வயதுக்கு மேற்பட்டோரில் ஏற்படும் நீரிழிவு இனம் காணப்படுகிறது. அநேகமாக 50-60 வயதுடையோரில் அதிகம் காணப்படுகிறது. கூடிய உடற்பருமன் இந்நிலைக்கு கூடிய ஏதுவாயமையும்.

அநேகமாக இந்நோய் நிலைமையாகிய குருதி குளுக்கோஸ் மட்டம் அதிகரித்தலை, உணவு மூலம் அல்லது வாய்வழியாக வழங்கப்படும் குருதி குளுக்கோஸ் மட்டத்தைக் குறைக்கும் மருந்து வகைகளால் கட்டுப்படுத்தலாம்.

### நோய் அறிகுறிகள்

**குருதி குளுக்கோஸ் மட்டம் அதிகரித்தல்**

அதிக தாகம், அதிக சிறுநீர் கழித்தல், இரவில் சிறுநீர் கழிக்கவேண்டிய தேவை ஏற்படல், உண்டி விருப்பு அதிகரித்தல், நிறை குறைதல், நீரகற்றலுக்கு ஆளாகுதல், பலவீனம், நிர்ப்பீடனம் குறைதல், புண்கள் ஆறுதலில் தாமதம்.

### நீரிழிவு நிலையின் சிக்கல்கள்

நீரிழிவைக் கட்டுப்படுத்தாதிருப்பதால் மூளை, கண்கள், இதயம், சிறுநீரகங்கள், தோல், கால்கள் போன்றவற்றுக்குப் பாதிப்பு ஏற்படலாம். தவிர நீரிழிவின் போது அமிலத்தன்மை காரணமாக மூர்ச்சைத் தன்மை ஏற்பட்டு கிடோ அசிடோஸிஸ் எனும் மயக்கநிலை ஏற்படலாம். ஈரலில் காணப்படும் கொழுப்பமிலங்கள் உடைக்கப்படுவதால் அசிட்டிலும் நொதியம் Aஉம் உருவாக்கப்படுகின்றது. இவ் அசிட்டிலும் நொதியம் Aஉம் சிற்றிக்கமில வட்டத்திற்குள் சேர்வதுடன் சக்தி விடுவிக்கப்படுகிறது. மேலதிகமாகவுள்ள கொழுப்பமிலங்கள் இவ்வாறு சிக்கமில வட்டத்துக்குள் சேரமுடியாததால் அசிட்டிலும் நொதியம் Aஉம் அசிட்டிக் அமிலமாகவும் அசிட்டோனாகவும் மாற்றப்படும். இக்கீடோன் உடல்கள் குருதியுடன் கலப்பதால் குருதியில் அமிலநிலை ஏற்படும். இந்நிலை நீரிழிவுக் கோமா எனப்படும் கீட்டோ அஸிடோஸிஸ் நிலைமையை ஏற்படுத்தும்.

நீரிழிவு நோயின் போது கண்களில் பார்வை குறையும். கண்களின் விழித்திரையின் குருதி மயிர்த்துளைக் குழாய்களில் ஏற்படும் மாற்றம் இதற்குக் காரணமாகும். இதய நோய்களுக்கு ஆளாகும் வாய்ப்பும் நீரிழிவு நோயாளிகளில் அதிகமாகும். சிறுநீரகங்கள் செயலிழத்தலும் இதன் மற்றுமோர் சிக்கல் நிலையாகும். அளவுக்கு மேலதிகமாக சிறுநீரை வடிகட்டலுக்காக சிறுநீரகங்கள் தொழிற்படுவதால் சிறுநீரகங்கள் விரைவில் பலவீனமடைதல் இதற்குக் காரணமாகும். குருதியின் குளுக்கோஸ் மட்டம் அதிகரிப்பதால் தோலில் ஏற்படும் இப்புண்கள் விரைவாகக் குணமடையமாட்டாது. அநேகமான பாலியல் உறுப்புக்கள்

சார்ந்த தொற்று இந்நிலைமை காரண மாக ஏற்படுவதாகும். கண்டிடா எனப்படும் பங்கஸ் விஷேடமாக குளுக்கோஸ் அடங்கிய ஊடகம் இருப்பதாலேயே இவ்வுறுப்புக்கள் சார்ந்து வளர்ச்சியடை கின்றது. இவ்வுறுப்பைச் சுற்றிவர சொறி வும் புண்ணாதலும் ஏற்படலாம்.

நீரிழின்போது அநேகமான கால் பாதிப்புகளுக்கு உட்படும். கால்களின் நுனிகளில் இப்புண்கள் ஏற்படுவது அதிக மாகும். சுற்றயல் நரம்புகளின் தொழிற் பாடுகள் பலவீனமடைந்திருப்பதால் கால் நுனிகளின் நரம்புகள் தொற்றொன்று ஏற் பட்டாலும் விளங்காது என்பதால் அப்புண் மேலும் வளர்ச்சியடையும். சில வேளை களில் பாதங்களின் நுனிப்பகுதிகளை சத்திர சிகிச்சை மூலம் வெட்டி அகற்றவேண் டிய நிலை ஏற்படுவதும் இதனாலாகும்.

**நோய் கண்டறிதல்**

இதற்காக சிறுநீர் சோதனையும் குருதிச் சோதனையும் பயன்படுத்தப்படு கிறது.

1) எவ்வேளையிலும் விரல்களில் குருதி எடுத்து சோதிக்கும் முறை சாதாரண மட்டம் - குருதி 100 மில்லி லீற்ற ருக்கு குளுக்கோஸ் 40அப. இம்மட்டம் 180இலும் அதிகரித்தால் அது நீரிழிவு நிலையைக் காட்டும்.

2) பட்டினியுடன் இருந்து பெறப்பட்ட குருதி மாதிரிகள் சோதனை. 12 மணித்தியாலங்கள் பட்டினியுடன் இருந்து பெறப்பட்ட குருதி மாதிரி யொன்றில் இருக்கவேண்டிய சாதா ணர குளுக்கோஸ் மட்டமானது 100 மில்லி லீற்றர் குருதிக்கு 70 - 110mg. இவ்வளவு 110 இலும் அதிகரித்தல் நீரிழிவை வெளிக்காட்டும்.

3) **வாய்மூல குளுக்கோஸ் சகிப்பு சோதனை.** இங்கு உடலின் குளுக் கோஸ் பயன்படுத்தப்படும் இயலுமை பரீட்சிக் கப்படுகிறது. சுகதேகியான ஒருவர் குளுக்கோசை உணவாக உட் கொண்டு 30 நிமிடங்களுக்குள் குருதி யின் குளுக்கோஸ் மட்டம் உயரும். இத்துடன் 2 மணித்தியாலங்களுக்குள் மீண்டும் சாதாரண மட்டத்தை அடை யும். ஆனால் குளுக்கோஸ் மட்டமானது 140-150க்கும் மேலதிகமாகி சாதா ரண மட்டத்துக்கு இறங்காதுவிடின் நீரிழிவு இருப்பதை இது காட்டும்.

04) சிறுநீர் பரிசோதனை
சிறுநீர் மாதிரிக்கு குளுக்கோசுக் காக மேற்கொள்ளப்படும் சோதனை யில் விளைவு காட்டப்பட்டால் அது நீரிழிவை உறுதிப்படுத்தும்.

**உணவுக் கட்டுப்பாடு**

நீரிழிவு நோயாளிகள் நாளாந்த சராசரி வாழ்க்கை நடத்துவோர், தொழில் செய்வோர் ஆதலால் உணவுக் கோலத்தில் சக்திப் பெறுமதியை மாறாது வைத்திருத்தல் அவசியம். இன்றைய அளவுக்குத் தவிர வேண்டிய உணவுப் பொருள்கள் சில காணப்படுகின்றன. அவையாவன சீனி, கருப்பட்டி பாணி, குளுக்கோஸ், பேரீச்சம் பழம், திராட்சை போன்றனவாகும்.

ஆதலால் சொக்லட், பிஸ்கட், டொபி, புடின் வகைகள், கேக், ஐஸ்கிறீம், தொதல், பணியாரம் போன்ற சிற்றுண்டி வகை களைத் தவிர்த்தல் வேண்டும். மேலும் இனிப்புச் சுவையுள்ள பான வகைகள் போலவே மோல்ட் அடங்கிய பால்மாக்கள் பொருத்தமற்றவை. நீரிழிவு நோயாளி களிற்குச் "சிக்கலான மாப்பொருள்"

உணவுகள் பொருத்தமானவை. இங்கு வழங்கப்படும் அளவில் கவனம் செலுத்து தல் முக்கியமானது.

சிக்கலான மாப்பொருள் எனப்படு வது அரிசி சார்ந்த உணவுகள், கோதுமை மா சார்ந்த உணவுகள், உழுந்து சார்ந்த உணவுகள், குரக்கன் மா வகைகள், மாப் பொருள் அடங்கிய பழங்கள், மரக்கறி கள் என்பனவாகும். இவற்றை உணவு வேளை களில் சேர்க்கும்போது வழங்கப்படும் அளவு தொடர்பாக நாளொன்றுக்கு 3 தேக்கோப்பை சோறு, பாண் 4 மெல்லிய துண்டுகள், கிழங்கு 100 என்றவாறாகும். இவ்வுணவுகளுக்கு மேலதிகமாக இலைக் கறி வகைகள், மாப்பொருள் குறைந்த மரக்கறிகள் (போஞ்சி, சிறகவரை, கத்தரி, கோவா, லீக்ஸ், பாவற்காய், முருங்கைக் காய், புட லங்காய், தக்காளி போன்றன) உலர்ந்த வித்துக்கள் ஆகிய அவரை யினங்கள் வழங்கப்படவேண்டும். பிரதான 3 உணவு வேளைகள் 3 வழங்குவதற்குப் பதிலாக சிறு உணவு வேளைகள் 5 அல்லது 6 வழங்கப்படுவதன் மூலம் குருதி குளுக் கோஸ் மட்டம் துரிதமாக அதிகரித்தலைக் கட்டுப்படுத்தலாம். விலங்குணவுகள் (எண்ணெய் குறைந்த) வழங்கப்படலாம். பழங்கள் வழங்கப்படும் போது நார்த் தன்மை கூடிய மாப்பொருள் தன்மை குறைந்த பழங்கள் தெரிவுசெய்தல் பொருத்தமானது. (அப்பிள், புளி வாழை, கொய்யா, ஜம்பு, மாம்பழம், தோடம்பழம், அன்னாசி போன்றன)

சாதாரண கலோரித் தேவை 2100 கிலோ கலோரி எனக் கருதுவோம். நீரிழிவு நோயாளி ஒருவருக்கு நாளாந்த உணவில் பின்வருமாறு கலோரி அடங்கலாம்.

| | |
|---|---|
| **காலை உணவு** | **700 கிலோ கலோரி அளவு** |
| **பகல் 10.00 மணி** | **100 கிலோ கலோரி அளவு** |
| **பகல் உணவு** | **700 கிலோ கலோரி அளவு** |
| **மாலை தேநீர்** | **100 கிலோ கலோரி அளவு** |
| **இரவுணவு** | **500 கிலோ கலோரி அளவு** |
| | **2100 கிலோ கலோரி அளவு** |

மேலும் நீரிழிவு நோயாளி ஒருவரின் முழு கலோரி அளவில் 60 வீதமளவில் சிக்கலான மாப்பொருள் மூலம் 15 வீதம் புரதம் மூலமும், 25 வீதமளவில் கொழுப் பின் மூலமும் பெறப்படுதல் சிறந்தது. தவிட்டப் பாண், தவிட்டுடனான தானியம் அத்தியாவசிய கொழுப்பமிலங்களை வழங்கும் தாவர எண்ணெய் உணவுக் கோலத்தில் சேர்த்தல் சிறந்தது.

மேலுள்ள உணவுக் கோலத்தைப் பின்பற்றலுடன் பின்வரும் உணவு வகை களைத் தெரிவு செய்தலில் அவதானம் செலுத்துதல் வேண்டும்.

**தெரிவுசெய்ய வேண்டிய உணவுகள் :**

ஆடை நீக்கிய பால், அவரையுணவுகள், மரக்கறிகள், பழங்கள், தவிடுள்ள தானி யங்கள், முட்டை வெண்கரு, சிறு மீன்கள், கொழுப்பற்ற மீன்கள் போன்றன.

**தவிர்க்கவேண்டிய உணவுகள் :**

சீனி, இனிப்புச் சுவையுள்ள சிற்றுண்டி கள், கொழுப்புள்ள இறைச்சி, மீன் வகை, பொரித்த உணவுகள், மிருங்களின் உள்ளு றுப்புகள், பாற்கட்டி, யோகற் போன்ற பால் உற்பத்திப் பொருட்கள்.

♣ ❖ ♣

# உயர் புரதம் நிறைந்த காளான்

**திருமதி நிகேதினி ஜெயசீலன்**
B.Sc. Agri (Hons), Dip. in Edu.

அண்மைக் காலத்தில் இருந்தே காளானை உணவில் சேர்த்துக் கொள்வதில் மக்களுக்கு உள்ள ஆர்வம் அதிகரித்து வருகின்றது. இதன் பயனாகத் தமது தேவைக்கும் வருமானம் பெறவும் வீடுகளில் காளான் செய்கை பண்ணப்பட்டு வருகிறது.

எமது நாட்டில் உள்ள பெரும்பான்மை யான மக்கள் தமக்குத் தேவையான புரத உணவைப் பெற்றுக் கொள்வதில்லை. இதற்குக் காரணமாகப் பின்வருவன வற்றைக் கூறலாம்.

- புரத உணவுகள் விலை உயர்ந்தவை. இதனை மக்களினால் கொள்வனவு செய்ய முடியாதுள்ளமை.
- தாவரப் புரதங்களில் அத்தியாவசிய அமினோ அமிலங்கள் காணப்படாது. எனவே தாவர போசணிகளில் அத்தி யாவசிய அமினோ அமிலங்களைப் பெறமுடியாதுள்ளது.
- புரத உணவுகள் மிக விரைவாக பழுதடைந்து விடுவதனால் களஞ்சி யப்படுத்த முடியாத நிலை காணப் படுகிறது.

| வயதுப் பிரிவு | தேவையான புரதம் (g) |
|---|---|
| குழந்தை (1 வயது) | 14 |
| ஆண் (13-15 வயது) | 37 |
| பெண் (13-15 வயது) | 31 |
| ஆண் (நடுத்தரவயது) | 37 |
| பெண் (நடுத்தரவயது) | 29 |
| கர்ப்பிணி | 38 |
| பாலூட்டும் தாய் | 46 |

*மூலம் : மத்தியவங்கி ஆண்டறிக்கை – 2010*

காளானை உணவில் சேர்த்துக் கொள் வதன் மூலம் நாம் எமது புரதத் தேவையைப் பூர்த்தி செய்யமுடியும். காளானில் புரதம், விற்றமின்கள், கனியுப்புக்கள் என்பன அடங்கியுள்ளன. காளானில் உள்ள புரதம் பல அத்தியாவசிய அமினோ அமிலங்களை கொண்டுள்ளது. இறைச்சி, மீன் போன்ற வற்றுக்கு இணையான தரமான புரதத்தை வழங்குகின்றது. அத்துடன் காளான் இலகு வாகச் சமிபாடடையக் கூடியதாகவும் காணப் படுகிறது. அதாவது காளானில் உள்ள புரதம் பெருமளவில் சமிபாட்டுக்கு உட்பட்டு குருதியுடன் கலக்கிறது.

## காளானில் உள்ள போசணைக் கூறுகள்

100g அறுவடை செய்யப்பட்ட புதிய காளானில் அடங்கியுள்ள போசணைக் கூறுகள் :

| | |
|---|---|
| நீர் | 51.0 g |
| சக்தி | 13 K calori |
| புரதம் | 2.5 g |
| கொழுப்பு | 0.3 g |
| கல்சியம் | 20 mg |
| இரும்பு | 1 mg |
| தயமின் | 120 mg |
| ரைபோபிளேசின் | 500 mg |
| நியாசின் | 28 mg |
| அஸ்கோபின் அமிலம் | 3.0 mg |

தானியப் பொருட்களை உண்ணும் போது காளானையும் சேர்த்துக் கொள் வதன் மூலம் உடலிற்குத் தேவையான தர மான புரத அளவை அதிகரிக்க முடியும்.

## காளானின் தாவரவியல் இயல்புகள்

காளான் பூஞ்சணக் கூட்டத்தைச் சேர்ந்ததாகையால் பொதுவான பூஞ்ச

ணங்களிற்கு உரிய பல இயல்புகளைக் கொண்டிருக்கும்.

- ❖ எளிமையான உடல் அமைப்பைக் கொண்டது. அதாவது தனிக்கல மாகவோ அல்லது பல்கலங்களைக் கொண்ட இழைகளாகவோ காணப் படலாம்.
- ❖ ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தாகக் காணப்படலாம்.
- ❖ கலச்சுவர் செலுலோசினால் ஆக்கப் பட்டது. சிலவேளைகளில் இதன் மேல் கைற்றின் படை காணப்படும்.
- ❖ கலத்தினுள் கலச்சாறு காணப்படும். இதில் கொழுப்பு சிறுகோளம், கிளைக்கோஜன், விற்றமின் ஆகியன அடங்கியிருக்கலாம்.
- ❖ பொதுவான தாவரக் கலங்கள் போல் பச்சயம் காணப்படாது.
- ❖ ஒட்டுண்ணியாக இருப்பதற்கும் விருந்து வழங்கியில் இருந்து உணவை உறிஞ்சுவதற்கும் வேர்களிற்குப் பதிலாக அவற்றின் தொடக்க வடிவம் காணப்படும்.

பூஞ்சண இழைகள் பல சேர்ந்து உருவாகும். பூஞ்சண இழையங்கள் முதிர்ச்சி அடையும்போது இலிங்க முறை இனப்பெருக்கத்தின் பயனாக சில பூஞ்சண வகைகளில் தோன்றும் வடிவம் காளான் எனப்படும். இது தலை எனப்படும். பல் வேறு பூஞ்சண வகைகளிற்கு ஏற்ப இதன் வடிவம் வேறுபடலாம். பூஞ்சணங்களில் Bacidiomycites வகுப்பைச் சேர்ந்த Agarigus பிரிவைச் சேர்ந்த நீர்த்தன்மை அற்ற காளான்களே உணவுக்குப் பயன் படுத்தப்படுகின்றன.


## காளான் பயிர் செய்வதில் உள்ள நன்மைகள்

- ❖ பயிர்ச்செய்கைக்கு வீட்டில் உள்ள ஓர் சிறிய மூடிய அறை போதுமானது.
- ❖ மரத்தூள், வைக்கோல் போன்ற இலகுவாகக் கிடைக்கக்கூடிய பொருட் களைப் பயன்படுத்த முடியும்.
- ❖ சிறிதளவு மூலதனம் போதுமானது.
- ❖ குறைந்த காலத்தில் வருமானம் பெறமுடியும்.

## உணவிற்குப் பயன்படுத்தப்படும் காளான் வர்க்கங்கள்

**மரத்தூள் ஊடகம்**

1) Oyester Mashroom (சிப்பி காளான்) Pleurotus sp
2) Abelone mashroom (அபலோன் காளான்) Pleutorous sp



**வைக்கோல் ஊடகம்**

1) Paddystro mashroom (வைக்கோல் காளான்) Volvariella volvaceae
2) Button mashroom (மொட்டு காளான்) Agarigus bisporus)

## சிப்பி காளான் வகைகள்

**கோல்டன் வர்க்கம்**



**அமெரிக்க வர்க்கம்**



**பூட்டான் வர்க்கம்**




## உணவுக்குப் பொருத்தமற்ற காளான்கள்

இயற்கையாக வளரும் சில காளான்கள் உணவுக்குப் பொருத்தமானவை அல்ல. பின்வரும் இயல்புகளைக் கொண்ட காளான்கள் உணவுக்குப் பயன்படுத்தக் கூடாது.

- ❖ சந்தேகத்துக்கு உரிய காளான் வகைகள்.
- ❖ கடும் நிறம் அல்லது மணம் வீசும் காளான்.
- ❖ பூச்சிகளைக் கவராத காளான்கள்.

## நச்சு காளானை அறிந்துகொள் உதவும் பரிசோதனை

- ❖ வெங்காயத் துண்டுகளுடன் காளானை அவிக்கும்போது அல்லது ஒன்றாகச் சேர்த்து பிசையும்போது வெங்காயம் ஊதா நிறமாக மாறும்.
- ❖ காளான் துண்டுகளை வெள்ளிக் கரண்டியுடன் தொடுகையில் வைக்கும்போது அக்கரண்டி கறுப்பு நிறமாக மாறுமாயின் அது நச்சுக் காளான் ஆகும். எனவே இதனை உணவுக்குப் பயன்படுத்தக்கூடாது.
- ❖ வளையப் புடைப்பு, இணையம் என்பன காணப்படுமாயின் அவற்றை உணவுக்குப் பயன்படுத்தக்கூடாது.




## காளான்களிலிருந்து உணவு வகைகள்

### காளான் கறி

**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| புதிய காளான் | - 500 கிராம் |
| மாசித் தூள் | - 05 மேசைக் கரண்டி |
| மிளகாய்த் தூள் | - 02 மேசைக் கரண்டி |
| உப்புத்தூள் | - 02 தேக் கரண்டி |
| தேங்காய்ப்பால் | - 3-4 கோப்பை |
| மிளகுத்தூள், கறித்தூள் | - சிறிதளவு |
| பச்சை மிளகாய், | |
| சின்ன வெங்காயம் | - தேவையான அளவு |
| கோதுமை மா | - 02 மேசைக்கரண்டி |

**தயாரிக்கும் முறை**

காளான்களை நன்கு கழுவிச்சிறிய துண்டுகளாக வெட்டிக் கொள்ளுங்கள். தேவையாயின், சிறிதளவு மாஜரினில் அல்லது எண்ணெயில் வெட்டிய காளானைப் பொரித்துக் கொள்ளுங்கள். காளான் துண்டுகள், மிளகாய்த் தூள், கறித்தூள் ஏனைய பொருட்கள் என்பவற்றை நன்கு கலந்து கொள்ளுங்கள். இக்கலவையை தேய்காய்ப் பாலுடன் சேர்த்துக் குறைவான சூட்டில் தேவையான அளவு சமைத்துக் கொள்ளுங்கள். இது 7-8 பேர்களுக்குப் போதுமானது.

## காளான் சம்பல்

**தயாரிக்கும் முறை**

| | |
|---|---|
| **புதிய காளான்** | **- 500 கிராம்** |
| **தக்காளிப் பழங்கள்** | **- 02** |
| **பெரிய வெங்காயம்** | **- 02** |
| **முதல் பால்** | **- 02 மேசைக் கரண்டி** |
| **அரைத்த கடுகு** | **- 02 தேக் கரண்டி** |
| **மிளகுத் தூள்,** | |
| **தேசிச்சாறு** | **- சிறிதளவு** |
| **உப்பு** | **- தேவையான அளவு** |

**தயாரிக்கும் முறை**

காளான்களை நன்கு கழுவி, 5 நிமிட நேரம் நீராவியில் அவித்துக் கொள்ளுங்கள். அவற்றை ஒரு அங்குலம் அளவு பருமனுள்ள துண்டுகளாக வெட்டிக் கொள்ளுங்கள். தக்காளி, வெங்காயம் என்பற்றையும் சிறிய துண்டுகளாக வெட்டிக் கொள்ளுங்கள்.

வேறு சம்பல்கள் தயாரிக்கும் விதத் திலேயே தேவையான பொருட்கள் அனைத்தையும் ஒன்றாகக் கலந்து, உணவாக உட்கொள்ளலாம். இது 6-8 பேர்களுக்குப் போதுமானது.

இதனைத் தவிர, நீராவியில் அவித்த காளானை வெட்டி, கெக்கரிக்காய், தக்காளி என்பவற்றுடன் சேர்த்து கவர்ச்சிகரமான தோற்றமுள்ள சம்பலையும் தயாரித்துக் கொள்ளலாம்.

## காளான் 'சான்ட்விச்'

**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| **புதிய காளான்** | **- 500 கிராம்** |
| **கோதுமை மா** | **- 100 கிராம்** |
| **மாஜரின் / பட்டர்** | **- 100 கிராம்** |
| **சலாது இலை** | **- 100 கிராம்** |
| **தக்காளி** | **- 250 கிராம்** |
| **பெரிய வெங்காயம்** | **- 200 கிராம்** |
| **பாண்** | **- 01 இறாத்தல்** |
| **கெக்கி** | **- 01 காய்** |
| **கடுகு, மிளகு, மஞ்சள் தூள்** | |
| **உப்புத் தூள்** | **- சிறிதளவு** |

**தயாரிக்கும் முறை**

கோதுமை மாவிற்கு சிறிதளவு உப்பு, நீர் ஆகியவற்றைச் சேர்த்துக் கெட்டியாகத் திரவமாகத் தயாரிக்கவும், காளானை நன்கு கழுவிச் சுத்தமாக்கி வெட்டவும். இதனை நசித்து நீரை அகற்றவும். காளான் துண்டுகளை மாவில் தோய்த்து பொன்னிறமாகும் வரை பொரிக்கவும்.

கடுகு, மிளகு, உப்புத்தூள் ஆகிய வற்றை மாஜறினுடன் சேர்க்கவும். மெல்லியதாக வெட்டப்பட்ட பாண் துண்டில் மாஜரினைத் தடவும். இரு பாண் துண்டுகளுக்கிடையே சலாது இலை, தக்காளித் துண்டு, வெங்காயத் துண்டு ஆகியவற்றுடன் பொரித்த காளானையும் வைத்து உணவுக்குப் பயன்படுத்த முடியும்.

## காளான் சூப்

**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| **காளான்** | **- 500 கிராம்** |
| **தக்காளி** | **- 02 பழங்கள்** |
| **கரட்** | **- 100 கிராம்** |
| **பசளி அல்லது கோவா** | **- 100 கிராம்** |
| **பெரிய வெங்காயம்** | **- 01** |
| **நீர்** | **- 4 கோப்பை** |
| **ரம்பை, கறிவேப்பிலை<br>எலுமிச்சம்புளி, உப்பு<br>மிளகுத்தூள்** | **- தேவையான அளவு** |

**தயாரிக்கும் முறை**

தக்காளியில் துளை இடவும். வெங் காயத்தை 4 துண்டுகளாக மாத்திரம் வெட்டவும். கரட், தக்காளி, வெங்காயம் ஆகியவற்றை நீருடன் சேர்த்து கொதிக்கும் வரை சூடாக்கவும். இதற்கு ரம்பை, கறிவேப்பிலை ஆகியற்றையும் சேர்க்கவும். இதறகு உப்பு, மிளகு ஆகியவற்றையும் சேர்க்கவும். இதன் பின் வெங்காயத் துண்டு கள், தக்காளி ஆகியவற்றை கவனமாக

வெளியே எடுக்கவும். மிகச் சிறிய துண்டு களாக வெட்டப்பட்ட காளான், பசளி அல்லது கோவா ஆகியவற்றைச் சேர்த்து மீண்டும் 7 நிமிடங்கள் வரை சூடாக்கவம். அடுப்பிலிருந்து இறக்கும்போது எலுமிச்சம் சாற்றை இடவும். இதனுடன் தக்காளி, வெங்காயம் ஆகியவற்றைச் சேர்த்து இளம் சூடாக இருக்கும்போது அருந்த முடியும்.

## காளான் 'கட்லற்'

**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| **காளான்** | **- 300 கிராம்** |
| **சின்ன வெங்காயம்** | **- 08** |
| **பச்சை மிளகாய்** | **- 04** |
| **உருளைக் கிழங்கு** | **- 02** |
| **மாசித்தூள், மிளகுத்தூள்** | **- சிறிதளவு** |
| **உப்புத்தூள்** | **- சிறிதளவு** |
| **தேங்காய் எண்ணெய்** | **- சிறிதளவு** |
| **உலர்ந்த பாண் அல்லது பிஸ்கற் (றஸ்க்) தூள் கோதுமை மா** | **சிறிதளவு** |

**தயாரிக்கும் முறை**

காளானைச் சிறிய துண்டுகளாக வெட்டி நீராவியில் அவிக்கவும். காளானை நசித்து மேலதிக நீரை அகற்றி விடவும். இதற்கு உப்பு, மிளகு ஆகியவற்றைச் சேர்த்து எண்ணெயில் தாளிக்கவும்.

இதற்குச் சிறியதாக வெட்டிய பச்சை மிளகாய், சின்ன வெங்காயம், மாசி உப்பு, அவித்து நசிக்கப்பட்ட கிழங்கு ஆகிய வற்றைச் சேர்த்து நன்கு கலக்கவும். பின் சிறிதளவு எலுமிச்சம் சாற்றை விடவும். இக்கலவையைத் தேவையான அளவில் உருண்டைகளாகப் பிடித்து தடித்தமாக கரைசலில் தோய்த்து, பாண் தூளில் அல்லது றக்ஸ் தூளில் புரட்டவும்.

இதனை பொன்னிறமாகும் வரை பொரிக்கவும். இதன் மூலம் 12-15 கட்லற்களைத் தயாரிக்கலாம்.

## காளானை உணவுக்காகச் சேமித்து வைத்தல்

**சிப்பிக் காளான்**

- ❖ அறுவடை செய்த உடன் குளிரான இடத்தில் 10-12 மணித்தியாலங்கள் வரை சிறந்த நிலைமையில் வைத்திருக்கலாம்.
- ❖ துளை கொண்ட பொலித்தீன் பைககளில் அடைத்து குளிர்சாதனப் பொட்டியில் 2-3 நாட்கள் வரை சேமிக்க முடியும்.
- ❖ கொதி நீரில் 3 நிமிடங்கள் அவித்த பின் பொலித்தீன் பைகளில் அடைத்து 4-6 வாரங்கள் குளிர்சாதனப் பெட்டி யில் சேமிக்க முடியும்.
- ❖ சிறிய துண்டுகளாக வெட்டிய காளானை 3 நிமிடங்கள் நீராவில் அவித்து சூரிய ஒளியில் உலர்த்தி 6 மாதம் வரை சேமித்து வைக்க முடியும்.

**வைக்கோல் காளான்**

- ❖ அறுவடை செய்யப்பட்ட காளானைப் பொதுவாக குளிரான இடத்தில் சில மணித்தியாலங்கள் வரை சிறந்த நிலைமையில் வைத்திருக்க முடியும்.
- ❖ குளிர்சாதன்ப பெட்டியில் 24 மணித்தியாலங்கள் வரை சேமிக்க முடியும்.

**உசாத்துணை**


1) D.J.Taylor, N.P.OGreen, G.W Stout, Biological Science, 1998 (19-25)
2) Publication of Department of Agriculture, Mushroom Cultivation, 1999 (7-12)
3) mycolbas.blogspot.com
4) en wikipedia.org/wiki.fungi culture.

♣ ❖ ♣

# தேசிய மட்ட சாதனையாளர்கள்

## கலைத்துறை

### வி. திவாகரன்




தமிழ்த்தினப் போட்டி – பிரிவு **IV** சிறுகதை ஆக்கம் 2ஆம் இடம், (2009).

சிலோன் அமெரிக்கன் மிஷன் 200ஆவது ஆண்டு நிறைவு கட்டுரைப் போட்டி 1ஆம் இடம். (2009)

கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி வைரவிழா சிறுகதைப் போட்டி 2ஆம் இடம். (2010)

### ஜெ. ஜோயல் ஜெயப்பிரகாஷ்



World Malaria Day சித்திரப் போட்டி 3ஆம் இடம். (2011)

நனோ தொழில்நுட்ப சித்திரப் போட்டி, 4ஆம் இடம். (2011)

### வி. சுலக்ஷன்



போதை ஒழிப்பு தினக் கவிதைப் போட்டி 2ஆம் இடம். (2010)


## விளையாட்டுத்துறை

### கோ. கஜந்தினி




ஈட்டி எறிதல் (தேசிய மட்டம்) தெரிவு. (2010)

### தே. சிந்துஜன்



800 மீற்றர் (தேசிய மட்டம்) தெரிவு (2010, 2012)

க.பொ.த (உ/த) 2008



செல்வன் ச. அனுஷன்

3A

க.பொ.த (உ/த) 2009



செல்வன் ப. பார்த்தீபன்

3A

க.பொ.த (உ/த) 2009



செல்வி பா. தேவரஞ்சினி

3A


க.பொ.த (உ/த) 2010



செல்வி ச. தாரகா

A 2B

க.பொ.த (உ/த) 2011



செல்வி இ. நிஷாந்தினி

3A



மூன்றுமாடிக் கட்டிடத் திறப்பு விழாவிற்கு வருகை தந்த
அமைச்சர்கள் மங்கல விளங்கேற்றுகின்றனர் - 2012



ஸ்கந்தன் ஆலய முன்றலில் ஹவாய் ஆதீனத்தைச் சேர்ந்த
குகானந்த சுவாமிகள் சொற்பொழிவாற்றுகின்றார் - 2011




மூன்றுமாடிக் கட்டிட அடிக்கல் நாட்டு விழாவிற்கு வருகை தந்த
கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த - 2009






ஸ்கந்தவரோதயக் கல்லூரி நூற்றாண்டு நினைவு
முத்திரை வெளியீடும் நடன நிகழ்வும் - 2012

# வீதிக்கு வா தோழா!!!

எழுதிச் செல்லும் விதியின் கை
எழுதிமுடித்த கவிதை
எங்கே வந்தது யாரிற்கு வந்தது
நாட்டின் சுதந்திரம்?
பசியாலே செத்தவரும் பட்டைக்கல் சுமந்தவரும்
உதைபட்டு உறங்கியவரும் நம்ம ஜனங்களே!

வயிற்றிலே நெருப்பு இடம் கேட்க
செவிப்புலனிற்கு இது கேட்க
கட்புலனிற்கு கானல்
தெரிந்து கொண்டே இருந்தது
கார்காலம் தொடங்கிப் போனது
குளிர் கலந்த வெப்பமாக இருந்தது

நேற்று என் மனச்சிறைகளில்
நான் ஒரு கைதி – ஆனால்
இன்று அறிவெனும் சோலையின் அதிபதி
நேற்று பூமிப்பந்தின் முற்றத்தில்
பூங்காற்றின் சொர்க்கத்தில் இரத்தநாள வேகத்தில்
என்னை இழந்துவிட்ட பாவி.

நேற்றைய என் வாழ்வில் நெல்லினுள் பதரைத் தேடினேன்
பாலினுள் நீரைத் தேடினேன் – அப்படி
குப்பையினைக் கிளறியபோது
தேடல்களினை மேற்கொண்டேன்
தேடல்கள் என்னைத் தோற்கடித்தது
தேனென எண்ணி விடந்தனில் வீழ்ந்தேன்.

உன்னைத்தேட நிலவுவந்து நிலத்தில் விழுந்து அழுகிறது
உந்தன் கல்லறை முத்தமிட கார்த்திகைப் பூக்கள் அலைகிறது
எங்கு சென்றாய்? ஏன் சென்றாய்?

இதயம் ஏனோ வலிக்கிறது
என்ன செய்தோம்? என்ன செய்வோம்?
முடிவு இல்லாத பயணமொன்று நடக்கிறது.

தேரடி வீதியிலே உன்னைத் தேடினோம் காணவில்லை
காடுகள், மலைகள் எங்கும் கத்திப் புலம்பினோம்
எங்களின் கதறலுக்கும் பதிலுமில்லை
நீ மிதித்த புல்லின் நுனி நிமிர்ந்து நின்று தேடுது உன்னை
வங்கக்கடலே நீலக்கடலே யுத்ததம் நடந்தது பாரு
யுத்தம் முடிவில் செத்துமடிந்தேன் பாவி என்று கூறு!

இருண்டவானம் மீதினில் விளக்கை ஏற்றுவோம்
என்றோ ஒருநாள் எங்கள் கனவுகள் நனவாகும் – அன்றுவரை
எங்கள் நெஞ்சினில் வெற்றியின் முகங்களே நிழலாடும்
விதி என்று நொந்து கொண்டால் – எம்மை
மதிகெட்ட மடையர் என்று வரலாறு தூற்றும்
மதிகொண்டு விதிவெல்ல வீதிக்கு வா தோழா!!!

**சிந்துஜா சிவபாலசிங்கம்**
க.பொ.த (உ/த) 2013

---

# நட்பு

வாழும் வரை வாழ்க்கை
வெல்லும் வரை தோல்வி
மறையும் வரை நிலவு
உதிரும் வரை பூக்கள்
சிரிக்கும் வரை கண்ணீர்
மரணம் வரை நம் நட்பு.

**சி. விருத்திகா**
தரம் 11

---

# பரீட்சை நெருங்கினால்...

பரீட்சை!
பரீட்சை என்றாலே பீதிதான்.
பரீட்சை நெருங்கினால்
மட்டுமே காலம் பொன்னாகும்
மயக்கத்தில்
மங்கிய விழிகளுக்குள்
பாடக் குறிப்புக்கள்
தென்படும்!

உணவு, உறக்கம்
இரண்டும் இருந்தும்
இல்லாமல் போகும்!
காரண மின்றி
உடல் மெலியும்!
கண் முன்னே
கடவுள் தோன்றும்!

அர்த்த சாமத்தில் என் எதிர்காலம்
தூக்கத்தோடு போட்டியிடும்
வேண்டிய ஒன்றைப் பெறுவதற்காக
வேண்டாத ஒன்றைச் செய்வதாக
நினைக்கத் தோன்றும்

லேசாய் பயம் வரும்!
இதயம் படபடக்கும்!
உயிர் துடியாய் துடிக்கும்!
உன்னால் முடியும் என்று
உள்ளம் சத்தமிடும்.

நம்பிக்கையை சுவாசமாக்கி இளமை உதிரும்!
பரீட்சை...! அது பாடத்திற்கல்ல, வாழ்க்கைக்கு.

காதலின்
விளம்பரங்களெல்லாம்
போலிகளும்
பொய்களுமே
பொங்கி வழியும்...!
காதலர்களுக்குக்
கடைசியின் கிடைப்பது
பாரமான கண்ணீர்த்
துளிகள் மட்டுமே...! இக்
கண்ணீருடன் என் காதலும் கல்லூரியில் தொடரும்...!

**ம. சிந்தனைக்குமரன்**
கலைப்பிரிவு 2013



Never hurt feelings of anyone
Never do wrong to one
Never get a weak mind
Ever joy you'll find!

*எவர் மனத்தையும் வதைக்காதே!*
*எவர்க்கும் தீமை புரியாதே!*
*எப்போதும் மனம் தளராதே!*
*என்றும் துன்பம் விளையாதே!*

# வீசுகின்ற அறிவு தந்த கல்விக்கூடம்

பேசுகின்ற மொழியை பிறந்த திருநாட்டை
வீசுகின்ற அறிவுதந்த கல்விக்கூடமதை
தொப்புள் கொடியுறவாய் தாயவளின் மறுவடிவில்
எப்போதும் பேசுகின்ற காரணம் தானென்ன?

தன்னலமற்ற தன்மை தியாகத்தின் தனித்துவம்
கொடுப்பதே நோக்கம் அன்றி எடுப்பது ஏதும் இல்லை
பெற்றெடுத்த அன்னை பொழிந்திட்ட அன்பைப் போல்
கற்று நின்ற கல்விக்கூடம் பொழிந்தது அறிவுதனை

எங்கள் வளர்ச்சிக்காய் அன்பு மழை பொழிபவள் தாய்
எங்கள் உயர்ச்சிக்காய் அறிவு மழை பொழிபவள் தாய்
பெற்ற அன்னை மடியில் செலவிட்ட காலம் சொற்பம்
கற்ற அன்னை மடியில் காலமெல்லாம் செலவிட்டோம்

கற்றோர் அவை தனிலே கண்ணியமாய் நிற்கவைத்தாள்
பெற்றவள் மனம் மகிழ பெருமை பல சேர்த்திட்டாள்
அதனால் ஈன்று புறம் தந்த எம் தாயை மதிப்பது போல்
கல்விப் பயிர் வளர்த்த கல்லூரி என் தெய்வம்.

**எஸ். ஆரமுதன்**
தரம் 11

# பெண்ணே! துணிந்திடு!

புதியதோர் உலகம் செய்வோம் – நிதம்
புதுமைகள் நாம் படைப்போம்
புன்னகையுடன் நாம் இருப்போம் – என்றும்
புது நிலவாய் நாம் திகழ்வோம்

பழைய பேதங்கள் நாம் ஒழிப்போம்
பசுமையாய் உலகை உருவாக்குவோம்
சகோதரத்துவத்தை நாம் காத்து
ஒற்றுமை நிறைந்த சமூகத்தை கட்டி எழுப்பலாம்

சகிப்புத் தன்மையை வளர்த்திருப்போம்
சந்தோசத்தை நோக்கியே பயணிப்போம்
சக்தி நிறைந்தவராய் நாம் வாழ்வோம்
சஞ்சலங்களை மறக்கவும் தயாராவோம்

சண்டைகள் நிறைந்த உலகம் தனில்
தன்மானத்தை உயர்த்தவும் நாம் உழைப்போம்
கண்ணீர் துடைத்து பிறரை ஊக்கிடுவோம்
கலங்கரை விளக்காய் நாம் வாழ்வோம்

பரந்த வானம் முதல் பாதாளம் வரையும் நாம் செல்வோம்
பாடுபட்டேனும் வீட்டின் பெயர் காப்போம்
பொது அறிவில் வரலாறாய் நாம் இருப்போம்
பொக்கிஷமாய் மானத்தையும் காத்திடுவோம்

அனைத்து துறைகளையும் நாமறிவோம்
திறமைகளை வெளிக்காட்டி முன்வருவோம்
திட்டவட்டமாய் முடிவுகளைத் தீர்மானிப்போம்
மானிடம் போற்றும் வகையில் அதையும் செய்து முடிப்போம்

துரும்பாலும் துல்லியமாய் ஓவியம் செய்வோம்
காவியங்களாய் நாம் திகழ்வோம்
பூமிபோல் பொதுமையாய் இருப்போம்
பிரச்சினை வந்தால் பொங்கியும் எழுவோம்

விண்ணையும் நோக்கிப் பயணிப்போம்
விஞ்ஞான உலகையும் நாம் அறிவோம் – நாம்
பெண் என்று உலகிற்கு உரைப்போம்
இவ்வுலகில் நாமே வழி நடத்துவோம்

**அபிரா**
தரம் 11

# எல்லாம் கடந்து போகும்

தோல்வியடைந்தபடி வெட்கம் வேதனை அவமானம்
சுமைகளெல்லாம் சுமந்தபடி அலைகிறேன் நான்
பைத்தியமா தெரியவில்லை – சோகங்களின்
சுமை தாங்கியா தெரியவில்லை
நாளுக்கு நாள் நான் துடித்து வாழ
இறைவன் எனக்களித்த கொடுமையா?
அது தான் கொடையா?
வெற்றி பெறுகிறேன் மீண்டும் நான்
எல்லா மனிதர்களையும் போலன்றி
எனக்கு எத்தனையோ மனங்கள்
அவற்றால் சுமக்கிறேன் – பல சுமைகள்
துன்பங்கள், இன்பங்கள், சோகங்கள்
சுமந்து சுமையாகாமல் நிறைவு பெறுகிறேன்
“எல்லாம் கடந்து போகும்”
என்ற எண்ணம் எனக்கு எப்போதும்
தொடரலையாய் என் பின் தொடர
அச்சமில்லை எனக்கு அவமானமில்லை!
அத்துடன் வெற்றிப்பாதை தொடர்கிறது!

**ச. கிருஷ்ணா**
கலைப்பிரிவு – 2013

# தோல்வியின் போது....

முயற்சிகள் பல செய்வோம் நாம்
முன்னேற்றம் எமக்கு உண்டு
முடியவில்லை என்றால்
பயனேது எமக்கு

இறந்து கிடந்த தேனீயை
எறும்பு கண்டது அதை
இழுத்துச் செல்ல பல தடவை
முயன்று தோற்றது

தோல்வி கண்டு தளராது
எறும்பு விரைந்து வந்து
துணையாய் ஒன்றைக் கூட்டி வந்து
இரண்டும் சேர்ந்து தேனீயை இழுத்துச் சென்றது

தோல்வி கண்டு தயங்காது
துணிவுடன் எழுவோம் நாம்
வெற்றி நிச்சயம் நமக்கு
நம்பிக்கை கொண்டால்...

**கௌ. குமுதினி**
கலைப்பிரிவு

# தாயன்பு

ஈரைந்து மாதம் கருவறையில்
எனைச் சுமந்தாய்
ஈன்றெடுத்த பின்னும்
கண் விழித்து எனைக் காத்தாய்

உதிரத்தை பாலாக்கி – என்
உடலுக்கு ஊட்டம் தந்தாய்
நிலாச்சோறு நீயூட்ட உன்
நிலா முகம் பார்த்து நான்
உணவு உண்டேன்.

என் பிஞ்சு விரல் நீபிடிக்க
உன் தயவில் நான் நடை பயின்றேன்
பள்ளிப் பருவம் வந்ததும்
படாத கஷ்டமெல்லாம் – பட்டு
என்னைப் படிக்க வைத்தாய்

பரீட்சை நெருங்கி வந்ததும் – உன்
பசி தூக்கம் தனை மறந்து
என்னுடன் துணை இருந்து
ஏற்றம் பெற வரமளித்தாய்
இன்னுமோர் ஜென்மம் இருப்பின்
உன் கருவில் மீண்டும் உருவாகி
உன் மடியில் தவழ்ந்திட
வரமொன்று தருவாயோ
என் தாயே!

**N. கலையரசி**
2014 கலைப்பிரிவு

# அன்னையே நீ தான்!

அம்மா என்றால் மூன்றெழுத்து
அதை சும்மா என்றால் சோதனை
அம்மா போன்று யாருள்ளார்
அவளை அளக்க யாரால் முடியும்?

ஆயிரம் கவி சொன்னேன்
அழகாய்ப் பொய் சொன்னேன்
அன்னையே உன் பெருமை
ஒரு வரியில் சொல்லவில்லை

இன்பத்திலும் துன்பத்திலும்
இவளே துணையாவாள்
இன்னல்கள் வந்துவிட்டால்
இறைவனை வேண்டிடுவாள்

பத்து மாதம் சுமந்து அவள்
பட்டபாடு போதும்
பாவியவள் பட்டினியாய்க் கிடந்து
பால் தந்ததும் போதும்

இத்தனைக்கும் நன்றியாய்
அவளைப் போற்றவும் வேண்டாம்
அவளைத் தூற்றவும் வேண்டாம்
அவளைக் காலம் வரையும்
காப்பாற்றினாலே போதும்.

க. வினுஷியா
2013 கலைப்பிரிவு

# ஊனத்தை வென்றிட கல்வியே வழி

நண்பா
உன் கண்கள் இரண்டும் பார்வையிழந்து
உலகைப் பார்க்க மறுத்தாலும்
நீ கல்வி பயின்று உயர்ச்சி அடைந்தால்
உலகம் உன்னைப் பார்க்குமடா

நண்பா
உன் செவிகள் இரண்டும் கேட்டலிழந்து
ஒலியைக் கேட்க மறுத்தாலும்
நீ கல்வி பயின்று உயர்ச்சி அடைந்தால்
உலகம் உன்னைக் கேட்குமடா

நண்பா
உன் கால்கள் இரண்டும் வலிமையிழந்து
உன்னைச் சுமக்க மறுத்தாலும்
நீ கல்வி பயின்று உயர்ச்சி அடைந்தால்
உலகம் உன்னைச் சுமக்குமடா

நண்பா
உன் உதடுகள் மலராது
வார்த்தை பேச மறுத்தாலும்
நீ கல்வி பயின்று உயர்ச்சி அடைந்தால்
உலகம் உன்புகழ் பேசுமடா.

**பி. நாகலோஜினி**
கலைப்பிரிவு 2013

# பள்ளி நாட்கள்

ஏதோ நினைவுகள்
எம் பிஞ்சு மனங்களில்
பஞ்சு போன்ற துடிப்புக்கள்...
இன்று வந்துள்ள தனிமை
அதன் தவிப்பு

இழந்து விட்டோம் எம்பள்ளி நாட்களை...
கல்லூரி வாசலினுள்ளே எத்தனை குதூகலங்கள்
அத்தனையும் இழந்துவிட்டோம்
அனைவரையும் பிரிந்துவிட்டோம்...

இருள் காட்டில் முடங்கி இன்று
விடிவுக்காய் காத்திருக்கின்றோம்...
இறைவனால் படைக்கப்பட்ட நாட்களையெல்லாம்
நல்ல நாட்கள் – பள்ளி உறவைப்
பிரிந்து தனிமையில் வாடும் நாள் ஆரம்பமாகிறது
கொடிய நாள்

ச. கிருஷ்ணா
க.பொ.த (உ/த) 2013

# பசுமை

உதிர் இலை
துளிர் விட
வீராப்புக் காட்டி
வீரிட்டுக் கத்தி
வீணாகிப்போன காலமது!
பனித்துகள் பட்ட கிளை
துளிர்விட்டு
கும்மியடித்தது
குதூகலம் கொண்ட காலமிது!

மரமொன்று
விழாக்கொள்ள கிளைகளை
அழைத்ததிங்கே...
கிளை அங்கே
நுழை கொள்ள
இலைகளும் தகர்ந்ததங்கே
விழாவிலே உலாவந்த
நிழல் அங்கே
இனிமை காண...
கட்டுக் கட்டாய்
மொட்டங்கே
கொத்தாக்கி தந்ததங்கே!
மொட்டொன்று முட்டாமல்
மோதி யன்றே!
வண்டொன்று குண்டாகி
போன தன்றே!
மறுகணம் காணாமல்
இதழ்...
உறவாட பூ வாகி
போனதங்கே!

இரவிலும்
உலாவந்த
நிலாவில்...
மகரந்த மணிகளும்
மலரோடு மணமாகிப்
போனதங்கே!
இதழின் இனிமை
இந்த பசுமையிலே
இனித்தது!

**ஜெ. ஜனக்ஷன்**
கலைப்பிரிவு 2014

# மலர்கள்


மலரே! உன் இதழென்ன
பஞ்சா? இல்லை இல்லை
பவளமோ? அல்லவே – உன்னை
தொட்டவுடன் கூசுதேஎன் கை

பூவே நீ என்ன பட்டாம்பூச்சியா?
எங்கிருந்து பெற்றாய் உன்வர்ணம்
பளபளக்குதே உன்மேனி – அது
பறிக்கப் பார்க்குதே என் கண்ணை

அத்தர், பன்னீர் எல்லாம் உன்
தெவிட்டாத தேன் அமுதத்திலா?
காற்றோடு கலந்துவிட்டாயே – அது
கண்ணைமூடித் திறக்க வைக்குதே என் நாசை.

**பா. சானுஜா**
தரம் $6^{A}$

✸ ✸ ✸



என் வேலைகள் மட்டும் முடிந்தால் போதும்
என்று நின்றுவிடாதே!
மற்றவர்களுக்கும் வேலைகளை முடிக்க உதவி
செய்ய வேண்டும்
என்று நினைத்துப் பார்
உன்னால் எதுவும் முடியும்!

# வாழ்க்கைக்கான கல்வி

மனிதனது உயிர்வாழ்க்கைக்கு உணவு அவசியமானது போல மனிதனின் மேம் பாட்டிற்கு கல்வி அவசியமாகும். கல்வி யானது நுண்மதி ஆற்றலையும் திறன்களை யும் வளர்க்கின்றது. அத்தோடு வாழ்க் கைக்கு வேண்டிய நற்பண்புகளையும் வளர்க்கிறது. நற்பண்புகள் வளர்ப்பதா லேயே வாழ்க்கையின் குறிக்கோளை கல்வி மூலம் பெறமுடியும். வாழ்க்கைக் கும் கல்விக்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. வாழ்க்கையின் குறிக் கோளை அடையும் வழி கல்வியே ஆகும். கல்வியே வாழ்க்கை, வாழ்க்கையே கல்வி ஆகும்.

கல்வியானது ஆதிகாலந்தொட்டு இன்றுவரை எல்லோராலும் போற்றப் பட்டு வருகின்றது. கல்வியூடாக பண்பாடு வளர்கிறது. கல்வியை தன் மூச்சாகக் கொண்டு இயங்கிவருவது எமது சமு தாயம் ஆகும். வாழ்க்கைக்கு வழிகாட்டும் உண்மைத்தன்மை, தெய்வீகப் பண்புகள், நிறைந்த மேன்மைகள் கொண்ட கல்வி மனித அடிப்படை உரிமைகளில் ஒன்றாகும்.

"கல்வியே வாழ்க்கை, வாழ்க்கையே கல்வி" என்ற கூற்றிற்கிணங்க மனித மேம்பாட்டிற்கு கல்வியே முக்கியத்துவம் பெறுகின்றது. மனிதனை வாழ்வாங்கு வாழச் செய்கிறது. தொடர்ச்சியாக உலக வாழ்க்கையில் நீண்ட மரபு, பண்பாடு, விழுமியங்களை கல்வியே ஒரு தலை முறையிலிருந்து இன்னொரு தலை முறைக்கு கையளிக்கிறது. கல்வியானது சமுதாயத்தில் பிறருடன் பொருந்தி வாழத் துணை செய்கிறது. பயனுள்ள முறையில் ஓய்வுநேரத்தைக் கழிக்க உதவுகிறது. இந்த அடிப்படையில் கல்வி முக்கியத்துவம் பெறுகிறது. ஒருவனது வாழ்க்கையில் படிப்படியாக மாற்றத்தை ஏற்படுத்தி அவனை சமூகத்தோடு ஒட்டி வாழவைப் பதும் கல்வியே ஆகும்". இத்தகைய கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றி பல தத்துவஞானிகள் தத்தம் காலத்திற்கு ஏற்ப கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

"உண்மை, நன்மை, அழகு, இம் மூன்றினையும் உணர்த்தும் கல்வியே கல்வி" என்றார் கிரேக்க தத்துவஞானி பிளேட்டோ.

"கல்வியானது மக்களது வாழ்க்கை யுடன் இணைந்ததாகவும் அதனை குழந்தைகளின் ஆளுமைக் கூறுகளின் சிறந்த பண்புகளை வெளிக்கொணர்வ தாக உள்ள செயல்முறை" என்று விளக்கம் அளித்துள்ளார் காந்தியடிகள்.

"பண்பாடுள்ள இலட்சிய வாழ்க்கை வாழ்வதற்கு கல்வியே அடிப்படை" என்றார் தாகூர். மனிதப் பண்புகள் என்று கூறப்படும் பண்புகளை ஒவ்வொருவரும் பெறச் செய்தல் கல்வியின் இலக்காகத் திகழ்தல் வேண்டும் என்பதும் தாகூரின் கருத்துக்களாகும்.

ஆத்மீக ரீதியாகக் கல்வியை நோக்கிய சுவாமி விவேகானந்தர் அவர்கள்" மனி தனிடம் ஏற்கனவே பொதிந்திருக்கும் முழுமைபெற்ற நிறைவினை மலரச் செய்வது கல்வியாகும்" என்றார்.

**கற்றத னாலாய பயன்என் கொல்வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்**

என வள்ளுவரும் கல்வியின் பயன் ஆத்மீக ஈடுபாடே என்றார்.

“கல்வி என்பது ஒருவரது நுண்மதி யாற்றல்களையும், திறன்களையும் விருத்தி செய்வதோடு மட்டும் நின்று விடாது அவனது உலக நோக்கை விரிவடையச் செய்யவேண்டும். சமூகத்திற்கும் பரந்த உலகத்திற்கும் அவரது பணிகள் பயன்படும் வண்ணம் கல்வி நடவடிக்கைகள் அமைதல் வேண்டும். அறக்கல்வியும் தெய்வீகக் கல்வியும் ஒழுக்கமுள்ள வாழ்க்கையை நோக்கி ஒருவர் செல்வதற்கு உரிய பயிற்சியைத் தரும்” என்றார் ஸ்ரீ சத்தியசாயி அவர்கள். விழுமியங்கள் மேம்பாடடையும் விதத்தில் கல்வி அமையவேண்டும் என்றார்.

இவ்வாறு பல தத்துவஞானிகள் தமது கருத்துக்களைக் கூறியுள்ளார்கள். இதன் மூலம் வாழ்க்கைக்கு கல்வி எவ்வளவு முக்கியத்துவம் பெறுகிறது என அறிந்துகொள்ள முடிகிறது. கல்வியானது எங்கும், எப்போதும், எந்நிலையிலும் பெறக்கூடிய ஒன்று என்றும், அது கருவறையிலிருந்து கல்லறை வரை பெறக்கூடிய ஒன்று என்றும் கூறப்படுகிறது. தொழிலுக்கு அடிப்படையாக அமைவது கல்வியே ஆகும். தற்காலத்தில் தொழிலை மையமாகக் கொண்ட கல்வியையே மனிதன் நாடுகின்றான். தொழில்நுட்பம், மருத்துவம், பொறியியல், முகாமைத்துவம், கணனி முறைக்குட்பட்ட பாடநெறிகள் என்பவற்றைக் கற்க, கல்வி வழிகாட்டுவதுடன் உயர்ந்த வருவாய் தரும் தொழில்களையும் கல்வியின் மூலம் பெற்றுயரமுடிகிறது.

நாட்டில் கிராமம், நகரம் என்ற வேறுபாடின்றி மக்கள் அனைவரும் கற்றுக்கனிந்து களிப்புறும் கல்வி மானிடரின் பொதுச் சொத்தாகும். கல்வி மனிதனிடம் மறைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து அவனது வாழ்க்கையை ஒளிபெறச் செய்கிறது.

எவன் ஒருவன் நல்ல கல்வியைப் பெற்றுக் கொள்கின்றானோ அவன் தன்னுடைய தரத்தையும், வாழ்க்கை முறையையும் மேம்படுத்திக் கொள்வான். தனது ஆளுமையை வளர்த்துக்கொண்டு அறிவின் உச்சப் பயன்பாட்டை தனது வாழ்வின் ஊடாக வெளிக்காட்டிக் கற்றபடி நடந்து கொள்வான். கல்வியே அவன் வாழ்வதற்குத் துணை செய்யும். எனவே நாமும் வாழ்க்கைக்கான கல்வி கற்று வாழ்வில் முன்னேற்றம் அடைவோமாக.

**வி. கீர்த்தனா**
*தரம் 10*

*எவர் மனத்தையும் வதைக்காதே!*
*எவர்க்கும் தீமை புரியாதே!*
*எப்போதும் மனம் தளராதே!*
*என்றும் துன்பம் விளையாதே!*

# விசேட தேவைக்குட்பட்ட மாணவர்களை கல்வியினால் வலுவூட்டுவோம்

விசேட தேவைக்குட்பட்ட மாணவர்கள் என்போர் பல்வேறு வழிகளில் பாதிப் படைந்த மாணவர்கள் ஆவார்கள். இவர்களுக்கு உள ரீதியாகவும், உடல் ரீதியாகவும் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. உளரீதியான பிரச்சி னைகள் என்று பார்க்கும்போது தாயின் அன்பு, தந்தையின் அரவணைப்பு, சகோதரர் களின் பாசம் என்று பல பிரச்சினைகள் உளத்தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும்.

உடல் ரீதியான பிரச்சினைகள் என்று பார்க்கும்போது கை இயலாது,கால் இயலாது, கண்பார்வை தெளிவின்மை, கேள்திறன் குறைவு, சுயசிந்தனை ஆற்றல் குறைவு என்று பல பிரச்சினைகள் உடலில் காணப்படும். இவர்கள் சமுதாயத் திலிருந்து ஒதுக்கப்பட்ட ஒரு பிரிவின ராகக் கருதப்படுவது மற்றுமொரு பிரச்சினை ஆகும்.

இவர்கள் மனதில் தாழ்வு மனப்பாங்கு ஏற்பட்டுக் காணப்படும். இதனாலே சாதாரண மாணவர்களைவிட அறிவு, செயற்பாடு, கல்வி என்பவற்றில் கீழ்நிலையில் காணப் படுகின்றார்கள். மற்றைய மாணவர்களுடன் தம்மை ஒப்பிட்டு தன்னைத் தானே குறைத்து மதிப்பிட்டுத் தற்கொலை செய்யவும் முற்படுகின்றார்கள்.

இவர்களுக்கு மனதில் ஒரு தன்னம் பிக்கையை ஏற்படுத்துதல் மிக அவசிய மாகும். தோல்வி ஏற்பட்டுவிட்டதும் தான் எல்லாவற்றிலும் தோல்வியடைவேன் எனக் கருதி மன உளைச்சல்களுக்கு ஆளாகின்றனர். இ.முருகையன் கூறியது போல, அதாவது "வெற்றி விளைந்தாலும், தோல்வி விளைந்தாலும் என்னதான் எய்திடினும் இம்மியும் பின்நோக்காது முன்னோக்கும் என்றும் முனைந்து" என்னும் மனப்பாங்கை கட்டியெழுப்புதல் வேண்டும்.

சாதாரண மாணவர்களுக்கு கூறினால் விளங்கும், ஆனால் இவர்களுக்கு விசேட கவனம் எடுத்தல் வேண்டும். இவர்களை இந்நிலைமையிலிருந்து மீட்டெடுப்பது மிக அவசியமாகும். ஏனெனில் "இன்றைய இளைஞர்கள் நாளைய தூண்கள்" ஆவார். விடேச தேவைக்குட்பட்ட மாணவர்களும் சமுதாயத்தில் அங்கத்துவம் உடை யவர்களாவார்.

**"அரியது கேட்கின் வரிவடி வேலோய**
**அரிது அரிது மானிடராதல் அரிது**
**மானிட ராயினும் கூன் குருடு செவிடு**
**பேடு நீங்கிப் பிறத்த லரிது"**

என்னும் ஔவையாரது பாடலிலே மானிடப் பிறப்பின் அருமையையும், ஊனமற்ற பிறப்பின் சிறப்பையும் எடுத்துக் காட்டுகின்றார்.

விசேட தேவைக்குட்பட்ட மாணவர்கள் மேலே கூறப்பட்ட பாடலிலுள்ளவற்றுள் ஒரு குறைபாட்டை உடையவர்கள் ஆவார்கள். ஆனால் அவர்களுக்கும் சாதாரண மாண வர்களைப் போன்று பசியும், தாகமும் உடையவர்கள். மண்ணில் நல்லவண்ணம் வாழவேண்டும் என்னும் ஆசையுடைவர் கள். எல்லாவற்றிலும் மேலாக மனமும்

மனத்தின் கண்ணே தோன்றும் ஆயிரம் ஆயிரம் உணர்வுகளும் உடையவர்கள்.

எமது நாட்டில் விசேட தேவைக்குட்பட்ட மாணவர்கள் கவனிக்க யாருமின்றி மக்கள் பலர் கூடும் பொது இடங்களில் பல்லெல்லாம் தெரியக் காட்டிப் பருவரல் முகத்தில் தேங்கி பிச்சையேற்று வாழுவது போல வாழ் கின்றனர்.

மாணவர்கள் இவர்களைக் காணும் போது "சீச்சீ" என்று அருவருக்கின்றனர். சிலர் போ, போ என்று விரட்டியடிக் கின்றனர். சிலர் தாம் வளர்க்கும் நாய், பூனை, ஆடு, மாடு முதலிய பிராணி களிலும் இழிவாகக் கருதுகின்றனர். பொதுவாக நோக்குமிடத்து இச் சமு தாயம் விசேட தேவைக்குட்பட்ட மாண வர்களை மனிதர்களாகவே மதிப்ப தில்லை.

இறைவன் படைப்பு ஒரு விசித்திர மானதாகும். இவ்வாறான மாணவர் களுக்கு வேறு ஆற்றல்களை வழங்கி யுள்ளான். கண்பார்வையற்ற மாணவர் களுக்கு கேள்திறனையும், ஞாபக சக்தியை யும் வழங்கியுள்ளமை கண்கூடு. குருடரும் முடவருமான இரட்டைப் புலவர்கள் தமிழகத்திலே கவிமழை பொழிந்த கதை வெகு பிரசித்தம். சில மாணவர்கள் பிரசித்திபெற்ற சட்டத்தரணிகளாவர். சிலர் இசை மேதைகளாகவும் கவிஞராகவும் மிளிர்கின்றனர். இவ்வாறே விசேட தேவைக்குட்பட்ட மாணவர்களது வாழ்க்கை யையும் வலுவூட்டலாம்.

ஆனால் இளைஞர்களுள் காணப் படும் ஒவ்வொரு ஆற்றலும் மண்ணுள் மறைந்துள்ள மணியைப் போல ஒளித்தி ருக்கிறது. இவர்களுடைய அறிவானது முத்துச் சிப்பியில் உள்ள முத்தின் ஒளி யும், பாசி மூடிய பவளத்தின் நிறமும், மாசியில் மறைந்த மதியின் துலக்கமும், கூடை கவிழ்ந்த விளக்கின் ஒளியும் போல் வெளிப்பட்டுத் தோன்றாது காணப்படுகின்றன.

மண்ணுள் மறைந்த மணியை எடுத்து தூய்மை செய்து, பட்டை தீட்டிவிட்டால் அது கூர்மை பெற்றுப் பிரகாசிக்கும். அதனை மேற்கொள்வதற்கு அதாவது விசேட தேவைக்குட்பட்ட மாணவர்களை வலுவூட்டுவதற்கு கல்வி என்னும் பெருங் கடலை அவர்களுக்கு வழங்கினால் போதுமானதாகும்.

அதாவது கல்வி என்பது வெள்ளத்தால் அழியாது, வெந்தழலால் வேகாது, மன்னர் களால் கொள்ளையடிக்க முடியாதது. கொடுக்கக் கொடுக்க குறையாதது, கள்ளர் களுக்குப் பயப்பட வேண்டியதில்லை, காவலுக்கு ஆள் தேவையற்றது. இவ்வா றான சிறப்புக்களையும் "கேடில் விழுச் செல்வங் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்றுப் பிற" என்னும் திருவள்ளுவரது கூற்றுக்கும் இணங்க பெருமையும் உடையதாகும்.

பள்ளத்தில் விழுந்த குருடர் விழி பெறுவதற்கு பொதுமக்கள் பெரிதும் உதவமுடியும். அதாவது இறந்தவர்களது கண்ணை எடுத்து குருடருக்கு வழங்கு வதன் மூலம் அவன் கண்பார்வை யுள்ளவனாக மாற்றமடைகின்றான். அதே போல விசேட தேவைக்குட்பட்ட மாண வர்களுக்கு கல்வியெனும் தூண்டாமணி விளக்கை வழங்குவதன் மூலம் அவர்களை இச் சமுதாயத்தில் உயர்ந்தவர்களாக வலுவூட்டலாம்.

கல்வியில் சிறந்தவன் கம்பன். ஆனால் கம்பனும் அநாதையாக இருந்தபொழுது சடையப்ப வள்ளல் என்னும் பெரிய மனப்பாங்குடைய ஒருவர் ஆதரவளித் தமையினாலே கல்வியில் சிறந்தவன் கம்பன் என்னும் பெயரைப் பெற்றார். இவ்வாறே விசேட தேவைக்குட்பட்ட மாணவர்களுக்கு கல்வியை வழங்குவதன் மூலம் அவர்களையும் வலுவூட்டலாம்.

இது உண்மைச் சம்பவம். யூனியன் கல்லூரியில் கண்பார்வையற்ற மாண வன் ஒருவன் கல்வி கற்றான். அவனிடம் இசை எனும் ஆற்றல் இருந்தது. அதனால் அவனுடைய ஆசிரியர்களின் வழிகாட்ட லினால் இன்று ஒரு இன்னிசை பாடக னாகத் திகழ்கின்றான்.

திருவள்ளுவர் கல்வி கல்லாதவனை விலங்குடன் ஒப்பிடுகின்றார். அதாவது

**"விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல்**
**கற்றாரோடு ஏனையவர்"**

மற்றும் முகத்தில் இரண்டு புண்ணுடையவர் என்றும் குறிப்பிடு கின்றார்.

**"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையர் கல்லா தவர்"**

இதே போல எவ்வளவு சொத்து, சுகம் வைத்திருந்தாலும் கல்லாதவர் விலங்கு கள், முகத்தில் இரண்டு புண்ணுடையவர். பல பிரச்சினைக்குட்பட்டிருந்தாலும் கல்வி கற்றால் அவர்கள் மாந்தர்கள் ஆவார்.

ஐக்கிய நாடுகள் சபை விடுத்த கோரிக்கையானது அரசாங்க திணைக் களங்களிலும், தனியார் நிறுவனங்களி லும் வலது குறைந்தோருக்கு இரண்டு சதவீதமான வேலைவாய்ப்பளிக்க வேண்டும் என்பதாகும்.

அதனைப் போலவே விசேட தேவைக் குட்பட்ட மாணவர்களுக்கு பெருங்கட லாகிய, அழிவுறாத கல்வி எனும் பேரொளியை வழங்கி கல்வியினாலே அவர்களை வலுவூட்டுவோம். அவர்களது இந்நிலைமையை இல்லாதொழித்து அவர்களது வாழ்வை வளம்மிக்க வாழ்வாக வலுவூட்டுவோம்.

**த. நிரோஜன்**
*தரம் 11*

---

**மாறிடுவோம்**

**உலகை**

**மாற்றிடுவோம்.**

---

# வணிகத்திற்கு வணிகச்சூழலின் பங்களிப்பு

மனிதத் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்யும் எந்தவொரு செயற்பாடும் வணிகம் எனப்படும். இத்தகைய வணிகமானது வணிகச் சூழல்களின் தாக்கத்தின் மூலமே செயற்பட்டு வருகிறது. இதனை ஒரு சமன்பாடாக வணிகம் = வணிகச்சூழல் என்றும் குறிப்பிடலாம். எவ்வாறு உடல் என்ற ஒன்றிற்கு உயிர் ஒன்று அவசியமோ அதைப் போன்று வணிகம் என்ற ஒன்றிற்கு வணிகச் சூழலும் அவசியம் ஆகும்.

இவ்வாறான வணிகச்சூழல் அகச்சூழல், புறச்சூழல் ஆகிய இரண்டு சூழல்களைக் கொண்டு காணப்படுகிறது. இவை சிற்றினச் சூழல், பேரினச்சூழல் என்றும் அழைக்கப்படுகின்றன.

முதலாவதாக சிற்றினச் சூழலை எடுத்து நோக்கினால் இது வணிகத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாகவும் ஆனால் வணிகத்தால் கட்டுப்படுத்தக்கூடியதாகவும் காணப்படுகிறது. இது உடமையாளர், முகாமையாளர், ஊழியர், தரகர், விநியோகஸ்தர், வாடிக்கையாளர் போன்ற காரணிகளைக் கொண்டு காணப்படுகிறது. இது வணிகத்தின் மீது ஓரளவு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

முதலாவதாக உடமையாளரை எடுத்து நோக்குவோமாயின் இவர் வணிகத்திற்கு மூல தனத்தை இடுபவராகவும் வணிகத்தைக் கொண்டு நடத்த வேண்டியவருமாக உள்ளார். இவரது திறமை, தன்னம்பிக்கை, செல்வாக்கு போன்றவற்றின் மூலம் வணிகத்தை சிறந்த முறையில் கொண்டு நடத்தக் கூடியவராக மாறவேண்டும்.

அடுத்ததாக முகாமையாளரை எடுத்து நோக்கினால் இவர் வணிகத்தின் நோக்கினை அடையும் பொருட்டு கட்டுப்படுத்தல், நெறிப்படுத்தல், செயற்படுத்தல் போன்ற முகாமைத்துவ செயற்பாடுகளில் ஈடுபடுபவராகக் காணப்படுகின்றார். இவரே அனைத்து முகாமைத்துவ செயற்பாடு களிலும் ஈடுபடுவதனால் வணிகத்தின் வளர்ச்சிக்கு ஆணிவேராகத் தொழிற்பட வேண்டியவராகக் காணப்படுகின்றார்.

வணிகத்தின் நோக்கினை அடையும் பொருட்டு உடல், உள ரீதியான காரணிச் சேவைகள் வழங்குகின்றவர்கள் ஊழியர்கள் எனப்படுவார். ஒரு வணிகத்திற்கு உரிமையாளரதும், முகாமையாளரதும் செயற்பாடுகள் பலமாகவும் ஊழியர்களது செயற்பாடுகள் பலவீனமாகவும் காணப்படுமாயின் எவ்வாறு விண்கற்கள் காற்றால் தாக்கப்பட்டு தூசு என்ற பதத்தை அடைகின்றதோ அதைப்போன்று வணிகமும் ஊழியர்களின் பலவீனத்தால் தாக்கப்பட்டு நட்டம் என்ற பதத்தை அடையும். ஆகவே ஊழியர்களின் சிறந்த செயற்பாட்டின் மூலமும், தொழிலாளர் உடமையாளர்களின் புரிந்துணர்வு மூலமும் வணிகத்தை வீறுநடை போடச் செய்யமுடியும். வணிகத்தின் சேவைகளை பெறும் நோக்குடன் வணிகத்தோடு தொடர்புடைய நபர்கள் வாடிக்கையாளர்கள் எனப்படுவார். இவர்களும் வணிகத்தின் வளர்ச்சிப் பாதையில் பங்கெடுத்துக் கொள்கின்றனர்.

இரண்டாவது பிரிவான புறச்சூழல் காரணிகளை நோக்குவோமானால் வணிகத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதும் அதேவேளை வணிகத்தினால் கட்டுப்படுத்தமுடியாததுமான சூழல் ஆகும். அதாவது வணிகத்தின் மீது தாக் கத்தை ஏற்படுத்தக்கூடியதும் அதே வேளை வணிகம் இதற்கேற்ப இணங்கிச் செல்லவேண்டிய சூழல் இதுவாகும்.

வணிகத்தின் மீது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய இப்புறச்சூழலின் பங்களிப்பு வணிகத்தால் மிகவும் வேண்டி நிற்கப்படுகின்றது. இப் புறச்சூழல் ஒரு வணிகத்தின் நோக்கத்தினையும் கொள்கை களையும் கட்டுப்படுத்தக்கூடிய ஒன்றாகக் காணப்படுகின்றது. இத்தகைய புறச்சூழல் ஆனது பொருளியல் சூழல், தொழில் நுட்பச்சூழல், மக்கள் சூழல், சமய கலா சாரச் சூழல், இயற்கைச் சூழல், போட்டிச் சூழல் போன்ற காரணிகளை கொண்டு காணப்படுகின்றது.

முதலில் பொருளியல் சூழலை எடுத்து நோக்குவோமானால் ஒரு நாட்டின் அரசாங்கமானது தனது கொள்கைகளில் ஏற்படுத்துகின்ற மாற்றம் வணிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்துமாயின் அது பொருளியல்சூழல் எனப்படும். இதற்கு உதாரணமாக வட்டி வீதம், பணவீக்கம், மொத்த தேசிய உற்பத்தி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

சந்தையில் புதிதாக உருவாக்கப்பட்ட தொழில்நுட்பம் வணிகத்தின் மீது தாக் கத்தை ஏற்படுத்துமாயின் அது தொழில் நுட்பச் சூழல் எனப்படும். இத்தொழில்நுட் பங்களுக்கு ஏற்ப வணிகம் தன்னை மாற்றிக்கொள்ளுமாயின் அது வணிகத் தின் வெற்றியில் முதல் கட்டம் என்பதனையும் எண்ணமுடியும். சமூக மக்களது கலாசாரம் சமயம், பழக்கவழக்கங்கள் போன்றன வற்றுள் ஆராயவேண்டிய காரணி இதுவாகும்.

ஒரு வணிகச் சூழலினது பலம், பலவீனம், வாய்ப்பு, சவால்களை வணிக மானது தனக்கு ஏற்றால் போல் மாற்றுவதன் மூலம் நனோ தொழில்நுட்ப உலகில் வெற்றிநடை போடமுடியும்.

**சஜீவன்**

*தரம் 10[A]*

*ஒவ்வொரு மனிதனின் அறிவிலும் நான்கு நிலைகள் உண்டு; முதலாவது நிலை, யூகம்; இரண்டாவது நிலை நம்பிக்கை; மூன்றாவது நிலை, சிந்தனைத் தெளிவு; நான்காவது நிலை, மெய்யான பகுத்தறிவு. ஒரு பொருளின் மெய்த் தன்மையை அறிய வேண்டுமானால் இத்தனை நிலைகளையும் நம் அறிவு தாண்டிச் செல்லவேண்டும். சதுரங்கச் சூதாட்டத்தில், உருட்டிய பாய்ச்சிக் காய்களைப் பொறுத்து எவ்வாறு நமது வெற்றிக் காய்களை நகர்த்தி விளையாடுகிறோமோ, அதுபோல நம் பகுத்தறிவைக் கொண்டு நமது விவகாரங்களைச் சரியான வழியில் நடத்த வேண்டும். (எண்ணித் துணிக கருமம்.)*

**– பிளேட்டோ**

# மனித உரிமைகள் பற்றிய பிரகடனங்களின் வரலாறு

பாரம்பரிய காலத்தில் மன்னராட்சியே இடம்பெற்றது. அரசில் அத்தகைய மன்ன ராட்சியின் அமைப்பை பாதுகாக்கும் அதேவேளையில் மக்களுடைய அரசியல் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் மன்னராட்சி முறையை மாற்றியமைக்க பிரித்தானிய மக்கள் நடவடிக்கை எடுத் தனர். அவ் நடவடிக்கையே 1215ல் கைச்சாத்திடப்பட்ட "மக்னா-காட்டா" உடன்படிக்கையாகும்.

மக்னா-காட்டா உடன்படிக்கையில் 39ம் அத்தியாயத்தின் மூலம் சட்டமாக்கப் பட்டிருப்பது யாதெனில் - "எந்த ஒரு மனிதனையும் கைது செய்வதற்கான, காணாமற்போகச் செய்வதற்கான, நாடு கடத்தச் செய்வதற்கான, சித்திரவதை செய்வதற்கான, தான்தோன்றித்தனமான பலம் ஆட்சியாளனுக்கில்லை.

ஆனால் மக்னா-காட்டா அங்கீகரிக்கப் பட்ட 1215ம் ஆண்டில் இருந்து 1689ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் மனித உரிமைகளைப் பாதுகாத்து நல்லதோர் நிர்வாகம் நடைபெறவில்லை. 14ம் ஹென்றி மன்னன் தனது ஆளுகைக்குபட்பட்ட ஆயிரக்கணக்கான மக்களை சிரச்சேதம் செய்து குவித்தான். 1ம் ஜேம்ஸ் மற்றும் அவனது புதல்வன் 2ம் ஜேம்ஸ் மன்னர் களின் ஆட்சிக் காலத்தில் அரசுக்கும் மக்களுக்குமிடையில் பிரச்சினை உக்கிர மானது. 1611ம் ஆண்டு நீதவான் Cole பிரகடன வழக்கில் மன்னரின் அதிகாரத்தை சட்டத்துக்கு உட்படுத்த வழிவகுத்தார்.

"ஒரு மன்னனுக்கு மரபுவழி வந்த உரிமை எதுவுமில்லை, சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட அதிகாரத்திற்கு இணங்கவே மன்னர் செயற்படவேண்டும்" என நீதியரசர் பிரகடப்படுத்தினார்.

எப்படியிருப்பினும் ஆட்சியாளர் களிடமிருந்து பொதுமக்களின் உரிமை களை பாதுகாப்பதற்கான தங்கள் உரிமை களுக்கு சட்டத்தின் அதிகாரம் பெற்றுக் கொடுக்கப்படவேண்டுமென சுதந்திரத்தை மதிக்கும் மக்கள் பிரதிநிதிகளும் புத்தி ஜீவிகளும் உணர்ந்தனர்.

1689ம் ஆண்டில் பிரித்தானிய மனித உரிமை பிரகடனத்தின்படி அப்போ திருந்த பிரித்தானிய மன்னர்களின் சர்வாதிகார போக்கு தடைப்பட்டது.

இதற்குப் பின் 1776ம் ஆண்டு யூன் 12ம் திகதி வேர்ஜீனியாவில் வழங்கப் பட்ட பிரகடனம் மனித உரிமைகள் எண்ணக்கருவின் அபிவிருத்தியில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. அந்தப் பிரகடனத்தின் முதலாவது அத்தியாயத் தில் பின்வருமாறு கூறப்படுகிறது.

ஒவ்வொரு மனிதனும் இயற்கையிலே சுதந்திரமுள்ளவனாவான். அதனைப் பிரிக்க முடியாது. மனிதன் சமுதாயத்திற்குள் புகுந்தவுடனேயே அவனுக்கு அந்த உரிமை கிடைக்கின்றது. எச்சந்தர்ப்பத்திலும் அவனது உரிமையை பிரிக்கவோ பறிக்கவோ முடி யாது. அந்த உரிமைகள் பின்வருமாறு —

அ) வாழ்க்கைச் சுதந்திரத்தை அனுபவிக்கும் உரிமை.

ஆ) ஆதனத்தை உடமை கொள்ளும் உரிமை.

இ) சந்தோஷத்தையும் பாதுகாப்பையும் பெறுவதற்கும் அனுபவிப்பதற்குமான உரிமை.

இரண்டாவது அத்தியாயம் பின்வருமாறு கூறுகிறது.

1. அரசுக்குள்ள அனைத்து அதிகாரங்களும் மக்களிடமிருந்தே கிடைக்கின்றன. அவை மக்களிடமே உண்டு. நீதிவான் மக்களின் பாதுகாவலரும் ஊழியர்களுமாவர். அவர்கள் மக்களுக்கு சேவை செய்யவேண்டும்.

2. பொதுமக்களின் பாதுகாப்பையும் பாதுகாவலையும் உறுதிப்படுத்தும் பொறுப்பு அரசுக்குண்டு. தகாத நிர்வாக முறைமையின் ஊடாக ஏற்படக்கூடிய கேடுகளைத் தடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் அரசினால் மேற்கொள்ளப்படவேண்டும்.

இதன்பின் 1789ம் ஆண்டு பிரெஞ்சு புரட்சியின் பின்னர் நிறுவப்பட்ட கூட்டு அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட் கொள்கை விளக்கம் அங்கீகரிக்கப்பட்ட பிரகடனமானது "மனிதனதும் பிரஜையினதும் உரிமைகள் பற்றிய பிரகடனம்" என்ற பெயரில் அமைந்தது. நாட்டின் பெரும்பான்மையான மக்கள் அடிமைகளாக வாழ்ந்தனர். அவர்களுக்கு சுதந்திரம் இருக்கவில்லை. இதன் காரணமாகவே மக்களின் உரிமையைப் பெற்றுக் கொடுக்கும் விதத்தில் அரச கட்டமைப்பை மீண்டும் நிறுவுவதே இப்புரட்சியின் முக்கிய குறிக்கோளாக அமைந்தது.

இவ்வாறு உலக பிரசைகளால் உரிமைகள் என்ற எண்ணக்கரு படிப்படியாக வளம் பெற்று விழிப்புணர்வு அதிகரிக்கலாயிற்று.

1917ம் ஆண்டில் ரஷ்யாவில் ஏற்பட்ட புரட்சியூடாக வேலையாட்களின் உரிமைகள் தொடர்பாக பரந்த அடிப்படையில் விடயங்களை ஆராய்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. எனினும் ரஷ்யப்புரட்சி தனிமனித உரிமையை விட சமூக உரிமையிலே கவனம் செலுத்தியது. ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க அரசாங்கங்களில் சோசலிச ஆட்சி முறைக்கு மிகுந்த வரவேற்புக் கிடைத்தமையால் சனநாயக மற்றும் முதலாளித்துவ அரசியல் சிந்தனைக்கு மதிப்பளித்த சுதந்திர சிந்தனையாளர்கள் சோசலிச போக்கை கண்டு அச்சமுற்றனர். இதன் இறுதிப்பலனாக சோவியத் யூனியன் வீழ்ச்சியுற்றதும் வார்ஸோ உடன்படிக்கை செயலிழந்தது. இதன்பின் 2ம் உலகமகா யுத்தத்தின் போது பயன்படுத்தப்பட்ட அணு ஆயுதங்கள் மூலம் மக்கள் வாழ்வு பயங்கரமாக ஆபத்து நிலைக்குட்பட்டது. மேலும் மகாயுத்தம் ஏற்படுவதைத் தடுப்பது உலகத் தலைவர்களுக்கு சவாலாக அமைந்தது.

1945ம் ஆண்டிற்கு முன் ஏற்பட்ட யுத்தங்களைவிட அணு ஆயுதங்கள் பாவனைக்குக் கொண்டுவரப்பட்டதால் உலக அழிவு மதிப்பிடமுடியாத அளவு பாரிய விபத்தொன்றாகும். இதனால் எதிர்கால உலகைப் பாதுகாப்பதற்காக மூன்று துறைகள் இனம்காணப்பட்டன. அவை

1. உலக சமாதானத்தை நிலைநாட்டல்
2. உலகப் பொருளாதார அபிவிருத்திக்காக தகுந்த செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

3. மனித உரிமையைப் பாதுகாத்தல்

இக்குறிக்கோளை நிறைவேற் 1945ல் ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டது. இதன்போது மனித உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசுக்குண்டு. அதனை ஒவ்வொரு பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தப்படவேண்டுமென கொள்கை தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் 1945ல் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை செயற்பட்டு வருகிறது. முனித உரிமைகளைப் பாதுகாக்க ஐக்கிய நாடுகள் சபையின் அனுசரணையுடன் பின்வரும் அமைப்புக்கள் செயற்படுகின்றன.

1. உலக சுகாதார ஸ்தாபனம் WHO
2. ஐக்கிய நாடுகளின் மனித உரிமைக் குழு HRC
3. ஐக்கிய நாடுகள் மனித உரிமைக்குழு HRC
4. ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் ஆணைக்குழு UNHRC
5. ஐரோப்பிய சங்கம் EU
6. அமெரிக்க மனித உரிமைகள் பிராந்திய ஸ்தாபனம் ACHR
7. ஆபிரிக்க மனித உரிமைகள் பிராந்திய ஸ்தாபனம் OAU
8. மத்திய கிழக்கு அரபு பிராந்திய தாபனம்
9. ஆசிய பிராந்திய மனித உரிமைகள் தாபனம்

மேற்படி தாபனங்களுக்கு மேலதிகமாக சர்வதேச மன்னிப்புச்சபை என்ற தன்னிச்சையான அமைப்பொன்றும் மனித உரிமைகள் தொடர்பான தவல்களைத் திரட்டி மனித உரிமை மீறல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. எனினும் சில நாடுகளில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவது சாத்தியமானதாகவே உள்ளது.

**ம. சங்கீர்த்தன்**
*க.பொ.த (உ/த) 2013*

---

*“கடவுளுக்கு அஞ்சி நடப்போமாக; மனிதனுக்கு அஞ்சி நடப்பதை ஒழிப்போமாக. நமது உள்ளத்தில் தெய்வமிருப்பதையும், அது நாம் நிலைத்தலையும் - நிகழ்த்தலையும் கண்டு வருவதையும், அது நம்மை நேர்மை வழியில் நடத்துவதையும் உணர்வோமானால் நாம் கடவுள் ஒருவர்க்கன்றி உலகில் எதற்கும் அஞ்சுவதை ஒழிப்போம்.”*

♣ ♣ ♣

*என்னுடைய மதமே மற்ற மதங்களைக் காட்டிலும் சிறந்தது; பிற மதத்தினரை என் மதத்தில் சேருமாறு செய்வது நியாயம் தான், என்று நீ கூறுவாயானால்; அஃது எதைக் காட்டுகிறது? உன்னிடத்தில் மதவெறி அதிகமாகக் குடிகொண்டிருக்கிறது என்பதையே காட்டுகிறது. இப்படிப் பிற மதங்களிடத்திற் சகிப்புத் தன்மையைக் காட்டாமல் இருப்பது பலாத்காரத்தின் ஓர் அம்சமாகும்.*

**– காந்திஜி**

# ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான அடைவுகள்

1. சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணல்
2. சமாதானத்தை நிலைநாட்டல்.
3. ஜனநாயகத்தை மேம்படுத்தல்.
4. அபிவிருத்தியை மேம்படுத்தல்.
5. மனித உரிமைகளை மேம்படுத்தல்.
6. சூழலைப் பாதுகாத்தல்.
7. அதீத அணு உற்பத்தியை தடுத்தல்
8. சுய உறுதிப்பாட்டையும் சுதந்திரத்தையும் ஊக்குவித்தல்.
9. சர்வதேச சட்டங்களைப் பலப்படுத்தல்.
10. பிரதான பிரச்சினைகளை நீதியான தீர்வுகளுக்கு உட்படுத்துதல்.
11. வேறுபட்ட உணர்வுகளால் எழும் பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வருதல்.
12. முரண்பாடுகளால் பாதிக்கப்பட்டவருக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கல்.
13. பாலஸ்தீன அகதிகளுக்கு உதவி வழங்கல்.
14. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் கிராமிய வறுமை, பட்டினி என்ற நிலைகளை மாற்றல்.
15. ஆபிரிக்க அபிவிருத்தியை உயர்த்துதல்.
16. பெண் உரிமைகளை முன்னெடுத்தல்.
17. குடிநீரைப் பாதுகாத்தல்.
18. சின்னம்மையை உலகிலிருந்து அழித்தல்
19. உலகளாவிய ரீதியான நோய்களைத் தடுத்தல்.
20. சிசுமரண வீதத்தை குறைத்தல்.
21. ஓட்டுண்ணி நோய்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
22. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் முதலீடுகளை ஊக்குவித்தல்.
23. சமூகத்தேவைக்கான பொருளாதாரத் திட்டங்களை ஆரம்பித்தல்.
24. இயற்கை அனர்த்தங்களால் ஏற்படும் சேதங்களை குறைத்தல்.
25. நெருக்கடி நிலைமைகளில் பாதிக்கப்பட்டவருக்கு உதவுதல்.
26. நிலக்கண்ணிவெடிகளை அகற்றுதல்.
27. ஓசோன்படைத் தேய்வைக் கட்டுப்படுத்தல்.
28. கோள வெப்பத்தை கட்டுப்படுத்தல்.
29. மிதமிஞ்சிய மீன்பிடியைக் குறைத்தல்.
30. காடழிப்பைத் தடை செய்து மீளக் காடாக்கலை ஏற்படுத்தல்.
31. நுகர்வோர் நலன்களைப் பாதுகாத்தல்.
32. சனத்தொகையை கட்டுப்படுத்தல்.

33. கருத்தரிப்பு வீதத்தை குறைத்தல்
34. போதைப்பொருள் துஷ்பிரயோ கத்திற்கு எதிராகச் செயற்படல்
35. சுர்வதேச வர்த்தக உறவுகளை வளர்த்தல்.
36. பொருளாதார மறுசீரமைப்பை ஏற்படுத்தல்.
37. தொழிலாளர்களது உரிமைகளைப் பேணல்.
38. குறைந்த செலவில் அதீத தொழில் நுட்ப பயன்பாட்டை விவசாயத்தில் செயற்படுத்தல்.
39. தொழிலாளர் உரிமைகளைப் பேணல்.
40. உலக கடல்வளத்தை நிலைப்படுத்தல்.
41. சர்வதேச ஆகாய கடற்போக்குவரத்தை முன்னெடுத்தல்.
42. தகவல்களை சுயாதீன முறையில் வெளியிடல்.
43. சர்வதேச தொடர்புகளை அதிகரித்தல்.
44. உரிமைக்குரல் எழுப்பமுடியாதவருக்கு வலுச்சேர்த்தல்.
45. சிறுவர்களை ஒரு சமாதான வளையமாக நிலைப்படுத்தல்.
46. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் கல்வியை மேம்படுத்தல்.
47. பெண்களின் எழுத்தறிவு வீதத்தை உயர்த்தல்.
48. மேதாவிகளின் கலைப்படைப்புக்களை பாதுகாத்தல்.
49. புராதன வரலாற்று கலைப் பொக்கிசங்களைப் பாதுகாத்தல்.
50. கலாசார பரிமாற்றத்திற்கு வழி வகுத்தல்.

**நி. கலையரசி**
*க.பொ.த (உ/த) 2013*



பொறாமை கொள்ளவேண்டாம்; அவதூறு சொல்ல வேண்டாம்; பொய் பேசவேண்டாம்; ஏமாற்றப் பழகவேண்டாம்; துவேஷத்தை வளர்க்கவேண்டாம்; நீ சந்தோஷமாகவும், ஆனந்தமாகவும், அமைதியாகவும் எப்பொழுதும் இருப்பாய்.

# நிறமும் அதன் பயன்பாடுகளும்

**நிறம்**

மனை நிர்மாணத்திற்குப் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களைப் போன்றே மனை அலங்காரத்திற்குப் பயன்படுத்தும் பல்வேறு நிறப்பூச்சுக்கள், இல்லத் தலையணி வகைகள் போன்றவற்றிலும் நிறங்கள் அடங்கியிருக்கும். நிறத்திற்கு மூன்று தனித்துவமான தன்மைகள் உள்ளன. அவை சாயம் (Hue), பெறுமானம், நிறச்செலவு என்பனவாகும். சாயம் என்பது அந்நிறத்தின் பெயரைக் குறிக்கும். ஒரு நிறத்தின் இளம் – கடும் நிற வேறுபாடே நிறத்தின் பெறுமானம் ஆகும். இள நிறங்கள் பெறுமானம் குறைந்தவையாக இருப்பதோடு, கடும் நிறங்களின் பெறுமானம் அதிகமானவை ஆகும். வெள்ளை நிறத்தைச் சேர்ப்பதன் மூலம் குறித்த நிறத்தின் பெறுமானம் குறைவடையும். செறிவு என்பது அதன் பிரகாசமான அல்லது இருண்ட தன்மையைக்குறிக்கும். வீடுகளுக்கு நிறத்தைப் பயன்படுத்தும் போது செறிவைக் குறைத்து பயன்படுத்தல் வேண்டும். சிவப்பு, மஞ்சள் ஆகிய நிறங்கள் செறிவு கூடியவை. நீலம், பச்சை என்பன செறிவு குறைந்தவை. ஒரு நிறத்திற்கு சிறிதளவு கறுப்பு நிறத்தைச் சேர்ப்பதன் மூலம் அதன் செறிவுத் தன்மையை (பிரகாசத்தை) குறைக்கலாம்.

நிறத்தின் மூலம் மனிதனில் பல்வேறு உணர்வுகள் ஏற்படுத்தப்படும். வீடுகளுக்கு நிறங்களைப் பயன்படுத்தும் போது அதன் இயல்புகளில் கவனம் செலுத்துதல் வேண்டும். சிவப்பு, மஞ்சள் போன்ற கடும் நிறங்கள் ஒரு பொருளைச் சிறியதாகக் காட்டும் இயல்பைக் கொண்டன. அவ்வியல்புகளைக் கவனத்திற்கொண்டு செய்யப்படும். சிறந்த நிறச் சேர்க்கை அறையின் அளவில் செல்வாக்குச் செலுத்தும். நிறங்கள் பிரகாசமான தன்மையும் இருண்ட தன்மையும், குளிர்ந்த தன்மையும் வெளிக்காட்டும். சிவப்பு, மஞ்சள், செம்மஞ்சள் ஆகிய நிறங்கள் வெப்ப வர்ணங்கள் எனவும், ஊதா, நீலம், பச்சை போன்ற வர்ணங்கள் குளிர் வர்ணங்கள் எனவும் கூறப்படும். அதே போன்று குளிர் வர்ணங்கள் எனவும் கூறப்படும். அதே போன்று முன்னடையும், பின்னடையும் உணர்வுகள் நிறங்கள் மூலம் வெளிக்காட்டப்படுவனவாகும்.

உ–ம் : வெப்ப வர்ணங்கள் – முன்னடையும் தோற்றம்
குளிர் வர்ணங்கள் – பின்னடையும் தோற்றம்.

சுவர் அலங்காரங்களிலும் படங்களிலும் காணப்படும் பல்வேறு காட்சிகள் அவற்றின் இயல்புகளின் அடிப்படையிலேயே நிறம் தீட்டப்பட்டுள்ளன. கடும் நிறங்கள் எடுப்பாகத் தெரிவதனால் இளநிறங்கள் பின்னடைந்து காணப்படுகின்றன. மேலும் சிவப்பு, செம்மஞ்சகள் போன்ற நிறங்கள் கடும் நிறங்கள் எனவும், நீலம், ஊதா போன்ற நிறங்கள் நெகிழும் தன்மையும் உடையனவாகும். இவை தண்மையான நிறங்கள் எனப்படும்.


அறையின் விரிவும் ஒடுக்கமும் நிறத்தின் மூலம் வெளிக்காட்டப்படும் இயல்பாகும். வெள்ளையும், இளம் நிறங்களும் விரிவைக் காட்டும். அதேவேளை, கடும் நிறங்கள்

ஒடுக்கத்தைக் காட்டும். கறுப்பு, சிவப்பு என்பன நிறையில் அதிகம் என்பதை உணர்த்துவதோடு, வெள்ளையும் அதுபோன்ற குணநிறங்களும் பாவிப்பதற்கு வெள்ளை போன்ற இளம் நிறங்களும் மிகவும் பொருத்தமானதாக இருப்பதற்குக் காரணம் இதுவாகும்.

இன்னும் வெள்ளை அதிகமாகச் சேர்ப்பதனால் அமைதியான தன்மை வெளிக்காட்டப்படுவதோடு சிவப்பு, மஞ்சள், செம்மஞ்சள் போன்ற நிறங்கள் குழப்பமான ஒரு நினைப்பை மனதுக்கு ஏற்படுத்தும்.

நிறங்களைப் பற்றி விபரிக்கும்போது பல்வேறு நிறங்களும் உருவாகிய முறை பற்றிச் சிந்திப்பது முக்கியமானதாகும். அடிப்படை வர்ணம் (மஞ்சள், சிவப்பு, நீலம்) முதல் நிறங்களாகக் கொள்ளப்படுகின்றன. இம் மூன்று நிறங்களையும் ஒன்றுடன் ஒன்று கலப்பதன் மூலம் துணை நிறங்கள் உருவாகின்றன. (செம்மஞ்சள், பச்சை, ஊதா) முதல் நிறம் ஒன்று துணை நிறம் ஒன்றுடன் சமனாகச் சேர்க்கப்படும் போது உருவாகும் நிறம் புடை நிறம் அல்லது இடை நிறம் எனப்படும். இவ்வாறு உருவாகும் நிறங்கள் 6 உண்டு. இவ் எல்லா நிறங்களையும் கூட்டாக ஒரு நிறச் சக்கரத்தில் அடக்கலாம். மனை அலங்காரத்தின் போது நிறச் சக்கரத்தின் உபயோகத்தின் மூலம் பல்வேறு நிறப் பொருத்தப்படுக்கை பயன்படுத்த முடிகிறது. இங்கு பெரும்பாலும் வலப்பக்கமாக வெப்ப வர்ணங்களும் இடப்பக்கம் குளிர்வர்ணங்களும் காட்டப்பட்டுள்ளன.

**நிறச்சக்கரம்**



**நிறப் பொருத்தங்கள்**

நிறங்களைத் திறம்பட இணைப்பதால் பார்ப்பதற்கு அழகாகவும், மனதிற்கு இன்பமாகவும், திருப்தியையும் ஏற்படுத்துகின்றன. நிறப் பொருத்தங்களை இரு வகையாகப் பிரிக்கலாம். அவையாவன —

1) ஒத்த / சார்புள்ள நிறப்பொருத்தம்
2) ஒவ்வாத / சார்பற்ற நிறப்பொருத்தம்

**ஒத்த / சார்புள்ள நிறப்பொருத்தம்**

ஒத்த நிற இசைவு என்பது நிறச் சக்கரத்தின் ஒரு நிறத்தை மாத்திரம் தெரிவு செய்து அதன் பல்வேறு பெறுமானங்களையும் பயன்படுத்தலாகும்.
உ–ம் : நீலம், இளம் நீலம் – கடும் நீலம் வரையான நிறங்களைப் பயன்படுத்தல்.

சார்புள்ள நிறப்பொருத்தம் இரு வகைப்படும். அவையாவன —

1) தனி நிறப்பொருத்தம்
2) அருகாமை நிறப்பொருத்தம்

**தனிநிறப் பொருத்தம்**

இதை ஒரு நிறப்பொருத்தம் என்றும் தனி நிறப்பொருத்தம் என்றும் கூறலாம். ஒரே நிறத்தை பல மதிப்பீட்டின் மூலம் வேறுபடுத்தி உபயோகப்படுத்தும் போது இப் பொருத்தம் கிடைக்கின்றது.
உ–ம் : ஆழ்ந்த நீலம் மற்றும் வெளிர் நீலம். தனி நிறப்பொருத்தத்தில் வேறுபட்ட தன்மையுடன் பொருட்களில் பயன்படுத்தும்போது அழகு உண்டாகுகின்றது. இதனை அறையிலோ அல்லது ஆடையிலோ பயன்படுத்தலாம்.

**அருகாமை நிறப்பொருத்தம்**

பிராங் வண்ணச் சக்கரத்தின் அருகருகே அமைந்திருக்கும் இரு நிறங்களைக் கொண்டது அருகாமை நிறப்பொருத்தமாகும். தனி நிறப்பொருத்தத்தைவிட அதிக வேறுபாடுகள் உள்ளதால் இவை ஆர்வத்தைத் தூண்டுகின்றது. நிறங்கள் வேறுபட்ட மதிப்புடனும் அடர்வுடனும் காணப்படும்.
உ–ம் : மஞ்சள், மஞ்சள் பச்சை, சிவப்பு, சிவப்பு ஆரஞ்சு, ஆரஞ்சு.

**சார்பற்ற நிறப் பொருத்தம் அல்லது எதிர் பொருத்தம்**


எதிர்நிற இசைவானது நிறச் சங்கரத்தின் எதிர் எதிரே உள்ள இரு நிறங்களின் சேர்க்கை ஆகும். இவ்விசைவில் இரு நிறங்களும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட தன்மையைக் காட்டுவதனால் அறை ஒன்றில் பயன்படுத்தும் போது ஒன்றை முதன்மை ஆக்கி மற்றையதை பின்னடையுமாறு அமைத்தல் வேண்டும்.
**உ–ம் :** பச்சையும், சிவப்பும் இங்கு அறையின் உள்ளே பச்சை நிறத்தை அதிகமாகவும் சிவப்பு நிறத்தை குறைவாகவும் பயன்படுத்தல் வேண்டும்.

**இரு எதிர் நிறப்பொருத்தம்**

நிறச் சக்கரத்தில் அருகருகே இரு நிறங்களும் அதன் எதிர் நிறங்களும் சேர்வதால் இப் பொருத்தம் ஏற்படுகின்றது.

உ-ம் : மஞ்சள், மஞ்சள் பச்சை, ஊதா, சிவப்பு ஊதா.

## நிறப் பொருத்தங்கள்




இடைப்பட்ட வகை மூவர்ண நிறப்பொருத்தம்

1) நீலம், பச்சை, சிவப்பு, ஊதா, மஞ்சள் ஆரஞ்சு

2) மஞ்சள், பச்சை, நீலம், ஊதா, சிவப்பு ஆரஞ்சு.

**நால் வர்ண நிறப்பொருத்தம்**

வர்ணச் சக்கரத்தில் சமதூரத்தில் இருக்கும் நான்கு நிறங்களைப் பயன்படுத்துவதால் இப்பொருத்தம் ஏற்படுகிறது.

மஞ்சள் ஆரஞ்சு, பச்சை, சிவப்பு மற்றும் நீல ஊதா

**பிரிந்த எதிர்நிறப் பொருத்தம்**

நிறச் சக்கரத்தில் இருக்கும் முதன்மை நிறம் அல்லது இடைப்பட்ட நிறம் அதற்கு நேர் எதிராகவுள்ள நிறத்தின் இரு பக்கங்களிலும் இருக்கும் நிறங்களும் ஒன்று சேர்வதால் இப்பொருத்தம் ஏற்படுகிறது.

உ-ம் : மஞ்சள், நீல ஊதா, சிவப்பு ஊதா.

**மூவர்ண நிறப்பொருத்தம்**

நிறச் சக்கரத்தில் சமஇடைவெளியில் உள்ள மூன்று வர்ணங்களால் ஆனது. நமக்கு எவை முதன்மை, இரண்டாம் வகை மற்றும் இரண்டு இடைப்பட்ட மூவர்ண நிறப்பொருத்தமாகக் கிடைக்கின்றது.

1) முதன்மை மூவர்ண நிறப்பொருத்தம்.
   உ-ம் : மஞ்சள், நீலம், சிவப்பு

2) இரண்டாம் வகை மூவர்ண நிறப்பொருத்தம்
   உ-ம் : பச்சை, ஆரஞ்சு, ஊதா.

மனை நிர்மாணத்தின் போதும் அலங்காரத்தின் போதும் கலைத் தத்துவங்கள் பயன்படுத்திக்கொள்ளப்பட்டமை தெளிவாகின்றது. ஆக்கமொன்றை உருவாக்கும் போது கோடுகளின் வடிவம், இழையமைப்பு மூலப்பொருட்களுக்கு அதற்கேயுரிய நிறங்கள் முக்கியமாகப் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் மனையை அலங்கரிப்பதற்காகவும் வாழ்வதற்கு மகிழ்ச்சிகரமான ஒரு இடமாக மாற்றவும் இக்கலை கோட்பாடுகளைப் பயன்படுத்தல் அவசியமாகும். ரேகை, வடிவம், இழையமைப்பு, நிறம் என்பவற்றின் பொருத்தப்பாட்டை ஏற்படுத்தும் சில சந்தர்ப்பங்களில் அவற்றை மாற்றி அமைத்து கவனத்தை ஈர்த்தலும் வெற்றிக்கு வழிகோலும்.

**தீபிகா கணேசலிங்கம்**
க.பொ.த (உ/த) 2013

♣ ❖ ♣




*“கலையி னால்உல கொற்றுமை காணுவோம்*
*கலையி னாற்கருத் தைவிரி வாக்குவோம்*
*கலை மகளின் கவின்பெருங் கோயிலில்*
*கைகள் கோத்துக் களிப்புடன் ஆடுவோம்*
*விலையி லாமல் விரைந்திடுங் காலத்தை*
*வீண்செய் யாது கலைவிளை வேற்றுவோம்*
*நிலையி லாநதி நேரிய வாழ்க்கையை*
*நீண்ட காவிய மாக்குவந் தோழரே”*

**- சுத்தானந்த பாரதியார்**


# யோகாசனமும் முக்கியத்துவமும்

**யோக முத்திரை**

இவ்வாசனம் சிரசாசனம் இருந்த வாறு பத்மாசனம் போட்டு நிற்கும் நிலையாகும்.




**பத்மாசனம்**



இவ்வாசனம் செய்வதினால் முது கெலும்பு நேராகின்றது. இதனால் நுரையீரல் சுருங்காமல் சுவாசம் சீராக நடைபெறுகின்றது. பிராணவாயுவைச் சுவாசிப்பதனால் நோய்க்கிருமிகள் அழிக்கப்படுகின்றன. பிராண வாயு இரத்தத்துடன் கலந்து உடல் முழுவதும் பரவுவதனால் நரம்புகள் வீரியம் பெறுகின்றன. நல்ல பசி உண்டாகின்றது. வயிற்குக் கோளாறுகள் இல்லாமல் போகின்றன. இவ்வாசனம் தியானத்திற்குரிய முக்கிய ஆசனமாகும். சுவாசம் சாதாரண நிலையில் அமைதல் வேண்டும்.

**தனுராசனம்**


வயிற்றிலுள்ள உறுப்புக்கள் நசிக்கப் படுவதனால் புத்துயிர் பெறுகின்றது. அடைத்துக் கிடக்கும் நரம்புகளில் புது இரத்தம் பாய்வதனால் வயிற்றுக் கொழுப் புக்கள், ஊளைச் சதைகள் கரைகின்றன. ஆகாரப்பை பலமடைகின்றது. வயிற்றிலுள்ள சகல உறுப்புகளும் புத்துணர்ச்சி பெறுகின்றன.



மூச்சை இழுத்தவாறு கைகளால் கணுக்கால்ப் பகுதியைப் பிடித்து, கழுத்து மார்பையும் மேல் தூக்கி கும்ப நிலையில் 10 எண்ணிக்கை இருத்தல் வேண்டும். பின்பு மூச்சை வெளியே விட்டவாறு பழைய நிலைக்கு வரல் வேண்டும். 3/5 முறை செய்யவேண்டும்.


**சலபாசனம்**

இதனை வெட்டுக்கிளி ஆசனம் எனவும் கூறலாம். இந்த ஆசனம் செய்வதனால்




வயிற்று உறுப்புக்கள் இறுக்கமடைகின்றன. பெரு வயிறு தொந்தி கரைகின்றது. முது கெலும்பின் அடிப்பாகம் பயிற்சி பெறு வதனால் இளமை ஏற்படுகின்றது. மூச்சை உள்ளுக்கு இழுத்த மாத்திரத்தில் திடீரென கால்களைத் தரையிலிருந்து உயர்த்துதல் வேண்டும். இந்த நிலையில் 15 எண்ணிக்கை வைத்திருந்து மூச்சை வெளியில் விடாத வாறு தரையில் கால்களைப் பதித்தல் வேண்டும். 3/5 முறை செய்தல் வேண்டும்.

**புஜங்காசனம்**



இதனை பாம்பாசனம் என்றும் சொல்ல லாம். இவ்வாசனத்தில் முதுகெலும்பு இளமை பெறுகின்றது. இதனால் என்றும் இளமையோடு இருக்கலாம். கழுத்து வலி, சுழுக்குகள் இருந்தால் விலகுகின்றது. மூச்சை உள்ளுக்குள் இழுத்துக் கொண்டே தலை மார்புப் பகுதிகளை மேலே தூக்க வேண்டும். சுவாசத்தை பத்து / பதினைந்து எண்ணிக்கை விடாது வைத்திருந்து பின் மூச்சை மெதுவாக விட்டவாறே பழைய ஆரம்பநிலைக்கு வரவும். 3/5 முறை இவ்வாசனத்தைச் செய்யவேண்டும்.

**விபரீதகரணி**



இவ்வாசனத்தின் பலன் ஏராளமாகும். இரத்தோட்டம் தலைப்பகுதிக்கும் கழுத் திற்கும் பாய்வதனால் தலை, கண், தொண்டை, மூக்கு சம்பந்தப்பட்ட அனைத்து வியாதிகளும் விலகுகின்றது. தோல் வியாதிகளும் நீங்குகின்றது. சுவாசம் சீரான நிலையில் இருத்தல் வேண்டும்.

**இ. திவிஜன்**
க.பொ.த (உ/த) 2013

# பல்லவர் காலக் கட்டிடக்கலை

தென்னிந்தியக் கட்டிடக்கலையில் ஒரு திருப்புமுனையாக அமைந்து அதன் வளர்ச்சியில் ஆகக்கூடிய தாக்கத்தை ஏற்படுத்தியது பல்லவர் காலமே எனில் அது மிகையல்ல. கி.பி. 6ஆம் நூற்றாண்டளவில் ஆரம்பித்து வளர்ச்சியடைந்த திராவிடக் கட்டடக்கலையின் ஆரம்பம் பல்லவர் காலமே ஆகும்.

பல்லவ வம்சத்தினர் தமிழகத்தின் வடபகுதியில் கி.பி. 4 – கி.பி 10ஆம் நூற்றாண்டு வரை ஆட்சியிலிருந்து வந்தாலும், 6ஆம் நூற்றாண்டு தொடக்கம் 9ஆம் நூற்றாண்டு வரையான 3 நூற்றாண்டுக் காலமே காஞ்சியைத் தலைநகரமாகக் கொண்டு ஒரு வலுவுள்ள அரசை நிறுவியிருந்தனர். இவர்கள் தமிழர் அல்ல என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படினும், இவர்கள் பூர்வீகம் பற்றியோ, தமிழ் நாட்டுக்கு இவர்கள் வந்து சேர்ந்த விதம் பற்றியோ சரியான தகவல்கள் இல்லை. பல்லவர்கள் காலத்தை முற்காலப் பல்லவர் காலம், இடைக்காலப் பல்லவர் காலம், பிற்காலப் பல்லவர் காலம் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படுவது உண்டு. கி.பி. 7ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மகேந்திர வர்மனின் ஆட்சியுடன் பிற்காலப் பல்லவர் காலம் ஆரம்பமானது. பல்லவர்களின் பொற்காலத்தின் ஆரம்பமும் அதுவேயாகும்.

பிற்காலப் பல்லவர்கள் காலத்திலேயே தமிழ்நாட்டில் இந்து சமய மறுமலர்ச்சியும், சிற்பம், ஓவியம், கட்டடக்கலை முதலிய கலை வளர்ச்சியும் உச்ச நிலையடைந்தன. மகேந்திர பல்லவனுடன் தொடங்கிய பிற்காலப் பல்லவ மன்னர் வரிசையிலே, மாமல்லன் எனப்பட்ட முதலாம் நரசிம்மன், இராஜசிம்மன் எனப்பட்ட இரண்டாம் நரசிம்மன், நந்திவர்மன் என்பவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.



இரண்டாம் நரசிம்ம பல்லவ மன்னன் ஒரு சைவன் ஆவான். இதனால் இவன் காலத்தில் சைவசமயம் முனைப்புடன் முன்னேற்றம் கண்டது. பல கோயில்களையும் எழுப்பியுள்ளான். சமஸ்கிருத இலக்கிய, இலக்கண வளர்ச்சியில் இராஜசிம்மன் பெரிதும் அக்கறை காட்டியதாகத் தெரிகின்றது. சமஸ்கிருதப் புலவர்களை இவன் ஆதரித்து வந்தான்.

மாமல்லபுரக் கடற்கரையில் அமைந்துள்ள கடற்கரைக் கோயில்கள் என அறியப்படுகின்ற கோயில்கள் இராஜசிம்மனால் கட்டுவிக்கப்பட்டவையே. 'காஞ்சிபுரத்திலுள்ள மகேந்திரவாடி இரண்டாம் நரசிம்ம பல்லவ மன்னனால் கட்டப்பட்ட மாமல்லபுரம் கோவில், எழில்மிகுந்த சிற்பங்களுடன் கூடிய புகழ்பெற்ற கைலாசநாதர் கோயிலும் இவன் திருப்பணியே ஆகும். பல்லவர்களால் கட்டப்பட்ட மாமல்லபுர

மரபுக்கோயில்கள், யுனெஸ்கோ அமைப் பால் உலக பாரம்பரிய களமாக அறிவித் துள்ளதை அடுத்து பல்லவர் கட்டடக்கலை சிறப்பினை அறியலாம். பல்லவர்கள் அமைத்த குடைவரைகள் தமிழ்நாட்டில் மண்டகப்பட்டு, பல்லாவரம், மாமண்டூர், குரங்கணில் முட்டம், வல்லம், மகேந்திர வாடி, தளவானூர், திருச்சிராப்பள்ளி, சீயமங்கலம், விளாப்பாக்கம், அரகண்ட நல்லூர், திருக்கழுக்குன்றம், சிங்கப்பெரு மாள் கோயில், சிங்கவரம், மேலச்சேரி, சாழுவன் குப்பம், கீழ்மாவிலங்கை, மாமல்லபுரம், ஆவூர், திரைக்கோயில், புதூர் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

பல்லவர் கட்டடக்கலையை இரண்டு கட்டடங்களாகப் பிரிப்பதுண்டு. முதலாம் கட்டம் சுமார் கி.பி. 610 தொடக்கம் கி.பி 690 வரையான காலமாகும். இக்கட்டத்தில் அமைக்கப்பட்டவை அனைத்துமே குடை வரை கோயில்கள் ஆகும். இரண்டாம் கட்டமான கி.பி. 690 இலிருந்து கி.பி. 900 வரையான காலப்பகுதியில் கட்டப்பட்டவை அனைத்தும் கட்டுமானக் (Structural) கட்டடங்களாகும்.

இவற்றுள் முதல் கட்டத்தில் கட்டடப் பட்டவை மகேந்திரன் கட்டடங்கள், மாமல்லன் கட்டடங்கள் என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. முதல் பிரிவில் தூண்கள் அமைந்த மண்டபங்கள் மட்டுமே அடங்குகின்றன. இரண்டாம் பிரிவில் மண்டபங்களுடன் இரதங்கள் எனப்படும் ஒன்றைக்கல் கோயில்களும் அடங்கும். இரண்டாம் கட்டமும், நரசிம்மன் கட்டடங்கள், நந்திவர்மன் கட்டடங்கள் என இரண்டு பிரிவுகளாக வகைப்படுத்தப்படு கின்றன. இவ்விரண்டிலும் அடங்குபவை கட்டுமானக் கோயில்களாகும்.

முற்காலத்தில் தமிழ்நாட்டில் கட்ட டங்கள் அழியக்கூடிய கட்டடப்பொருட் களான மரம், சுதை மற்றும் செங்கல்களி னால் அமைக்கப்பட்டதாகப் பண்டைய தமிழ் இலக்கியங்களில் குறிப்புகள் காணப் படுகின்றன. வடக்கு மற்றும் மேற்கு இந்தியப் பகுதிகளில் அசோகப் பேரரசன் காலம் முதலும் பின்னர் ஆந்திரப் பகுதி களிலும் பயன்பாட்டிலிருந்து வந்த பெரிய பாறைகளைக் குடைந்து குடைவரை களை அமைக்கும் முறை தமிழ்நாட்டில் கி.பி. ஆறாம் நூற்றாண்டு வரை பயன்பாட் டுக்கு வரவில்லை. இதற்குப் பல பண் பாட்டு, பொருளாதார மற்றும் தொழில் நுட்பக் காரணிகளை ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டுகிறார்கள். ஆறாம் நூற் றாண்டளவில் தென் தமிழ் நாட்டில் பாண்டியர்களினால் குடைவரைகள் அறி முகப்படுத்தப்பட்டதாகக் கருதப்படினும், தமிழ்நாட்டில் தேவையான சூழலும், வளங் களும், அரசியல் ஆதரவும் அளித்து இதன் வளர்ச்சிக்குப் பெருமளவு ஊக்கம் கொடுத்த பெருமை பல்லவர்களையே சாரும்.

தமிழ் நாட்டுக்கு வடக்கே ஏற்கனவே முகம் காட்டத் தொடங்கியிருந்த திராவிடக் கட்டடக்கலை புதிய தென்னிந்தியக் கட்டடக்கலைப் பாணிக்குத் தமிழ் நாட்டில் உரமளித்து, இந்தியாவின் முக்கியமான கட்டடக் கலைப் பாணிகளில் ஒன்றாக வளர்வதற்கு அடித்தளமிட்டதும் பல்லவர் காலமேயாகும்.

**சி. வரவேற்கரசன்**
க.பொ.த உ(/த) 2012

# ஆறுமுகநாவலரின் சமயப்பணிகள்

19ம் நூற்றாண்டின் விடிவெள்ளியாகத் தோன்றிய ஆறுமுகநாவலர் சமயத்தையும், தமிழையும் காக்க எழுந்தவராகவும், இவரை செம்மல் சமய மறுமலர்ச்சியின் தந்தை என்றெல்லாம் போற்றப்படும் அளவிற்கு ஈழத்தின் சமய வரலாற்றில் முக்கியம் பெறுகிறார். இவர் 1822ம் அண்டு மார்கழி மாதம் 18ம் திகதி யாழ்ப்பாணம் நல்லூரிலே கந்தப்பர் – சிவகாமிப்பிள்ளை தம்பதியின் ஐந்தாவது மகனாக ஆறுமுக நாவலர் பிறந்தார். இவரது இளமைத் திருநாமம் ஆறுமுகம் என்பதாகும். இவர் தமிழ், இலக்கியம், சமஸ்கிருதம், ஆங்கிலம் அகிய மூன்று மொழிகளிலும் சிறந்து விளங்கினார். இவர் 1941இல் யாழ் மத்திய கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றி னார். பின் சைவசமயத்தையும் அதன் வளர்ச்சிக் கருவியாகிய கல்வியையும் வளர்க்க வேண்டும் என்னும் பேரவா வினால் 1848இல் ஆசிரியத் தொழிலைத் துறந்து நாட்டுப் பணிகளில் இறங்கினார். இவர் ஆற்றிய பணிகளில் மிக முக்கியமான பணியாகக் கருதப்படுவது இவர் செய்த சமயப் பணிகளே ஆகும். இவர் செய்த பணிகள் கீழ்வருமாறு —

**01) சைவ பிரசங்கங்களை ஆற்றியமை :**

1847இல் வண்ணார்பண்ணை சிவன் கோயிலில் நாவலர் தம் முதற் பிரசங் கத்தை நிகழ்த்தினார். இவரது பிரசங்கம் பொதுவாக கடவுள் வாழ்த்து, சிவபக்தி, சிவதீட்சை, மகளிர் ஒழுக்கம், தர்மம், கொல்லாமை, கல்வி, மாயை போன்ற பொருள்களில் அமைந்திருந்தன. பிரசங் கத்தின் சிறப்புக் கருதி திருவாவடுதுறை ஆதீனம் இவருக்கு "நாவலர்" எனும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.

**02) புராண படனங்கள் ஆற்றியமை :**

கோயில்களில் புராண படனங்கள் செய்யும் முறை ஈழத்தவர்க்கே உரிய தனிச் சிறப்புக்குரியதாகும். இம்முறை ஆறுமுக நாவலரால் சமயப் பிரசார ஊடகமாகப் பயன்படுத்தப்பட்டது. புராணபடனம் என்பது ஒருவர் புராணப் பாடல்களைப் பாட இன் னொருவர் அதன் பொருளைக் கூறுவதாகும். நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் தான் முதன் முதலில் புராணபடனம் செய்தார்.

**03) கண்டனம் செய்தல் :**

ஆறுமுகநாவலர் தம் சமயத்திற்கு எதிராகச் செயற்பட்டவர்கள் மீது கண்ட னங்களை மேற்கொண்டார். இக் கண்ட னங்களை இரு நிலைகளில் மேற்கொண் டார். அதிலொன்று கிறிஸ்தவ சமயத்தின் மேல் தொடுத்த கண்டனம். மற்றையது சுதேசிய மக்கள் மீது தொடுத்த கண்டனம் என இருவகைப்படும்.

**04) ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்தமை :**

நல்லூர் கந்தசுவாமி ஆலயம், திருக் கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம்.

**05) சைவசமய நூல்கள் பலவற்றை எழுதி வெளியிட்டமை.**

சைவ வினாவிடை 1ம், 2ம், 3ம், 4ம் பாகங்கள். ஆத்திசூடி, கந்தபுராணம், திருவிளையாடற்புராணம், ஆகியவற்றுக்கு வசனம் எழுதியமை. கதிர்காமக் கந்தன் மீது பாடிய கீர்த்தனைகள், புலோலி ஸ்ரீ பசுபதீஸ்வரப் பெருமான் திருவூஞ்சல் போன்ற நூல்களைக் குறிப்பிடலாம்.

**ச. சுயாந்தினி**
2013 கலைப்பிரிவு

# இலங்கையின் இயற்கைச் செல்வம் சிங்கராஜவனம்

சிங்கராஜவனம் இலங்கையில் அமைந்துள்ள பாதுகாக்கப்பட்ட தேசிய வனமாகும். இது இலங்கையின் சப்ரகமுவ, தென் மாகாணங்களின் எல்லையில் இரத்தினபுரி, காலி, மாத்தறை மாவட்டங்களில் தாழ்நில ஈரவலயத்தில் அமைந்துள்ளது சிங்கராஜவனம். இக்காட்டின் உயிரினப் பல்வகைமை மிக அதிகமாகும். இதன் உயிரியல் முக்கியத்தவம் காரணமாக 1988ம் ஆண்டு முதல் யுனெஸ்கோவினால் உலக உரிமை தளமாக அறிவிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளிடையே மிகப் பிரசித்தமான தளங்களில் ஒன்றாகும். இன்றைய சிங்கராஜவனத்தின் பெரும்பகுதி 1875ம் ஆண்டு மே 8ஆம் நாள் இலங்கைத் தரிசுநிலச் சட்டத்தின் கீழ் 4046ஆம் இலக்க அரசியலின்படி இயற்கை ஒதுக்கீடாக அறிவிக்கப்பட்டது. 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மேலும் பல பகுதிகள் இதற்குள் இணைக்கப்பட்டன.

ஏப்ரல் 1978ம் ஆண்டு இது உயிரின ஒதுக்கீடாக அறிவிக்கப்பட்டது. 1988 ஒக்டோபர் 21ஆம் நாள் 528/14 அரசியலின்படி 7,648.2 ஹெக்டயர் பரப்பளவு இலங்கையின் தேசிய உரிமைக் காடாக இது அறிவிக்கப்பட்டது. இதே ஆண்டு யுனெஸ்கோ 6,092 ஹெக்டயர் காட்டு ஒதுக்கீடு மற்றும் 2,772 ஹெக்டயர் முன்மொழியப்பட்ட காட்டு ஒதுக்கீடு என்பவற்றை உள்ளடக்கிய 8,864 ஹெக்டயர் பரப்பளவை உலக உரிமைத் தளமாக அறிவித்தது.

மரங்கள் வெட்டப்பட்டு காடுகள் அழிக்கப்பட்டு இயற்கை வளம் அருகி வரும் இவ்வேளையில், இலங்கையில் எஞ்சியுள்ள ஒரே வனமான சிங்கராஜ வனம் பற்றிய சில தகவல்கள் சுற்றாடல் இயற்கை வள அமைச்சின் கீழுள்ள இலங்கை வனத்திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் சிங்கராஜவனம் மனிதத் தலையீடுகள் மிகக் குறைந்த வனமாகவும், தாழ்நில மழைக்காடாகவும் விளங்குகின்றது. இலங்கையின் அரும்பெரும் இயற்கைச் செல்வங்களில் ஒன்றாகும். 1988ஆம் ஆண்டில் இவ்வனம் உலக மரபுரிமை தளம் ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, விஞ்ஞான, கலாசார அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

27.643 ஏக்கர் பரப்பளவு கொண்ட இவ்வனம் கிழக்கு மேற்காக கூமார் 21 கிலோமீற்றர் நீளமும் வடக்கு தெற்காக 3.7 கிலோமீற்றர் அகலம் கொண்டது. இவ்வனம் இரத்தினபுரி மாவட்டத்தால் உரிமை கோரப்பட்டாலும், காலி, மாத்தறை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் வியாபித்துள்ளது. சிங்கராஜவனத்தை கலவான, றக்வான, கனிதும, தெனியாய ஆகிய நான்கு கிராமங்களுக்கூடாகவும் சென்றடையலாம். இவ்வனப் பிரதேசத்தின் வருடாந்த சராசரி வெப்பநிலை 23.6 பாகை செல்சியஸ் ஆகும். அதனால் வருடம் முழுவதும் வரட்சிக் காலமில்லாமல் இருப்பதே இப்பிரதேசத்தின் சிறப்பம்சமாகும். இவ்வனத்தின் மிக உயர்ந்த

மலைச் சிகரமாக சுமார் 1150 மீற்றர் உயரமான கினிப்பிட்டிகலையைக் கூறலாம்.

இது தவிர, திப்பொத்கல, மவுலவெல்ல, கொஸ்குலான, சிங்ககல, கொகிலரம்ப, தொட்டலுகல போன்ற சிகரங்களும் இவ்வனத்தினுள் காணப்படுகின்றன. களுகங்கையின் கிளை நதியும், ஜின்கங்கையின் கிளை நதியும் இம் மலைத் தொடர்களை ஊடறுத்துப் பாய்வது இதன் அடுத்த அம்சமாகும்.

இவ்வனத்திலுள்ள அதிகமான மரங்கள் உயரமாகவும் நேராகவும் வளர்ந்து காணப்படுகின்றன. இம்மரங்கள் 35 மீற்றர் முதல் 50 மீற்றர் வரை உயரமும் கொண்டவை. இவ்வனத்தில் இனங் காணப்பட்டுள்ள 211 வகையான மர இனங்களில் 66 வீதமான மரங்கள் இலங்கைக்கே உரிய மரங்களாகும். அத்துடன் 25 வகையான இலங்கைக்கே உரிய தாவர வகைகளில் 13 வகைகள் சிங்கராஜவனத்தில் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது.

சுதேச பறவையினங்களில் 95 வீதமானவை சிங்கராஜவனத்தில் காணப்படுகின்றன. இவ்வனத்தில் 'சாம்பூ' இன மான்கள் அதிகமாக வாழ்கின்ற சுண்டெலி மான்களும், குரைக்கும் மான்களும் காணப்படுகின்றன. ஊதாமுக இலைக் குரங்குகள், விரியன் பாம்புகளும் இவ்வனத்தில் ஆங்காங்கே நடமாடுகின்றன. தவளைகள், தேரைகள் என்பன இங்குள்ள அருவிகளிலும் சேற்று நிலங்களிலும் சுதந்திரமாக இயற்கையுடன் ஒன்றிணைந்து வாழ்கின்றன.

இவ் வனத்தில் தாவர அடர்த்தி மிகக் குறைவாகவே காணப்படுவதால் இங்கு பறவைகளும், மிருகங்களும் மிக இலகுவாகவும் சுதந்திரமாகவும் நடமாட முடிகின்றது. சிங்கராஜவனத்தைச் சுற்றி சுமார் 22 கிராமங்கள் காணப்பட்டபோதிலும் வருகந்தேனிய, கொலந்தொட்டுவ ஆகிய கிராமங்கள் வனத்திற்குட்பட்டே காணப்படுவது வனத்தின் தனித்துவத்தைப் பாதிப்பதாக அமைகின்றது.

**சி. கம்சியா**
தரம் $7^{A}$



*தீயோருடன் இருப்பதைவிடத் தனிமையில் இருப்பது நல்லது; தனிமையில் இருப்பதைவிட நல்லோருடன் இருப்பது நல்லது; மௌனமாய் இருப்பதைவிட அறிவைத் தேடுவோருடன் உரையாடுவது நல்லது; தீய சொற்களைப் பேசுவதைவிட மௌனமாக இருப்பது நல்லது.*

- நபிகள் நாயகம்

# வீட்டுத் தோட்டம்

பண்டைக் காலத்திலிருந்தே மனிதர்கள் தமது வீடுகளுக்கருகே மரக்கறிகள், பழ வகைகள், சரக்குப் பயிர்கள், வாசனைப் பயிர்கள், மூலிகைத் தாவரங்கள், பூக்கள், வெட்டு மரங்களைப் பெறக்கூடிய மரங்கள் ஆகியவற்றை செய்கை பண்ணி வந்துள்ளனர். இதன் மூலம் சூழலைச் சுத்தமாகவும், அலங்காரமாகவும் வைத்திருப்பதில் அதிக ஆர்வம் கொண்டிருந்தனர். வீடுகளுக்கு அருகேயுள்ள நிலத்தில் பயன்தரக்கூடிய தாவரங்களையும் அலங்காரத் தாவரங்களையும் செய்கை பண்ணுவதை வீட்டுத்தோட்டமாகக் கருதமுடியும். வீட்டுத்தோட்டமொன்றைப் பராமரிக்க 1000 சதுர மீற்றர் (1/4 ஏக்கர்) அல்லது இதைவிடக் குறைந்தளவு இடம் போதுமானதாகும். வீட்டுத் தோட்டம் ஒன்றிலிருந்தே பல நன்மைகளை நாம் பெறமுடியும். தமக்குத் தேவையான மரக்கறிகளையும் பழங்களையும் வீட்டுத் தோட்டத்தில் உற்பத்தி செய்வதனால் பல நன்மைகளைப் பெறலாம்.

- குடும்ப அங்கத்தவர்கள் விருப்பும், போசாக்கான உணவுகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.
- அரிதாகக் காணப்படும் நிலத்திலிருந்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ள முடியும்.
- தேவையான போது அறுவடை செய்யமுடியும்.
- தாவரங்கள் வீட்டைச் சுற்றிக் காணப்படுவதால் குளிர்ச்சியாக இருப்பதுடன், அலங்காரமாகவும் இருக்கும்.
- நஞ்சில்லாத ருசியான புதிய மரக்கறிகளையும், பழங்களையும் உண்ண முடியும்.

கைத்தொழில் அபிவிருத்தி நகரமயமாக்கல் ஆகிய காரணிகளால் மக்கள் தமது நாளாந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்ய சந்தைகளுக்குச் செல்வதை பழக்கமாக்கிக் கொண்டுள்ளனர். இதனால் உணவுப் பொருள் உற்பத்தி வர்த்தகமயமடைந்துள்ளது. இன்று கிராமப்புற மக்கள் கூட தமது மரக்கறி, பழங்கள் ஆகியவற்றின் தேவையைப் பூர்த்தி செய்ய சந்தைகளையே நாடுகின்றனர். இதனால் இவற்றின் கிராக்கி அதிகரித்துள்ளது. ஆனால் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உற்பத்தி அதிகரிக்கவில்லை. இவற்றின் காரணமாக விலை கூடிய, விவசாய இரசாயனங்கள் விசிறப்பட்ட தரமற்ற, நுகர்ச்சிக்கு உதவாத மரக்கறிகளையும் சந்தையில் விற்பனை செய்வதால் பல பிரச்சினைகளை நுகர்வோர் எதிர்நோக்க வேண்டியுள்ளது. வீட்டுத் தோட்டங்களைச் செய்கை பண்ணுவதில் ஆர்வம் இன்மையால் பல சமூகப் பொருளாதார, சூழல் பிரச்சினைகள் தோன்றியுள்ளது. வர்த்தகமயமான பயிர்ச்செய்கை பரவி வருவதால் காடுகளை அழித்தல், மண் அரிப்பு, நீர் மூலவளங்கள் அழிவடைதல் போன்ற பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. இப் பிரச்சினைகளிலிருந்து விடுபட்டு வாழ்வதற்குப் பொருத்தமான சூழலை உருவாக்கவும், இரசாயனங்களால் நஞ்சூட்டப்படாத மரக்கறிகள், பழங்களை உற்பத்தி செய்வதற்கும் எம்மால் இலகுவாக நடவடிக்கைகளை எடுக்கமுடியும். இதற்கு நம்மால் செய்ய வேண்டியவை எமது மூதாதையர்களைப் போலவே நாமும் வீட்டுத் தோட்டச் செய்கையில் ஆர்வத்துடன் ஈடுபடுவதாகும்.


**வீட்டுத்தோட்டத்தில் இருக்கவேண்டிய அம்சங்கள்**

- நகர்ப்புறம், ஓரளவான கிராமப்புறம் என்பவற்றில் வீடு அமைந்துள்ள பிரதேசத்திற்கு ஏற்ப வீட்டுத் தோட்டத்தின் வடிவம் வேறுபடும். இதன்படி வீட்டுத்தோட்டமொன்றில் பின்வரும் அம்சங்கள் யாவுமோ அல்லது சிலதோ இருக்கவேண்டும்.
- வீடு, கிணறு அல்லது நீர் கிடைக்குமிடம், வேலி அல்லது மதில், குப்பைகளைப் போடும் குழி, மலசலகூடம், பயிர் என்பன இருக்கவேண்டும்.

**வீட்டுத்தோட்டத்தை திட்டமிடல்**

உங்கள் வீட்டைச் சுற்றியுள்ள வீட்டுத் தோட்டத்தை பயனுள்ள முறையில் செய்கை பண்ணுவதாயின் கட்டடங்கள் ஆகியவற்றின் அமைப்பு, நிலப்பரப்பு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு திட்டமிட்ட முறையிலோ அல்லது எழுந்தமானதாகவோ நடுகை செய்யமுடியும். நிலப்பரப்பின் அமைவிடம், தோற்றம், மண்ணின் கட்டமைப்பு, பிரதேசம் ஆகியவற்றை அவசியமாக கருத்திற் கொள்ளவேண்டும். குடும்ப அங்கத்தவர்களின் சுவைக்கு ஏற்றவாறு பயிர்களைத் தெரிவு செய்ய வேண்டும். எனவே வீட்டுத் தோட்டத்தை மேற்கொண்டு நோய் அற்ற வாழ்வை நாம் வாழவேண்டும்.

செ. நிரோஜினி
கலைப்பிரிவு – 2014


உலகப்பெருமஞ்சம் இணுவில் கந்தசுவாமி கோவில்

# நாணயப் பெறுமதி இறக்கமும் பொருளாதார தாக்கமும்

நாணயப் பெறுமதி இறக்கம் எனப் படுவது ஒரு நாட்டு நாணயத்தின் வெளி நாட்டுப் பெறுமதியை அந்நாட்டு அர சாங்கம் ஏனைய நாட்டு நாணயங்களுக்கு எதிராக சட்டரீதியாகக் குறைத்துக் கொள்கின்ற ஓர் நடவடிக்கை நாணயப் பெறுமதி இறக்கமாகும். அதாவது வெளி நாட்டு நாணய அலகு ஒன்றிற்காகப் பரிமாற்றம் செய்யப்படும் உள்நாட்டு நாணய அலகுகளின் எண்ணிக்கையினை அரசாங்கம் அதிகரித்துக் கொள்வதனை இது குறிக்கும். இந் நாணய மதிப்பிறக்கச் செயற்பாடானது நிலையான அல்லது முகாமை செய்யப்பட்ட மிதக்கும் நாணய மாற்று வீத முறைகளில் மேற்கொள்ளப் படும்.

ஒரு நாடு நாணயப் பெறுமதியிறக்கம் செய்வதன் பிரதான நோக்கம் நாட்டின் சென்மதி நிலுவையில் காணப்படும் நீண்டகால குறைநிலைப் பிரச்சினையைச் சீராக்கம் செய்வதேயாகும். அதாவது நாணயப் பெறுமதி இறக்கத்தினால் ஏற்றுமதிப் பொருட்களின் விலைகள் வெளிநாட்டு நாணய வடிவில் குறை வடைந்து ஏற்றுமதிகளுக்கான கேள்வி அதிகரித்து ஏற்றுமதிகள் அதிகரிக்கும் என்றும் மாறாக இறக்குமதிப் பொருட்களின் விலைகள் உள்நாட்டு நாணய வடிவில் அதிகரித்து இறக்குமதிகளுக்கான கேள்வி குறைவடைந்து இறக்குமதிகள் குறைவடை யும் என்றும், இதனால் சென்மதி நிலுவை யின் நீண்டகால குறைநிலைப் பிரச்சினை சீராக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படு கின்றது.

நாணயப் பெறுமதியிறக்கம் செய் வதன் நோக்கங்களாக மூலதன உட்பாய்ச் சல்களை அதிகரித்தல், உள்நாட்டில் மூலவளப் பயன்பாட்டினை அதிகரித்தல், அந்நியச் செலாவணிச் சந்தையில் உள்ள கறுப்புச் சந்தையை நீக்குதல், நாணய மாற்று வீதத்தின் மிகை மதிப்பீட்டை நீக்கி அதன் உண்மைப் பெறுமதியை நிலைநாட்டுதல் போன்றனவாகும்.

நாணயப் பெறுமதி இறக்கமானது ஏற்றுமதி உழைப்பு, இறக்குமதிச் செலவு போன்றவற்றில் தாக்கத்தை ஏற்படுத்து கின்றது. நாணயப் பெறுமதி இறக்கத்தி னால் ஒரு அலகு ஏற்றுமதி ஊக்குவிக்கப் படும். மேலும் நாணயப் பெறுமதி இறக் கத்தினால் வெளிநாட்டு நாணய வடிவில் ஒரு அலகுக்கான ஏற்றுமதிகளின் விலைகள் குறைகின்றன. இதனால் ஏற்றுமதித் தொகை அதிகரிக்கும். ஏற்றுமதிகளின் நெகிழ்ச்சியுள்ள கேள்வியினை உடைய தாயின் ஏற்றுமதித் தொகை பெருமள வால் அதிகரிக்க ஏற்றுமதி உழைப்புக் களும் அதிகரிக்கும்.

நாணயப் பெறுமதி இறக்கத்தினால் இறுக்குமதிப் பொருட்களின் விலைகள் உள்நாட்டு நாணய வடிவில் அதிகரிக் கின்றன. இதனால் இறக்குமதிகளுக்கான கேள்வி உள்நாட்டில் வீழ்ச்சியடைய இறக்குமதிகள் குறைவடையும். இறக்கு மதிகள் நெகிழ்ச்சியுள்ள கேள்வியினை உடையதாயின் இறக்குமதித் தொகை பெருமளவால் குறைவடைய இறக்குமதிச் செலவு குறையும்.

நாணயப் பெறுமதி இறக்கம் வெற்றியடையும் சந்தர்ப்பங்களாகப் பின்வருவனவற்றை நோக்கலாம்.

- ஏற்றுமதி, இறக்குமதிப்பொருட்கள் ஒன்றுக்குக் கூடிய நெகிழ்ச்சியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- குறிப்பிட்ட நாட்டின் பிரதான ஏற்றுமதிப் பொருட்கள் அந்நாட்டில் பிரதான நுகர்ச்சிப் பொருட்களாக இருத்தல் கூடாது.
- குறிப்பிட்ட நாட்டில் ஏற்றுமதிப் பொருட்கள் இறக்குமதி உள்ளீடுகளைக் கொண்டிருத்தல் கூடாது.
- உள்நாட்டில் பெருமளவிலான பண வீக்கம் நிலவக்கூடாது.

ஒரு நாட்டில் நாணயப் பெறுமதி இறக்கமும் ஏற்றமும் நடைபெறுவது வழக்கம். நாணயப் பெறுமதி இறக்கத்தினால் அந்நியச் செலாவணி உள்ளேற்றம் அதிகரிக்கப்படும். இதனால் அந்நியச் செலாவணி வெளியேற்றம் குறைவடைவதனால் பாதகமான சென்மதி நிலுவையினை இதன் மூலம் குறைக்கக்கூடியதாக இருத்தல். நாணயப் பெறுமதி இறக்கத்தினால் ஒரு நாட்டில் நாணயத்தின் பெறுமானம் குறைவடையும்போது உல்லாசப் பிரயாண துறையினை விருத்தி செய்வது மாத்திரமன்றி பல பேருக்குத் தொழில் வாய்ப்புக்கள் வழங்கக்கூடியதாக இருத்தல், இதன் காரணமாக நாட்டின் மொத்த தேசிய வருமானம் அதிகரிக்கும்போது மக்கள் உயர்ந்த வாழ்க்கைத் தரமுடையோராக மாற்றப்படுவர்.

நாணயப் பெறுமதி இறக்கத்தினால் தேவையில்லாத பண்டங்களின் இறக்குமதியானது கட்டுப்படுத்தப்படும்.இதன் காரணமாக நாட்டில் பண நிரம்பலானது அதிகரித்துக் காணப்படும். நாணயப் பெறுமதி வீழ்ச்சியினால் நாட்டில் பண வீக்கம் ஏற்பட்டு பண்டங்களின் விலையானது உயர்வடைந்து செல்லும். அந் நிலையில் பண்டமானது அதிகரிக்காத நிலையில் நாட்டில் பொருளாதாரத் தளம்பலானது ஏற்படும்.இறுதியாக நாணயப் பெறுமதி இறக்கம் ஒரு நாட்டில் சாதகமான விளைவுகளையும் ஏற்படுத்துகின்ற போதிலும் அபிவிருத்தியடைந்து வரும் இலங்கை போன்ற நாடுகள் தமது ஏற்றுமதிப் பொருட்களின் ஏற்றுமதித் தொகையினை அதிகரித்துக் கொள்வதற்கு அடிக்கடி இவ்வாறான நாணயப் பெறுமதி இறக்கத்தினை ஏற்படுத்துவது வழக்கமாகும்.

**சி. துளசி**
தரம் 12 Com.

ஒருவர் மற்ற எல்லோரையும் விட அதிக தைரியத்தைப் பெற்றிருப்பதால் வீரனாவதில்லை. மற்றவர்களைவிட ஒரு பத்து நிமிடங்கள் அதிகமாகத் தைரியசாலியாக இருப்பதாலேயே வீரனாகிறார்.

**- ரால்ஃப் வால்டோ எமர்சன்**

# பாடசாலை முத்தமிழ்விழா - 2011

வாழ்க்கையில் உண்டாகும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் நிகழ்ச்சியே விழாவாகும். மக்களால் விரும்பிக் கொண்டாடப்படும் நிகழ்வாகவும் இது அமைகிறது. விழா என்பது 'விழைவு' என்னும் சொல்லின் அடிப்படை யாகத் தோன்றியது. விழைவு என்பது ஆசை, விருப்பம் என்று பொருள் குறிப்பதாகும்.

இந்த வகையில் 31.05.2011 செவ்வாய்க் கிழமை அன்று எமது பாடசாலையில் முத்தமிழ் விழா ஒன்றினை தமிழ் மன்றம் நடத்தியது. அன்றைய தினம் பாடசாலை விழாக் கோலம் கொண்டிருந்தது. எல்லா மாணவர்களும் தமிழருக்குரிய பண்பாட்டு உடையுடன் வந்திருந்தனர். பாடசாலை யானது மாவிலைத் தோரணங்களாலும் வண்ணத் தாள்களாலும் கண்ணைக் கவரும் வண்ணம் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

எமது அயல் நாடான இந்தியாவிலுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த முத்தமிழ்வித்தகி பேராசிரியர் டாக்டர் சரஸ்வதி இராமநாதன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இவர் பி.ப. 3.00 மணியளவில் பாடசாலைக்கு காரில் வந்திறங்கினார். சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய, வலயக் கல்விப்பணிப்பாளர் திரு.ஆ. இராஜேந்திரன் அவர்கள் கலந்து கொண்டார். இவர்கள் யாவரையும் மலர் மாலைகள் அணிவித்து மங்கள வாத்தியம் முழங்க பாடசாலை மாணவர்களின் வரவேற்பு நடனத்துடன் அதிபர், பிரதி அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனை வரும் ஒறேற்றர் சுப்பிரமணிய மண்டபத் துக்கு அழைத்து வரப்பட்டனர். விருந்தினர் களால் மங்கள விளக்கு ஏற்றப்பட்டது. அதன் பின் மாணவி ஒருவரால் தேவாரம் இசைக்கப்பட்டது. பின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

இதனைத் தொடர்ந்து வரவேற்புரை தமிழ்மன்றப் பொறுப்பாசிரியர் திரு.பா. மகாலிங்கசிவம் அவர்களாலும், தலை மையுரை எங்கள் அதிபர் செஞ்சொற் செல்வர் திரு.ஆறு. திருமுருகன் அவர்களா லும் நிகழ்த்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர் ஆகியோரின் உரை நிகழ்த்தப்பட்டது.

தொடர்ந்து மாணவரின் நிகழ்வுகள் இடம்பெற்றன. முதலில் செல்வன் சிவாஜி ஆரமுதனின் பேச்சு, செல்வன் ப.நில்றுக்சன் அவர்களின் கவிதை, கல்லூரி மாணவி களின் நடனம், கல்லூரியின் நாடக ஆசிரியர் திரு.பு. கணேசராஜா அவர்களின் நெறி யாள்கையில் தயாரிக்கப்பட்ட "மாநிலம் பய னுற" என்ற நாடகம் என்பன இடம்பெற்றன.

சிறப்பு நிகழ்ச்சியாக தமிழ் நாடு கரகாட்ட வித்தகர்கள் தவராஜ் சாருமதி தம்பதிகளின் கரகாட்டம் இடம்பெற்றது.

இறுதியாக தமிழ்மன்றச் செயலாளரால் நன்றியுரை நிகழ்த்தப்பட்டது. இதன்போது அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்தினர். இவற்றுடன் முத்தமிழ் விழா நிகழ்ச்சிகள் யாவும் இனிது நிறைவு பெற்றன.

**வி. யசோதரன்**
தரம் $6^A$

# யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி நூலகமும் கற்றல் வளநிலையமும்

**திருமதி வா. பரமேஸ்வரன்**
நூலகப் பொறுப்பாளர்

"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்" என்று மொழிந்த பிரான்ஸிஸ் பேகனின் கூற்றுக்கமைய மனிதர்களாகிய நாம் நூல்களையும் மற்றும் அறிவு சாதனங்களையும் வாசித்தல் மிக அவசிய செயற்பாடு ஆகும்.

இந் நோக்கத்திற்கமைவாக கற்றல் – கற்பித்தல் செயற்பாடுகளுக்குத் துணையாகவும் ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் பயன்படுத்தவும் இசைவாகத் தமது சேவையை வழங்குவன பாடசாலை நூலகங்கள் ஆகும்.

பாடசாலை நூலகங்களின் தூரநோக்கு (Vision) "இலவச கட்டாயக் கல்வி, நூலக சேவை என்பவற்றினூடாகத் தரமான வாசிப்பை வளமுடன் மேம்படுத்தி அறிவு, திறன், மனப்பாங்கு நிரம்பிய சமுதாயத்தை உருவாக்கல்" ஆகும். இதன்படி எமது பாடசாலை நூலகமும் எங்கள் பாடசாலைச் சமூகத்தை அறிவு, திறன் மனப்பாங்கு என்பன நிரம்பிய நற் பிரஜைகளாக உருவாக்க தமது சேவையை வழங்குகிறது.

வரலாற்றை நோக்கினால் பாடசாலை ஆரம்பித்த 1894ம் ஆண்டு இதன் ஆரம்பம் எனலாம். பாடசாலை ஆரம்பிக்கும்போதே சில பெட்டகங்களில் நூல்கள் வைத்துப் பயன்படுத்தப்பட்டவை என்பது இங்கே முன்பு படித்த ஆன்றோர்கள், கல்விமான்களின் வாய் மொழித் தகவல் ஆகும்.

திரு.அ. கந்தையா, திரு. ச. கந்தையா, திரு. சுப்பிரமணியம் டாக்டர், திரு. இளையதம்பி, திரு. மாணிக்கம், திரு. சி. தம்பையா போன்ற பல ஆன்றோர்களால் இவ்வித்தியாசாலை ஆரம்பிக்கப்பட்டு கற்பிக்கப்பட்ட காலத்தில் இங்கே நிகண்டு, புராணம், இதிகாசம், வரலாறு, ஏட்டுச் சுவடிகள், ஆங்கிலப் புத்தகங்கள் எனப் பல நூல்கள் தாராளமாக இக் கூடத்தில் சேர்த்து வைத்து கற்பிக்க உதவியதுடன் பாதுகாப்பாகவும் பூட்டிவைக்கப்பட்டிருந்தன என்பர்.

1902ஆம் ஆண்டு இவ்வித்தியாசாலை அரசினர் அங்கீகாரம் பெற்ற வேளையில் இந்நூலகம் பல நூல்களையும் அரசினரிடம் பெற்று வளர்ச்சியடைந்தது. 1920 – 1956 காலப்பகுதியில் ஆங்கிலமொழிக் கல்வி முறை காணப்பட்டதால் ஆங்கில நூல்களே தாரளமாகக் காணப்பட்டன.

1945இல் இலவசக் கல்வியுடன் தமிழ் போதனா மொழியாகப் பிரகடனம் செய்யப்பட்ட வேளையில் தமிழ் நூல்களும் சேர்க்கப்பட்டு இந்நூலகம் அதிக எண்ணிக்கையான நூல்களைச் சேர்த்து வைத்திருந்தது. இந்நிலையில் தரமான நூலக வளங்கள் கொண்ட நூலக சேவை காணப்பட்டதால் மாணவர்களின் கல்வி நிலையும் மிகவும் தரம் உயர்ந்து காணப்பட்டது.

1947ஆம் ஆண்டு இப்பாடசாலை "பிரதம பிரிவு" (First Grade) பாடசாலையாக வித்தியாபகுதியினரால் வகுக்கப்பட்டதற்கு "இங்கே புத்தகசாலை,

வாசிகசாலை என்பன தரமான நூல் வளங்களுடன் சிறந்த முறையில் புனரமைக்கப்பட்டு, சிறப்பான நூலக சேவையும் காணப்பட்டமை" ஒரு காரணமாக அமைந்தது சிறப்பாகும்". (தகவல் "ஸ்கந்தா" சஞ்சிகை – 1953)

1960 காலப்பகுதியில் நூலகத்திற்கு என தனியான கட்டிடம் எடுக்கப்பட்டு (தற்போதைய கட்டிடம்) நூலகத்திற்கான சிறப்பான கட்டிடங்கள், நூலக பதிவுப் புத்தகம், First Grade school க்கு தரமான நூலக சேவை என்னும் சிறப்பம்சங்களுடன் இந்நூலகம் வளர்ச்சியுற்றது. 1992 காலப்பகுதியில் பத்தாயிரம் வரையான நூற் சேர்க்கையுடன் சஞ்சிகைகள், பத்திரிகை வெட்டுத் துண்டுகள், பரீட்சை வினாத்தாள்களின் சேர்க்கை எனும் வளங்களின் அதிகரிப்பாலும், தரமான நூலக சேவையினாலும் யாழ் மாறில கல்வித் திணைக்களத்தின் மதிப்பீட்டின் போது இந்நூலகம் யாழ் பாடசாலை மட்டத்தில் இரண்டாவது பாடசாலை நூலகம் என மதிப்பிடப் பெற்றது.

2011இல் தற்போது நூலகத்தில் 9800இற்கு மேற்பட்ட நூல்கள், ஆயிரத்துக்கு மேற்பட்ட சஞ்சிகைகள், எமது பாடசாலை வெளியீடுகளின் விசேட சேர்க்கைத் தொகுதி, பத்திரிகைத் தகவல் தொகுதி, மாணவர் ஆக்கங்கள் தொகுதி, வாசிப்புப் பகுதி, உடனுதவும் பகுதி, பரீட்சை வினாத்தாள் தொகுதி போன்ற அச்சு ஊடகங்களுடன் சிறிய அளவில் இலத்திரனியல் தகவல் ஊடகங்களையும் வளங்களாக அமைந்த தரமான நூலக சேர்க்கை உள்ளது.

2011இல் பாடசாலை வகைப்படுத்தலின் "இசுறு" எனும் திட்டத்தில் புதிய கட்டிடத்தில் புதிய "இலத்திரனியல் நூலகம்" (E.library) ஒரு பகுதியில் உருவாக்கப்பட்டு வருகின்றது. இதன் நூலக வளங்கள் இலத்திரனியல் தகவல் சாதனங்கள் அதனுடன் கூடிய தளபாடங்கள், தகவல் தொழில்நுட்ப அறிவுபெற்ற மனித வளங்கள் என்பன ஆகும்.

2011இல் வலயக்கல்வி அலுவலர்களின் வருடாந்த பாடசாலை மதிப்பீட்டின்போது எமது பாடசாலை நூலகத்திற்கு அதன் நூலக சேவை, தகவலியல் ஓய்வு நேரப் பயன்பாடு எனும் தர அடையாளங்களின் மதிப்பீட்டில் "சிறப்புத் தகவு" (Bench Mark) பெற்றமை மிகவும் உயர்ந்த நூலகப் பெறுபேறும் பாராட்டும் ஆகும்.

### இப்பாடசாலை நூலகத்தின் நோக்கமும் குறிக்கோள்களும்

நோக்கம் (**Vision**) : இலவசக் கட்டாயக் கல்வியின் தரமான வாசிப்பினூடாக திறன், மனப்பாங்கு சேர்ந்த அறிவினால் நிரம்பிய சமுதாயத்தை உருவாக்கல்.

**இலட்சிய நோக்கு :**

**Mission :** பாடசாலை மாணவரின் தரமான வாசிப்பை நடைமுறைப்படுத்த, நூலக வளங்கள், நூலக சேவைகள், தகவலியல் என்பவற்றை அபிவிருத்தி செய்வதுடன், நூலகப் பயன்பாட்டின் உச்ச பயனைப் பெறவும் வேண்டிய செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

### எமது பாடசாலை நூலகத்தின் நோக்கங்களும் பணிகளும்

1) பிள்ளைகளிடத்தே நூலக ஆர்வம், நூல் ஆர்வம் என்பவற்றைத் தோற்றுவித்து, வாசிப்புப் பழக்கத்தை அதிகரித்தல்.

2) சுயமாகவே அறிவேடுகளிலிருந்து விடயங்களைத் தேடிக் கற்றுக் கொள்ளும் ஆற்றலை அபிவிருத்தி செய்தலுடன் வழிகாட்டல் (மாணவர் மையக் கல்வி)

3) பாடசாலையில் உள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் அவரவர் கல்வித் தரத்திற்கும், அறிவாற்றலுக்கும் சுவைக்கும் ஏற்ற வகையில் அறிவேடு களைக் கொடுத்து உதவுதல்.

4) நூல் ஏடுகளில் உள்ள விடயங் களைத் தாமே படித்து சிறம்பசங்களை உணர்ந்து இன்புறக்கூடிய வகையில் வழிகாட்டல்.

5) ஆசிரியர்களுக்கு அவர் கற்பிக்கும் பாடத்திற்கு வேண்டிய ஏடுகளையும் அவர்தம் தொழில் விருத்திக்கு வேண்டிய ஏடுகளையும் கொடுத்து வாங்கல்.

6) பிள்ளைகளைத் தாம் வாழும் சமூ கத்தோடு பொருத்தமுறச் செய்தல்.

7) நூலக ஒழுங்கு விதிகளை நடை முறைப்படுத்தல்.

8) பிள்ளைகளுக்கு தங்கள் ஓய்வு நேரத்தை பயன் உள்ள வகையில் செலவிட உதவுதல்.

**உசாத்துணை நூல்கள்**


1. பாடசாலை நூலகர் கைந்நூல்.
2. ஸ்கந்தா சஞ்சிகை – 1953


♣ ❖ ♣



# கானல்

காலைக் கதிரவன் கண்களை மெல் லத்திறந்து காரிருளை விலக்கி விண்ணில் இருந்தவாறே மண்ணைப் பார்வையிடத் தினமும் வருவதைப் போல் மெல்ல மெல்ல வெளியே வந்தான். வந்த அவனின் பார்வை என்றும் இல்லாதது போல் அன்று மட்டும் ஒரு ஊரை மட்டும் குறி வைத்துத் திரும்பியது. ஊரை நோக்கிய பார்வை ஒரு கட்டடத்தின் மேல் விழுந்தது. கட்டடத்திலிருந்து சற்று விலகி நின்ற கூட்டத்தின் மேல் பட்டது.

அது வேறொன்றுமில்லை. இலுப்பை யடி முதியோரில்லம். அங்கு ஒரு வயோதி கூட்டம் அங்கலாய்த்தவாறு இருந்தது.

"அப்பு இவரைத் தூங்குங்கோ..."

"ஐயா தண்ணீர் எடுத்துக்கொண்டு வாங்கோ..."

"அண்ணை காலைப் பிடியுங்கோ..."

"தண்ணிய முகத்திற்குத் தெளியுங் கோவன்..."

"தம்பி ஒருக்கா ஆட்டோவை கூப்பிடு அப்பன்"

அய்யா ஒருக்கா அம்புலன்சுக்கு கோல் பண்ணுறியே..."

என்றவாறே ஒவ்வொருத்தரும் அங்கலாய்த்தவாறு இருந்தனர். ஒருவரின் உயிரும் உடலில் இல்லை. ஊசலாடிக் கொண்டிருந்தது.

இதனைக் கண்ட சூரியன் என்ன இது? என்ன இஞ்ச நடக்குது என்ற வியப்பில் சிறிய அச்சத்துடன் அந்தக் கூட்டத்தின் உள் நுழைந்து நோக்கினான்.

கூட்டத்தின் நடுவே இரும்புக் கம்பிகளால் செய்யப்பட்ட ஒரு கட்டில் என்று வெறும் சொல்லால் மட்டும் சொல்லக்கூடிய கட்டிலில் ஒரு 65 வயது மதிக்கத்தக்க உடல் நலிவடைந்து, இரண்டு அல்லது மூன்று பற்களுடன் ஒரு கண் பழுத டைந்து கொண்டிருக்கும் நிலையில் தோல்கள் யாவும் பனை ஓலை போல் சுருங்கி பன்னாடை போல் கரடுமுரடாகக் காணப்பட்டது. கால்களில் ஒன்று வலு விழுந்ததாகவும் இடுப்பில் ஒரு நாலு முழ வேட்டித் துண்டும், கழுத்தில் ஒரு முருகனின் பென்ரன் கொழுவிய ஒரு கறுப்புநிறக் கயிறும் காதில் ஒரு கடுக்கனுடனும் காணப்பட்டார் அந்த 65 வயதை நெருங்கிய வயோதிபர்.

இவர்கள் அந்த வயோதிபருக்காகவே அங்கலாய்த்தவண்ணம் காணப்பட்டனர். ஆனால் அந்த வயோதிபரோ இவர்களின் நினைவின் பக்கம் சற்றும் சாரவில்லை. ஆயினும் அவர் எதையோ எண்ணியவாறே தனது சிம்மாசனத்தில் படுத்திருந்தார். கட்டில் என்றே பெயர் சொல்ல முடியாத போதும் அது அவருக்கு சிம்மாசனமே. அந்தச் சிம்மாசனத்தில் படுதிருந்தது வேறு எந்தக் காரணத்திற்குமில்லை. அவருக்கு வழமையாக வரும் நெஞ்சுக்குத்து தான் காரணம். அது அவருக்கு பெரிய பொருட் டல்ல. அவருடன் சில நாட்கள் பழகிய நண்பர்களுக்கு பெரியதொரு விடயமாகவே காணப்பட்டது. இவ்வாறே அவர் எதையும் பொருட்படுத்தாமல் தன் சிந்தனையில் மட்டும் கவனம் செலுத்தினார்...

"சரவணன் சரவணன் சரவணன்..." என்று அழைத்தவாறே வீட்டு வாசலில்

நின்று கூப்பிடுவதை கேட்டுக்கொண்டே வீட்டிற்குள் இருந்த சரவணனும் அவனுடைய மனைவி இலட்சுமியும் வெளியே வந்தார்கள். வெளியே வந்து நின்ற அந்த நபரைக் கண்ட சரவணன்

"அடே... ஆலடி முத்தண்ண...."

என்றவாறே முத்தண்ணனைக் கதைக்கவிடாமல் தனது பேச்சை நீட்டினான் சரவணன்.

"அண்ண கொஞ்சம் பொறுங்கோ... இவ்வளவு காலம் நான் உந்த நாற்பது அடி மரம் ஏறி என்ர பிள்ளையள வளர்த்து ஒவ்வொருத்தரையும் ஒவ்வொரு துறேல கரை சேர்த்ததுடன் இனி அவயள் ஊருக்குள்ள நடமாடுவினம் தானே. கடலுக்க இருக்கேக்கதான் உலாவேலாது. அவயள் உலாவ வெளிக்கிட்டா உங்களுட்ட வாங்கின கடன் எல்லாம் முதலும் வட்டியுமா திருப்பித் தந்திடுவன். வேணுமெண்டா கொஞ்சம் கூடவும் கேளுங்கோவன் தாறன்" என்று தனது பிள்ளைகளை வளர்த்தது முதல் கடன் திருப்பித் தருவது வரை கூறிய முத்துவிற்கு மனதிற்கு இதமாக இருந்தது. இதமாக இருந்த போதும்

"சரவணன் இவ்வளவு காலமும் பொறுத்திட்டன் இண்டைக்கு முடிவாச் சொல்லுங்கோ எப்ப என்ர கடன் முழுவதையும் தருவியள்... இண்டைய தவணை தான் இறுதித் தவணை"

என்று சற்று உரத்த குரலிலும் கேட்டார் முத்து.

"அண்ண கிடந்த நகையள் எல்லாம் வித்து உங்களிட்ட மற்றது கந்துவட்டி கணபதீட்ட வங்கீன லோன் எடுத்து என்று, பலவழியால் கடன்பட்டு மூத்தவன பிரான்சுக்கு அனுப்பினான். அது ஒரு சின்ன பிழையால ரஷ்யாவில தடைப்பட்டு நிக்கிறான், இரண்டாவது பெடியனுக்கு வாறமாதம் அடுத்த மாதம் வேலை கிடைக்கும். அவன் போச வருசம் தானே கம்பேசால வந்தவன். அப்ப அவனுக்கும் நிச்சயம் வேலை கிடைக்கும். இவனுக்கு வேலை கிடைக்க அவனும் பிரான்ஸ் போயிடுவான். பிறகு என்ன கவலை"

என்று கூறியவாறே ஒரு பெரு மூச்சையும் விட்டார் சரவணன்.

இவரின் வார்த்தைகளிலிருந்த உறுதித் தன்மையைக் கண்ட முத்து கடன் கதையை விட்டுவிட்டு

"சரி அது கிடக்கட்டும். உன்ர மூன்றாவது மகள் இப்ப என்ன செய்யுறாள்"

என்று வந்த விடயம் நிச்சயம் தீரும் என்ற நம்பிக்கையில்தனது கதை யைத் திசை திருப்பினான் முத்து. இதற்கு இடையில் முத்துவிற்கு கதிரையும் எடுத்துப் போட்டு தேநீரும் கொடுத்தாள் இலட்சுமி. அவர் கதிரையில் இருந்து குடித்தவாறே இதனைக் கேட்டார்.

"அவளுக்கு படிப்பும் ஓடாது வீட்டு வேலையும் சரிவராது... உங்க பாருங்கோ வீட்டுக்குள்ள இருந்து கொம்பியூட்டரில ஏதோ செய்யுறாள்"

"அப்ப கொம்பியூட்டரும் எடுத்து குடுத்துட்டியள்"

"ஓ அண்டைக்கு உந்த பக்கத்து வீட்டு பிள்ளை கொம்பியூட்டர் எடுத்துதாம் என்டு தனக்கு எடுத்துத் தரச் சொல்லி ஒரே கரச்சல்... என்ற செய்யுறதெண்டு தெரியாமல் அந்த சிங்கர் கொம்பனியில மாசக் காசுக்கு எடுத்துக் குடுத்தனான்"

என்ற சரவணனின் குரலில் மாதாந்தக் காசு கட்டவேணும் என்ற ஏக்கமும் தெரிந்தது.

"அப்ப உந்த லீசிங்கலயே உது எடுத்தனியள். எக்கச்சங்கம் காசு கேப்பாங்களே... "இத்தாங்கோ இதில கிடக்கிற காசில கொண்டே அந்த கடன முடியுங்கோ பிறகு சேத்து தாங்கோவன்"

எனக் கடன் வசூலிக்க வந்த முத்தர் மீண்டும் கடன் கொடுக்க எத்தனித்தார்.

"இல்ல... முத்து நான் இப்ப மூன்று பனை தான் சீவுறன். அதில வாற சம்பளம் வீட்டுக்கும் உந்த கடனுக்கும் போதும்"

"என்ன சரவணன்..."?? இந்த வயசிலையும் சீவுறியளே என்று ஆச்சரியத்துடன் கேட்டார்.

"என்ன முத்தர் இப்பதானே 63 வயசு..."

"எண்டாலும்...."

"முத்தர் ஆடின காலும் பாடிய வாயும் சும்மா கிடக்குமே"

"அது சரிதான்..." அப்ப நான் போட்டு வாறன்" என்று விட்டு வாசலில் கழற்றிய செருப்பை அணிந்தபடி புறப்பட்டுச் சென்றார் முத்தர்.

முத்தர் போவதை சரவணனும் இலட்சுமியும் பார்த்தவாறே நின்றுவிட்டு உள்ளே சென்றனர் இருவரும்.

சற்று நேரத்தில் வாசலில் தபால்காரன் மணி அடித்தான். அவ்விடம் நோக்கிச் சென்ற இலட்சுமியின் கையில் ஒரு காகிதத்தைக் கொடுத்துவிட்டு அவன் சென்றான். அவன் அந்த உறையைப் பார்த்து இது வெளிநாட்டுத் தந்தி. ஆர் அனுப்பியிருப்பினம் என்று எண்ணியவாறே சரவணனுக்கருகில் வந்து உறையை கிழித்து கடிதத்தை வாசிக்க ஆரம்பித்தாள்.

"அம்மா, அப்பா நான் இங்கு மிகவும் வருந்துகிறேன். இங்கு சாப்பிடவும் வழியில்லை, என் கையில் காசும் இல்லை. இவர்களின் மொழியும் எனக்குத் தெரியாது. ஒருவர் தான் தமிழ் ஓரளவு கதைக்கிறார். அவரின் சினேகிதம் எனக்குக் கிடைத்துள்ளது. அவரின் வங்கி இலக்கம் இத்தாளில் எழுதுகிறேன். அதற்கு 250000 ரூபா போடுங்கோ இல்லையேல் நான் இறக்க நேரிடும். வங்கி இல. 507035445862.

இப்படிக்கு
உங்கள் மகன்
த. ராஜேஸ்

என்ற வரிகள் சில இருந்தன. இந்தச் சில வரிகளையும் வாசித்து முடிக்க முன்னமே இலட்சுமியின் கண்கள் ஆறாகப் பெருக்கெடுத்து ஓட ஆரம்பித்தது. சரவணனின் தலை கோவிலில் அடித்த சிதறு தேங்காய் போல் சிதறியது. மூச்சு சிலகணம் தூரதேசம் சென்றது. அங்காங்கள் அசைவற்றுக் கிடந்தது. மகனின் நிலையினை எண்ணி வருந்துவதா? அல்லது பணத்தினை எவ்வாறு திரட்டுவது என்று எண்ணுவதா? எதுவுமே புரியாமல் இருந்தனர். சில நிமிடங்களின் பின் தெளிவுற்ற சரவணன்

"இலட்சுமி அழாத என்ன... இவ்வளவு காசும் போட்டுது இன்னும் என்ன இரண்டரை லட்சம் தானே"

என்று உள்ளத்துள் வெதும்பிய போதும் இலட்சுமியை ஆற்றுப்படுத்துவதற்காக இவ்வாறு கூறினார் சரவணன்.

"இந்த விஷயம் யாருக்கும் தெரியாமல் பார்த்துக்கொள்" என்றவாறே உள்ளே பார்த்தார் சரவணன். கீதா கொம்பியூட்டரைப் பார்த்தவாறே நித்திரையில் இருப்பதைக் கண்டுவிட்டு தனது பீரோவிலிருந்த காணி உறுதியை எடுத்துக் கொண்டு சென்றார் சரவணன். சென்ற அவர் அடகுக்குப் பெறுமதியில்லை என்றதும்

வீட்டினை 275000 ரூபாவிற்கு விற்று விட்டு காசையும் அனுப்பினார்.

வீட்டை விற்றுவிட்டு அவரின் மனைவி வீட்டுச் சீதனத்தில் வந்த அரைப்பரப்பு காணிக்குள் ஒரு சிறிய குடிசை கட்டி வாழத் தொடங்கினார்.

இரண்டு மாதத்திற்கு முன் வேலை விடய மாகக் கொழும்பு சென்ற விமலேஸ் கையில் 25000 ரூபா சம்பளத்துடன் வேலை ஒன்றுடன் வீட்டிற்கு வந்தான். வீடு மாறியதை அறிந்த அவன் தன் தாய் தந்தை இருந்த விட்டைக் கண்டான்.

"அம்மா எனக்கு இப்பதான் வேலை கிடச்சிருக்கு. என்ர புது பிரண்ஸ் எல்லாம் என்ர வீட்ட வருவாங்கள் அப்ப நான் இந்த வீட்ட கூட்டியர முடியாது"

என்று அருவருப்புடன் கூடிய வெறுப்புடன் கூறினான் விமலேஸ்.

"அதுக்கு என்ன தம்பி செய்யுறது. உன்ர அண்ணனுக்குத் தானே அனுப்பியது"

என்று நடந்த விடயம் பற்றிக் கூறினாள் இலட்சுமி. இவ்வாறே இவள் கூறிக்கொண்டிருக்க வீட்டிற்கு வந்தான் சரவணன்.

"இஞ்ச பாருங்க அப்பா எனக்கு வேலை பார்க்கிற கம்பனியிலேயே வீடு தாறன் என்று சொன்னவங்கள். நான் அங்கேயே போய் இருக்கிறன். அங்கேயே இருந்து மாசாமாசம் சாப்பாட்டுக்கு காசு அனுப்புறன்"

என்றுவிட்டு தனது உடுப்புக்களை எடுத்துக்கொண்டு கொழும்பு நோக்கிச் சென்றான் விமலேஸ்.

இதனைப் பார்த்தவாறே இலட்சுமி, சரவணன், கீதா மூவரும் இருந்தனர். அவனும் சென்றுவிட்டான்.

இலட்சுமி, சரவணனின் மனம் வெய்யி லில் விட்ட புழுவினைப்போல உள்ளூரத் துடித்தது. இவர்கள் இவ்வாறே கலங்கிய வண்ணமிருக்க வாசலில் தபால் மணி ஒலித்தது. அதிலே ராஜேஸ் போய்ச் சேர்ந்திருப்பான் என்பதை எதிர்பார்த்தனர். கீதா தபாலை வாங்கி வாசித்தாள்.

என்னருமைக் குடும்பமே தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள். இந்நாட்டுச் சூழ்நிலை காரணமாகவும் "நான்" தப்பிக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காகவும் இங்கு ஒரு ரஷ்யப் பெண்ணைத் திருமணம் செய்துவிட்டேன். எனக்கு வேலை கிடைத் தால் பணம் அனுப்ப முயற்சிப்பேன். அதிகம் எழுத நேரம் போதாமையால் இத்துடன் முடிக்கின்றேன்.

இப்படிக்கு

ச. ராஜேஸ்

என்று கடிதத்தில் இருந்தது. இதனைக் கேட்ட எல்லோரது கண்களிலும் கோபம் பொங்கியது. கனர்கள் நிரம்பியது. ஆயினும் கண்ணீர் சொட்ட விரும்பாமல் கண்களும் அடங்கிக்கொண்டது. அதனை மனங்களும் அடக்கி நின்றது. எதிர்காலக் கனவுகள் எல்லாம் வெறும் கனவாகவே மாறிவிட்டது. கற்பனைக் கோட்டை சிதைக்கப்பட்டு விட்டது என்று எண்ணியவர்கள் வாடி வீழ்ந்த மலர்போல் காட்சியளித்தனர். இலட்சுமி, சரவணன் இருவருமே இருந்த இடம்விட்டு அசையாமல் இருந்தனர். கீதாவும் ஒரு ஓரத்தில் யோசித்தபடி இருந்தாள். இப்படி இருந்தால் சரியாகாது என்று எண்ணிய கீதா அடுப்பில் தேநீர் வைத்து கொண்டுவந்து தந்தையிடம்

கொடுத்தாள். அவரும் முதலில் மறுத்தார். பின் வாங்கினார். இலட்சுமி அருகில் வந்த அவள் இலட்சுமியை தொட்டு

"அம்மா.... அம்மா..... அம்மா...."

என்று எழுப்பினாள். ஆனால் இலட்சுமியோ அசைவின்றிக் கிடந்தாள். இதைக்கண்ட சரவணன் அருகில் வந்தார்.

"இலட்சுமி... இலட்சுமி..."

என்று எழுப்பவும் எழும்பாமல் ஒரு கரையில் பிணமாகச் சரிந்தாள்.

பிள்ளைகளை இழந்த தவிப்பில் இருந்தவர், மனைவியும் இவ்வாறு செய்வாள் என்று எண்ணாதவர் யாரும் பெறாத் துன்பம் பெற்றார். கைகேயி தசரதனுக்குக் கொடுத்த துயரைவிட மேலான துயரைத் தந்துவிட்டதாக எண்ணிக் கலங்கி வருந்தினார்.

கலக்கத்துடனும் கடமைகளை முடித்த அவர் மாதம் இரண்டு கழிந்ததும் மகளை பேசிவந்த மாம்பிள்ளைக்கு தாரை வார்த்துக் கொடுத்தார்.

இதனை அறிந்துவந்த விமலேஸ் தந்தை கஷ்ரப்படுவதைப் பார்த்துவிட்டு அவரை கூட்டிக்கொண்டுபோய் இலுப்பையடி முதி யோரில்லத்தில் சேர்த்துவிட்டுச் சென்றான். முதியோரில்லம் செல்லும்போதும் மனைவி பரிசளித்த கட்டிலுடனே சென்றார். அது சுமார் 25 வயதைக் கடந்தது. அங்கு சென்ற சரவணன் தன் வாழ்க்கையைச் சிந்தித்த வாறே இருந்ததனால் ஏற்பட்ட நெஞ்சுக் குத்தினாலே யாவரும் தவித்தனர்.

எல்லோரும் சரவணனுக்காகத் தவித்தபோதும் இவர் மட்டும் தனது சுயநினைவுகளை நினைத்தவாறே கட்டிலில் நெஞ்சுக்குத்தில் படுத்திருந்தார்.

இதனைக் கண்டறிந்த சூரியனும் சில நிமிடம் கண்ணைமூடித் துயருள் மூழ்கியது. பின்பு நெடுநேரமாய் ஒரே இடத்தில் நிற்பதைத் தானே அறிந்த கதிரவன் பார் முழுதும் ஒளிபரப்ப சரணவனின் கதையறிந்த துயரத்துடன் சென்றான்.

**வி. சுலக்ஷன்**
கலைப்பிரிவு – 2012

## இலகுவாகச் சுருக்குவதற்கு...

ஒரு முழு எண்ணை, 25ஆல் பெருக்கவேண்டிய தேவையிருப்பின் அவ் முழு எண்ணை 4ஆல் பிரித்து வரும் விடையுடன் இரண்டு பூச்சியங்களைச் சேர்த்துக் கூறின் விடை பெறப்படும்.

உ–ம் : உங்களிடம் ஒருவர், 52இனை 25ஆல் பெருக்கித் தருமாறு கேட்பாராயின், 52இனை நான்கால் பிரிக்க வரும்விடை 13. இதனுடன் இரண்டு பூச்சியங்களைச் சேர்க்க வருவது 1300. இதுவே $52 \times 25 = 1300$ ஆகும்.

இதேபோல் ஒரு முழு எண்ணை 125ஆல் பெருக்கவேண்டியிருப்பின் அவ் எண்ணை 8ஆல் பிரித்து, மூன்று பூச்சியங்களைச் சேர்த்து விடையாகக் கூறலாம்.

# வாழ்க்கையின் வட்டம்

குண்டும் குழியுமாக நீண்டு போகும் பாதையில் பஸ் குலுங்கியபடி சென்று கொண்டிருந்தது. வயல் காற்று முகத்தி லடிக்க அவன் சற்று கண்களை மூடித் திறந்தான். அவன் பக்கத்திலிருந்து வயதான பாட்டி தும்மி கஷ்டப்படவே யன்னல் கண்ணாடியை இழுத்து மூடி அமர்ந்து மனக்கண்களில் திரை திரை யரங்கமேறியது.

ஒன்றா, இரண்டா வருடங்கள்? மொத்தமாக இருபது வருடங்கள் ஊர்ப் பக்கமே எட்டிப்பார்க்காத அவன் 10 வயதில் குடும்பத்தாருடன் பிறந்த சொந்த ஊரை விட்டு வந்தான். இன்று 30 வயதில் 2 பிள்ளைகளுக்கு அப்பாவாகி குடும்பஸ் தராகிவிட்டபின் இலத்திரனியலை நோக்கிச் செல்லும் நகர வாழ்க்கையை விட்டு ஒரு நாளாவது பிறந்த மண்ணைப் பார்த்து வருவோம் என எண்ணிய கணப்பொழுதில் மனைவி சொன்னாள். "சொந்தம் பந்த மென்று அங்க இப்போ யாருமில்ல. திரும்ப அங்கபோய் யாரைப் பார்க்குறது? அனாவசிய செலவும் பயண சிரமமும்". அவன் மௌனமாகக் கேட்டுக்கொண்டு இருந்தான். உண்மைதானே உறவு என்று சொல்லிக்க எவருமே இல்லையே. ஆனால் எதையும் எதிர்பாராத உண்மையான உறவாளர்கள் நண்பர்கள் உள்ளனரே. அவர்கள் இன்று என்னை நினைவு வைத்தி ருக்கக்கூடியவர்கள் இருப்பார்கள்.

நண்பன் சிம்பு...! சிம்புவை நினைத்த நேரத்தில் மனம் வேதனையுணர்வும், மலர்ந்த சந்தோஷகரமான உணர்வும் ஒருங்கேயமைய சற்று சிலிர்த்துக்கொண் டான். ஆமாம் அவனுடனேயே பாட சாலைக்குப் போய் பக்கத்தில் அமர்ந்து ஆற்றில் ஒன்றாக நீந்தி சின்னச்சின்ன குறும்புகள், சின்னச்சின்ன சேட்டைகள் அந்த வயதுக்குரிய சுட்டித்தன செயல்களை ஒன்றுவிடாது செய்து மகிழ்ந்திருந்தது யாவும் மனக்கண்முன் வந்தது.

சிம்பு எப்படி இருப்பான்? என்னைப் போலவே உயரமுமாய் சுட்டித்தனமுமாய் இருப்பான். சிம்புவை நான் பிரிந்தபோது கோபமாய் இருந்தான். நீல அரைக்காற் சட்டையும் வெள்ளைச் சேட்டுமாக நின்றவன், கண்களில் கோபம் தெரிந்தது. கையிரண்டும் பறித்த இளநீரைப் பற்றிப் பிடித்திருக்க, அவனை "பெரியவர்" (பண்ணையார்) கையால் பிடித்திருந்தார். பெரியவர் கையில் ஓர் பிரம்பிருந்தது. "சொல்லுடா யார் யார் வந்து இளநீரை களவா பறிச்சீங்க? சொல்லுடா நீ மட்டுமா? மற்றவர்கள் எங்கே ஒளிச்சிட்டாங்க? என பெரியவர் அவனை இரண்டு தட்டு தட்டினார். "நாய்ப்பசங்க திரும்ப காலடி எடுத்து வைச்சீங்க காலை உடச்சு கையில தந்திடுவேன்" என்றுவிட்டு பெரியார் அவனை விட்டுச் சென்றார்.

அவனைக் கண்டு கொதித்தான் சிம்பு. 'ஏண்டா, பெரியவர் வந்ததைக் கண்டுட்டு எனக்குச் சொல்லாமலே ஓடி வந்துட்டே. நீயெல்லாம் ஒரு நண்பன்! டீச்சர் சொன்ன கரடி கதைல வந்த மாதிரி இனிமே என்னோட பேசாதே.

சிம்பு விடுவிடுவென நடக்க, இவன் பின்னால் ஓடினான். "மன்னிச்சிடு சிம்பு.

அந்த நேரத்துல என்னால என்ன செய்யுறதுன்னு தெரியல. அதான் ஓடி வந்துட்டு, பிறகுதான் யோசிச்சேன்..." இவன் கெஞ்சினான், மன்றாடினான், சிம்பு பேசவேயில்லை.

இரண்டு நாள் கழித்து மீண்டும் சிம்புவும் இவனும் "மறப்போம், மன்னிப்போம்" என்ற பாணியில் தோளில் கைபோட்டபடி வந்தனர்.

பெரியவரை நினைத்தபோது அவரது பெரிய மீசைதான் முதலில் நினைவுக்கு வந்தது. ஊரிலேயே பணம் நிறைய வைத்திருப்பவர். கர்வம், திமிர் உடைய மனம். செயல்களும் அந்த மாதிரிதான். இரண்டு இளநீர் பிடுங்கிய குற்றத்துக்காக சிம்புவை பிரம்பால் அடித்த கல் மனம். இவனால் மிகவும் வெறுக்கப்பட்டவர்களில் "பெரியவருக்கு" முதலிடம் கொடுக்கலாம்.

இவனது அப்பாவுக்கு அரசாங்க வேலை காலத்துக்குக் காலம் இடமாற்றம். இதனாலேயே தான் சிம்பு மற்றும் ஊரை விட்டு விலகி வரவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. பெரியவருக்கு சிம்புவைப் பிடிக்காது. தன் வயலில் வேலை செய்து தகராறொன்றில் கோபித்துப் போய் அடுத்த ஊரிலே வேலை தேடிய சிம்புவின் அப்பா மீது கடுங்கோபம். அதை பையன் சிம்பு மீதும் பெரியவர் காட்டுவார்.

நினைவுச் சங்கிலியில் இருந்து அவனை விடுவித்தது பஸ்ஸின் நிறுத்தம். இறங்கியவன் தடுமாறிப் போனான். இருபது வருடத்தில் மாற்றங்கள். பழையன கழிதலும், புதியன புகுதலும் மாற்றங்களை ஏற்படுத்தின, காலத்தின் சுழற்சி.

கடை வீதியில் தென்பட்ட மனிதர்களில் ஒருவரைத் தட்டி சிம்பு பற்றி விசாரித்த போது புன்னகைத்தார். "வாங்கோ" என கையோடு கூட்டிப்போனார். என்ன இது! திகைத்துப் போனான். "பெரியவரின்" பெரிய வீடு முன்பைவிட அழகாக கவர்ச்சியாகவும் இருந்தது.

"இங்கேதான் சிம்பு... வேலை செய்கிறானோ? பெரியவருக்கு அவனை ஆகாதே! சிம்பு படிக்கலியா? தொழில் ஏதும் தேடிக்கவில்லையா? இடைக் காலங்களில் விட்டுப்போன தொடர்பு. எதுவுமே சரியாத் தெரியலையே!" மனதுக்குள் எண்ணங்கள் பலவிதம்.

சிம்புதான் விலையுயர்ந்த கருங்காலி நாற்காலியில் உட்கார்ந்தபடி பக்கத்தில் "பெரியவரின்" ஒரே மகள் ராணி. உருண்டோடிய காலங்களில் சிம்பு சொன்ன கதை வியப்பில் ஆழ்த்தியது. நோயில் நொடிந்து வைத்தியச் செலவில் செல்வம் கரைய "பெரியவர்" தராதரம் இறங்கி, இறந்துபோக, படித்து உரிய தொழில் செய்து பணம் சேர்த்து சிம்பு பெரியவர் மகளைக் கைபிடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

"எப்படி இருந்தவங்க
இப்படி ஆயிட்டாங்க..."

**ம. சிந்தனைக்குமரன்**
கலைப்பிரிவு – 2013



# நட்புக்காக

அன்றைய காலைப்பொழுது மெது வாக மிளிரத் தொடங்குகின்றது. சூரி யனைக் கண்ட தாமரை மலர்கள் தம் காதலனின் வருகையால் மெதுவாக மிளிர ஆரம்பிக்கின்றன. மாதா கோயில் மணி யோசை மாலாவின் செவிப்பறையைத் தட்டுகின்றது. அப்போது தான் அவளது தாயும் மாலா மாலா! நேரம் காலை ஆறாகப்போகுது எழும்பு என்ற அவளது அம்மாவின் குரலும் அவளது காதிற்குள் கேட்கவே செய்கின்றன. ஆனாலும் மாலா படுக்கையை விட்டு எழவே இல்லை. எதையோ தொலைத்தவளாய் படுக்கை யில் இருந்தே சிந்திக்கிறாள். இத்தனைக் கும் இடையில் இவளது இரு கண்களாலும் கண்ணீர் வடிந்து கொண்டே இருக்கிறது. காரணம் இரு நாட்களுக்கு முன் நடந்த அந்தச் சம்பவம் அவளை தினம் தினம் சுட்டுக்கொண்டே இருக்கிறது. அவள் அதைத் திரும்பவும் மீட்டுப் பார்க்கிறாள்.

அன்றைய தினம் வெள்ளிக்கிழமை மாலா தன் நண்பியான நிஷாந்தினி யுடன் மாதாகோயிலுக்குச் சென்றுவிட்டுத் திரும்பிவரும் வழியில் தான் அந்த அதிர்ச்சியான சம்பவம் ஏற்பட்டது. ஆம் அந்தச் சம்பவம் வேறொன்றும் இல்லை. நிஷாந்தினிக்கு ஏற்பட்ட விபத்தும், அவள் அதே இடத்தில் உயிரிழந்தமையும் தான் இந்த இழப்பு. இவளைப் பெரிதும் துன் புறுத்தியது. ஏனெனில் இவர்கள் இருவரும் பிறந்தது தனியாக இருந்தாலும் அவர்கள் இருவரும் சேர்ந்திருந்த நேரங்கள் அதிகம். இவர்கள் இருவரும் நட்புக்கே இலக்கணமாகத் திகழ்ந்தனர். எந்த ஒரு செயலிலும் இருவரின் செயற்பாடுகளும் ஒன்றாகவே திகழ்ந்தது. இவ்வாறிருக்கை யில் இவர்கள் இருவரும் கல்வி கற்கும் மாணவியர்களாவே இருந்தனர். இவர்கள் இருவரும் ஒரே பாடசாலையிலேயே கல்வி கற்றனர். ஒரே பாடங்களையே கற்றனர். இவர்கள் கல்வியில் சிறந்த மாணவர்களாகவே காணப்பட்டனர். கல்வியில் இவர்களை வெல்ல யாருமே இல்லை. இவ்வாறு தான் இவர்களது அழகிலும் கூட.

இவ்வாறு இருக்கையில் இவர்களது எதிர்கால இலட்சியம் தாங்கள் இருவரும் ஒரு வைத்தியராக வரவேண்டும் என்பதே. இவர்களது இலட்சியத்தை நிறைவேற்று வதற்காக இருவரும் அயராது கல்வி கற்றனர். இவர்களைப் பார்க்கும்போது ஏனைய மாணவர்களுக்குப் பொறாமையே ஏற்படும். எல்லாம் இவர்கள் இருவரினதும் ஒற்றுமையினாலும், இவர்களது கல்வி நடவடிக்கையினாலும் தான். எத்தனையோ முறை இவர்களது நட்பைப் பிரிக்க அவர்களது ஏனைய நண்பிகள் முனைந்தும் அவர்களால் பிரிக்கவே முடியவில்லை. அவ்வாறு அவர்களைப் பிரித்துப் பார்க்க நினைக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் அவர்களது நட்பு ஏணியில் பட்டு உயருமே தவிர பாம்பில் பட்டு கீழிறங்காது. இவ்வாறாக இவர்களது நட்பை எவராலும் பிரிக்கமுடியாது இருந்தப்போ நிஷாந்தினி யின் இறப்பு அவர்கள் இருவரையும் பிரித்துவிட்டது.

இத்தனைக்கும் இடையில் நிஷா இறந்ததை மாலாவால் நம்பவே முடிய வில்லை. அவளது நண்பியின் இழப்பைத்

தாங்கமுடியாததாலோ என்னவோ மாலா எந்த நேரமும் நிஷாவைப் பற்றியே கதைத்துக் கொண்டிருப்பாள். மாலா விற்கு நிஷா இறந்தது கூட மறுநாள் தான் தெரியும். ஏனெனில் சம்பவம் நடந்த இடத்தில் மாலா மயக்கம் அடைந்து விட்டாள். அவளது மரணத்தால் அவளது குடும்பம் வேதனைப்பட்டதை விட மாலா வேதனைப்பட்ட சந்தர்ப்பமே அதிகம். நிஷா இறந்து இரண்டு நாட்கள் ஆகி விட்டாலும் மாலாவிற்கு அவள் இறந்து இரண்டு நிமிடங்கள் ஆகியது போலவே தோன்று கின்றன.

ஆம் இப்படியே படுத்தபடுக்கை யிலேயே நிஷாவின் நினைவுகளை மீட்டுப் பார்த்தவண்ணம் இருக்கிறாள். அப்போது தான் திரும்பவும் அவளது அம்மா மாலா மாலா எழும்பிப் படியணை. உனக்காக இல்லாவிட்டாலும் நிஷாக்கா கவாவது படியணை உன் இலட்சியத்தை நிறைவேற்றாவிட்டாலும் அவளது இலட்சியத்தையாவது நிறைவேற்றி வை. இதுதான் நீ உன் நட்புக்கு அளிக்கும் சமர்ப்பணம். தாயின் வார்த்தைகளைக் கேட்டவன் தன் கண்களில் இருந்து பெருக்கெடுத்த கண்ணீரைத் துடைத்து விட்டு எழுகின்றாள். கட்டிலை விட்டல்ல, அவளது கவலையையும் எறிந்துவிட்டு எழுகின்றாள். இப்போது முடிவெடுக் கின்றாள் தான் ஒரு வைத்தியராக வரவேண்டும் என்று. இனி அவளது செயற்பாடுகளும் அவளுக்காக அல்ல, அத்தனையும் நட்புக்காகத் தான்.

**க. விதூஷனா**
கலைப்பிரிவு 2013



அறியாமை வெட்கப்படவேண்டிய ஒன்றுதான். ஆனால் அறிந்துகொள்ள விருப்பமில்லாமை அதைவிடப் பெரிய வெட்கக்கேடாகும்.

**- பெஞ்ஜமின் ஃபிராங்ளின்**

# கண்ணாடி

ஒரு பண்ணையாளரிடம் விகடகவி ஒருவர் இருந்தார். அவ்வப்போது விகடகவியை மட்டந்தட்ட முயன்று தானே மாட்டிக்கொள்வார் இந்தப் பண்ணையாளர்.




ஒருநாள் பண்ணையாளர் அறையில் அவர் உடுத்திருந்த பழைய ஆடைகளும், அவர் மகன் உடுத்திருந்த பழைய ஆடைகளும் பெரிய பொதியாகக் கட்டி ஒரு ஓரமாக வைக்கப்பட்டிருந்தது.

பண்ணையாளர் அந்த மூட்டையைக் கழிவறையில் கொண்டு போடுமாறு விகடகவியிடம் கூற, அவரும் அந்த மூட்டையைத் தன் முதுகில் தூக்கிக்கொண்டு நடக்க ஆரம்பித்தார்.

அதைப் பார்த்து பண்ணையாளர் தன் மகனிடம் "இப்போது விகடகவி ஒரு கழுதை பொதியைச் சுமக்கிறார் இல்லையா...?" என்று கேலியாகச் சொன்னார். அதற்கு விகடகவி, "இல்லை இல்லை... இரண்டு கழுதைங்க பொதியைச் சுமக்கிறேன்..." என்று பண்ணையாளரையும் அவர் மகனையும் நக்கலாகப் பார்த்துக்கொண்டே நகர்ந்து விட்டார்.

**ம. சிந்தனைக்குமரன்**
கலைப்பிரிவு – 2013

## Black Light

மின்காந்த திருசியத்தில் உள்ள கட்புல ஒளியின், வீச்சுத் தவிர்ந்த கட்புலனாகா மின்காந்த அலைகள் பிரதானமாக UV / IR கதிர்களைக் குறிக்கும்.

செய்முறையில் அமைக்கப்படும் கரும் ஒளி (Black light) முதல் UV ஆகும். இது ஊதா நிறமுடையதாத் தோன்றும். உண்மையில் இங்கு UV வீச்சில் உள்ள கதிர்ப்புக்கள் மிக அதிகமாகவும், ஊதா நிறம் சார்ந்த கட்புலப்பகுதி மிகவும் சொற்ப அளவும் உருவாகுவதனாலேயே இது ஊதா நிறமுடையதாகத் தோற்றும். உண்மையில் முதல் பிறப்பிக்கும் UV கதிர்களை அவதானிக்க முடியாமல் இருக்கும். இதனைக் கண்டுபிடித்தவர் Willium H.Byler.

# வாயால் வந்த வம்பு



வாயை வைத்துக்கொண்டு சும்மா இருக்கனும் என்று பெரியவங்க சொல்வதுண்டு. அது எப்படி வாயை வைத்துக் கொண்டு சும்மா இருக்கமுடியும்?

பேசவேண்டும், இல்லாவிட்டால் சாப்பிடவேண்டும். இவை இரண்டில் ஏதாவது ஒரு வேலையை வாய் செய்து கொண்டு தான் இருக்கும். இது நமது பழக்கம். இருந்தாலும் பெரியவர்கள் பேச்சைக் குறைத்துக்கொள் என்று சொல்லுவாங்க. நாம் எப்போது தான் பெரியவர்கள் சொன்னதைக் கேட்கின்றோம். அவை கூறியவற்றுக்கு மாறாகத் தான் செய்வோம்.

பேச்சையும் குறைத்துக் கொள்...!
சாப்பாட்டையும் குறைத்துக் கொள்...!
உடம்பும் நன்றாக இருக்கும், மனசும் நன்றாக இருக்கும். இது தான் பெரியோர் கூறும் அறிவுரை.

மனிதனுக்கு இரண்டுவிதமான பலவீனங்கள் உள்ளன. ஒன்று சும்மா இருக்கவேண்டிய நேரத்தில் பேசுவது, மற்றொன்று பேசவேண்டிய நேரத்தில் சும்மா இருப்பது.

பேச்சு பெரியது தான். ஆனால் மௌனம் அதைவிடப் பெரியது. "நிதானம் அவதானம் மிகவும் எமக்குப் பிரதானம்" இதை விளக்க ஒரு வேடிக்கையான கதை...

ஓர் ஊரிலே ஒரு புதிய பாலம் கட்டினர். அதைத் திறந்து வைப்பதற்கு ஒரு பெரிய விழா ஏற்பாடு செய்தார்கள். அமைச்சர்கள், அதிகாரிகள், பொது மக்கள் எல்லோரும் வந்திருந்தார்கள்.

குறுக்கே ஒரு ரிபனைக் கட்டினார்கள். அமைச்சர் அதை வெட்டி போக்குவரத்தை ஆரம்பித்து வைத்தார். முதலில் அவருடைய கார் போனது அதைத் தொடர்ந்து அதிகாரிகளின் கார்கள், அதன்பிறகு பொதுமக்களின் வாகனங்களும் சென்றன.

போக்குவரத்து கோலாகலமாக ஆரம்பமானது. அந்த விழாவில் ஒரு பரிசுத் திட்டம் அறிவித்தனர். அதாவது நூறாவதாக வரும் வாகனத்திற்கு (10,000/-) பண முடிப்பு வழங்குவதாகத் திட்டம். போக்குவரத்துத் துறை அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் எல்லோரும் ஒவ்வொரு வாகனமாக எண்ணிக்கொண்டே வருகிறார்கள்.

நூறாவது கார் வந்தது. ஓட்டிக்கொண்டு வந்தவரைக் கீழே இறங்கச் சொல்லி பணமுடிப்பைக் கொடுத்தனர். எல்லோரும் கைதட்டினர். அதன் பின் ஓர் அதிகாரி அவரிடம் "இந்தப் பணத்தைக் கொண்டு



என்ன செய்யப் போகிறீங்கள்?" எனக் கேட்டார்.

அதற்கு அவர் அமைதியாக "முதலில் டிரைவிங் லைசென்ஸ் வாங்கவேண்டும்" என்றார். அதிகாரிகளுக்கு அதிர்ச்சி. "இந்த ஆள் லைசென்ஸ் இல்லாமலா வண்டி ஓட்டி வருகிறார்?"

காருக்குள் உட்கார்ந்திருந்த அவருடைய மனைவி நிலைமையைப் புரிந்து கொண்டார். கணவனைக் காப்பாற்ற, "ஐயா அவர் சொல்வதை நம்பாதீர்கள், அவர் குடிபோதையில் இருக்கும்போது இப்படித் தான் ஏதாவது உளறுவார்" என்றார்.

அதிகாரிகளுக்கு மேலும் அதிர்ச்சி. இவன் குடித்துவிட்டு வேறு வண்டி ஓட்டுகிறானா?"

காருக்குள் அவனுடைய அப்பா இருந்தார். அவருக்கும் காது சரியாகக் கேட்காது. ஏதோ சிக்கல் என்று புரிந்து கொண்ட அவர் மெதுவாக "இதற்கு தான் அப்போதே சொன்னேன் ரோட்டில நிறுத்தியிருந்த காரைத் திருடாதே என்று... கேட்கவில்லை. இப்போது மாட்டிக்கொண்டு முழிக்கிறான் என்றார்.

அதிகாரிகளுக்கு மேலும் அதிர்ச்சி.

"ஓ... இது திருட்டுக் காரா...?"

வாயை வைத்துக்கொண்டு சும்மா இருக்காததால் தான் இவர்கள் வம்பில் மாட்டிக்கொண்டனர்.

அதனால் பேசவேண்டிய நேரத்தில் பேசவேண்டும். சும்மா இருக்கவேண்டிய நேரத்தில் சும்மா இருக்கவேண்டும்.

"கண் கெட்ட பின்னால் கலர் ரீவி வேண்டி என்ன பயன்"?

சி. குமரன்
கலைப்பிரிவு – 2013



நீங்கள் ஒரு நேர்மையான மனிதராக ஆகிவிடுங்கள், உலகில் ஒரு போக்கிரி குறைந்துவிட்டான் என்று நீங்கள் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்.

– தாமஸ் கார்லைல்

உலகிலுள்ள மிகச் சிறந்த, மிக அழகான பொருள்களைக் காணமுடியாது. தொட்டுணரக்கூட முடியாது. அவற்றை இதயத்தால் உணர வேண்டும்.

– ஹெலன் கெல்லர்

# கிடுகுவேலி

அந்திமாலை நேரம். கதிரவன் தன் கடமை நேரம் முடிந்து புறப்பட்டுவிட்டான். வழியில் சந்திரனையும் சந்தித்து உசாவிவிட்டுப் பின் சமுத்திராதேவியின் மடியில் மெல்லப் படுத்துறங்கினான். வானவரும் மண்ணவரும் தத்தமது கடமைகளைச் செய்தே ஆகவேண்டும். அதற்கென்று நேர காலங்களும் உண்டு.

ஆனால் கண்ணுச்சாமியை மட்டும் ஏன் இன்னும் காணவில்லை. மனைவி பாக்கியம் பலவாறு சிந்தித்தவாறே குடிசைக்கு விளக்கேற்றிவிட்டு வாசலுக்கு வந்தாள். பின் குழந்தை ராமு அழும் சத்தம் கேட்கவே உள்ளுக்குள் சென்றாள். ஏதோ அரவம் கேட்க மீண்டும் வெளியே வந்து நோக்கினாள். அங்கு தூரத்தே அந்தக் கிடுகுவேலி ஒழுங்கையைத் தாண்டி விரைந்து கொண்டிருந்தான் கண்ணுசாமி. அவனது வலக்காலில் தென்பட்ட காயத்திலிருந்து வெளிப்பட்ட குருதித் துளிகள் மெல்லப் புற்தரையை முத்தமிட்டன. அவை செக்கச் சிவந்த சூரியனைப் போலத்தான் காட்சியளிக் கின்றன. அவன் கண்கள் சிவந்திருந்தன. அவை கூட செவ்வானத்தை ஒத்திருந்தன.

"ஐயோ!... என்னுங்கோ நடந்தது? காலில இரத்தம் கசியுது". பாக்கியம் பதறித்துடித்து விசாரித்தாள்.

"உந்தச் சனியன் பிடிச்ச கிடுகுவேலி யின்ர தடி குத்திப் போட்டுது. நீ போய் கற்பூரத்தில காய்ச்சின எண்ணையைக் கொண்டு வா".

பாக்கியம் அவனுக்கு வீட்டு வைத்தியம் பார்த்தாள். கண்ணுசாமி மிகவும் களைப் படைந்திருந்தான். பாக்கியம் அவனுக்கு மத்தியானச் சோற்றையும் கறியையும் சேர்த்துப் பரிமாறினாள். சாப்பிட்டு விட்டுத் தூங்கச் சென்றனர். கண்ணுச்சாமி தனக்குப் பக்கத்துப் பாயில் படுத்துச் சயனித்துக் கொண்டிருந்த ராமுவின் தலைமயிரை மெதுவாகக் கோதிவிட்டான்.

"என்ர ராமுக்குஞ்சு! நித்திரை கொள்ளு றியாடா" குழந்தையைத் தழுவினான்.

"ராமுவுக்கு அங்கர்ப் பால்மா வாங்கவேணும். பால்மாப் பெட்டியின்ர விலையும் எகிறிக் கொண்டே போகுது. எல்லா அத்தியாவசியச் சாமான்களின்ர விலை நிலைப்பாடும் இப்பிடியாகத்தான் கிடக்குது. குழந்தையின்ர முதலாவது "பேத் டே" யப் பற்றியும் இப்பவே கொஞ்சம் யோசிச்சுக் கொள்ளுங்கோ". பாக்கியம் அவனுக்கு ஞாபகமூட்டினாள்.

கண்ணுசாமியும் அவளும் காதலித் துத்தான் கல்யாணம் செய்திருந்தார்கள். இருவீட்டாரும் முதலில் எதிர்த்தார்கள். அவர்களையும் மீறி இவர்கள் திருமணம் முடித்துக் கொண்ட பின்னர் சம்மதித்து அடங்கிவிட்டார்கள். இருவரும் தனிக் குடித்தனம். பாக்கியத்தின் பெயரிலிருந்த ஒரு சிறிய நிலத்தில் செங்கற்களால் ஒரு குடிசை வீடுதான் கட்ட முடிந்தது. கண்ணு சாமி தனது முயற்சியால் வீட்டுச்சூழலை அழகுபடுத்தி குடும்ப மகிழ்ச்சிக்கு வித்திட்டான். பண்பும் பாசமும் அவர்களின் இல்வாழ்க்கையின் இரு பெரும் காவ லர்களாயின. பணம்தான் சிறிது எதிர்ப்பைக் காட்டியது. இதனாலென்ன, பணத்தைத்தான் எப்போதும் நம் வசப்படுத்திக் கொள்ளலாமே!

அவர்களது உண்மைக் காதல் வாழ்க்கையின் அத்தாட்சியாகப் பிறந்தான் குழந்தை ராமு. அவன் இப்பொழுது ஆறுமாதக் குழந்தை. கண்ணுசாமியின் சீவனோபாயத் தொழில் லாண்ட் மாஸ்ரர் ஓட்டுவது. லாண்ட் மாஸ்ரர் என்ற சொல்லின் தமிழ் வடிவம் அவனுக்கே தெரியாது. அவனுக்குப் படிப்பறிவு குறைவாக இருக்க லாம். பாக்கியத்துக்குச் சிறிது கல்வியறிவு உண்டு. அவனது வருமானத்தில் வீட்டுத் தேவைகளை ஓரளவுக்கு நிறைவேற்றக் கூடியதாக இருந்தது. ஆனால் சேமிக்கத்தான் கொஞ்சம் கஷ்ரமாக இருந்தது.

மறுநாள் விடிந்தது. கண்ணுசாமி அதிகாலையிலேயே எழுந்து வேலைக்குப் புறப்படத் தயாரானான். பாக்கியம் கொடுத்த தேநீரை அருந்தினான்.

குடிலைவிட்டு வெளியேறி மெல்ல அந்த ஒற்றையடிப் பாதையைக் கடக்க முற்பட்டான். இம்முறை அந்தக் கிடுகு வேலி முட்கள் தனக்குக் குத்தாமல் இருக்கவேண்டுமென்று நினைத்துக் கொண்டு நகர்ந்தான்.

இந்த ஒற்றையடிப் பாதையால் போய்வருவது கஷ்ரமாகத்தான் இருக்கிறது. பாதை மருங்காகக் கிடக்கும் அந்தப் பத்தடிப் பரப்பு நிலத்தை மட்டும் வாங்கிவிட்டால் நன்றாகத்தான் இருக்கும். தனது லாண்ட் மாஸ்ரரையும் பக்கத்து வளவுப் பனைமரத் தோப்பின் கீழ் நிறுத்தாமல் தனது குடிசை வாசலிலேயே கொண்டுவந்து நிறுத்தி விடலாம் என்றெல்லாம் கனவு கண்டான்.

நிலத்துக்குச் சொந்தக்காரரான பொன்னப்பு முதலியாரிடம் கேட்டுப் பார்த்துவிட்டான். அவர் ஆரம்பத்தில் நாற்பதினாயிரம் தான் சொன்னவர். கண்ணுசாமியும் காணி வாங்கும் ஆசை யில் கஷ்ரப்பட்டு மிச்சம் பிடித்து காசு சேமிக்கத் தொடங்கினான். ஆனால் இப்ப மீள்குடியேற்றம், சுற்றுலா என்றெல்லாம் சனம் வருகுதென்று கூறித் தொண்ணூறா யிரம் ஆக்கிவிட்டார். ஆனால் அவ்வளவு பணம் சேர்ப்பதென்பது அவனுக்கு மிகக் கடினம் தான். அவனும் பாக்கியமுமாக பலமுறை குறைத்துக் கேட்டுப் பார்த்து விட்டார்கள். ஓரிருமுறை இருவரும் அவரின் வீட்டுப் படியேறிக் கூட வினாவி விட்டார்கள். ஹூ ஹூம்.... முடியவில்லை. பணக்காரர்களுக்குத் தானாம் பணத்தின் மீது அதீத ஆசையாம். கண்ணுசாமி யாரோ கூறக் கேள்விப் பட்டிருக்கிறான்.

இப்பொழுது அவன் தனது லாண்ட் மாஸ்ரரை அண்மித்தான். பின் பெட்டியில் பனம் பழம் விழுந்து சிதைந்து காணப்பட்டது. அவற்றை அப்புறப்படுத்திப் பெட்டியைச் சுத்தப்படுத்தினான். பின் தொழிலுக்குப் புறப்பட்டான்.

காலக் கடிகாரம் எவர் வழிப்படுத்த லும் இன்றிச் சுழன்று கொண்டிருந்தது.

அன்றும் வழமைபோல கண்ணுசாமி தொழில் முடிந்து வீட்டுக்கு வந்து கொண்டிருந்தான். ஒற்றையடி வீதியைத் தாண்டித் தன் இருப்பிடம் திரும்ப முற் பட்டான். அப்போது அந்தப் பத்தடி நிலப் பரப்புக்கு அருகே நோட்டமிட்டான். அதை யும் சற்றுத் தாண்டியிருந்த பொன்னப்பு ஐயாவின் தோட்டத்தில் அவரின் தனயன் சங்கரன் மண்ணைக் கொத்தி வேலை பார்த்துக் கொண்டிருந்தான். இதனைக் கண் போக்குக்காய் நோட்டமிட்ட கண்ணு பின் தன் வீடு நுழைந்துவிட்டான்.

சிறிது நேரம் கழிய மீண்டும் அவன் ஏதோ தேவைக்காய் தனது "தொழில் மூலத்தை" நோக்கித் திரும்பவே எழு மாறாக மீண்டும் பொன்னப்புவின் நிலப் பக்கம் நோக்கித் தலையைச் சுழற்ற அங்கே சோலிபார்த்துக் கொண்டிருந்த சங்கரனைக் காணவில்லை. ஆனால் அப்பக்கமாக முனகல் ஒலியொன்று மட்டும் கேட்டது. கண்ணுசாமி தன் விழிகளால் கூர நோக்கினான். அங்கே சங்கரன் வாழை மரங்களுக்கிடையே விழுந்துகிடந்து அலறிக் கொண்டிருந் தான். அவனது இடது காலிலிருந்து செந் நீர் பாய்ந்து கொண்டிருந்தது. கண்ணு உடனேயே வேலியைத் தாண்டி அவனை நோக்கி ஓடினான். அங்கே வேலைக் கவனயீனத்தால் மண்வெட்டி சங்கரனின் காற் பாதத்தைக் கொஞ்சம் ஆழமா கத்தான் பதம் பார்த்திருந்தது.

மெழுகிலும் அதிகதியில் உருகும் உள்ளம் கொண்ட கண்ணுசாமி பதறித் துடித்தான். சங்கரன் வைத்தியசாலையின் சேர்க்கப்பட்டான். சங்கரனைப் பரிசோதித்த வைத்திய நிபுணர்கள் பின்னர் அவனை நோக்கி வந்தனர்.

"எஸ்கியூஸ் சேர்!"

கண்ணுசாமி எழுந்து நின்றான்.

"அவருக்கு உடனேயே ஒப்பிரேசன் செய்யவேணும். ஏனென்டா கீ இஸ் வெரி எமேயன்சி. அதுக்குக் கொஞ்சக் காசு செலவாகும்".

உழைத்து உழைத்து கண்ணுவின் உடல்தான் இறுகியதே ஒழிய மனமல்ல.

ஒப்பிரேசனுக்கும் மருந்துகளுக்கு மென்றே அவன் சேமித்திருந்த நாற் பத்தையாயிரம் ரூபா பணமும் செல வானது. விசயம் அறிந்த பொன்னப்பு முதலியாரின் கூட்டுக் குடும்பமே ஆஸ்பத்திரியை நோக்கிப் படையெடுத்து வந்தது. கண்ணுசாமி வீட்டுக்கு வந்து விட்டான்.

கொஞ்ச நாட்களில் சங்கரன் நல மடைந்து வைத்தியசாலையிலிருந்து திரும்பிவிட்டதாக அறிந்தான். பொன்னப்பு முதலியாரின் துணைவியார் தனது வீட்டுக்கு வந்து தான் வைத்திய சாலை யில் செலவு செய்த பணத்தைக் கொடுத்து விட்டுப் போனதைக்கூட பாக்கியம் அவனுக்குச் செப்பியிருந்தாள்.

அன்றும் என்றும் போல சாயங் காலப் பொழுதுதனில் வேலைகளை முடித்துக் கொண்டு லாண்ஸ்ட் மாஸ்ரரை அதன் தரிப்பிடத்தில் நிறுத்திவிட்டு அந்த ஒற்றையடிப் பாதையைக் கடக்க முற் பட்டான். அங்கே... பாதையோரக் கிடுகு வேலித் தடிகளும் பெரும்பாலானவை பத்தடி நிலத்தையும் தாண்டிப் பின் னோக்கி நடப்பட்டிருந்தன. அவனக்குப் பெரும் ஆச்சரியம். சுற்றும் முற்றும் நோக்கினான். யாரையும் காணவில்லை தான். ஆனால் பாதைவழிக் கிடுகுத் தடி களின் அருகாக ஒரு கிழவன் குந்தி யிருந்து எஞ்சிய தடிகளை மெல்லக் கிளப்பி அப்புறப்படுத்திக் கொண்டி ருந்ததைக் கண்டான். கண்ணுசாமி அந்தக் கிழ வனுக்கு அருகே சென்றான். அவரின் முகத்தை உற்று நோக்கினான். அது வேறு யாருமல்ல. பொன்னப்பு முதலியார் தான்.

தலைப்பாகை கட்டியிருந்ததால் தான் அடையாளம் தெரியவில்லையோ அல்லது குண மாறுதல்களினால் தான் என்னமோ?

அவனைக் கண்டதும் அவர் எழும்பிக் கொண்டு தனது கடைவாய்ப் பற்கள் தெரியச் சிரித்துக் கொண்டார்.

"என்ன முதலியண்ணை! வேலியை... அங்க மாத்திறியள்?"

"நீ என்ர மகனைக் காப்பாற்றிய உதவிக்கு இது பிராயச்சித்தம். இந்தப் பத்தடிப் பரப்பை நான் உனக்கே தந்திடுறன்" முதலியார் பதிலளித்தார்.

"அந்தக் காசை ஏற்கனவே உங்கட மனைவி எங்கட வீட்டுக்கு..." இழுத்தான் இவன்.

"அது நீ செலவழிச்ச பணம்தான்! இது உனக்கு நான் செய்கிற கைம்மாறு" சொல்லும் போது அவரின் கண்கள் கலங்கின. சொல்லிவிட்டு அங்கு நிற்காமல் நடையைக் கட்டத் தொடங்கினார்.

அவன் கால்களும் ஏனோ இவரைப் பின்தொடர்ந்து சென்றன. தனது லாண்ட் மாஸ்ரருக்கு அருகாக வந்ததும் நின்று விட்டான். அவன் கண்களிலிருந்து விழுந்த கண்ணீர்த் துளியொன்று அந்த வாகன இஞ்சினில் பட்டுத் தெறித்தது. அது அழுகையாக இருக்குமோ? இல்லவே இல்லை. அது ஆனந்தக் கண்ணீர்! அவன் மனமெல்லாம் ஆனந்தம்.

**வி. திவாகரன்**
தரம் - 12
உயர்தர விஞ்ஞானப்பிரிவு

எல்லோரிடமும் இணக்கமாக இருங்கள். ஆனால், ஒரு சிலரிடம் மட்டும் நெருக்கமாக இருங்கள். உங்களது முழு நம்பிக்கையை அவர்களிடம் வைக்கும் முன், அந்த ஒரு சிலரை நன்றாகச் சோதித்துப் பாருங்கள். உண்மையான நட்பு என்பது மெதுவான வளர்ச்சி யுடைய ஒரு செடியாகும். அது முழு வளர்ச்சியைப் பெறு வதற்கு முன்னால் துன்பத்தின் அதிர்ச்சியை அனுபவிக்கவும் தாங்கவும் வேண்டும்.

**- ஜோர்ஜ் வாஷிங்டன்.**



# கல்விக் கடலின் சாதனை முத்துக்கள்

க.பொ.த (சா/த) 2005



செல்வி அ. ரேகா

9A B


க.பொ.த (சா/த) 2006



செல்வி த. வைஷ்ணா

10A

க.பொ.த (சா/த) 2007



செல்வி சி. மாதுமை

10A


க.பொ.த (சா/த) 2007



செல்வன் க. விஷ்ணு

10A

க.பொ.த (சா/த) 2008



செல்வி செ. சங்கீதா

8A B

க.பொ.த (சா/த) 2009



செல்வி த. சரணர்யா

5A 2B 3C


க.பொ.த (சா/த) 2010



செல்வி சி. துளசி

9A

க.பொ.த (சா/த) 2011



செல்வி வி. திவாகரன்

8A B

க.பொ.த (உ/த) 2005



செல்வி ஞா. துஷ்யந்தினி

3A

க.பொ.த (உ/த) 2005



செல்வி க. கஜாளினி

3A

க.பொ.த (உ/த) 2006



செல்வன் க. ஹரிகரசுதன்

3A


க.பொ.த (உ/த) 2007




செல்வன் நா. பாஸ்கரன்

3A

# கல்லூரி மன்றங்கள் - 2012




தமிழ் மன்றம்




ஆங்கில மன்றம்




கணித விஞ்ஞான மன்றம்



இந்து மா மன்றம்




சுகாதார மன்றம்




கிறிஸ்தவ மன்றம்




உளநல மன்றம்




விவசாய மன்றம்




உயர்தர மாணவர் மன்றம்




சமூக விஞ்ஞான மன்றம்




கலை வர்த்தக மாணவர் மன்றம்



கவின்கலை மன்றம்



மனைப் பொருளியல் மன்றம்




மேலைத்தேய வாத்திய அணி




ஆண் சாரணியம்




பெண் சாரணியம்




போக்குவரத்து கண்காணிப்புக் குழு



உள்ளகப் பயிற்சி ஆசிரியர்கள்




ஆங்கிலமொழி மூலக் கல்விப் பிரிவு



பாடசாலை அபிவிருத்திச் சங்கம்




கல்விசாரா அலுவலர்கள்




மாவட்டமட்ட மெய்வல்லுநர் போட்டியாளர்கள் - 2012




17 வயதின்கீழ் வலைப்பந்தாட்ட அணி



15 வயது உதைபந்தாட்ட அணி




சதுரங்க கழகம்



19 வயது உதைபந்தாட்ட அணி



19 வயதின்கீழ் வலைப்பந்தாட்ட அணி



15 வயது துடுப்பாட்ட அணி



19 வயதின்கீழ் மேசைப்பந்தாட்ட அணி



15 வயதின்கீழ் மேசைப்பந்தாட்ட அணி

# வானியலின் வளர்ச்சிப் படிகள்

பௌதிகம், கணிதம், இரசாயனம் முதலிய வேறுபட்ட விஞ்ஞானத் துறைகளுள் வானியல் அல்லது விண் சாஸ்திரம் என்பது மிகவும் பழைமை வாய்ந்ததாகும். சிறிதளவும் நாகரிக வளர்ச்சி அடையாத பண்டைய மக்கள் இரவும் பகலும் மாறிமாறி வருவதையும், சூரியன், சந்திரன் தோன்றி மறைவதையும் நன்குணர்ந்தனர். குடில்களைக் கட்டியறியாத காலத்தில் திறந்த வெளிகளில் படுத்துறங்கிய புராதனகால மனிதர்கள் தினமும் நட்சத்திரங்களையும் ஏனைய விண்பொருள்களையும் வானில் கண்டு வியப்படைந்தனர்.

திசைகாட்டி, கடிகாரம் என்பன இல்லாத காலத்தில் பகலில் சூரியனைக் கொண்டும் இரவில் நட்சத்திரங்களைக் கொண்டும் திசைகளையும் நேரத்தையும் அறிந்தனர். எல்லா விண்மீன்களையும் ஏனைய விண்பொருள்களையும் வானில் கண்டு வியப்படைந்தனர். சந்திர கிரகணம், சூரிய கிரகணம், வால்வெள்ளி முதலியவை தோன்றினால் இவ்வுலகில் ஏதோ கெடுதி விளையும் என்று எண்ணி மிகவும் பயந்தனர். கிரகங்கள், நட்சத்திரங்கள் முதலான விண்பொருள்களின் அப்போதைய நிலைகள் மக்களின் வாழ்க்கையையே மிகவும் பாதிக்கும் என்றும், அக்காலத்து மக்கள் மிகவும் நம்பியிருந்தனர். பல்வேறு சமய நூல்களிலும் பண்டைய புராணக் கதைகளிலும் இவ் விண்பொருள்கள் இடம்பெற்றிருப்பதையும் நாம் காண்கின்றோம். இவைக்கென ஆலயங்களும் அமைத்து இவற்றைக் கடவுளாக வணங்கியும் வந்தனர்.

இவ்வாறு பழம்பெரும் தன்மை வாய்ந்த வானியலை “விஞ்ஞானக் கலைகளின் அரசி” என வர்ணித்துக் கூறுவர். முன்னைய காலங்களிலே கிரேக்கர்கள், பபிலோனியர்கள், எகிப்தியர்கள், சீனர், இந்தியர் ஆகியோர் இத்துறையில் மிகவும் ஈடுபாடு காட்டினர்.

வானியலைக் கருதும்போது விண்ணில் நாம் காணும் நட்சத்திரங்கள், கிரகங்கள் முதலியவற்றின் அசைவு, அமைப்புத் தன்மை ஆகியவற்றின் அறிவே ஆகும். இதனை விண்ணியல், விண் சாஸ்திரம் என்றும் கூறுவர். நாம் வசிக்கும் பூமியும், இந்தக் கிரகங்களுள் ஒன்றாதலினால் இப்பூமியைப் பற்றிய புவியியல், புவிப் புள்ளியியல் ஆகிய துறைகளும் இங்குள்ள தாவரங்களைப் பற்றிய தாவரவியலும், உயிர்களைப் பற்றிய உயிரியலும், பிற துறைகளும் விண்ணியலுள் அடங்கும். இவை பற்றிய அறிவு ஓரளவு நமக்கு இருந்தால் தான் விண்ணில் தெரியும் கிரகங்கள், நட்சத்திரங்களின் அசைவு, அமைப்புத் தன்மை முதலியனவற்றை நன்கறியலாம்.

வானியலானது ஏனைய அறிவுத் துறைகளை எல்லாம் உள்ளடக்கிய ஒரு பரந்த துறையாகும். நாம் சாதாரணமாகப் பார்க்கும்போது நமக்குத் தெரிவது போல ஆதிகால மக்களும் பூமி தட்டையானது என்றும் பூமியே அகிலாண்டத்தின் மத்தியில் இருக்கிறது என்றும், நட்சத்திரங்களும் ஏனைய விண்பொருள்களும் இருபத்து நான்கு மணித்தியாலங்களுக்கு

ஒருமுறை பூமியை வலம் வருகின்றன வென்றும் நம்பியிருந்ததில் ஒரு ஆச்சரியமும் இல்லை.

பின்னர் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலங்களிலே கிரேக்க நாட்டு ஞானிகளாக அரிஸ்ரோட்டில், தொலமி ஆகியோர் பூமி தட்டையானதல்ல, உருண்டை வடிவானது என்று ஆராய்ச்சி மூலம் கண்டறிந்தனர். ஆனால் புவியானது அண்டத்தின் மத்தியிலே அசையாமலிருந்தது என்றே அவர்களும் எண்ணினர். கத்தோலிக்க திருச்சபையும் இம்முடிவே தங்கள் சமய நூல்களுக்கு அமைவானதாகையால் இதுவே சரியான முடிவு எனக் கொண்டனர். பதினான்கு நூற்றாண்டுகளாக இந்தக் கொள்கையே நிலவி வந்தது.

16ம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் போலந்து நாட்டு விஞ்ஞானியான நிக்கலஸ் கொப்பர்நிக்கஸ் என்பவர் பூமி அண்டத்தின் மத்தியில் இல்லை. சூரியனை மையமாகக் கொண்டே எல்லாக் கிரகங்களும் இயங்குகின்றன என்று கூறினார். பின்பு இத்தாலி நாட்டில் உதித்த கலிலியோ கலிலி என்ற விஞ்ஞானி இவரது முடிவை ஏற்றுக் கொண்டு மேலும் பல ஆராய்ச்சிகள் நடத்தி வியப்பான பல உண்மைகளைக் கண்டறிந்தார். இவரே முதன் முதலில் தொலை நோக்கியையும் கண்டறிந்தார். இத்தொலைநோக்கி மூலம் பூமி பற்றிய கொள்கையை பல ஆதாரங்களுடன் சிதறடித்தார். இதன் பின் தோன்றிய ரைக்கோ பிராஹே, கெப்ளர் போன்ற விஞ்ஞானிகள் மேலும் பல ஆராய்ச்சிகள் செய்து கொப்பர்நிக்கஸ், கலிலியோ கலிலி ஆகியோரின் முடிவை நன்கு வலியுறுத்தினர்.

சூரியனைப் பூமி சுற்றிவரும் பாதை இதுவரை எண்ணியிருந்ததுபோல் வட்ட வடிவமானதல்ல என்றும், அது ஒரு நீள்வட்ட வடிவமானது என்றும், இந்நீள் வட்டத்தின் இரு குவியல்களின் ஒன்றிலேயே சூரியன் இருக்கின்றது என்றும் கெப்ளர் துணிந்து கூறினார். இது போலவே ஏனைய கிரகங்களின் பாதைகளும் நீள்வட்ட வடிவானவை என்றும் கண்டறிந்தார்.

1642இல் பிறந்த ஐஸாக் நியூட்டன் என்னும் பிரபல பிரிட்டிஷ் விஞ்ஞானி, பல உரிய உண்மைகளைக் கண்டறிந்தார். இவர் பிரபஞ்சத்தில் உள்ள பொருள்கள் யாவும் ஒன்றை ஒன்று கவருகின்றன என்று அறிந்தார். இதன் பின் தோன்றிய வில்லியம் ஹேர்ஷல் என்னும் பிரிட்டிஷ் விஞ்ஞானி தான் செய்த விஞ்ஞான ஆராய்ச்சிகளின் விளைவாக மேலும் பல உண்மைகளைக் கண்டறிந்தார். இது வரையிலும் எண்ணி இருந்தபடி சூரியன் அண்டத்தின் மத்தியில் இல்லை என்றும் பல்லாயிரக்கணக்கான நட்சத்திரங்களைப் போலவே சூரியனும் ஒன்று என்றும் அவர் கூறினார். தான் செய்த ஒரு தொலைநோக்கியின் உதவியால் 1781ஆம் ஆண்டில் யுறேனஸ் என்ற கிரகத்தையும் கண்டுபிடித்தார். தொலைநோக்கிகளின் உதவியால் நெப்ரியூன், புளூட்டோ என்ற புதிய கிரகங்களையும் சந்திரனின் மேற்பரப்பில் உள்ள மலைகளையும் பெரிய குழிகளையும் விஞ்ஞானிகள் கண்டறிந்தனர். வியாழன், செவ்வாய் ஆகிய கிரகங்களின் உபகிரகங்களையும், சனிக் கிரகத்தையும் சுற்றியுள்ள அழகான வளையங்களையும் பார்த்தனர். எல்லாவற்றிற்கும் மேலாகப் பல்வேறு திசைகளிலும் நெபுலங்கள் என அழைக்கப்

படும் உடுத்தொகுதிகளையும் கண்டு பிடித்தனர். தொலைநோக்கியைக் கண்டு பிடித்தமையானது வானியல் வளர்ச்சிக் கட்டடங்களிலே ஒரு பெரிய திருப்பத்தை உண்டாக்கியதுடன் இத்துறை மிகவும் துரிதமாக முன்னேறவும் காரணமாகியது.

சூரியனிலிருந்து பூமியை அடைய எட்டு நிமிடங்கள் எடுக்கும் ஒளியானது நமக்கு மிகவும் அண்மையிலிருக்கும் அல்பா சென்ரோறி என்னும் நட்சத்திரத்திலிருந்து பூமியை வந்தடைய நான்கு வருடங்களுக்கு மேலாகுமென்றால் மிகவும் அண்மையிலிருக்கும் நட்சத்திரத்தின் தூரம் தான் என்?

அண்மைக் காலங்களிலே கண்டுபிடிக்கப்பட்ட நேரடித் தொலைநோக்கிகளின் உதவியால் வானசாஸ்திரம் மேலும் முன்னேறி இருக்கிறது. தற்காலத்தில் விண்ணில் செலுத்தப்படும் செயற்கைக் கோள்களைக் கண்டுபிடிப்பதற்கும் இவை மிகவும் பயன்படுகின்றன. அண்மைக் காலமாக சோவியத் யூனியன், அமெரிக்கா ஆகிய வல்லரசுகள் விண்வெளிக்கு அனுப்பிய செயற்கைக் கோள்களும் ரொக்கட்டுகளும் மனிதர்களைக் கொண்டும், மனிதர் இல்லாமலும் பல மைல்களுக்கு அப்பால் சென்று பூமியைப் பலமுறை வலம் வந்து பின் பூமியில் இறங்கியதும், சந்திரனுக்குச் சென்று அதன் தரையில் இறங்கி ஆராய்ச்சிகள் செய்து பின் பூமியை வந்தடைந்ததும், சுக்கிரன், செவ்வாய், வியாழன், சனி போன்ற கிரகங்களுக்கு அண்மையில் சென்று அங்குள்ள நிலைமையை ஆராய்ந்தறிந்ததும் அரும் பெருஞ் சாதனைகளாகும்.

இரசாயனம், பௌதிகம் ஆகிய துறைகளில் விஞ்ஞானிகள் தத்தம் ஆய்வுகூடங்களில் இருந்து கொண்டு தங்களுக்குத் தேவையான பொருள்களை வைத்துக்கொண்டு மிகவும் சாவகாசமாகத் தங்கள் ஆய்வுகளை மேற்கொள்வர்.

ஆனால் விண்ணியலாளர்களுக்கு அண்ட சராசரம் முழுவதும் ஆய்வுகூடமாகும். வானில் ஏற்படும் நிகழ்வுகளுக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு தம்மையே அவர்கள் ஆயத்தப்படுத்திக் கொள்ளவேண்டும். 24 மணித்தியாலத்துக்கு ஒருமுறை தன்னைத் தானேயாகவும் 365 1/4 நாட்களுக்கு ஒருமுறை சூரியனையும் சுற்றிவரும் பூமியில் இருந்து கொண்டு விண்ணில் இருக்கும் பொருள்களை நோக்குவது ஒரு களியாட்ட விழாவில் ஓடிக்கொண்டிருக்கும் ஓர் உல்லாச வளையூர்தியில் இருந்து கொண்டு அவ் விழாவிலிருக்கும் பல்வேறு பொருள்களையும் பார்ப்பது போன்றதாகும். இதுவரை பூமியிலேயே இருந்து கொண்டு ஆய்வுகளைச் செய்து வந்த மனிதன் இன்று விண்வெளியில் சென்று ஆராயத் தொடங்கியிருக்கிறான். எனவே வானியல் வளர்ச்சியில் இதை ஒரு முக்கிய படி எனலாம்.

**வி. திவாகரன்**
*தரம் 12*
*விஞ்ஞானப் பிரிவு*

# கருங்குழி (Black Hole)

கருங்குழிகள் அல்லது கருந்துளை என்பன இவற்றின் எல்லைக்குட் செல்லும் ஒளி உட்பட எதுவுமே வெளியேற முடியாத அளவு வலுவான ஈர்ப்புச் சக்தியைக் கொண்டுள்ள அண்டவெளியின் ஒரு பகுதி யாகும். மேற்குறிப்பிட்ட எல்லை நிகழ் வெல்லை எனப்படும். இந்த நிகழ்வெல் லைக்குள் இருந்து பார்க்கக்கூடிய ஒளி அலைகள் போன்ற மின்காந்த அலைகள் கூடத் தப்பி வெளியேற முடியாது என்பதால் உள்ளே நடப்பவை எவற்றையுமே வெளியில் இருந்து அறிந்து கொள்ள முடியாது. இதனாலேயே இதனைக் கருங் குழி என்கின்றனர். கருங்குழிகள் பாரிய நட்சத்திரங்களின் பரிணாமத்தின் இறுதிக் கட்டமாகக் கருதப்படுகிறது. இதற்குக் கன அளவோ, மேற்பரப்போ கிடையாது. ஆனால் இதன் பிரமாண்டமான திணிவு காரணமாக இது முடிவிலியான அடர்த்தி யைக் கொண்டுள்ளது.

Black Hole இனைப் பார்க்கமுடியாது எனினும் இதன் நிகழ்வெல்லைக்கு அப்பால் இருக்கும் பொருட்கள் மீது அவை கொண் டுள்ள தாக்கங்கள் மூலம் அவற்றின் இருப்புப் பற்றி அறிந்துகொள்ள முடியும். எடுத்துக்காட்டாக ஒரு தொகுதி விண்மீன் கள் கருங்குழியொன்றின் ஈர்ப்புக்கு உட்பட்டு அதன் மையத்தைச் சுற்றிவருவது உண்டு. இவ்வாறான விண்மீன்களின் இயக்கத்தை அவதானிப்பதன் மூலம் கருங்குழியின் இருப்பையும் அதன் அமைவிடத்தையும் தெரிந்து கொள்ளலாம். சிலவேளைகளில் கருங்குழிகள் அண்ட வெளியிலிருந்து அல்லது அண்மையில் இருக்கும் விண்மீன்களில் இருந்து வளி மங்களைக் கவர்ந்து இழுக்கின்றன. இவ் வளி மங்கல் கருங்குழிகளை வேகமாகச் சுற்றியபடி உட்செல்லும்போது வெப்பநிலை அதிகரிப்பதனால் பெருமளவு கதிர்வீச்சு வெளிப்படுகிறது. இவற்றை புவியில் உள்ள அல்லது விண்வெளித் தொலைநோக்கிகள் மூலம் உணரமுடியும். இவ்வாறான அவதானிப்புகளின் மூலம் கருங்குழிகள் உள்ளன என்னும் பொது கருத்து அறிவியலாளரிடையே ஏற்பட்டுள்ளது.

இது குறித்த பொதுவான விளக்கங்கள் விடுபடு திசைவேகம் என்னும் கருத்துருவின் அடிப்படையிலேயே கொடுக்கப்படுகின்றன. விடுபடு திசைவேகம் என்பது ஒரு பெரிய பொருளொன்றின் மேற்பரப்பில் இருந்து புறப்படும் ஒரு கலம் அப்பொருளின் ஈர்ப்புப் புலத்தை முழுமையாகக் கடப்பதற்குத் தேவையான வேகம் ஆகும். நியூட்டனின் ஈர்ப்பு விதியின்படி பொருளின் ஈர்ப்புவிசை அதிகரிக்கும்போது அதாவது பொருளின் அடர்த்தி அதிகரிக்கும் போது விடுபடு திசை வேகமும் அதிகரித்துச் செல்லும். இவ்விசை ஒரு குறிப்பிட்ட அளவை அடையும்போது விடுபடு திசைவேகம் ஒளியின் வேகத்துக்குச் சமமாகவோ அல்லது அதனிலும் கூடு தலாகவோ ஆகக்கூடும். ஒளியின் வேகத் திற்கு மிஞ்சிய வேகம் எதுவும் இல்லை. அதைக்கூட Black hole கவர்ந்து இழுக்குமெனின் நமது பூமி Black கோளின் அருகே செல்லுமெனின் புவியைக்கூட அது கவர்ந்துவிடும் எனின், நமது நிலைமை என்னவென்று உங்களுக்கே புரிந்திருக்கும்.


**ருக்மனி**

***2013 கணிதப்பிரிவு***

# தினமும் மூளை வளர்கிறது

மூளை – மனித நரம்பு மண்டலத்தின் தலைமையானதும் அதுதான். மனிதனை ஆட்டிப்படைப்பதும் அதுதான். "ஆளும் வளரணும் அறிவும் வளரணும்" என்பதற் கொப்ப மனிதனின் பாரிய வளர்ச்சியோடு மூளையும் ஒவ்வொரு நாளும் வளரு கிறது. தினமும் மூளை வளர்கிறது. ஒவ்வொரு நாளும் புதிதாக குறைந்தது 10000 செல்கள் (நியுரோன்) மூளையில் பிறக்கின்றன. பிறந்த சில நாட்களிலேயே அவை அழிந்தும் விடுகின்றன. தினமும் செல்கள் பிறந்து பின்பு இறந்தும் போவதால் என்ன பயன்? இதில் மூளை வளருகிறது என்று எப்படிச் சொல்வது? புதிதாய் பிறந்த நரம்பு செல்கள் சாகவிடாமல் அவைகளை நமக்கு பயனளிக்கும் வகையில் மாற்ற ஒரே வழி ஒவ்வொரு நாளும் புதிதாய் பிறக்கும் செல்லுக்கு வேலை கொடுக்க வில்லையெனில் அது செத்துப்போய்விடும்.

எலிசபத் கோல் என்பவர் நரம்பு செல்கள் புதிது புதிதாக மூளையில் பிறக்கிறது என்று கண்டறிந்த பின்னர் நரம்பியலில் பல ஆய்வுகள் அதன் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டன. மூளையில் காதுக் கதுப்புக்கு உள்ளே இருபுறமும் உள்ள "ஹிப்போக்கேம்பஸ்" என்ற உறுப்பில்தான் புதிதாக நரம்பு செல்கள் தினமும் தோன்றுகின்றன என வும் அறியப்பட்டுள்ளது. தினமும் ஆயிரக் கணக்கான நரம்பு செல்கள் உருவாகி



முழு வளர்ச்சியை 14 நாட்களில் அடை கின்றன. இப்படி தினமும் பத்தாயிரம் செல்களாவது முற்றி நினைவுகளை பதித்துக் கொள்ள தயாராய் நிற்கின்றன. அன்றைய தினம் ஏதாவது நினைவில் பதியவேண்டியதாய் இருந்தால் அதற்காக ஒரு சில செல்கள் மட்டும் நிறுத்தி வைக்கப் பட்டு மற்றவை உடனே அழிக்கப்படு கின்றன. எத்தனை செல்கள் தொடர்ந்து நீடிக்கின்றன என்பது கற்றுக்கொள்ளும் அனுபவம், அதன் தீவிரம், அவசரம் ஆகியவற்றைப் பொறுத்தே அமைகிறது. நினைவு பதிவில் ஈடுபடும்போது செயல் களை தவிர மற்றையவை அழிந்துவிடு கின்றன. முதுமை வரும்போது கூடவே மறதியும் மந்த புத்தியும் வந்துவிடும். அவை வராமலிருக்க தினமும் எதை யாவது படிக்க வேண்டும். இன்றைக்கு குறைந்தது நூறு நரம்பு செல்களாவது உங்களுக்குப் புதிதாய் கிடைத்திருக்கும். எப்படி என்றீர்களா? இந்த கட்டுரையை படித்தீர்கள் அல்லவா அதன் வழிதான்.

**S. சங்கீர்த்தனா**
*2012 கணிதப்பிரிவு*

# நவீன உலகமும் மனித வாழ்க்கையும்

நாம் வாழும் இவ்வுலகமானது கடவுளின் படைப்பில் மிகவும் வியக்கத் தக்கதாகும். ஆனால் இன்று நாம் வாழும் உலகம் மிகவும் நவீனமயப்படுத்தப்பட்டு வருகின்றது.

இற்றைக்கு பல ஆண்டுகளுக்கு முன் இருந்த உலகமானது மிகவும் இயற்கைச் செறிவு மிக்கதாகவும் நம் சிந்தையை உறையவைக்கும் அரிய பொருட்களி னாலும் மிகவும் விநோதமான விலங்கி னங்களினாலும் சூழ்ந்து காணப்பட்டது. அவ்வாறான வினோதமான விலங்கினங் களில் மிகவும் முக்கியமானதே மனித இனமாகும். இவ்வினமானது ஆக்கத்தை யும் ஊக்கத்தையும் கொண்டதாகவும் சுறுசுறுப்பானதாகவும் விசித்திரம் வாய்ந்ததாகவும் காணப்பட்டது. ஆனாலும் காலங்கள் பல செல்லச்செல்ல இந்த மனித இனமே தமக்கும் புவிக்கும் எதிரியாக மாறிவிட்டன. அதாவது மனிதனானவன் அவனிடமுள்ள விலைமதிப்பற்ற மூளை யைக் கொண்டு புதிய புதிய ஆக்கங்களை புவியில் தோற்றுவித்தான். இவ்வாறான ஆக்கங்கள் அவனுக்கும் புவிக்கும் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்துவனவாக அமையும் என்பதை அவன் கருத்திற்கொள்ளவில்லை. இவ்வாறு மனிதனின் சிந்தையிலிருந்து தோற்றம் பெற்ற ஆக்கங்களையே நாம் எல்லோரும் விஞ்ஞானமும் தொழில் நுட்பங்களும் என அழைக்கின்றோம்.

விஞ்ஞானத்தின் விந்தைகளில் நாம் பலவற்றை காணலாம். ஆதிகாலத்தில் மனிதன் வெளிச்சத்தை இரவிலே காண்பது மிகவும் கடினமாகக் காணப் பட்டது. ஆனால் இன்று இரவிற்கும் பகலிற்கும் இடையில் வித்தியாசமே இல்லாத அளவிற்கு வந்துவிட்டது. இவ் வாறான காரியங்கள் விஞ்ஞானத்தின் விந்தைகளில் ஒன்றாகவும் நம்மை யெல்லாம் ஆச்சரியத்திற்கு உட்படுத்து பவையாகவும் திகழ்கின்றன.

இவ்வாறாக விஞ்ஞானத்தின் வளர்ச்சியானது புவிக்கும் மனித இனத் திற்கும் நன்மையையே ஏற்படுத்து கின்றன என பலர் நினைக்கின்றனர். உண்மையாகவே மனிதன் இலேசானதும் வேகமானதுமான வாழ்க்கையை வாழ் வதற்கு இது மிகவும் உதவுகின்றது. ஆனாலும் விஞ்ஞானத்தின் விளைவுகள் புவியையும் மனிதனையும் கொஞ்சம் கொஞ்சமாக விழுங்கி வருகிறது என்பது பலருக்குப் புரிவதில்லை. விஞ்ஞானத்தின் தொழில்நுட்பங்களில் மனிதனிடையே அன்பு குறைந்து ஆவேசம் அதிகரிக் கின்றது. அதனாலேயே மனிதன் பலவித மான பாவம் நிறைந்த நரக வாழ்க்கை வாழ்ந்து வருகின்றான். மனிதனை மனிதனே அழிப்பதும் பொருட்களைச் சூறையாடுவதும், போதைப்பொருள் பாவனைகளும், விபச்சாரம் செய்வதும் இன்னும் இவ்வாறான பல பாரியளவு பாவமான வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றான்.

விஞ்ஞானத்தின் வளர்ச்சி காரண மாக புவி இயந்திரமாக்கப்பட்டு வரு கின்றதனால் மனிதனிடம் காணப்பட்ட பழைய வீரங்கள், சுறுசுறுப்புக்கள் என்பன முடக்கப்பட்டுவிட்டன. எனவே

அவன் உருவாக்கிய விஞ்ஞானம் அவனையே முடக்கிவிட்டது. மனிதனைத் தான் பாதிக்கின்றது எனப் பார்த்தால் புவியையும் விட்டுவைக்கவில்லை. விஞ்ஞானத்தையும் அதன் தொழில் நுட்பங்களையும் மனிதன் பாவிக்க புவி வெப்பமடைதல், அமில மழை பொழிதல், வரட்சிகள், ஓசோன் படையில் துவாரம் ஏற்பட்டு புவியில் பெரிதளவு பாதிப்பு இடம்பெறுகிறது.

இவ்வாறாக எந்தவொரு தாக்கத்திற்கும் சமமானதும் எதிரானதுமான மறு தாக்கம் இருப்பது போல விஞ்ஞானத்தின் மூலமும் நன்மைகளும் தீமைகளும் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. மேகத்திலிருந்து பொழியும் நீர் மறுபடியும் ஆவியாகி மேகத்தைச் சென்றடைவது போல மனிதனின் ஆக்கங்கள் மனிதனுக்கே சென்றடைகின்றது. எது எவ்வாறாயினும் புவியில் பல ஏற்றங்கள் மாற்றங்கள் வந்தாலும் தன்னம்பிக்கை மிக்கவர்களாயும் விஞ்ஞானத்திற்கு சவாலாயும் வாழ்ந்து வாழ்க்கையை வெற்றிபெறுவோமாக!

***"மாற்றம் என்பதே உலகில் மாற்றமில்லாதது"***

**ஏ. சஞ்ஜீவ்ராஜ்**
*2013 கணிதப்பிரிவு.*



## அமெரிக்காவின் நவீன ஒற்றன்

அமெரிக்க இராணுவத் தலைமையகமான பெண்டகனின் ஆராய்ச்சியில் உருவாக்கப்படும் நவீன ஒற்றர்களை யாவரும் எதிர்பார்க்கமுடியாது. அந்த வரிசையில் தற்போது ஒற்றனாக மாற்றப்பட்டுள்ளது சுறா மீன்களாகும். அதாவது சுறா மீன்களின் மூளையில் இலத்திரனியல் சிப்புகளைப் (Chip) பொருத்தி அவற்றை கணனிகளின் கட்டளைகளுக்கு அடிபணியச் செய்து, அவற்றைப் பயன்படுத்தி ஏனைய கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்களைப் பின் தொடர்வது போன்றவற்றுடன், வெடிகுண்டுகளையும் வெடிக்க வைக்கமுடியுமாம்.

# பருவநிலை மாற்றத்திற்குக் காரணம் டைனோசர்களே!

மிகப்பெரும் விலங்குகளான டைனோசர்கள், தாங்கள் வாழ்ந்த காலத்தில் பூமியின் பருவநிலை மாற்றத்துக்குக் காரணமாக இருந்திருக்கக்கூடும் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

உலக வெப்பநிலை உயர்வுக்குக் காரணமான வாயுக்களில் ஒன்றான மெதேனை டைனோசர்கள் அதிகளவில் வெளியிட்டிருக்கலாம். அதுவே அவற்றின் அழிவுக்கும் காரணமான அமைந்திருக் கலாம் என்பது விஞ்ஞானிகளின் கருத்து.

பேராசிரியர் சிரீமி ரகஸ்டன் தலைமையிலான செயின் அணிட்ரூஸ் பல்கலைக் கழக ஆய்வுக்குழு இந்த ஆய்வில் ஈடுபட்டது. அக்குழு டைனோசர்கள் 150 ஆண்டுகளுக்கு மேலாக அதிகளவில் மெதேனை வெளியிட்டு வந்திருக்கின்றன என்கிறது. அதிலும் தாவர உண்ணி டைனோசர்களில் சாரோபாட்கள் பெருமளவில் இலை, தழைகளைச் சாப்பிட்டதால் இதில் முக்கிய பங்கு வகித்திருக்கின்றன என்கிறார்கள். டைனோசர்கள் அனைத்தும் ஒட்டுமொத்தமாக இணைந்து ஓராண்டுக்கு 520 மில்லியன் தொன் மெதேனை வெளிப்படுத்தியிருக்கின்றன என்கிறார்கள். இது இன்றைய நவீன உலகத்தில் அனைத்து வழிகளிலும் வெளியிடப்படும் மெதேனை விட அதிகம் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

டைனோசர்களால் இந்த அளவு மெதேன் வெளியிடப்பட்டிருப்பது எளிதாக பூமியை சூடாக்கியிருக்கும் என்று கருதப்படுகிறது. அதனால் ஏற்பட்ட தடாலடியான பருவ மாற்றம், டைனோசர்களின் அழிவுக்கே வழிவகுத்திருக்கும் என்பதும் ஆய்வாளர்களின் நம்பிக்கை.

இந்தப் பகாசுர விலங்குகள் அன்றாடம் அசாதாரண அளவுக்கு உணவு உண்டது தான் மிக அதிகமான மெதேன் வெளியீட்டுக்குக் காரணம். உதாரணமாக 140 அடி நீளமும், 90 ஆயிரம் கிலோ எடையும் கொண்ட ஆர்ஜென்டினோசரஸ் டைனோசர்கள் ஒரே நாளில் 500 கிலோ உணவைத் தின்று தீர்த்திருக்கின்றன. அவை ஜீரணமாகும்போது டைனோசர்களின் வயிற்றில் ஆயிரக்கணக்கான லீற்றர் பசுமை கூட வாயுக்கள் உருவாகியிருக்கின்றன. (இன்றைய பசு ஒன்று அன்றாடம் 200 லீற்றர் மெதேனை மட்டுமே உருவாக்குகிறது) சுற்றுச்சூழல் வெப்பநிலை மாற்றத்தில் காபனீரொட்சைட்டைவிட மெதேன் 20 மடங்கு தாக்கத்தை ஏற்படுத்துகிறது. பல்வேறு இயற்கை செயற்கை வழிகளில் மெதேன் உருவாகிறது. மெதேனின் இயல்பான அளவை விட இரண்டரை மடங்கு அதிகமாக உற்பத்தியாவதற்கு மனிதர்கள் வழிவகுத்திருக்கிறார்கள் என்று கணிக்கப்பட்டுள்ளது. இன்று பூமியில் பசுக்களும், மற்ற கால்நடைகளும் ஆண்டுக்கு 100 மில்லியன் லீற்றர் மெதேனை வெளியிடுகின்றன. ஆனால் டைனோசர்கள் வெளியிட்ட மெதேனில் இது ஐந்தில் ஒரு பங்குதான் என்று கூறுகிறார் விஞ்ஞானி ரக்ஸ்டன்.

**B. நிலோஜன்**
*2013 விஞ்ஞானப் பிரிவு.*

# பச்சை வீட்டு விளைவு!

புவிக்கு சூரிய ஒளி மூலம் வெப்பம் கிடைக்கிறது. புவி பெற்றுக்கொண்ட வெப்பத்தின் பகுதியில் சிறிதளவு மீண்டும் செந்நிறக்கதிர்களாக விண் வெளியை நோக்கி வீசுகிறது. இவை மேகம், நீராவி, $CO_2$ போன்றவற்றில் படுகிறது. அவை இந்தக் கதிர்களைத் தேக்கி வைத்திருக்கின்றன. இக்கதிர்களே புவியை அதிகளவு வெப்பமடையச் செய்கின்றன. இதுவே பச்சைவீட்டு விளைவு எனப்படுகிறது. இச் செயற்பாடு நடைபெறாமல் போனல் பூமி குளிர்ந்து நீர் முழுவதும் உறைந்துவிடும்.

ஆனால் மனித நடவடிக்கையால் விடப்பட்ட மாசுக்கள் சில பச்சைவீட்டு வாயுக்களாகத் தொழிற்படுவதனால் விளைவு மேலும் அதிகரிக்கிறது. இதனால் பூகோள வெப்பம் உயர்வடைகிறது.

இவ்வாறு பச்சைவீட்டு விளைவை அதிகரிக்கச் செய்யும் வாயுக்கள்–$CO_2$, $CH_4$, $N_2O$, CFC, தாழ் வளிமண்டல $O_3$, HFC, $SF_6$ இம் மாசுக்களில் பச்சைவீட்டு விளைவை ஏற்படுத்தும் வலிமை கூடிய வாயு CFC.

**பூகோள வெப்ப உயர்வின் விளைவுகள்**

1. பூமியின் மேற்பரப்பு வெப்பநிலை அதிகரித்தல்.
   இதனால் புவியின் வரட்சி அதிகரிக் கிறது. அத்தோடு பெரும் வெள்ளம், கடும் புயல், சூறாவளி என இயற்கைச் சீற்றங்களும் நிகழ்கின்றன.
2. பச்சைவீட்டு விளைவால் வெப்ப மண்டல நாடு களின் பனிமலைகள் எப்போதோ உருகத்தொடங்கிவிட்டன. இதனால் கடல் மட்டம் உயர்ந்து விடுமென அஞ்சப்படுகிறது.
3. உலகின் சில பகுதிகளில் மழைவீழ்ச்சி அதிகரிக்கும், சில பகுதிகளில் மழை வீழ்ச்சி குறைவடையும். இதனால் இனங்களின் பரவல் நிலைகளில் மாற்றங்களும் ஏற்படும். இதனால் உலகின் உயிர் பல்வகைமை பாதிப் படையும்.
4. பூமியின் மேற்பரப்பு வெப்பமடைவ தால் காற்றோட்டம், வெப்பநிலை, மழைவீழ்ச்சி என்பவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டு உலகின் காலநிலை மாற் றங்கள் ஏற்படல்.
5. கடல்வாழ் உயிரினங்களை வெகு வாகப் பாதிக்கிறது. எரிபொருள் பயன்பாட்டால் $CO_2$ வெளியேற்றம் அதிகரித்து, இவை கடலில் கலப்பதால் காபோனிக் அமிலமாக மாறுவதால் கடல்வாழ் உயிரினங்களை வெகு வாகப் பாதிக்கின்றன.

**பூகோள வெப்ப உயர்வைக் குறைக்கும் நடவடிக்கை**

1. சுவட்டு எரிபொருள் தகனத்தை இயலு மானவரை குறைத்தல். இன்று பயன் படுத்தப்படும் சுவட்டு எரிபொருள் 250 மில்லியன் வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த தாவரங்களால் வளிமண்ட லத்தில் உள்ள $CO_2$ இனை பயன் படுத்தி உருவாக்கிய உயிர்த் திணி விலிருந்து பெறப்பட்டவை.
2. சுவட்டு எரிபொருளுக்குப் பதிலாக மாற்று சக்தி வளங்களை, குறிப்பாக காற்றுவலு, சூரியவலு என்பவற்றைப் பயன்படுத்தல்.
3. காடுகள் அழிப்பதைத் தடுத்தல்
4. தொழிற்சாலை புகைபோக்கிகளில் $CO_2$, $NO_2$ இனை உறிஞ்சும் வடிகளை இணைத்தல்.
5. CFC இன் பயன்பாட்டினைத் தடுத்தல்.

இவ்வாறு பச்சைவீட்டு விளைவால் ஏற்படும் தீமைகளைக் குறைப்பதற்கே கியாட்டோ ஒப்பந்தம் உருவானது.

**மு. கௌரிசங்கர்**
*க.பொ.த (உ/த) 2014*

# சூரிய மண்டலம் / ஞாயிற்றுத்தொகுதி எவ்வாறு தோன்றியது?

சூரியன், அதன் ஒன்பது கோள்கள், அவற்றின் துணைக் கோள்கள் என்பன எவ்வாறு தோன்றின என்பதற்குத் திடமான கருத்து என்று ஒன்றில்லை. ஆனால் பல்வேறு அறிஞர்கள் சூரிய மண்டலத்தின் தோற்றம் குறித்து கருத்துக் களை, கருதுகோள்களைத் தெரிவித் துள்ளனர். அவை –


மோதுகைக் கருதுகோள், ஆதிச் சூரியனுக்கும் பிறிதொரு நட்சத்திரத் திற்கும் ஏற்பட்ட மோதலில் அல்லது உராய்வின் விளைவாகக் கோள்கள் பிறந்தன என்ற கருத்தினை விபரிப்பன மோதுகைக் கருதுகோள்களாகும். பவ்பொன், பிங்கேட்டன் ஆகியோரது கருத்துக்கள் இப்பிரிவிலடங்குவன.

புகையுருக் கருதுகோள்கள், ஆதி அண்டத்தில் நிறைந்திருந்த பல்வகைச் சடப்பொருள்களின் புகையிருவிலிருந்து கோள்கள் உருவாகின என்ற கருத்தினைப் புகையுருக் கருதுகோள்கள் விபரிக் கின்றன என்ற கருத்தினைப் புகையுருக் கருதுகோள்கள் விபரிக்கின்றன. கான்ற் லாப்பிளாஸ், வைஸ்சாகர், ஓட்டோ சிமிட், பிரெட் ஹொயில், குயப்டர், அலவண் ஆகியோரது கருதுகோள்கள் இப்பிரிவில டங்கும் பெரிய கருதுகோள்கள். ஆதிச் சூரியனுக்கு அருகில் வேறொரு நட்சத்திர வரவால் ஏற்பட்ட பெருக்கு விசையின் அல்லது ஈர்ப்பு விசையின் விளைவாக நிகழ்ந்த திரள்வே கோள்கள் என இக் கருதுகோள்கள் கூறுகின்றன.

நெபுலா என்ற புகையுரு சட்டியப்ப வடிவில் திரண்டு மையநீக்க விசைக் குள்ளாகிக் கோள்களைத் தோற்றுவிக் கின்றது. செட்ச்விக், சம்பர்ஸின், மோல்ரன், ஜீன்ஸ், ஜெப்தி, பனர்ஜி, லிற்றின்டன், பிரெட்ஹொவில் ஆகி யோரது கருதுகோள்களை இப்பிரி வினுள் அடக்கி ஆராயலாம்.

ஏற்கனவே பிரபஞ்சத்தின் பிறப்புக் குக் காரணமானதென விபரிக்கப்பட்ட Big Bang கருதுகோளே ஞாயிற்றுத் தொகுதி யின் பிறப்புக்குப் பொருத்தமானதும் ஏற்றதுமென இன்று அறிஞர்கள் கருது கின்றனர்.

**தி. கோபிறாஜா**
தரம் 6



# உணவுச் சேர்மானங்கள்

அண்மைக்காலமாக இலங்கை மக்களிடையே பல்வேறுவிதமான புற்று நோய்கள், சிறுநீரகக் கோளாறுகள், சுவாசப்பை சம்பந்தமான பல்வேறுபட்ட நோய்கள் அதிகரித்து வருகின்றன. இதற்கு அதிகரித்த நிறமூட்டி, நற்காப்பிடு பதார்த்தங்கள், ஜெலட்டினாக்கிகள், குழம்பாக்கிகள், சுவையூட்டிகள், நிலைப்படுத்திகள், நொதியங்கள், இனிப்பூடகங்கள் என்பன காரணமாக ஏற்படுகின்றன. இவற்றுள் மிக முக்கியமாக நிறமூட்டிகள் மூலமே அதிகளவு நோய்கள் ஏற்படுகின்றன. இவற்றுள் ஏறத்தாழ 2000 செயற்கை நிறமூட்டிகள் காணப்படுகின்றன. ஆனால் அனுமதிக்கப்பட்ட நிறமூட்டிகள் பத்து மட்டுமே உள்ளன. அவையாவன –

1) கார்மோசின்
2) பாஸ்ட் ரெட் E
} சிவப்பு

3) போசியூ 4R
4) இன்டிகோ காமசின்
5) பிரியன்ட் புளூ
} நீலம்

6) ட்ராடாசின்
7) அமரன்த்
} மஞ்சள்

8) சன்செற் யெலோ
9) கிறீன் ஏஸ்
10) கிறீன் FCF
} பச்சை

- நிறமூட்டிகள் புற்றுநோயாக்கியாக இருக்கக்கூடும். ஆகையால் சில உணவு வகைக்கு நிறமூட்டிகள் சேர்ப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

உ–ம் : மீன், பழங்கள், தேயிலை, பட்டர்.

- அனுமதிக்கப்பட்ட நிறமூட்டிகள் அவற்றுக்கென குறிப்பிடப்பட்டுள்ள E தரவரிசை இலக்கங்களினால் குறித்துக் காட்டப்படும்.

உ–ம் : E 100 குளுமின் மாஜரின்
E22 Carmoisine ஜாம்

- அனைத்துச் சுவையூட்டிகளும் அரோமற்றிற்கு சேர்வைகளாகும். இவை உணவின் சுவையில் / மணத்தில் செல்வாக்குச் செலுத்தும்.
- அஜினமோல்ட் (MSG) இது புற்றுநோயாக்கி ஆகும். அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தும்போது நச்சுத்தன்மை, உடற் கோளாறுகள் என்பன ஏற்படும்.
- பொதுவாக நற்காப்பிடு பதார்த்தங்கள் 07 தொகுதிகளின் கீழ் வகைப்படுத்தலாம். அவை வருமாறு –
சோபேற்று, பென்சோலேற்று, டைபீனைல், அன்மன், நைத்திரைட்டு / நைத்திரைற்று, புறொப்பியுலேற்று, சுவையூட்டி, நிறமூட்டிகள்.

ஆகியவை செயற்கையான பதார்த்தங்கள் ஆகையால் இவற்றைப் பயன்படுத்தும்போது சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படும். (சுவாசப்பை புற்றுநோய், சுவாசக் கோளாறுகள்)

இவ்வாறான பிரச்சினைகளைக் குறைப்பதற்கு நற்காப்பிடு பதார்த்தங்கள் பயன்படுத்துவதற்குரிய எல்லைகள், தரங்கள் ஆகியவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலம் இப் பிரச்சினைகளை ஓரளவு குறைக்க முடியும். சுகாதார அமைச்சினால் அமுல்படுத்தப்பட்ட பயன்படுத்த வேண்டிய நிறமூட்டிகளும் அவற்றிற்கான அளவுகளும் சரியான முறையில் பின்பற்றல் வேண்டும். அத்தோடு இலங்கையினுள் மேற்கொள்ளப்படும் உணவு உற்பத்திப் பொருட்கள், இறக்குமதி, விநியோகம், சந்தைப்படுத்தல் ஆகிய

வற்றை மேற்கொள்ளும் எவரும் இச் சட்டங்களிற்கு அமைய ஒழுக வேண்டும்.

இவ்வாறு சட்டங்களிற்கு கீழ்ப் படிந்தால் நாடு முழுவதும் நோய் நிலைமைகளைத் தகர்த்தெறிந்து நோயற்ற ஆரோக்கியமான நாட்டைக் கட்டியெழுப்பலாம்.

தகவல் மூலம் : பொது சுகாதார உத்தியோகத்தர்

**எட்வேட் ரஞ்சித் பவித்தாவின்**
2013 கலைப்பிரிவு

**Subdue your appetites, my dears, and you've conquered human nature.**

**- Charles Dickens**



All the religions of the world, while they may differ in other respects, unitedly proclaim that nothing lives in this world but Truth.

**- Mohandas Gandhi**



# இந்திய சிற்பக்கலை வளர்ச்சியில் காந்தார மதுரா கலைக்கூடங்களின் செல்வாக்கு : ஒரு சுருக்கமான பார்வை

க. நிமலதாஸ்
B.F.A (Art & Design)

உலக நாகரிக வரலாற்றில் மிகவும் பண்பட்ட வளர்ச்சி கொண்டிருந்த மக்கள் வாழ்ந்து வளம் பெருக்கிய இடம் இந்தியா. சமூகம் சார்ந்த பண்பாட்டுக் கோலங் களுக்கேற்ப ஒழுங்குபடுத்தப்பட்ட கலை யம்சங்களைப் பேணிய வகையில் இன்றும் உயிர்ப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கும் நாகரிகத்தை உடையது இந்நாடு. இந்த வகையில் அதன் கலைப்பாரம்பரியம் இன்றும் தொடர்ந்து கொண்டிருப்பதனை அறிஞர் ஆய்வுகள் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. கி.மு. 2500 - 1500 காலப்பகுதியில் நிலவிய சிந்துநதிப் பள்ளத்தாக்கு கலைப்படைப்புக்களின் பின்னர் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளாக நம் கவனத்தைக் கவரக் கூடிய படைப்புக்கள் இல்லையென்றே கூறலாம். எனினும் கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்பத்தில் வட இந்தியாவில் வளர்ந்து வளம் சேர்த்த கலைக்கூடங்களில் இரண்டு கலைக்கூடங்களை குறிப்பிட்டுச் சொல்ல முடியும். அவைதான் காந்தார மற்றும் மதுரா கலைக்கூடங்களாகும்.

காந்தார கலைக்கூடமானது வடமேற்கு இந்தியாவிலே தோன்றி வளர்ந்தது. கிரேக்க மசிடோனியக் கலைப்பண்பு களை உள்வாங்கி இந்திய எண்ணக் கருக்களை இணைத்து கலைப்படைப்புக் களை உருவாக்கியது காந்தாரக் கலைக் கூடமாகும். இதன் சமகாலத்தில் வட மத்திய இந்தியாவில் சாஞ்சி, பாரூத் போன்ற இடங்களிலுள்ள கலையாக்கங் கள் தொடக்கம் எண்ணற்ற பௌத்த பிராமணக் கலையாக்கங்களை உலகம் வியக்கும்படி உருவாக்கியது மதுரா கலைக்கூடமாகும். இவை இரண்டும் குஷானர் காலத்துக்குரிய கலைப்பாணி கள் என்பது குறிப்பிடத்தக்கன. கிரேக்க பண்புகலந்த பௌத்த கலைச் செல்வங் களை ஆக்கியளித்த வகையில் காந்தார கலைக்கூடமும் பூரணத்துவமான இந்தியப் பண்பு கலந்த பௌத்த இந்து மதம்சார் கலையாக்கங்களை உருவாக்கிய வகை யில் மதுரா கலைக்கூடமும் தனித்தனியே சிறப்புப் பெறுகின்றன.

இந்திய கலை வரலாற்றில் பெயர் சொல்லும் இக்கலைக் கூடங்களின் தோற்றத்துக்கு முன்பிருந்த நிலையினை நோக்கும்போது மொஹஞ்சதாரோ, ஹரப்பா அழிவுக்குப் பின்னர் கி.மு. 200ம் ஆண்டளவில் உருவாக்கப்பட்ட அசோகன் காலத்து ஒற்றைக்கல் நினை வுச் சின்னங்களே குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய கலைப்படைப்புக்களாகக் காணப் படுகின்றன. பாரசீரகத்திலிருந்து கிரேக் கத் தொடர்பால் கிடைத்த தலைகீழ் தாமரை வடிவம் (Percepolitan bell), சாரணாத் தூணிலுள்ள முதுகு ஒட்டிய சிங்கங்கள் என்பன இந்தியக் கலை யானது அசோக மன்னனின் ஆட்சிக் காலத்தில் மட்டுமன்றி அதற்குப் பின்ன ரும் நெடுங்காலம்வரை அந்நியக் கலை யின் அரவணைப்பிலேயே வளர்ந்த

மைக்கு காந்தாரக் கலைப்படைப்புகளும் சான்றாக அமைகின்றன.

மௌரியர் ஆட்சியின் மறைவிலிருந்து குப்தர் ஆட்சியின் எழுச்சி வரையான ஐந்து நூற்றாண்டு காலம் வெவ்வேறு ஆட்சிக் காலங்களில் வெவ்வேறான கலை உத்திகள் கையாளப்பட்டன. பாஹுத் சாஞ்சி, புத்தகாயா போன்ற இடங்களிலும் மதுரா, காந்தார முதலான வடமேற்கு பஞ்சாப், ஆப்கானிஸ்தான் பகுதியில் நிலவிய கலை மரபுகளும் தெற்கில் நாகார்ஜுன கொண்டா, அமரா வதி என்பனவும் அரிய கலைப்படைப்புகள் உருவான களங்களாக அமைந்தன. இதில் பாஹுத், புத்தகாயா, சாஞ்சி எனுமிடங்களில் உருவான வேலிச்சுவர் சிற்பங்கள் இந்திய சிற்பக்கலையின் மூன்று முக்கிய படிகளாகும். இக் காலத்தில் உருவான சின்னங்களின் சிதைவுகளை இன்றும் மதுராவில் காணலாம். இந்த வகையில் மதுரா கலைப்பண்பானது இங்கும் பின்பற்றப்பட்டமைக்கு சாஞ்சியில் கிடைத்த யக்ஷி உருவங்கள் உதாரணமாகும்.

காந்தாரா கலைக்கூடம் பற்றி நோக்குவோமாயின் "காந்தார" என்ற சொல் சிந்துவெளி பகுதியில் உள்ள மாகாணமொன்றை குறிக்க பயன்பட்டது. பின்னர் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய இடங்களில் இந்த சகாப்தத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளில் கிடைத்த குறை பாரம்பரிய (Semi classical) சிற்பங்களைக் குறிக்க காந்தார என்ற சொல் பயன்பட்டது. பின்னர் கிரேக்க மசிடோனிய செல்வாக்கு காரணமாக இந்தியாவுக்கு அறிமுகம் செய்யப்பட்ட கலைமரபுக்கு இப்பெயர் சூட்டப்பட்டது.

காந்தார கலைக்கூடம் குஷானர் காலத்தில் (கி.பி. 1ம் நூற்றாண்டு – கி.பி 3ம் நூற்றாண்டு வரை) பெரும் வளர்ச்சிப் போக்கை எட்டியது. குஷான மன்னனான கனிஷ்கன் காலத்தில் (கி.பி. 144– 172) ஐரோப்பிய வாணிபம் வளர்ச்சியடைந்திருந்தது. கிரேக்கம், ஈரான், இந்தியா, மத்திய ஆசியா முதலிய இடங்களிலுள்ள வேறுபட்ட பாரம்பரியங்கள் ஒன்றுகூடும் மையமாக இது விளங்கியது. இத் தொடர்பின் காரணமாக காந்தார கலை மரபு கிரேக்க பௌத்த கலைமரபு எனப்பட்டது. கிரேக்கத்தின் பக்ரியா (Bactira) கலைக்கூடம் காந்தார கலைக் கூடத்துக்கு ஆதாரமாக விளங்கியது. குஷானரின் பாமியன் குகைக்கோயிலில் கிரேக்க பௌத்த கலையின் Scytho Indian கிளை நிறுவப்பட்டது. இங்கு உலகின் மிகப்பெரிய புத்தர் சிலைகள் இரண்டு (120', 125') நிறுவப்பட்டன. (இவை பிற்காலத்தில் இஸ்லாமிய தீவிரவாதிகளால் உடைக்கப்பட்டன) கனிஷ்கனது காலத்தில்தான் புத்தரை மனித வடிவில் காட்சிப்படுத்தும் நிலை உருவாகியது.

கனிஷ்கனது காலத்தின் முன்னர் புத்தபிரானை மனித உருவில் காட்டுவது தடை செய்யப்பட்டிருந்தது. அரியாசனமாக, தர்மச் சக்கரமாக, பாதச் சுவடுகளாக என்று உருவகப்படுத்தி அமைத்திருந்தனர். அவரது வாழ்க்கை நிகழ்வுகள் கூட குறியீட்டு வடிவங்களாகவே சித்திரிக்கப்பட்டன. (தாமரை மலர்தல் – பிறப்பு, அரசமரம் / சிம்மாசனம் – ஞான ஒளி பெறல், சக்கரம் – முதலாம் தர்மபோதனை, ஸ்தூபி – பரிநிர்வாணம்) சாஞ்சி, பாஹுத் புத்தகாயா போன்ற இடங்களிலுள்ள சிற்பத் தொகுதிகளில் இதனை அவதானிக்கலாம். தேரவாத பௌத்தத்தின் இக்கட்டுப்

பாட்டை குஷான மன்னர் ஏற்றுக்கொள்ள வில்லை. கனிஷ்கன் காலத்து பொன் நாணயமொன்றில் புத்தரது உருவம் பொறிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. இதேபோல் புத்தர் சிலைகளும் உருவாக்கப் பட்டன. கனிஷ்க மன்னனது காலத்தில் நாலாம் பௌத்த மாநாடு கூட்டப்பட்டு பௌத்த கோட்பாடுகள் மீளமைக்கப் பட்டன. காந்தாரக் கலை வளர்ச்சியில் கனிஷ்கனது பங்கு அளப்பரியது. கிரேக்க கலைப்பண்மைத் தழுவியிருந்தபோதும் கிரேக்க இலக்கியக் கருத்துக்களோ அல்லது கிரேக்கரது கலைக் கொள்கை களோ பின்பற்றப்படவில்லை. கிரேக்க காந்தாரக் கலைகளை ஆய்வு செய்த வண. ஹெரஸ் என்பவர், "சிற்பத்துறையில் காந்தார கிரேக்க பௌத்த நடையானது (Style) கிரேக்க வடிவங்களாலோ அல்லது நோக்கங்களாலோ உந்தப்படவில்லை. காந்தார நடையானது மனிதனது உட லழகை மட்டுமன்றி அகவழகின் தன்மை யையும் காட்டுகின்றது. சிற்பத் திறனுக்கும் ஆன்ம நிலைக்குமுள்ள இந்தத் தொடர்பு கிரேக்கக் கலையில் என்றுமே இருந்த தில்லை"

என்று குறிப்பிடுகின்றார். எனவே காந்தார கலைக்கூடம் இந்தியரது உள்ள மும் கிரேக்க கலைத்திறனும் கொண்டு சிற்பங்களை உருவாக்கியது எனலாம்.

காந்தார கலையாக்கங்களில் மகா யான பௌத்தத்தின் செல்வாக்கு காணப் பட்டது. கௌதம புத்தர், போதிசத்துவர், மைத்ரேயர் ஆகியோரது சிலைகள் ஆக்கப்பட்டன. புத்தர் சிலைகளை முதன் முதல் ஆக்கியது காந்தார கலைக்கூடம் என ஒருசாராரும் மதுரா கலைக்கூடமென இன்னொரு சாராரும் வாதிடுகின்றனர். இரு கலைக்கூடங்களும் சம காலத்தில் வளர்ந்தமையால் ஆர்வ மிகுதியால் அந்தந்த இடங்களில் நிலவிய கலை மர பிற்கு ஏற்ப புத்தர் சிலைகள் ஆக்கப்பட்டி ருக்கலாம். இதற்கு ஆதாரமாக கி.பி. 1ம் நூற்றாண்டில் மதுரா கலைமரபில் உரு வான செம்மணற் கல்லானான புத்தர்சிலை ஒன்று "பால" எனும் பிக்குவால் நிறுவப் பட்டதெனக் கூறப்படுகிறது.

காந்தார கலைமரபுக்குரிய புத்தர் வடிவங்களில் முகவசீகரம், அலையலை யான கேசம், பெரிய உச்சிக் குடுமி, நீண்ட காதுகள், கூரிய மூக்கு, பாதி மூடிய கண்கள், தடித்த அலைவடிவ மடிப்பு களுடைய மேலாடை என்பன பொதுவான பண்புகளாகக் காணப்பட்டன. ஆரம்ப கால புத்தர் சிலைக்கு உதாரணமாக Hotimardan எனுமிடத்திலுள்ள சிலை யைக் குறிப்பிடலாம். இது கனிஷ்கனது நாணயத்தில் பொறிக்கப்பட்ட உருவை ஒத்திருந்தது. இதன் தோற்றம் அப்பலோ என்ற கிரேக்க கடவுளை ஒத்திருக்கிறது. கிரேக்க சூரியக் கடவுளின் உச்சிக் குடுமி (Top knot / krobylos) உடன் இதன் முன்குடுமி பொருந்துகிறது. புருவ மத்தியிலுள் மூன்றாவது கண் (Urna) இந்திய சிந்தனைக்கு உட்பட்டது. இதன் கைகள் உடைந்துள்ளன. அநேகமான சிற்பங்கள் ஒருவகை சுண்ணக்கல்லால் (Stucco) ஆக்கப்பட்டமையால் அக்கால சிற்பங்கள் ஆயுள் குறைவாக இருந்த மைக்குக் காரணமாகும்.

பிற இந்திய சிற்பங்களைவிட காந்தார சிற்பங்கள் லோகாயத பண்பு களையுடையன. இதற்குக் காரணம் பாரசீக, மசிடோனிய தொடர்பாகும். கிரேக்க கடவுளான அப்போலோவைப் பின்பற்றி உடற்கூறுகளில் கவனம்



செலுத்தியமை காந்தாரக் கலைஞர் கையாண்ட முதன்மையான உத்தியாகும். நிற்கும் போதிசத்துவ சிலை ஒன்று அதற்கு உதாரணமாகும். அக்காலத்தைய இந்திய அரசர்களை ஒத்திருக்கிறது. மீசை, உடற்தசைகள், கம்பீரம், கூரிய மூக்கு, காது, கழுத்துகளில் ஆபரணங்கள், உயர்குடி மக்களின் தலைப்பாகை என்பன ஒரு இளவரசனுக்குரிய தோற்றத்திலுள்ளன. அகன்ற கோடுகளுடனும் தூக்கணாங் குருவியின் வால் போன்ற மடிப்புகளுடனும்; கிரேக்க மதகுருவின் ஆடையான 'டோகாவை' ஒத்திருக்கும் ஆடை காணப்படுகிறது. ரோமில் மலர்ந்த Neo Attic Style இன் சேர்க்கையாக இச்சிலை காணப்படுகிறது.

ஆரம்பகால காந்தார சிலைகளில் இறுக்கமான முகபாவம் (Masked like face) காணப்படுகிறது. சுயாதீனமாகத் தொங்கும் மேலாடை உடலிலிருந்து வேறாக்கப்பட்டுள்ளது. நிலை அகஸ்டசின் சிற்பத்தை நினைவூட்டுகிறது. பாதி மூடிய விழிகள், நெற்றியில் உர்ணா என்பவற்றுடனான சிறப்புடைய சிலை "டாகிடி பாகி" எனுமிடத்தில் கிடைத்தது. கைகள் உடைந்த நிலையிலுள்ளதால் முத்திரை அறியமுடியாதுள்ளது. சிம்மாசனத்தில் அமர்ந்த வகைக்கு இது உதாரணமாகும். காந்தார வடிவங்கள் யாவும் பின்புறம் மட்டமாகவும் முற்றாக முடிக்கப்பட்டும் காணப்படும். இவை புத்தரை மனிதவுருவில் வெளிப்படுத்தும் ஒரே நோக்கத்தையே கொண்டிருந்ததாகக் கருதப்படுகிறது. புத்தர் சிலைகள் தெளிவான உறுதியான உடற்கட்டுடன் உருவாக்கப்பட்டிருந்தன. இந்த சிலைகளிலிருந்து வேறுபட்டு தன்னை ஒறுத்து ஞான ஒளிதேடிக் தவமிருந்த நிலையை வெளிப்படுத்தும் சிற்பமும் உருவாக்கப்பட்டது. குழி விழுந்த கண்கள், தாடி, கழுத்து நரம்புகள், விலா எலும்புகள் வெளித்தெரியும்படி ஒட்டியுலர்ந்த வயிற்றுடன் பத்மாசன முறையில் அமைக்கப்பட்ட இச்சிலை காந்தார படைப்பின் தனித்தன்மையைக் காட்டுகிறது.

தனியுருவ சிலைகளைப் போல் கூட்டுருவ சிலைகளும் அமைக்கப்பட்ட

தைக் காணலாம். யோக நிலையில் தாமரை ஆசனத்திலிருக்கும் சிலை, சிராவத்தியின் பெரும் அறபுதம் எனப்படு கிறது. இந்திரன் புத்தரைத் தரிசிக்கும் காட்சியில் ஏனைய உருவங்களிலிருந்து புத்தரை பெரிய அளவில் காட்டியிருப்பது அவரது தெய்வீகத் தன்மையை வெளிப் படுத்துகிறது. புத்தரது வாழ்க்கையைச் சித்தரிக்கும் தொடர் சிற்பங்கள் (Panel) முறை ரோமில் உள்ள யேசுநாதர் வாழ்க்கைச் சிற்பம், சீசரின் வரலாறு கூறும் சிற்பம் என்பற்றைத் தழுவியிருக்கிறது. இதற்கு உதாரணமாக சித்தார்த்தருக்கு புதுமணப் பெண்ணைக் கொடுத்தல் எனும் Stair - riser சிற்ப தொகுதியை குறிப்பிட லாம். முற்றிலும் கிரேக்க பண்பிலான ஆடையமைப்பு, உடலமைப்பு இதில் காட் டப்பட்டுள்ளது. இதேபோல் Gothic பாணியிலான புத்தர் பரிநிர்வாணமடை யும் காட்சியைச் சித்தரிக்கும் தொகுதியில் மேலே காட்டப்பட்ட பறக்கும் உருவங்கள் ரோமானிய 'ஏஞ்சல்' உருக்களை நினை வூட்டுகின்றன.

காந்தார படைப்புகளில் உலோகத்தா லான சிற்பங்கள் சில கிடைத்துள்ளன. இதிலொன்று கனிஷ்கனது புனிதப் பேழை. இதன் மூடியில் செதுக்கப்பட்ட புத்தர் போதிசத்துவர் உருவங்கள் உலோ கச் செதுக்கலில் அவர்களுக்கிருந்த போதிய தேர்ச்சி இன்மையைக் காட்டு கின்றது. இதில் இதனையாக்கிய "அகேசிலஸ்" என்ற கலைஞனின் கையெழுத்து பொறிக்கப்பட்டுள்ளது. சுத்தமான தங்கத்தில் வைரங்கள் வைத்து இழைக்கப்பட்ட Bimaran பேழையில் பிரம்மாவும் இந்திரனும் புத்தரை வணங்கும் காட்சி உள்ளது. இவ்வாறு ஏறக்குறைய ஐந்து நூற்றாண்டு காலம் பெரும் வளர்ச்சி கண்ட காந்தாரக் கலை கி.பி. 5ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் White - Hans அழிவுப் படையெடுப்பால் இறுதிப் பகுதியை நெருங்கியதென சீன யாத்திரிகரான சுவான் – சாங்கின் குறிப்புக்கள் கூறுகின்றன. எனினும் காஷ்மீர், ஆப்கான் போன்ற இடங்களில் கி.பி 7ம் நூற்றாண்டுவரை இக்கலை பேணப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அடுத்து கி.மு. 2ம் நூற்றாண்டி லிருந்து கி.பி. 6ம் நூற்றாண்டு வரை நிலவிய மதுராக் கலையை நோக்கு வோம். பாரூத், சாஞ்சி போன்ற இடங்களிலுள்ள யக்சி உருவங்களையும், அடைப்புருவ சிற்பங்களையும் (Bracket figures) இதற்கு உதாரணமாகக் கூறலாம். "மதுரா சிற்ப நடையானது திராவிட ரசானுபவத்தின் பேறாக அமைந்தது" என வண.ஹெராஸ் குறிப்பிடுகிறார். இது உண்மையானால் சிந்துவெளி கலைப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியாக மதுரா கலைமரபு நின்று நிலவுவதாகக் கூறலாம்.

மதுராக் கலைக்கூடத்தில் உருவாக்கப் பட்ட அடைப்புருவங்களில் (Braket figurs) உள்ள பெண்ணுருவங்கள் மரங்களுடன் இணைத்துக் காட்டப்பட் டுள்ளமையானது சிந்துவெளியில் வளப் பெருக்கத்தின் குறியீடாக பெண்கள் உருவகிக்கப்பட்டதன் தொடர்ச்சியாகக் கருதப்படுகிறது. "மதுரா கலைமரபு காந்தார கலைமரபு போலல்லாது பண்டைய இந்திய சிற்ப மரபுகளைப் பின்பற்றி எழுந்ததாகக் காணப்படுகிறது" என்ற கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி யின் கூற்றும் இங்கு மனங்கொள்ளத் தக்கது. இவ்வகையில் பாரூத், சாஞ்சி ஆகிய இடங்களில் செழிப்புற்று வளர்ந்த

மதுராக் கலைக்கூடங்களில் செம்மணற் கல்லால் (Red sand storn) ஆக்கப்பட்ட சிலைகள் நூற்றுக்கணக்கான மைல் தூரங்களுக்கப்பால் அனுப்பப்பட்டன. மதுராவில் காணப்பட்ட இரு துறவோ ரகங்களில் மூவாயிரத்துக்கு மேற்பட்ட துறவிகள் இருந்ததாக பாகியன் குறிப்பிடு கிறார். கண்ணன் வழிபாடும் இங்கு தோன்றியதாக தொலமி குறிப்பிடுகிறார்.

கலை பயில்வோரின் நிலைக்கள னாக விளங்கிய மதுரா கலைக்கூடத்தில் முதன் முதல் ஆக்கப்பட்ட புத்தரது வடிவம் சாரணாகத்தில் உள்ளது. முற்றிலும் இந்தியப் பண்புடன் 'தோத்தி' என்ற ஆடை அணிந்துள்ளது. தலையில் உச்சிக்குடுமி யுடைய போதிசத்துவர் / சாக்கியமுனி எனக் கூறப்படுகிறது. பிற்கால குப்தர் காலத்துக்குரிய உடலை ஊடுருவிக் காட்டும் தன்மை இதிலுள்ள ஆடையில் காட்டப்பட்டுள்ளது. நெருங்கிய நூல் போன்ற வரியமைப்பு மதுராப் பண்பினை வெளிப்படுத்துகிறது. இதன் தோற்றம் மொகஞ்சதாரோ ஆண் உடற்குறைகளை நினைவூட்டுகிறது. மதுரா புத்தர் சிலைக்கும் காந்தார புத்தர் சிலைக்கும் தலைய மைப்பில் வேறுபாடுகள் காணப்படு கின்றன. மதுரா புத்தர் சிலை நத்தை ஓடு போன்ற கேசமுடையது. காந்தார தலை அலையலையான கேசமுடையது. மதுரா தலையில் கண்ணின் வசீகரம் ஒளி மிகுந்த முகம், வட்டமான நாடி என்பன நிறைவான தன்மையுடையது. காந்தார சிலை முகத்தில் கம்பீரமான வசீகரம் இருந்தது. மதுரா சிலையின் விசாலமான வாய் புராதன இந்திய சிற்பங்களைப் போல் புன்முறுவல், தலைமுடி ஒருவகை தொப்பி அணிந்ததுபோல் உச்சிக்குடுமி, நிமிர்ந்த உடல், நுனி நோக்கி குறுகிச் செல்லும் கைகால்கள், கால்களில் நற்பேறடையாளங்கள் என்பவற்றுடன் பூணூலும் அணியப்பட்டுள்ளது. இந்தியத் தனித்துவத்தின் மேலுமொரு தன்மை யாகும். அருகில் இந்திரனும் பிரம்மாவும் சேவகராகக் காட்டப்பட்டுள்ளனர்.


மதுராக் கலைக்கூடமானது இந்தியப் பெண்ணழகைத் தனித்துவமான முறை யில் வெளிக்காட்டியமை யக்சி உருவங் களில் வெளிப்படுகிறது. குழந்தையும் பெண்ணும், மற்றும் கோடியான யக்சி உருவங்கள், மதுமாந்திக் களிக்கும் பெண் என்வற்றை உதாரணமாகக் கூறலாம். இவையெல்லாம் குஷானர் காலத்து மதுராக் கலைப்படைப்புகளாகும். இதன் பின் குப்தர் காலத்தின் மதுராக் கலைப் படைப்புகள் 'கிரேக்கத்தின பெரிக்கிளிஸ் காலம்' போல் பொற்காலம் எனப் பாராட் டும்படி வளர்ச்சியடைந்தது. குஷானர் கால மதுராக்கலையில் ஒருசில காந்தா ரப் பண்புகளும் கலந்திருந்தமையை மறுக்கமுடியாது. எனினும் முதலாம் சந்திரகுப்தனின் எண்ணப்படி ராணுவ பலத்தில் மட்டுமன்றி கலை கலாசாரத் திலும் அந்நியப் பண்புகள் களையப்பட்டன. இக்காலத்திலிருந்த செல்வநிலை சுதே சியப் பண்புகளை மட்டுமேயுடைய சிற் பங்களை உருவாக்கத் துணைபுரிந்தது.

குப்தர்காலக் கலைஞர்கள் செம்மை யிலும் செம்மையான படைப்புக்களை உருவாக்க "இந்திய மயமாக்கல்" தத்து வத்தைப் பின்பற்றினர். குப்தர் காலத்து பக்திநெறிக்கு அன்பை அடிப்படையாகக் கொண்ட தெய்வ நம்பிக்கை பரவியி ருந்தது. வைணவத்தின் வளர்ச்சியானது புத்தர் விஷ்ணுவின் அவதாரமென கருது மளவுக்கு முன்னேறியது. விஷ்ணு ஆதி

ஷேசன்மீது துயில்வதுபோல் புத்தரும் பாம்பணையில் பள்ளிகொள்ளும் சிற்பங் கள் உருவாகின. இந்து தத்துவ வடிவங்கள் பௌத்தத்துக்கும் பௌத்த தத்துவ வடி வங்கள் இந்து மதத்துக்கும் பரிமாறப்பட்டன. மதுரா சிற்பமுறை பெரும்பாலானவை மன வுணர்ச்சிகளையும் ஆன்மவியலையும் உரு வகப்படுத்துவதாக இருந்தன. நாகரது சமய நெறிகளும் சிற்பமுறைகளும் மதுராவில் பரவியமைக்கு பிற்கால பலராமன் விக்கி ரகங்களை ஆதாரமாகக் காட்டுகிறார் டாக்டர் ஆனந்தக்குமாரசுவாமி.

மதுரா கலைக்கூடத்தில் உருவான புத்தர் வடிவங்கள் பிறப்பிலேயே அவரை மிகைப்படுத்திக் காட்டும் வகையில், சுருண்டமயிர், நீண்ட செவிகள், முன்னுறு மண்டையோடு, கண்களுக்கிடையிலுள்ள அடையாளம் (Urna) உள்ளங்கை உள்ளங் கால்களில் நற்பேறடையாளம் போன்ற விசேட குறிகளுடன் உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு கையின் குறிப்பும் சிறப்பானது. கீழே சுட்டும் கை புத்தர் தன்மையைக் குறிக்க நிலத்தைச் சான்றுக்கழைப்பது போலுள்ளது. அறவாளியை சுழற்றும் கை ஞானம் புகட்டலைக் குறிக்கும். மடியில் வைத்த கைகள் தியானத்தையும் வலக்கை அபயமளிப்பதையும், முதல் விரலும் நடுவிலும் உரையாடலையும் குறிக்கின்றன. இவற்றுக்கு உதாரணமாக சாரணாத் சந்யாசி மடாலயத்தில் உள்ள வற்றைக் குறிப்பிடலாம். சமஇடைவெளி யின் நூல்வரிகொண்ட ஆடைகள் உடலின் எல்லைக்கோடுகள் தெரியும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன. மூன்று ஆடைகளின் மெல்லிய தன்மையை கல்லில் காட்டியிருந்தமை சிற்பியின் நுட்பத்திறனை வெளிப்படுத்துகிறது. இதிலுள்ள விசேட அம்சம் அலங்காரத் தன்மையுள்ள ஒளிவட்டமாகும். ஆரம்ப கால புத்தர் சிலைகளின் அளவுப் பிர மாணம் மனத்தோற்றத்துடன் தொடர்பு பட்டது. பின்னர் தாள அளவினை அடிப்படை யாக்க கொண்டது. மேலும் சமபங்கம், துவிபங்கம், திரிபங்கம் என ஏதாவது ஒரு நிலையில் நிற்கும்படி அமைக்கப்பட்டன.

மதுராக் கலையாக்கங்களில் சிறப் பிடம்பெறும் அமர்ந்த நிலைப்புத்தர் சிலை ஒன்று சாரணாத்தில் உள்ளது. உப தேசிக்கும் பாவனையில் யோகநிலை யில் அமர்ந்தபடி அமைக்கப்பட்டுள்ளது. இங்கு காணப்படும் நிற்கும் நிலைப்புத்தர் சிலையைப்போலவே இதன் ஆடையும் வரியமைப்பின்றி ஊடுகாட்டப்படும் மெல்லிய தன்மையுடையதாகக் காணப் படுகிறது. அரியாசனத்தில் அமர்ந்தி



ருக்கும் நிலை, பின்புறம் மகர, யாளி உருவங்கள் கொடியலங்காரம் காட்டப் பட்டுள்ளன. குப்தர்கால மதுராக் கலைக் கூடத்தின் தனித்துவமான அலங்கார ஒளிவட்டம் இன்னொரு சிறப்பம்சமாக மலரேந்திய அப்சரஸ்கள் ஒளிவட்டத்தனி இருபுறமும் பறக்கும் நிலையில் காணப் படுதலாகும். பீடத்தின் கீழ்ப்புறம் சாக்கிய முனியின் சீடர்கள் புத்தரது உபதேசம் பெறுவதற்காக மான் பூங்காவுக்கு வருவது போன்ற காட்சி செதுக்கப்பட்டுள்ளது. முழங்காலில் மண்டியிட்டு அமர்ந்தி ருக்கும் துறவிகட்கு நடுவில் போதனையின் அடையாளமாக தர்மச் சக்கரத்தை தாங்கியபடி இரண்டு மான்கள் படுத்தி ருக்கின்றன. பெரிய காட்சியொன்றை சிறிய இடமொன்றினுள் குறியீட்டு முறையில் காட்டியிருப்பது சிற்பியின் திறமைக்குச் சான்று. புத்தரின் கை தர்மச்சக்கர முத்திரையை காட்டுகிறது. பஞ்சதாள அளவில் முக்கோண அடைப் பொன்றினுள் அடங்கும்படி செதுக்கப்பட் டுள்ளது. மகாயான பௌத்தத்தின் நோக்கத்தை வெளிப்படுத்துகிறது.

இங்கு செதுக்கப்பட்ட தொடரான சிற்பத் தொகுதிக்கு (Panel) உதாரண மாக சாரணாத்திலுள்ள புத்தர் வர லாற்றைக்கூறும் சிற்பங்களைக் குறிப்பிட லாம். புத்த வடிவங்களின் வளர்ச்சிப் தொகுப்பை மதுரா கலைக்கூடம் பெற்றி ருந்த தன்மையை இவை காட்டுகின்றன. இதிலுள்ள புத்தர் உருவங்கள் பல்வேறு படைப்புக்களின் நகலுருவங்களாக உள்ளன. இதன்கீழ்ப் பகுதியில் புத்தரின் பிறப்பு, ஞானஒளி பெறல், முதலாம் தர்மபோதனை, பரிநிர்வாணம் என்பன செதுக்கப்பட்டுள்ளன. இப்பிரதான காட்சித் தொகுதியைச் சுற்றி புத்தரதும் போதிசத்துவரதும் வெவ்வேறு நிலை யிலான வடிவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. மதுரா புத்தர்சிலையின் ஆன்மீக ரீதியான எண்ணக்கருக்களின் அடிப்படையி லிருந்து மனிதவுருவுக்கு மாற்றம்பெற்ற தன்மையையும் வணங்கி வேண்டிக் கேட்போரை நோக்கி அசையும் பாவனை யும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன.

குப்தர்கால மதுராக் கலைக்கூடத்தில் செப்பு விக்கிரங்களும் அமைக்கப்பட்டன. இங்கு விக்கிரகங்களின் பின்புறம் திரு வாசி என்ற அமைப்பு தோற்றம் பெறுகிறது. பௌத்த சிற்பங்கள் மட்டுமன்றி இந்து ஜைன சிற்பங்களும் ஆக்கப்பட்டன. ஆரம்ப கால யக்சி வடிவங்கள் குப்தர் காலத்தில் தனிநின்ற பெண் கடவுளராக மாற்றம் பெறு கின்றன. சரஸ்வதி, லக்ஷ்மி, கங்கா, யமுனா போன்ற பெண் கடவுளரை சரியான மானிடவியல் பண்புடன் வடிவமைக்கும் போக்கு முதன் முதல் உருவாக்கப்படுகிறது. சாஞ்சி ஸ்தூபியில் கஜலஷ்மி தாமரையில் நின்று தங்கக் காசு கொட்டும் லக்ஷ்மி என் பன சிறப்பாகச் செதுக்கப்பட்டுள்ளனர். Deogarh இலுள்ள விஷ்ணு கோயில் தொடர் சிற்பங்கள் குவாலியரிலுள்ள வராகவதாரச் சிற்பங்கள் என்பன மகத் தான படைப்புக் களாகும்.

நாம் தொகுத்து நோக்கும்போது கிரேக்க மசிடோனிய செல்வாக்குடன் வளர்ந்த காந்தாரக் கலை அந்நியர் கலையின் நுட்பங்களை மட்டுமே பின் பற்றப்பட்டனவேயன்றி இலக்கியப் பண்பு களையோ, இலட்சிய எண்ணங்களையோ பின்பற்றவில்லை. இவை சுண்ணக்கல்லில் (Stucco) அமைக்கப்பட்டமையால் குறு கிய ஆயுளை உடையனவாயிருந்தன. மதுரா கலைக்கூடம் உருவாக்கிய

சிற்பங்கள் முற்றுமுழுதாக இந்திய தனித்துவத்துடன் உருவாக்கப்பட்டன. தன்மயமாதல் கொள்கையை நடைமுறை யில் காட்டிய விதத்தில் குப்தர்கால மதுராக் கலை மரபு பொற்காலமெனப் போற்றப்பட்டது. இந்த வகையில் அந்நிய கலைப்பணியை உள்வாங்கி புதிய பாணியொன்றை உருவாக்கிய காந்தார கலைக்கூடமும் தனித்துவமான சுதேசியப் பண்பைப் பேணி தன்னை விஞ்சமுடியாத உயர்நிலையடைந்த மதுராக கலைக் கூடமும் வெவ்வேறான பாதையில் இந்திய சிற்பக்கலையின் வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பை வழங்கிச் சென்றன.

**உசாத்துணை நூல்கள்**


1. A history of fine Arts in India and Ceylon - Vincent A.Smith.
2. The Art of Indian Asia - Heinrich Zimmer.
3. Looking again at Indian Art - Vidya Dehijia.
4. Indian Sculpture - Phillip Rawson.
5. The history of Ancient India - Arun Battachariya.
6. The Art & Architecture of India - Benjamin Rowland.
7. The Art of India - Sivarana moorthi.
8. Gandhara Sculpture from Pakistan musium.
9. The Gandara Sculpture - A cultural Survey. - K. Krisnamoorthy.


♣ ❖ ♣



And oftentimes, to win us to our harm,
The instruments of darkness tell us truths,
Win us with honest trifles, to betray's
In deepest consequence.

- **William Shakespeare**, *"Macbeth", Act 1 scene 3*

# பண்ணிசையின் சிறப்பும் பெருமையும்

திருமதி த. அன்றூட் கிறேசியன் B.F.A
இசை

இசை இறைவன் வடிவமாகும். கலைகள் யாவும் இறைவனிடமிருந்தே தோன்றியவை. சுந்தரமூர்த்தி சுவாமிகள் "ஏழிசையாய் இசைப்பயனாய்" என இறைவனை விளிக்கின்றார். ஸ்ரீ தியாக ராஜ சுவாமிகளும் நாதத்தையே சரீரமாக உடையவன் இறைவன்' எனத் தமது கிருதியில் குறிப்பிடுவதோடு ஏழு சப்த ஸ்வரங்களும் இறைவனின் ஐந்து முகங் களிலிருந்தும் பிறந்தன எனவும் குறிப்பிடு கின்றார். இசைக்கு காந்தர்வ வேதம் எனவும் பெயருண்டு. காந்தர்வ வேதம் நான்கு உபவேதங்களில் ஒன்று. சிவபெரு மான் கையில் டமருகமும், கண்ணபிரான் கையில் குழலும், சரஸ்வதி கையில் வீணையும் இருப்பது இசைக் கலையின் தெய்வீகத் தன்மையைப் புலப்படுத்தும்.

இத்துணைச் சிறப்புள்ள இசைக் கலையை மனிதன் தனது அறிவினாலும், புத்தி சாதுர்யத்தினாலும் இன்று கால வரை வளர்த்து வந்திருக்கிறான். அக்கால பண்பட்ட சமுதயாத்திலிருந்து எழுந்த வையே பண்ணிசை வடிவங்கள். மூங்கிற் கழியினிடத்திருந்து வந்த இசையை உணர்ந்த மனிதன் நாளடைவில் அதையே ஒரு வாத்தியமாக அமைத்தான். அவ் வாத்தியமே இன்று வழங்கும் புல்லாங்குழல் வாத்தியமாகும். இது ஓர் இயற்கை வாத்தியமாக விளங்குகின்றது. குழலும், யாழும் சங்க காலத்தே சிறப்புற்றிருந்த மையை சங்கப் பாட்டால் அறியக் காண லாம். தெய்வப் புலவர் திருவள்ளுவரும் தமது திருக்குறளில் இவ்விரு வாத்தியங் களையும் குறிப்பிடுவது குறிப்பிடத்தக்க தாகும். இன்று வெளிநாடுகளில் இசையைப் பற்றி ஆராய்ச்சி செய்து இசை மூலம் நோய்கள் தீருவதையும், பயிர்கள் வளருவதையும் கண்டுபிடித்திருக்கி றார்கள்.

தமிழகத்தில் மிகப் பழங் காலத்தில் இருந்தே இராக முறையைப் பண்முறை என்றும், இராகங்களைப் பண் என்றும் அழைத்து வந்திருக்கிறார்கள். தமிழ் நாட்டில் நெடுங்காலமாக வழங்கி வந்துள்ள இராகங்களின் ஒலி வரலாற்றை ஆராய் வோமாகில், தேவாரப் பாசுரங்கள் தோன்றிய காலத்திற்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பண்கள் என்று அழைக்கப்பெற்ற இராகங்கள் தமிழ்நாட்டில் வளர்ந்து வந்தமையை அறியலாம். ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் முத்துஸ்வாமி தீட்ஷிதர், சியாமா சாஸ்திரிகள் முதலான இசை மேதைகள் தமிழகத்தில் மரபுவழியாக வழங்கி வந்த இராக இசைமரபைக் கையாண்டே தங்கள் கிருதிகளை அமைத்துச் சங்கீத உலகிற்கு வழங்கினர். தேவாரப் பாடல்களும் திவ்வியப் பிரபந்த பாசுரங்களும் இந்த அடிப்படையிலேயே எழுந்தவையாகும்.

'பண்' எனும் பதம் பண்ணுதல் என்னும் வினையடியாகப் பிறந்து பெருந்தான மாகிய நெஞ்சு, மிடறு, நாக்கு, மூக்கு, அண்ணாக்கு, உதடு, பல், தலை ஆகிய எட்டினாலும், கிரியையாகிய எடுத்தல் (ஆரோகணம்), படுத்தல் (அவரோகம்), நலிதல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு ஆகிய எட்டினாலும் பண்ணிப்

படுத்தலாற் பண் என்று பெயராயிற்று. 'பண்' என்பது நிறைந்த நரம்புள்ளது எனவும் ஏழு சுரங்களுமுள்ள சம்பூர்ண இராகமெனவும் அழைக்கப்பெறும்.

திருமுறைத் தீந்தமிழ்ப் பாடல்கள் ஏனைய பாடல்களைப் போல அல்லாமல் பண் முறையாகவும், கட்டளை முறை யாகவும் நம் முன்னோர் அமைத்துத் தந்தருளியது. நம்முன்னோரால் பெரிதும் போற்றத்தக்க ஒன்றாகும். இம்முறை இசை முறை அல்லது சங்கீத முறை என அழைக்கப்படும். இசையுடன் ஓதி அன்பு செலுத்தினால் தான் இறைவன் அருள் செய்வானோ? என்று சிலர் வினவலாம். இறைவன் திருவருளைப் பெறுவதற்கு வழிகள் எண்ணிலவாயினும் அவை எல்லா வற்றிலும் மிக மேலாகக் கொள்ளப்படும் நெறி இசைச் சாதனமே என்பது பெரும்பா லார்க்கும் ஒப்பமுடிந்ததொன்றாகும்.

ஐம்புலன்களையும் அடக்கி மனதை இறைவன் பால் ஈடுபடச் செய்து, மக்கள் இறைவன் அருள் பெறுவதற்கு இசை முறையே மேலானதென்று கருதியன்றோ நம்மூவர் பெருமக்கள் இறைவன் மீது திருவாய் மலர்ந்தருளிய தேவாரப் பாக்களைப் பண்முறைப்படுத்தியும், கட்டளை முறைப்படுத்தியும் நமக்கு அமைத்துத் தந்திருக்கிறார்கள். தேவாரச் செழுந்தமிழ்ப் பனுவல்களின் பல இடங் களிலும் இசையின் சிறப்புப் பற்றி பேசப்படுவதைக் கொண்டு பண்ணிசை யின் சிறப்பை நாம் அறியலாம். ஒலி வடிவாகிய நாதத்தை முறையையாகவும், கால அளவினதாகவும் அமைத்துப் பாடு வதற்கே 'இசைமுறை' எனப்படும் இம் முறை ஒரு மொழிக்கு மாத்திரம் உரித்து டையதல்ல. பண் முறையில் கண்ட இராகங்கள் சுருதியைச் சேர்த்தும், கட்டளை முறை என்பது கால அளவைச் சேர்த்தும் அதாவது தாளத்தைச் சேர்த்தும் இருக்கின்றன.

இக் காலத்தே சங்கீத சம்பந்தமாக வடமொழியில் வழங்கும் ஸ்வரப் பெயர் களாகிய ஸட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் எனும் 7 ஸ்வரங்களும் தமிழில் முறையே குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பவற்றிற்குச் சம மானவை. இவ் ஏழிலிருந்து உண்டாவனவே பண்களும் திறங்களும். பண்கள் 7 சுரங்களோடு கூடிய இராங்கள். இந்த இராகங்கள் சம்பூர்ண இராகங்களென வும், ஜன இராகங்களெனவும், மேளகர்த்தா இராகங்களெனவும் வடமொழியில் வழங் கப்பெறும். திறங்கள் பண்களுள் ஒவ் வொன்றிலிருந்தும் உண்டாகிப் பல்வகைப் பட்டு வேறு வேறு பெயர் பெற்று வழங்கும். இவை ஏழிற் குறைந்த சுரங்களையுடையன வெனவும், ஜன்னிய இராகங்களெனவும் கூறப்படும். ஏழு சுரங்களாலான இராகங் களைப் பண்ணியல் என்றும், ஐந்து சுரங்களாலான இராகங்களைத் திறம் என்றும் நான்கு சுரங்களாலான இராகங் களை திறத்திறம் என்பதும் மரபாகும். மேலும் தமிழிசை மரபில் கீதத்தின் முதலெடுக்கும் ஸ்வரம் முதல் என்றும் கீதத்தை முடிக்கும்ஸ்வரம் முடிவு எனவும் வழங்கும். வடமொழி இசையாசிரியர் இராகங்களுக்கு கூறிய பத்து லட்சணாங் களும் தமிழில் முதல் முடிவு, நிறை, குறை, கிழமை, வலிவு, மெலிவு என்னும் ஏழினுள் அடங்கும்.

"நிறை நரம்பிற்றே பண்ணெனலா கும் குறை நரம்பிற்றே திறமெனப்படுமே"


என்னும் திவாகரத்தால் பண்ணியல்பும், திறனியல்பும் நன்கு விளங்கும். பண்ணின் சிறப்பிற்கு எடுத்துக்காட்டாக ஒரு குறமகள் குறிஞ்சிப் பண்ணைப் பாட ஒரு யானை தினைக்கதிரை உண்ணாமலும் புடை பெயராமலும் அப்பண்ணைக் கேட்டு மன முருகி நின்று உறங்கியதென்பது கீழ் வரும் அகப்பட்டால் அறியக்கிடக்கின்றது.

"ஒலியல் வார்மலி யுளரிளன கொடிச்சி
பெருவரை
மருங்கிற் குறிஞ்சிபாடக்
குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது
படா அப்பைங்கண் பாடு பெற்றோயென
மறம்புகழ் மழகளி றுறங்கு நாடன்"

திருச்சிற்றம்பலத் தேசிகர் என்னும் பெரியார் தமது நாட்டில் பயிர்கள் அழிந்து மக்கள் உணவில்லாமல் வருந்துவதைக் கண்டு தமது பூசையில் மேகராகக் குறிஞ்சிப் பண்ணமைந்த திருப்பதி கத்தை ஓதுவிக்கச் செய்த பொழுது உடனே நாட்டில் மழை பெய்யத் தொடங்கித் துன்பத்தை நீக்கியதென்றும், இதனை அறிந்த சேதுபதி வேந்தனொரு வன் அவரிடம் நன்றி பாராட்டித் தமது சமஸ்தானத்திலுள்ள வெள்ளக்குளம் போன்ற சில கிராமங்களை அளித்தன னென்றும், அங்ஙனமளித்த காலத்தில் எழுதப்பெற்ற பட்டயம் வாயிலாக அறி யக்கிடக்கின்றது. இதிலிருந்து தமிழ்ப் பண்களின் சிறப்பை அறியலாம்.

திருமுறை இசைப் பாடல்களைப் பண்ணோடு பாடினால் கல் மனதையும் கரையச் செய்யும் என்பதற்கு சிறிதளவும் ஐயமில்லை. திருத்தருபுரத்தில் சம்பந்த சுவாமிகள் பாடியருளிய யாழ் முறி என்னும் பண்ணை திருநீலகண்ட யாழ்ப் பாண நாயனார் தமது யாழில் அமைத்து வாசிக்க இயலாது யாழை உடைக்கச் சென்றமை பண்ணின் சிறப்பிற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். எடுத்த இயலும் இசையும் இடையே முறிந்து மாறுபடு மியல்புடையதாய் அமைந்த இசைப்பாடல் 'முறி' என அழைக்கப்படும். இத்தகைய முறிப் பாடலாக அமைந்து விளங்குவது "மாதர் மடப்பிடி" என்னும் முதற்குறிப்புடைய இத் திருப்பதிகமாகும். "எடுத்த இயலும் இசையும் தம்மின் முறித்துப்பாடுதல் முறியெனப் படுமே என்பது சிலப்பதிகாரம்.

♣ ❖ ♣



This is the moment when we must build on the wealth that open markets have created, and share its benefits more equitably. Trade has been a cornerstone of our growth and global development. But we will not be able to sustain this growth if it favors the few, and not the many.

**- Barack Obama**

# நாடகாசிரியர் வில்லியம் சேக்ஸ்பியரது நாடக ஆக்க முறைமை

வில்லியம் சேக்ஸ்பியரைப் பற்றி இன்று பேசுகின்ற போது அரங்கியல் இலக்கியத்தில் முக்கியமான ஒருவராகக் கூறுவர். அவருடைய நாடகங்கள் பொது நிலை அரங்கிலே தான் அரங்கேற்றப் பட்டன. இவ்வாறு தலைசிறந்த இலக்கியக் காரராகவும் கொள்ளும் மரபு காணப்படு கிறது. நாடகத்தினுடைய முழு ஆற்றலை யும் வெளிக்கொண்டு வருவதற்கு மொழி யினுடைய நெழிவு, சுழிவுகள் முழுவதை யும் பயன்படுத்தினார். இவர் நடிகர்களி னுடைய வேடப் புனைவையும் ஆடை யணிகளையும் மேடை அமைப்பையும் தான் அதிகம் நம்பியிருந்தார்.

சேக்ஸ்பியர் மொழியினுடைய ஆற் றல்களை நோக்கினால் அந்த மொழி யினால் கிடைக்கக்கூடிய படிமங்கள் சரியான சொல்லைச் சரியான இடத்தில் பயன்படுத்துதல். பாத்திரங்களுக்கு ஏற்ற சொல்லை பயன்படுத்துதல் ஒவ்வொரு குறிப்பிட்ட ஒழுங்கில் கதைத்தல் போன்ற பண்புகளை மிகச் சிறப்பாகக் கையாளு கின்ற பொழுதுதான் நாடகம் இயக்கு கின்றார். எலிசபெத் காலத்தில் புகழ்பெற்ற நாடகாசிரியராகத் திகழ் கிறார். இவருடைய நாடகங்களாக ஒதல்லோ, ஹம்லெற், யூலியஸ்சீசர் போன்றவற்றை குறிப்பிடலாம். இவ ருடைய நாடகங்கள் மூன்று நாடக வடிவம் எனவும் நாடகங்களின் கதைப் பொருள் தெரிவு வரலாற்று மற்றும் கற்பனைக் கதைகளை உள்ளடக்கிய தாகக் காணப்படுகின்றன.

இன்று நாம் திறஜெடி என்று சொல்லு கின்ற நாடகங்களை உண்மையில் சேக்ஸ்பியரின் நாடகங்களில் அவலச் சுவை அமைந்துள்ள முறையை அடி யொற்றியே கொள்ளுகின்றோம். திற ஜெடி பற்றிய சமகாலத்தினுடைய கருதுகோள்கள் சேக்ஸ்பியரின் ஊடா கவே வருகின்றன. இக்காலகட்டத்தில் தான் திறஜெடி என்னும் சொல்லுக்கு அவல நாடகம் என்னும் சொல் பொருத்த மானதாக அமையும். அவருடைய நாடகங்களில் இன்னொரு முக்கியமான பண்பு மோதுகை. மிக முக்கிய ஒரு பாத்திரம் இன்னொரு பாத்திரத்தோடு மோதுகின்ற போது அக்கதை கொண்டு செல்லப்படுகின்ற தன்மை முக்கியம் பெறுகின்றது.

வில்லியம் சேக்ஸ்பியருடைய நாடக ஆக்க முறைமையாகப் பலவற்றைக் குறிப்பிடலாம். இவர் மிகவும் சோகமான பாத்திரத்திலே ஒரு நல்ல குணம் அல்லது சில மிக நல்லகுணம் இருக்கும். அதனிடமுள்ள சில சபல புத்திகள் காரணமாக அந்த நல்ல குணம் இல்லாமல் போவது தான். இதற்கு, உதாரணமாக ஒதல்லோ நாடகத்தில் ஒதல்லோ டெஸ்ரிமோனாவை திருமணம் செய்கின்றான். நண்பனாக நடித்து இயாகோ அவனுக்குத் தீங்கு செய்கி றான். இவ்வாறு மேலோங்கிக் காணப் படுவதற்குக் காரணம் நாடகப் பாத்தி ரங்கள் இயல்பான மனிதப் பண்பைப் கொண்டுள்ளமையாகும்.

வாழ்விலுள்ள மனிதக் குணாம்சங் களை பாத்திரத்தின் பண்பாகக் கொண்டும் காணப்படுகின்றன. அதாவது ஒதல்லோ நாடகத்தில் ஒதல்லோவின் சந்தேகம், காதல் என்ற பண்பை வெளிப்படுத்திக் காட்டுகின்றன. இயாகோ செய்த சூழ்ச்சி யினை டெஸ்ரிமேனா மீது ஒதல்லோ சந்தேகப்படுகிறான். காதல் பரிசாக டெஸ்ரிமோனாவிற்கு கொடுக்கப்பட்ட கைக்குட்டை இயாகோவின் சூழ்ச்சி காரணமாக காஸ்யோவின் படுக்கை அறையில் போடுகிறான். இதனைப் பார்த்த ஒதல்லோ டெஸ்ரிமேனா அங்கு வந்து சென்றிருத்தல் வேண்டுமென சந்தே கப்படுகிறான். இதனையே சேக்ஸ்பியர் ஒரு நாடக ஆக்க முறையாகக் குறிப்பிடு கிறார்.

எலிசபெத் கால அரங்க அமைப்பிற்கு ஏற்ப நாடகங்களை உருவாக்கிய சேக்ஸ்பி யரைக் குறிப்பிடலாம். இவருடைய நாடக எழுத்துரு ஆற்றுகை நிலையிலும், இலக்கிய நிலையிலும் பேணப்படு கின்றன. உதாரணமாக முன் துருத்திய மேடையிலும், நீண்ட தனிமொழியிலும், மேல் மேடையில் அரண்மனை சார்ந்த காட்சிகளும் இடம்பெற்றன. மற்றும் மூன்று நாடக வடிவத்தினை இவருடைய நாடக வாக்க முறைமையாகக் குறிப்பிடலாம். உதாரணமாக திறஜெடி அல்லது அவலச் சுவை, மகிழ் நெறியில் காணலாம். ஷேக்ஸ்பியர் தனது நாடகங்களுக்கான கதைகளை ஓவிட்டின் கவிதைகள், இறந்த அரசர்களின் சோகக் கதை, பொறாமைக் கார முஸ்லீம் கதை, சரித்திர நாடகங்கள், வரலாறுகள், சஞ்சிகைகள் தன் நாடகக் குழுவில் காணப்பட்ட கையெழுத்துப் பிரதிகள் எனப் பல எண்ணற்ற வடிவங்களில் கையாண்டார்.

சேக்ஷ்பியருடைய நாடக ஆக்க முறைமையில் மற்றுமொரு பண்பாக நாடகத்தில் நீண்ட தனி மொழிகளைப் பயன்படுத்துதல் என்பதைக் குறிப்பிட லாம். மற்றும் கவிதை யாப்பையும் பயன்படுத்தினார். அதாவது உதாரண மாக ஒதல்லோவும் டெஸ்ரிமோனாவும் ரகசியத் திருமணம் செய்திருந்த வேளை யில் இயாகோவே ரோடரிகோவை அழைத்துச் சென்று பிரபான்சியோவின் அரண்மனையின் முன்னால் கூச்சலிட்டு அந்தச் செய்தியை வெளிப்படுத்துகிறான். "அவளது தந்தையை அழை! உறக்கத்தி லிருந்து எழுப்பு, தெருவெல்லாம் ஒதல் லோவைப் பற்றி அலரும்படி செய். அவனது உற்றார் உறவினர்களைக் கலக்க அவளது மகிழ்ச்சி முழுமையடையாமல் தொல்லைப்படுத்து, முரண்படுத்து அவன் வளமான சூழலில் வாழ்ந்தாலும் அவனை ஈக்கள் புடுங்கும்படி செய்" எனும் இயா கோவின் நீண்ட தனிமொழி காணப்படு கின்றது.

காலத்தை வென்று நிற்கும் நாடக வாக்க முறையும் காணப்படுகின்றன. உதாரணமாக சேக்ஷ்பியரின் 16ம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட ஒதல்லோ நாடகம் இன்றும் செல்வாக்குப் பெற்ற நிலையில் காணப்படுகின்றன. மற்றும் இவருடைய நாடகங்கள் எல்லா பண்பாட் டிற்கும் பொருந்தக்கூடியதாகக் கருதப்படு கின்றன. ஒவ்வொரு மக்களின் பண்பாட் டிற்கு பொருந்தக்கூடியதாகக் காணலாம். மற்றுமொரு பண்பாக மோதுகைகள் கட்டியெழுப்பப்படுதல். உதாரணமாக ஒருவன் தனக்குள் தான் முரண்படுதல் போன்றன ஒதல்லோ நாடகத்தில் காணலாம்.

ஒதல்லோ தனக்குள் தானே முரண்டு தல் "மூடு பனியைவிட மென்மையானவள் பளிங்கை விட அழகானவளாக இருக்கும் இவளது தோலை நான் சிதைக்கமாட்டேன்" என கூறுவதன் மூலம் தனக்குள் தானே முரண்படுவதைக் காணலாம். ஒரு மனிதன் இன்னொரு மனிதனுடன் முரண்படுதல். இதுவும் இவருடைய நாடகவாக்க முறை யில் குறிப்பிடலாம். இதனால் பிரச்சினை களுக்கு அதிக முகங்கொடுக்கின்றன.

உலக நாடக ஆசிரியர்களுள் ஒருவ ரான சேக்ஸ்பியர் வருடம் ஒன்றிற்கு இரண்டு நாடகங்களை எழுதினார். இந் நாடகங்களின் தன்மைகளுக்கமைய அவை துன்பியல் நாடகம், இன்பியல் நாடகம், வரலாற்று நாடகங்கள் என மூவகைப்படுத்தலாம். இந்நாடகக் கதைக் கான மூலகங்கள் பற்றிய தரவுகள் கிடைக்கப்பெறினும் "லவ் லேப லொஸ்ற்" என்ற நகைச்சுவை நாடகத்திற்கான கதை மட்டும் எங்கிருந்து பெறப்பட்டது என்ப தற்கான தெளிவான ஆதாரம் கிடைக்க வில்லை. ஆனால் சேக்ஸ்பியர் தன் நாடகவாக்கத்திற்கான கவிதைப்பாணியை கிறிஸ்டோபர் மார்லோவிடம் இருந்தும் நாடக அமைப்பு முறையை தோமஸ் கிட் இடத்திலிருந்தும் இன்பியல் நாடகத் தன்மையை றொபேர்ட் கிறீன் இடத்திலி ருந்தும் பின்பற்றினார் எனக் குறிப்பிடப் படுகிறது.

சேக்ஸ்பியருடைய நாடக ஆக்கத் திற்கான மூலம் நாடகமாக இருப்பின் அதில் கதையாக விபரித்தல், வரலாற்றுச் சம்பவம், பாடல் வெளிக்கொணர்தல், உணர்வுபூர்வமான உரையாடல், திகில், உச்சப்பெறுமானம், துடிப்பான விகடப் பேச்சு போன்றவற்றை வெளிக்கொணர்ந் தார். இதனூடாகப் படிப்பதற்காக எழுதப் பட்ட நாடக மூலத்தை சேக்ஸ்பியர் தனது மதிநுட்பத்தால் மேடையேற்றத்திற்குரிய தாக மாற்றினார். விசித்திரமான கற்பனைக் காட்சிகளுக்கெதிராக உண்மைக் காட்சி கள், துன்பகரமான காட்சிகளிலிருந்து பார்வையாளரின் மனநிலையைச் சம நிலைப்படுத்துவற்கான கோமாளிகளின் காட்சிகள் போன்றவற்றைத் தன் நாடக உருவாக்கத்தில் புகுத்தினார்.

சேக்ஸ்பியருடைய எழுத்துருவாக்கத் தின் போது சேக்ஸ்பியர் கையாளும் மிக முக்கியமான மாற்றம் யாதெனில், மூலப் பிரதியைக் காணமுடியாதிருந்தது. பாத்தி ரங்கள் இந்த உண்மையியலும் உயிரூட்ட மும் மூலப்பிரதியில் காணப்படுகிறது. இது சேக்ஸ்பியர் கையாளும் மிக முக்கியமானதாக அமைகின்றன.

**அ. றனுசியா**
க.பொ.த (உ/த) 2013



# ஆலயங்களில் பரதக்கலை

பன்னெடுங்காலமாகக் கலைகள் சமயத்துடன் இணைந்து வளர்ந்து வந்துள்ளன. குறிப்பாக இந்துசமய நிழலிலே கலைகள் மிக நேர்த்தியாக வளர்ச்சியடைந்துள்ளன. இந்து சமயத்திற்கும் கலைகளுக்குமிடையே பிரிக்கமுடியாத ஒன்றிணைந்த தொடர்பு நிலவி வந்துள்ளது. வேதாகம முறைப்படி கோவில்கள் அமைக்கப்பட்ட பின் கலைகளின் நிலைக்களமாக அவை திகழத் தொடங்கின. எனவே கோவில்கள் சமய உணர்வினையும் அறிவினையும் புகட்டும் நிலையங்களாக மட்டுமன்றி கவின்கலை மையங்களாகவும் மிளிரலாயின. கோவிலமைப்பு, அதில் இடம்பெறும் சிற்பங்கள், ஓவியங்கள், கிரியை முதலியவற்றிலே கவின்லைகள் குறிப்பாக இசை மற்றும் நடனத்தில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

கோவிலிலே குடிகொண்டிருக்கும் பரம்பொருளான இறைவன் கலைஞருக்கும், பக்தருக்கும் ஒப்புயர்வு அற்ற தனிப்பெரும் கலைவடிவமாகவும், கலைஞானியாகவும் கலையின் இருப்பிடமாகவும் காட்சியளித்தார். சைவசமய முழுமுதற் கடவுளான சிவபிரான் ஆடற்கரசனாக, நடராஜனாக பல்வேறு கலைகளிலும் தனிப்பெரும் வித்தனாக விளங்குகிறார். இவற்றைப் போலவே அம்மன், பிள்ளையார், முருகன் விஷ்ணு முதலிய கடவுளரும் கலைகளின் வடிவமாகப் போற்றப்படுகின்றனர். சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடியதாகக் கூறப்படும் பதினொரு வகை ஆடல்களும் வெவ்வேறு கடவுளர் ஆடியவை என்பதும் ஈண்டுக் குறிப்பிடற்பாலது. ஆகவே தெய்வங்களுக்குரிய கோவில்களும் கலைக் களஞ்சியங்களாக விளங்குவதில் வியப்பில்லை.

நடனம் பற்றிய சிற்பங்கள், ஓவியங்களைக் கொண்ட கோவில்கள் பல உள்ளன. நர்த்தன கணபதி, வீணாதர தக்ஷிணாமூர்த்தி, வீணையினை ஏந்தி வாசிக்கும் சரஸ்வதி, சிவனின் 108 கரணங்கள் பற்றிய சிற்பங்களைக் குறிப்பிடலாம். கலை வடிவினனாய், கலைப்பிரியனாய், கலை ஆதரவாளனாய் இலங்கும் இறைவனை வழிபாடு செய்யும் முறைகளிலே கலைகளும் குறிப்பிடற்பாலன. இசையினாலும், நடத்தினாலும் இறை வழிபடும் முறை நன்கு போற்றப்பட்டது. "ஆரியம் தமிழோடிசையானவனாக..." இலங்கும் இறைவன் "ஆடிப்பாடி அண்ணாமலை கைதொழ ஓடிப்போம் நமதுள்ள வினைகளே" என நாயன்மாரும் "பாடோமே எந்தை பெருமானைப் பாடி நின்றாடோமோயாயிரம் ரோனை" என ஆழ்வார்களும் ஆண்டவனை வழிபட்டு உய்யும் முறையினை வலியுறுத்தி உள்ளமையைக் காணலாம்.

நால்வேதங்களின் சாரமாக ஐந்தாவது வேதமாகப் பொதுமக்களின் வேதமாக நாட்டிய வேதம், நாட்டிய சாஸ்திர நூலிலிருந்து தொகுக்கப்பட்டது. சங்கீத ரத்னாகரம் போன்ற நூல்களில் இசை, நடனம் ஆகியவற்றின் சிறப்புக்களை தெய்வீக அடிப்டையில் வலியுறுத்திக் கூறுவன. கோவில்களில் இடம்பெற்ற நித்ய, நைமித்தியக் கிரியைகளிலும்

ஆடலும் பாடலும் நன்கு இடம்பெற்றன. மேலும் பதினாறு வகை உபசாரங்களிலே கீதோபசாரமும், நிருத்யொபசாரமும் குறிப்பிடற்பாலன. நித்தியக் கிரியை களின் போதும் வேறு விசேடக் கிரியை களின் போதும் அவ்வக் கடவுளர்க்கேற்ற வாறு ஆடல், பாடல்கள் இடம்பெற வேண்டுமெனவும் ஆகமங்களும், பத்ததி களும் குறிப்பிடுகின்றன.

முற்காலத்திலே மேற்குறிப்பிட்ட இசை, நடன நிகழ்ச்சிகளை அளிப்பதற் காக இசைக்கலைஞர், வாத்தியக் கலை ஞர், நாட்டியக் கலைஞர் கோவில்களிலே அவற்றின் வருமானம், தேவைகளுக் கேற்ப நியமிக்கப்பட்டிருந்தனர். தமிழ கத்திலே பல்லவர், சோழர், பாண்டியர், விஜயநகர மன்னர், நாயக்கர் ஆட்சிக் காலங்களில் இத்தகைய ஒழுங்கு நிலவி யதை அறியலாம். ஆனால் இன்று இவ் ஒழுங்கு முறை அனுசரிக்கப்படுவதில்லை.

ஈசான சந்தியில் மட்டும் பூத நாட்டியம் இடம்பெறுகிறது. வாத்தியங் களிலே நாதஸ்வரமும், தவிலுமே பெரு மளவு இடம்பெறுகின்றன. நவசந்திகளில் இடம்பெறவேண்டிய பண், இராகம் ஆகிய செவ்வனே இடம்பெறுகின்றனவா என்பது ஐயத்திற்கிடமாகும். முற்காலத்தில் பண், இராகம் ஆகியவற்றில் ஓரளவாவது நன்கு நிறைவேற்றி வந்தனர். ஆனால் சில கோவில்களில் ஓரளவாவது இதன் முக்கியத்வத்தை உணர்ந்த சில அன்பர் கள் குறிப்பிட்ட சந்திகளுக்குரிய பண்க ளுக்கான தேவாரங்களை எழுதிப் பாடு கின்றனர். இம்முறை போற்றுதற்குரிய தாகும்.

இன்று இலங்கையிலுள்ள சைவமக்கள் மத்தியிலேசமய விழிப்புணர்வும், ஆர்வமும் நிலவுகின்றன. மேலும் இந்தியாவிலே கோவில் கிரியைகளில் இடம்பெறவேண்டிய நுண்கலைகளை மீண்டும் ஏற்படுத்த முயற்சி செய்தனர். இலங்கையிலும் 1980ம் ஆண்டு பேராசிரியர் கா.கைலாசநாதக் குருக்கள் முன்னேஸ்வரத்தில் சிறிய அளவிலான நடன நிகழ்ச்சி ஒன்றினை இராமநாதன் நுண்கலைக்கழக ஆசிரியர்கள், மாணவர்கள் உதவியுடன் ஏற்படுத்தினர். சில நிகழ்ச்சிகள் சென்ற நூற்றாண்டின் 90களில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலுள்ள ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயத்தில் இடம்பெற்றன.

மேற்கூறப்பட்டவாறு ஆலயங்கள் பரதக் கலையின் வளர்ச்சிக்கு முக்கிய பங்கினை வகித்துள்ளன. ஆலயங்களி னாலேயே பரதக்கலை அதி உயர் வளர்ச்சியடைந்துள்ளது. எனவே பரதக் கலையினைப் பேணிக்காத்து அதனை அழிவுறாது பாதுகாப்போம்.

**ம. திலக்ஷனா**
உயர்தரம் 2013



# ஆலயங்களும் இசையும்

இறைவனது நிருத்தமே இசை, நடனம், நாடகத்திற்கு முதல் கண்ணாய் உள்ளதென்பதைப் புராணங்கள் வாயிலாக அறியமுடிகின்றது. இதிலிருந்து ஆலயங்களும் இசையும் ஒன்றோடொன்று தொடர்புடையன என்பது தெளிவாகின்றது. நாகரிகம் வளர்வதற்கு முற்பட்ட காலத்தில் பல்வகை நிலங்களிலும் வாழ்ந்த மக்கள் பலவகை இசை நுட்பங்களை அறிந்திருந்தனர். கற்கோயில், மரக்கோயில்களின் முன்னிலையில் பரந்து வாழ்ந்த மக்கள் பலவகைப் பாடல்களைப் பாடியும், வாத்தியங்களை மீட்டியும், பரவச நிலையில் ஆடியும் தங்களது பக்தியை இறைவனுக்குச் செலுத்தினர். தும்புரு நாரதர் வீணை யாழ் வாசிக்க என்பதற்கமைய ஓவியங்களையும், சிற்பங்களையும் ஆலயங்களில் அமைத்தனர். இவை தவிர புராண வாயிலாக மீனாட்சி கல்யாணம், பார்வதி கல்யாணம் போன்ற நாட்டிய நாடகங்களைக் கோயில்களில் நடித்துக் காட்டுவதற்கென்றே கலைஞர்கள் இருந்தனர். இறைவழிபாட்டின் போதும் சங்கு, சேமக்கலம், கின்னரம், டமாரம் ஆகிய வாத்தியங்கள் ஒலிக்க அதற்கேற்ப நடன மாதர்கள் நடனம் ஆட, மங்கள வாத்தியங்களான தவில், நாதஸ்வரம் என்பன வாசிக்கப்பட மக்கள் வழிபாடு செய்தனர்.

ஆலயம் தோற்றம் பெற்ற காலத்தில் இருந்தே ஆலயங்களில் யாழ் வாசிப்போர், மங்கள வாத்தியம் வாசிப்போர், ஓதுவார்கள் போன்றவர்கள் இசையை வளர்க்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். அத்தோடு யாழ், நாதஸ்வரம், தவில், முரசு வாத்தியங்கள், கொம்பு வாத்தியங்கள், சுத்தமேளம், கொத்துமணி வாத்தியங்கள், சங்கு ஆகியவை ஆலயங்களில் கையாளப்பட்ட முக்கிய சில வாத்தியமாகும். அதிகாலையில் பாடப்பட்ட திருப்பள்ளியெழுச்சி, ஆலய உற்சவ காலங்களில் இசைக்கப்படுகின்ற நவசந்திப் பண் என்பன ஆலயங்களில் இசைக்கப்படுகின்றன. பஞ்சமுக வாத்திய ஆலய முரசு வகைகளில் மிகவும் பிரபல்யமானது. இறைவனது ஐந்து திருமுகங்களையும் உருவகித்து இவ் வாத்தியத்தை அமைத்தனர். தேவார முதலிகள் காலத்தில் கூட்டுப் பிரார்த்தனை முறை இருந்தது என்பதை அறிகின்றோம். தேவாரத் திருப்பதிகங்களை கூட்டுப் பிரார்த்தனையாகப் பாடும் வழக்கம் நாயன்மார் காலங்களில் இருந்ததாகப் புராண வாயிலாக அறியப்படுகின்றது. கதாகாலஷேபம், இசைக் கச்சேரிகள் போன்றனவும் இன்று நடைபெறுவதனைக் காணலாம். இசை மரபு தவறாத விற்பன்னர்களால் புராணங்களை ஜனரஞ்சகமாக எடுத்துக்கூறும் மரபு தமிழ்நாட்டிலும், எமது நாட்டிலும் பிரபல்யமாகி சமய அறிவையும், இசையறிவையும் மக்களுக்கு ஊட்டுவதில் ஆலயங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன.

**இ. டனுஷா**
தரம் 11A

# ஆடற்கலைகளில் அருங்கலை பரதம்

**திருமதி தமிழ்ச்செல்வி விஜயகுமாரன்**
Sp. Trd. (Dance)

மனிதன் உருவாக்கிய கலைகளில் மிகப் பழமை வாய்ந்த கலை ஆடற்கலை. ஆடற்கலை ஒரு கூட்டுக் கலையாகும். பாடல், இசை, வாத்தியம், (தாள வாத்தியம், இசை வாத்தியம்) ஆடல் நடிப்பு, ஒப்பனை என்னும் கலைகளைத் தன்னுள் கொண்டுள்ளது. ஒவ்வொரு காலகட்டத்திலும் நாகரிகம், வளர்ச்சியடைய அரசியல் நிர்வாகம், சட்டம், சமூகம், பொருளாதாரம், கலைகள் முதலியன உதவுவது வழமை. அந்த வகையில் ஆடற்கலையும் காலத்துக்குக் ஏற்ப தனது வளர்ச்சியைக் கண்டுள்ளது. ஆடற்கலை ஒரு அவைக் காற்றுகைக் கலையாகும். இது பொதுவாக மரபுவழிக் கலையாக குரு சிஷ்ய பாரம்பரியத்தில் பேணப்பட்டு வந்தாலும் தற்காலத்தில் நிறுவன ரீதியாக வளர்க்கப் பட்டு வருகின்றது.

இக்கலை அரச சபைகளிலும் வேறிடங்களிலும் ஆடப்பட்டு வந்தாலும் பெரும்பாலும் கோவில்களிலே தான் பேணப்பட்டு வளர்க்கப்பட்டு வந்துள்ளது. கோவில்களில் இடம்பெறும் நித்திய, நைமித்திய கிரியைகளில் நடனம் இன்றியமையாத இடம் ஒன்றைப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. தெய்வங்களே நடனக் கலை வல்லுநராகவும், நடனப்பிரியர்களாகவும் விளங்குவதும் குறிப்பிடத்தக்கது. ஆடற்கலையின் நோக்கங்களாக அறம், பொருள், இன்பம், வீடு என்பனவே சாஸ்திர நூல்களில் கூறப்பட்டுள்ளது.

இக்கலை பரத முனிவரின் நூலாகிய பரதசாஸ்திரம் (நாட்டிய சாஸ்திரம்) எனும் நூலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்நூல் 36 அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. இந்நூல் கி.பி. 2ம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டது அல்லது தொகுக்கப்பட்டுள்ளது எனக் கூறப்பட்டுள்ளது. ஆடற்கலைகளில் ஆங்கிகாபிநயம், வாச்சிகாபிநயம், ஆஹார்யாபிநயம், சாத்விகாபிநயம் எனும் 4 அபிநயங்களும் முக்கியமானவை. இவை எல்லா நடனங்களுக்கும் பொருத்தமான வகையில் இடம்பெறும் மக்களிடையே பல சாஸ்திரிய ஆடல்கள் காணப்படுகின்றன. இவற்றுக்குரிய சாஸ்திரம் ஒன்றே. ஆயினும் அவை ஆடப்படும் பிரதேசம் வழமை, பண்பாடு, குருவின் தனித்திறம் என்பவற்றின் ஆளுகையால் பல ஒற்றுமை, வேற்றுமைகள் காணப்படுகின்றன.

ஒவ்வொரு சாஸதிரிய கலைகளும் தமக்கெனக் கொண்டுள்ள அமைப்புத் தனித்தன்மையைப் பேணிக்காப்பது மிகவும் அவசியமானது அல்லது அவற்றின் இன்றியமையாத அடிப்படையான அம்சங்களை நவீனமயமாக்கல் என்னும் போக்கில் வேறுபடுத்திச் சீர்குலைத்தல் தவிர்ப்பது நன்று. எதிர்காலத்தில் இக்கலைகளின் உண்மைத் தன்மை அற்றுப்போவது மட்டுமல்லாது, எமது வருங்கால சமுதாயம் சாஸ்திரியக் கலைகளின் உண்மை வடிவத்தை அறியமுடியாத துர்ப்பாக்கிய நிலை உருவாகும் என்பதில் ஐயமில்லை.

தென் இந்தியாவிலுள்ள நடன வடிவங்களில் பரத நாட்டியமும் ஒன்று. இதன்

தூய்மையான பாணி தமிழ் மாவட்டங்களில் நிலவுகின்றது. தமிழக சாஸ்திரிய நடனம் "சதிர்" எனச் சில நூற்றாண்டுகளாக அழைக்கப்பட்டு வந்தது. "சதிர்" எனும் சொல் தமிழ்மொழியிலே பெருமை, அதிஷ்டம், அழகு, நிலைமை, எல்லை, நாட்டியம் எனப் பல பொருட்படும். இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட பரதக்கலை வளர்ச்சிக்கு வழிகோலிய திரு.ஈ.கிருஸ்ணஐயர், ஸ்ரீமதி ருக்மணி அருண்டேல் முதலியோர் இதனைப் பரதநாட்டியம் என அழைத்தனர். ஆயினும் 400 ஆண்டுகளுக்கு முன்பே பரத நாட்டியம் எனும் பெயர் வழக்கிலிருந்தது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். 17ம் நூற்றாண்டிலே தமிழகத்தில் வாழ்ந்த குமரகுருபரசுவாமிகள் "பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொற் பனுவலும்" என சகலகலாவல்லிமாலையில் பாடியுள்ளார்.

பரதநாட்டியத்தில் சமய நோக்கம் பின்பற்றப்படுகின்றது. அறம், பொருள், இன்பம், வீடு இதன் நோக்கம் எனக் கொள்ளப்படுகின்றது. இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் ஆகிய வேதங்களின் சாரமாக நாட்டியம் ஐந்தாவது வேதமாக பிரம்மாவால் படைக்கப்பட்டது. ஐந்தாவது வேதமாகிய நாட்டிய வேதம் யாவருக்கும் பொதுவான வேதமாக நாட்டிய சாஸ்திரம் கூறுகின்றது. சிவபிரானால் தாண்டவமும், பார்வதிதேவியால் லாஸ்யமும் அருளப்பட்டு எமக்குக் கிடைக்கப்பட்டது. பரத நாட்டியம் சைவசித்தாந்தத்தின் உட்பொருளை விளக்குகின்றது என்ற கருத்தினை ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

செந்நெறிக்கலையான பரதநாட்டியம் நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் எனும் வகைகளைக் கொண்டுள்ளது. கோவில்களிலே நடைபெற்ற நித்திய, நைமித்திய கிரியைகளில் நடனமும் இடம்பெற்றது. 1ம் இராஜராஜனின் தஞ்சைப் பெருவுடையார் கோயிலிலே 400 தேவரடியார்கள் தொண்டாற்றியுள்ளனர். மேலும் இக்கோயிலிலே 108 கரணங்களில் 81 கரணங்களைச் சித்திரிக்கும் சிற்பங்கள் காணப்படுகின்றன. நாட்டியத்திலே தேர்ச்சி பெற்ற நடன மாதருக்கு பட்டங்களும், பரிசில்களும் வழங்கப்பட்டது. இதே காலப்பகுதியில் சிதம்பரத்தில் உள்ள கோபுரத்தில் 108 கரணங்கள் பற்றிய சிற்பங்களும், அவற்றுக்குரிய நாட்டிய சாஸ்திர ஸ்லோகங்களும் காணப்படுகின்றன. இவ்வாறு சேர, சோழ, பாண்டிய, பல்லவ மன்னர்களின் காலப் பகுதியில் வளர்க்கப்பட்டு வந்த இசையும், பரதமும் அந்நியர் வருகையின் பின் வீழ்ச்சி கண்டது.

தமிழ்நாட்டில் 1947ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தேவதாசிச் சட்டம் கோவில்களிலே நடனம் ஆடுவதைத் தடைசெய்தது. இதன் காரணமாகக் கோயில்களில் ஆடப்பட்டு வந்த சதிர் அல்லது பரதநாட்டியம் பொதுமன்றங்களிலும் வேறு அரங்குகளிலும் நடைபெறலாயிற்று. இப்போக்கு தமிழகத்தில் மட்டுமன்றி இலங்கையிலும் ஏற்பட்டது. பரதக்கலையின் வீழ்ச்சிப்போக்கினைத் தடுத்து மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்காக குறிப்பாக தமிழகத்தில் கனம் ஈ.கிருஸ்ண ஐயர், ஸ்ரீமதி ருக்மணி அருண்டேல் போன்றோரும் இலங்கையில் திரு. ஏரம்பு சுப்பையா, கலைப்புலவர் நவரத்தினம் போன்றோரும் அரும்பாடுபட்டனர்.

பரதநாட்டியம் பெரும்பாலும் ஒரு தனிக் கலைஞரின் (ஆண் / பெண்)

ஆடலாக அமைவது வழமை. பண்ணிசையும், கர்நாடக இசையும் இதற்குரிய இசை வடிவங்களாகும். தற்காலத்தில் மேலைத் தேய இசைவடிவங்களுக்கும் சிலரால் ஆடப்பட்டு வருகின்றது. இதற்கு யாழ் முழவு, புல்லாங்குழல், வீணை, வயலின், மிருதங்கம் முதலிய வாத்தியங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இது ஒரு லாஸ்ய வகையைச் சேர்ந்த ஆடல் ஆகும். ஒரு சிறந்த நாட்டியப் பெண் தனது அறிவாற்றல், கற்பனைத்திறன் முதலியனவற்றைக் கொண்டு சஞ்சாரி பாவம் மூலம் நீண்டநேரம் அரங்கில் ஆடி சபையோருக்கு வியப்பையும், பிரமிப்பையும் ஏற்படுத்தமுடியும். இது ஒரு செந்நெறிக்கலையாகையால் குறிக்கப்பட்ட விதிகள் வரையறைக்கு ஏற்பவே ஆடப்படுவது வழமையானது ஆகும். 'காலத்திற்கேற்ப மாற்றங்கள் செய்வதாயினும் இவ்விதிகளுக்கும், வரையறைக்குள்ளும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பது இதன் நீண்ட கால வரலாறு இவ்வுண்மையை உணர்த்துகின்றது.

இக்கலையினை மரபுவழியாக குருகுல முறைப்படி பரம்பரை வழியாக வளர்க்கப்பட்டு வந்துள்ளது. ஆனால் காலப்போக்கில் நிறுவன ரீதியாக வளர்க்கப்பட்டு வருவது கண்கூடு. தற்கால பரதநாட்டிய கச்சேரி அமைப்பு வடிவம், அலாரிப்பு, ஜதீஸ்வரம், ஸப்தம், பதம், வர்ணம், தில்லானா, சுலோகம் என்னும் அமைப்பில் உள்ளது. இவ் அமைப்பினை தஞ்சை நால்வரில் ஒருவரான பொன்னையா அவர்கள் உருவாக்கினார். பரதநாட்டியம் ஆடும் நிலை அரைமண்டி நிலையாகும். இதனைப் பயிலுவதற்கு ஆரம்பப் பயிற்சியாக அடவுகள் உள்ளன. தற்காலத்தில் எல்லாச் சமூகத்தினரும் இக்கலையினைப் பயின்று தமது கலைத் தாகத்தையும், தொழில் வாய்ப்பையும் பெற்றுக் கொள்கின்றனர். இலங்கையில் பாடசாலைகள், கல்வியியற் கல்லூரிகள், யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீடம், மட்டக்களப்பு விவேகானந்தா நுண்கலைக்கல்லூரி, வட இலங்கை சங்கீத சபை போன்ற அரச அங்கீகாரத்துடன் ஆடற்கலையாகிய பரதம் முன்னைய பொலிவுடனும் சிறப்புடனும் கோயில்களில் நித்திய நைமித்திய பூஜை வழிபாடுகளில் இடம்பெறுவதற்கு பலரும் முயற்சி செய்து வந்துள்ளார்கள். இம்முயற்சி வெற்றிபெற இக்கலை மேலும் தூய்மையுடன் வளர்ச்சியடைய அனைவரும் பங்களிப்புச் செய்வது அவசியமாகும்.

♣ ♣ ♣

> ஒரு சராசரி மனிதன் தனது சக்தியிலும் திறமையிலும் வெறும் 25% மட்டுமே தனது வேலைக்குச் செலவழிக்கிறான். தங்களது திறமையில் 50%க்கு மேல் செலவழிப்பவர்களை இந்த உலகமே பாராட்டுகிறது. 100% திறமையையும் அர்ப்பணிப்பவர்களை இவ்வுலகம் தலைவணங்கிப் போற்றுகிறது.
>
> - ஆன்ட்ரூ கார்னெஜி

# பொலநறுவைக்கால கலை வளர்ச்சி

புராதன காலம் முதல் இன்றுவரை இலங்கை வரலாற்றில் அனுராதபுரம், பொலநறுவை, தம்பதெனியா, யாப்பகூவ, குருநாகல், கம்பளை, கண்டி, கோட்டை ஆகிய நகரங்கள் தலைநகரங்களாக விளங்கியுள்ளன. இவற்றில் கி.பி. 993இல் சோழர் இலங்கை மீது படையெடுத்த காலம் முதல் கி.பி. 1215இல் கலிங்கமாகன் படையெடுத்த காலம் வரையுள்ள காலப் பகுதியில் "பொலநறுவை தலைநகரமாக விளங்கியது. இக்காலமே வரலாற்றில் பொலநறுவைக்காலம் எனப்படுகிறது. இலங்கை வரலாற்றில் அனுராதபுர காலத்தைத் தொடர்ந்து சிறப்பாக எழுச்சி பெற்ற ஓர் வரலாற்றுக் காலமாக விளங்கு வது பொலநறுவைக் காலமாகும். பொல நறுவை இராசதானி நிலைபெற்றிருந்த காலத்தில் பல வகையான கலைமரபுகள் மிகச் சிறந்த முறையிலே எழுச்சி பெற்றன. அவ்வாறான கலைமரபுகளில் தமிழ் திராவிட கலைமரபு, சிங்கள ஆரிய கலை மரபு ஆகிய கலைமரபுகள் குறிப்பிடத் தக்கவையாகும். இவ்வாறான ஆரிய திராவிட கலைமரபுகள் கலப்படைந்து புதிய கலைமரபுகள் எழுச்சி பெற்ற கால மாக பொலநறுவைக் காலம் விளங்கு கின்றது. பொலநறுவைக் காலத்தின் வளர்ச்சி அடைந்த மிக முக்கியமான கலையம்சங்களாக விளங்கு வது கட்ட டங்கள், சிற்பங்கள், ஓவியங்கள் என்பன வாகும்.

பொலநறுவைக் காலத்தில் வளர்ச்சி யடைந்த கலைகளில் ஒன்றாகக் கட்டடக் கலை விளங்குகின்றது. அனுராதபுர காலத்தில் கட்டப்பட்ட கட்டடத்திலும் பார்க்க அழகும் உறுதியும் வாய்ந்த கட்டடங்கள் பல்வேறு வடிவங்களில் பொலநறுவைக் காலத்தில் எழுச்சி பெற்றன. பொலநறுவையை உருவாக்கிய வர்கள் சோழர்கள் என்பதால் அவர்களது கலைமரபுகளில் ஆரம்ப காலத்தில் கட்டடங்கள் அமைக்கப்பட்டன. இதனால் திராவிடக்கலை அம்சங்கள் இலங்கை யில் செல்வாக்குப் பெற்றன. மாந்தை, பொலநறுவை, கந்தளாய், பதவியா, திருகோணமலை, பூநகரி, நெடுந்தீவு போன்ற இடங்களில் சோழர்கால கட்ட டங்களும் கட்டடச் சிதைவுகளும் கண்டு பிடிக்கப்பட்டன. திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் சோழர்களால் கட்டப்பட்டது எனக் கருதப்படும் மண்டபம் ஒன்றின் தூண்கள், அடித்தளம் என்பன கண்டு பிடிக்கப்பட்டன. பெரும்பாலும் இந்துமதம் சார்ந்த கட்டடங்களையே சோழர்கள் அமைத்தனர். இரவிகுல மாணிக்க ஈச்சரம், பண்டித சோழேச்சரம், வானவன் மகா தேவி ஈச்சரம் போன்ற பல ஆலயங்களை அமைத்துள்ளனர். வானவன் மகாதேவி ஈச்சரம் என்ற 10 சிவன் கோயில்களில் இரண்டாம் சிவ தேவாலயம் இன்றும் சிறப்புடன் காணப்படுகிறது. இவற்றை விட திராவிட கலைமரபில் நாதனார் விகாரையைக் கட்டினர். திருக்கேதீஸ் வரம், வவுனியா, பூநகரி, நெடுந்தீவு போன்ற இடங்களில் சோழர் காலத்தில் கட்டப்பட்ட கட்டடச் சிதைவுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

சோழர்களின் பின்னர் முதலாம் விஜயபாகு மன்னன் ஆட்சிப் பீடம் ஏறி னான். இவன் பெரும்பாலும் புனரமைப்பு பணிகளையே முன்னெடுத்தான். முப் பெரும் விகாரைகளை புனரமைத்ததோடு

முடிசூட்டுவிழாவினை நடாத்துவதற்கு மாளிகை ஒன்றினைக் கட்டினான். இதே வேளை அட்டதாகே என்ற கட்டடத்தை அமைத்து புத்தரின் புனித பற்சின்னத்தை வைத்து பாதுகாத்து வழிபாடு ஆற்றினான்.

விஜயபாகுவின் பின்னர் கலை வளர்ச்சிக்குப் பெரும்பணி ஆற்றியவன் பராக்கிரமபாகு மன்னனாவான். பொல நறுவைக் காலத்தில் கட்டப்பட்ட கட்ட டங்களில் பெரும்பாலானவை பராக்கிரம பாகுவின் காலத்தவையாகும். ஆலாஹன வகையைச் சேர்ந்த லங்காதிலக உருவ வீடு, பத்மசீதப்பிரசாதாய என்பவற்றோடு பராக்கிரமபாகுவின் மனைவியான ரூபா வதியால் ரூபாவதி சைத்தியமும், சுபத்திராதேவியால் அமைக்கப்பட்ட சுபத்திராதேவி சைத்தியமும் மிகப் பிரசித்தி பெற்றவையாகும். இந்திய போர்க்கைதிகளைக் கொண்டு தெமழ மகாசாய என்னும் கட்டட அமைப்பைக் கட்டினான். கட்டட அமைப்புக்களின் இன்னும் ஒரு வகையான உத்தரராம வகையில் கல்விகாரை புத்தர் சிலைக்கு அமைக்கப்பட்ட கட்டடங்கள், திலங்கவீடு, தந்த தாதுவிற்கான வட்டதாதுமனை, பொற்கல்மனை என்பனவும் குறிப்பிடத் தக்கவையாகும்.

பராக்கிரமபாகுவினால் அமைக்கப் பட்ட ஏழு மாடிகளைக் கொண்ட அரச மாளிகை இன்றும் சிதைவடைந்த நிலையில் காணக்கூடியதாக உள்ளது. மற்றும் ராஜ வேளிபுயங்க மண்டபம் என்னும் அரச மண்டபத்தை அமைத்துள்ளான். இக்கட்டடம் அரச சந்திப்புக்கள் நிகழும் இடமாகப் பயன்படுத்தப்பட்டது. அரச மாளிகையைச் சூழ தடாகங்கள் அமைக்கப்பட்டன. அவை குமார பொக்குன, நெலும் பொக்குன என்பனவாகும். மற்றும் கிரிவிகாரை, கல்விகாரை போன்ற விகாரைகளையும் இவனே அமைத்தான்.

பொலநறுவைக் காலத்தில் நிஸங்க மல்லனும் கட்டடக் கலை வளர்ச்சிக்குச் சேவையாற்றியுள்ளான். மிக நீளமான கல்பொத்த சாசனத்தை இவன் அமைத் தான். இவனால் அமைக்கப்பட்ட நிஸங்க லதா மண்டபம் புதுமையான கட்டட அமைப்பாகும். இதனைவிட நிஸங்க மல்லன் மாளிகையுடன் இணைந்த வகை யில் அத்தாணி மண்டபம் என்பன கலை யம்சங்கள் கொண்டவையாகும். வட்ட தாகே சத்மஹால் பிரராதய என்பன சீயத்தில் அமைக்கப்பட்ட கட்டடப் பாணியை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டன. புத்தரது புனித பற்சின்னத்தைப் பாதுகாக்க ஹட்டதாகே அமைக்கப்பட்டதுடன் ரூவான்வெலி சாயவைப் புனரமைத்தும் ரன்கொத்தா வகவையும் அமைத்தான்.

மேற்கூறப்பட்டவாறு அமைக்கப்பட்ட கட்டடங்கள் மாகன் படையெடுப்பால் சிதைக்கப்பட்டபோதும் இன்றும் கூட சில கட்டடங்கள் நிமிர்ந்து நிற்கின்றன. பொலநறுவைக் காலத்தில் கட்டடக் கலையுடன் இணைந்து சிற்பக் கலையும் வளர்ச்சிபெற்று இருந்தது. ஏனைய காலங்களிலும் பார்க்க சிற்பக்கலை பிரமாண்டமும் பிரமிப்பும் கொண்டதாக பொலநறுவைக் காலத்தில் காணப்பட்டது. கல் விகாரையில் உள்ள புத்தர் உருவங்கள் மிகவும் சிறப்புடையன. இவை நேர்த்தி யும் அழகும் சாந்தமும், இறை தத்துவ தன்மையும் உடையவை. இங்கு காணப் படும் புத்தர் படுத்துறங்கும் சயனநிலைச் சிற்பம் சிறப்புடையது. மற்றும் புத்தர்

தியான நிலையில் அமைந்திருக்கும் சிற்பமும் 22 அடி உயரமுடைய நிற்கும் சிற்பமும் சிறப்புடையனவாகும். இவை யனைத்தும் கருங்கல்லில் செதுக்கப் பட்டுள்ளமை இதன் இன்னோர் சிறப்பம்ச மாகும். பொற்கல் விகாரையில் உள்ள ஒரு சிற்பம் இரு கரங்களிலும் ஏடு தாங்கிய வண்ணம் செதுக்கப்பட்டுள்ளது. இது பராக்கிரமபாகுவின் சீற்றம் எனக் கூறப்படுவதுடன் இவ்வுருவத்தில் கையில் உள்ள சிற்றேடு அரச ஆவணம் என பேரா சிரியர் பரணவிதான என்ற வரலாற்று அறிஞர் குறிப்பிடுகிறார்.

பொலநறுவைக்கால சிற்பக்கலை யின் மற்றுமோர் வடிவமாக விளங்குவது படிக்கட்டுக்களாகும். கல்லால் செதுக்கப் பட்ட அழகான படிக்கட்டுக்களை அமைத்து அவற்றின் மூலம் விகாரைகள், அரண்மனை கள், நுழைவாயில்கள் என்பன சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன. இங்கு கருங்கல்லி னால் உருவாக்கப்பட்ட சந்திரவட்டக் கல்லில் சிங்கம், யானை, குதிரை போன்ற மிருகங்கள் செதுக்கப்பட்டுள்ளன. ஹட்ட தாகேக்கு அண்மையில் அமைக்கப்பட் டுள்ள சந்திரவட்டக்கல் சற்று அழகாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த சந்திரவட்டக் கல்லில் உருவங்கள் பெரிதாகவும் தெளிவாகவும் காணப்படுகின்றன.

பொலநறுவைக் காலத்தைத் தொடக்கி வைத்தவர்கள் சோழர்கள் என்பதால் இந்து சமயம் சார்ந்த சிற்பங்களும் அங்கு தோற்றம் பெற்றிருந்தன. பொலநறுவையில் மேற் கொள்ளப்பட்ட அகழ்வின்போது நடராஜர் அரிகரன், பார்வதி, கணபதி எனப் பல்வேறு சிற்பங்கள் மீட்கப்பட்டுள்ளன. இச் சிற்பங்கள் பொலநறுவைக் காலத்தில் வழிபடப் பட்டவை எனக் கூறப்படுகின்றது. விகாரை வாயில் குளங்கள் என்பவற்றில் காவல் தெய்வங்களின் உருவங்களும் அமைக்கப் பட்டிருந்தன. இவை பொலநறுவைக்கால சிற்பங்களாகும்.

பொலநறுவைக்காலத்தில் ஓவியக் கலையும் உச்ச வளர்ச்சியை எட்டியுள்ளது. மஹியங்கனை தூபத்தில் வரையப்பட்ட ஓவியங்கள் பொலநறுவைக் காலத் தொடக்கத்தில் வரையப்பட்டவையாகும். திம்புலாகலை விகாரையிலுள்ள ஓவி யங்கள் மற்றும் அதற்கு அண்மையிலுள்ள மண்டபங்களில் தீட்டப்பட்ட ஓவியங்கள் என்பனவும் பொலநறுவைக் கால ஓவி யங்களாகும். பராக்கிரமபாகுவால் அமைக் கப்பட்ட திலங்கபிலிமகே என்னும் கட்ட டத்தில் உள்ள ஓவியம் சிறப்பான முறையில் வரையப்பட்டுள்ளது. புத்தரது வரலாற்றை யும் பௌத்த சமய ஜாதக கதையும் சிவப்பு, பச்சை, மஞ்சள் நிறங்களில் மிக நுணுக்க மாகவும் அழகாகவும் தீட்டப்பட்டுள்ளது.

எனவே மேற்கூறப்பட்ட கலையம்சங் களைத் தொகுத்து நோக்கின் பொலநறு வைக்காலம் கலைக்கு முக்கியத்துவம் கொடுத்த காலமாகும். மன்னர்களின் அமைதியான ஆட்சியும் மன்னர்கள் கலைகளில் காட்டிய ஆர்வமும் பொரு ளாதார செழிப்பும் யாவற்றிற்கும் மேலாக கலைஞர்களின் ஆன்மீக ஈடுபாடும் பொலநறுவைக் காலத்தில் கலைகளின் உச்ச வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக அமைந்தது எனின் மிகையாகாது.

**உசாத்துணை நூல்.**

1. பண்டைய ஈழம், வே.க. நடராசா.
2. History of Ceylon, K.M.D. Silva.

**செ. நிஷாந்தினி**
2010 கலைப்பிரிவு

# குகை ஓவிய மரபில் அஜந்தா குகை ஓவியம்

இந்தியாவின் மகாராஷ்டிர மாநிலத்தில் ஔரங்கபாத் எனும் இடத்தில் இருந்து 65 மைல் தூரத்தில் சகாரா ஆற்றுப் பள்ளத்தாக்கில் அஜந்தா குன்றுகளில் வெட்டப்பட்ட அஜந்தா குகைகள் எனப்படும் 29 குகைகளின் சுவர்களில் மிகச் சிறந்த சித்திரங்கள் வரையப்பட்டன.

அஜந்தா சித்திரங்கள் பௌத்த சித்திரக் கலையின் உயர்ந்த தரமான சித்திரங்கள் போன்று இந்தியாவிலுள்ள உயர்தரமான சித்திரக் கலைப் படைப்புக்கள் எனலாம். கி.பி. 2 – கி.மு. 7 வரையான காலத்தினுள் அஜந்தாவின் கலைப் படைப்புகள் உருவாகின. அஜந்தாக் குகைகள் முக்கியமாக கோபுரக் கூடங்கள், விகாரைக் குகைகள் என இரண்டு பகுதிகளாகும். இக் குகைகளை ஹீனயான, மகாயானக் குகை எனவும் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

**ஹீனயானக் குகைகள் (கி.மு 200 – கி.பி. 150**

கோபுரக் கூடங்கள் இலக்கம் – 9, 10

விகாரைக் குகை இலக்கம் – 8, 12, 13

**மகாயான பௌத்த குகைகள் (கி.பி. 450 – 650 வரை)**

கோபுரக் கூடங்கள் – இல. 19, 26

விகாரைக் குகைகள் – இல. 1, 5. 7, 11, 17, 18, 20, 21, 25, 27, 29

பௌத்த சமயத்தில் கற்பிக்கப்படும் தானம், தருமம், உபதேசம் போன்ற நற்பண்புகள் பல்வேறு சித்திரங்கள் மூலம் வெளிப்படுத்துதல் முக்கிய இடம் பெற்றது என்பது அச்சித்திரங்கள் வாயிலாக விளங்குகின்றது.

**அஜந்தாவின் சித்திர வடிவங்கள்**

1. பிறப்புக் கதைகள்
2. பிக்குகளின் சரிதை
3. புத்த சரிதை
4. வரலாற்றுச் செய்தி
5. பாவுகைச் சித்திரம், தூண் சித்திரம்

**அஜந்தாவின் இயற்கையழகு**

அஜந்தாவின் கலைஞன் இயற்கையழகைச் சிறப்பாகச் சித்திரமாக்கியுள்ளான். காட்டுப் பறவைகள், விலங்குகள் வாழும் கிராமப்புறத்துக்கு அண்மையில் வாழ்ந்த அஜந்தாக் கலைஞன் மிகவும் பொருத்தமான பாங்கில் இயற்கைமுகின் பண்புகளைச் சித்தரித்துள்ளான். பறவைகளில் வாத்துக்கள், மயில்கள், கிளிகள் என்பன அச்சத்துடன் பார்க்கும் விதத்தில் சித்திரமாக்கப்பட்டுள்ளன. வேமாகச் செல்லும் மான்கள், நகைச் சுவையுடன் கபடத்தன்மையுடன் எதேச்சையாகத் திரியும் குரங்குகள், கம்பீரமாகப் பயணம் செய்யும் யானைகள், பெருமையுடன் காணப்படும் குதிரைகள், சண்டையிடும் எருமைகள் என்பன அவற்றின் நிலைகள் பிரதிபலிக்கக் கூடியவாறு காட்டப்பட்டுள்ளன. பூக்கள், காய்களுடன் நிறைந்த பல்வேறு மரம் கொடிகள், சிறந்த பூக்கள், இந்தியாவின் பிரதேசங்களுக் குரிய இயற்கையழகு காட்டப்படும் விதமாக சித்திரமாக்கப்பட்டுள்ளன. அதிகமாக இம்மரஞ் செடிகள், விலங்குள் என்பவற்றை அலங்கார நிர்மாணத் துக்காக மிகவும் கவர்ச்சியான முறையில் கலைஞன் பயன்படுத்தியுள்ளான்.

### அஜந்தா சித்திரப் பாங்கின் பரவல்

அஜந்தா சித்திரப் பாங்கு இந்தியாவில் போன்று அண்மை நாடுகளிலும் பரவியது. இந்தியாவின் குவர்லியூர் பிரதேசத்தில் பாக் ஓவியங்களிலும் அஜந்தாத் தழு வல்கள் காணப்படுகின்றன. ஆப்கானிஸ் தானில் ஹட்டா மற்றும் அண்மிய பிரதே சங்களில் கண்டெடுக்கப்பட்ட ஓவியங் களிலும் அஜந்தா பாரம்பரியங்கள் காணப்பட்டன. சிகிரியா சுவர் ஓவியங்கள் அஜந்தாப் பாரம்பரியத்திற்கு உட்படா திருப்பினும் அதிகமாக அதற்குச் சமமான பண்புகளைக் காட்டுகின்றன.

